எமன் படர் அடிபடு
திரு மெய்ஞ்ஞானக்
கொரல்

ஆதியே துணை

எமன் படர் அடிபடு
திரு மெய்ஞ்ஞானக்
கொரல்

இந்ந னூலில்

அங்கம் - அங்கி - அங்கு - அங்கே
அங்ஙம் - அங்ஙி - அங்ஙு - அங்ஙே

அந்த - அந்தி - அந்தோ - சந்தை
அந்ந - அந்நி - அந்நோ - சந்நை

அஞ்ச - அஞ்சா - அஞ்சி - அஞ்சு - அஞ்சே
அஞ்ஞ - அஞ்ஞா - அஞ்ஞி - அஞ்ஞு - அஞ்ஞே

மேல்வரி - எழுத்துவாசகமா யிருந்நதைக் கீழ்வரி - சாய்ந்ந எழுத்திலிருக்கும் - அச்சர வாசகமாய் எழுதி யிருப்பதைப் பிழையா யிருக்கிறதென் று எண்ணாதீர்கள்.

மொழிக்கு முதலில் ன - எழுத்திருக்கும்-
பார்த்துப் படித்துக்கொள்ளுங்கள்.

அச்சர மமைத்தோன் அறுந்நுபோ னதுகண்
டமைந்நதை யமைத்து அறைந்நதிக் கிரந்நம்
அஃறிவினை யறிந்நோர் அறிவரிவ் வாய்மை
பாமரர் அறியார் பண்டிதர் அறிவர்
இதனை உணர்ந்நபின் எடுத்தோதிக் கிரந்நம்.

மெய்வழிச் சபையார்

ஆதியே துணை

அரிக்கு முந்நின - அவ்வெழுத்துக்கு அப்பாலாய - அகர அச்சர பீடத்துக் கோடாலங்கிர்தம் பிறங்கு வதற்கு - இன்னது இன்னதென இன்னதுக்கு இன்ன தென ஓர்வகை மூவகை ஐவகை எண்வகைப் பொறுப் பும் உள்ளத்துள் உரிமையுற மெய்ப்பொருள் மெய்ப் பயன் மெய்யாக மெய்யாகவே எதிர்முகத்தில் வைத்துப் போதிக்கும் னவக்கிரகக் கோனரி வானராகிய எதார்த்த ஓர் தேவகுரு இல்லாது கல்வி வீடுபதம் காணமுடியாது.

தமிழ்த்தொண்டமான் சீமையாகிய புதுக்கோட்டை அருகாமையிலுள்ள -

ஊறல்மலை கசிந்துமடை திறந்து பாயும்
ஓதுபுன லோடைமணல் பண்ணை பூத்துக்
காறலுங்கா சாறுவல் செறிந்து ஓங்கிக்
கிளைவிரித்து னிழல்காவிற் பரந்து சிந்தும்
சாரல்வனம் தனிலொருகற் குன்றி லேறித்
தனதுகுலத் தினவலர்கள் திரண்டு மொய்ப்ப
ஓரமெலாம் சிலையோட -

ஆண்டவர்கள் - திருவள்ளுவனயனர் இயற்றி யுள்ள -

"அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்ற முதல்த் திருக்கொரல் பாவிற்கு - விரித்த செம் பொருள்ச் செய்யுள்கள்: -

வண்டினம் விரிந்த கீதம்
வளஞ்சூரந் நிலகு கானில்
தென்றல்வண் டினத்துக் கென்ன
தேறலை விலக்கி வாசம்
மண்டியே எடுத்து வீச
வனமெலாம் கமழல் போலே
தொண்டர்க்குப் பொருள்கை வைத்துத்
துளபனும் தொகுத்த அன்பே

வினா

னெறியறிந்த புலவரென்றே
ருரைகள் விண்டார்
னீதியறிந் நறைந்தகொரல்
முதற்பா விற்கு
அறியாத சிறுவர்களை
யணுகிப் பையா
அகிலமிதற் கார்தலைவ
னென்று கேட்க
குறியாகப் பகவன்முத
லெழுத்துஞ் சொன்னர்
குவலயத்திற் சிற்றறிவ
ரோரு மித்தைப்
பெரியறிவர் கலைக்ஞானர்
என்று கூறிப்
பொருள்தருகும் வலுனரென்ருர்
சிறுவ ரல்லர்

விரு

கருத்தஉரை யும்பொருத்தி
வைத்தோர் யென்ன
கதிகொள்பல னதனாலே
எவரென் கண்டார்
அறிந்துரைத்த அகரமுத
லெங்கெங் கையா
அவ்வெழுத்தெல் லாமாதி
பின்னோ முன்னோ
விரிந்நாதி யோபகவன்
உலகு முன்னில்
விடிந்நிடவுங் கைவரவா
யெவர்க்கும் விள்ள
அறிவறிந்ந அனந்நர்குலம்
திரண்டு கேட்ப
அகந்நுலங்கத் தலைவனிருந்
நருள்செய் வாரே

கலி விருத்தம்

கனக னாடுடை ஜனகர்கள் காலத்தும்
வினவ யார்க்கும் னினைவிலு ருததுன்
அனவ ரதக்குன் றேறிஅவ் வானதால்
தினங்கண் டேறுமென் தேவர்க்கா யோதுவாம்

னடனக் கலிவிருத்தம்

சுடாஅ மணியி
னேரகித கோடாஅ
இடாஅ கணித
லேருயரு தேடீஇ

விடாஅ வதனி
லோதுவின தாதூஉ
உடாஅ துவிடை
யோதுவத றியேஎ

விடை

அரிஅகர முதலாய
அவ்வுந் நேறி
ஆதியந்நம் னடுவணைகண்
டகண்டங் ஙண்டு
அறிவாகா ரம்பொழிய
அறைந்நோன் னூற்கு
ஆகாத னூலறிவர்
விளக்கும் னேர்மை
எரிகரும்பின் னிறைகோலால்
வயிரந் நன்னே
எடைவிலையு முடிவுகட்டி
விட்ட தாலே
வருந்நியந்ந முடிவையெதிர்
பார்த்தோ ரெல்லாம்
மாசறுங்ஙல் வியிலராய்
மாந்நு வாரே

கலி விருத்தம்

இறுதி காலத்தி ருள்வழி யேகுவோர்
உரைதி கிண்டிக்கிண் டியுரை யூணினும்
அறுதி கூறினூ லாங்ஙவ ராக்கினும்
வருந்நியே வன்ன ரகவ ராவரே

விடை

பொருந்நிடவைந் நடைந்நறுகூர்ச்
சுவையுங் நூர்ந்நு
பொற்ருளுங் ஙண்டுபுக
ழூடம்பும் பெற்று

அறிந்நஅண்ணல் அடைந்நஅசல்
அகரம் தன்னில்
அறிவதற்காய் அறைந்நனகல்
அகரம் ஏட்டில்

குறியாக னகலனகல்
என்று ஓரார்
கொண்டனகல் அகரமது
ஏடே போகும்

னெறியறியா திருள்வழியில்
ஓடி னுளும்
னிலைத்திடுவர் தன்னகர
மோரா ரென்னே

விடை

ஒண்ணுதே போகுமவர்
னரக ராகும்
உற்றுறையத் தேடுமவர்
மனுவாம் மண்ணில்

தன்னகரப்பொருள் கைகொண்டோர்
தேவ ராகும்
தனையறிய மாட்டாதார்
ஏட்டை னம்பி

விண்ணேற யெண்ணுவது
வீணே யெங்ஙும்
விளக்கதனை உணவெனப்பாய்
விட்டி லாகும்
தன்னகரத் துற்றபொருள்
கைபெ றுரே
தரித்திரியர் பேரவர்க்குச்
சட்டம் தீர்ப்பே

அரிக்குமுந்தி னின்றதுவே
அவ்வு மாகும்
அதற்குள்னின்று இலகுவது
ஆடு பாதம்
பரிக்குள்னின்ற அகரமுதல்
ஐங்ஙா யத்தைப்
பழம்பகவன் வெளிமனுக்கு
உணர்த்த வேண்டி
விரித்தெழுத்து அகரமுத
லெழுத்துக் கேறு
வீடுயென்ற சொல்லாலே
வீடாய்ப் போகா
குறித்தபடி தன்னகரம்
அசல்கை கொண்டால்
கூட்டுமதைங் ஙாயஅவ்வுக்
கேற்றும் பேறே

அவ்வுமுத லறிவதுவே
உலக மென்னும்
அன்னவன்முன் னிலையறிதல்
ஆதி யாகும்

இவ்விதமே உன்னிலையந்
நகாரத் தாது
இசையும்அசை வற்றபரம்
தான்தா ஞகி
எவ்வுலகத் தெப்பொருட்கும்
ஒப்பாய் னின்று
இயங்குகொரல்க் கதிபர்தெய்வப்
புலமை யென்ன
எவ்வையுங்கண் டப்படிக்கே
உங்கட் கீய்ந்நோம்
இப்படிக்குச் சாலையாண்
ஒப்ப மாமே.

திருவள்ளுவ ஞயனர் அவர்கள்

1. திருக் கொரல்

இத்திருக் கொரலுக் கதிபர் தெய்வப் புலமைத் திருவள்ளுவ ஞயனர் அவர்கள் அல்லவா!

ஆம்: இவர் தெய்வ மெய்க்கல்விக் கலாசாலையில் னமக்கு முன்னர்த் தேர்ச்சியுற்று வந்நவர் – அங்ஙனம் அன்னர் தெய்வப் புலமைத் தேர்ச்சியராகலான் அவர் படைத்த கொரலுக்கு முதன்மைச் சுதந்திர தாயாதியர்கள் பெருனெறி இறை திருவடிசேர் தேவர்கள்தாம் எனினும் அங்ஙனமே தேவர்களாகுவதற்குரிய னல்லொழுக்க னன்னெறி எழில் யோக்கிய மனத்துடைய மக்களும் – இரண்டாவது – னல்லொழுக்கமின்றித் – தான்தோன்றியர்களாய்த் துணிந்து – பெரியோர்களின் கையகத்திலாது அறியாச் சிற்றறி வுளத்தோராகிப் பேயினங்களாக இருளில் புக இருக்கும் னர

கரும் – ஆசையுற்று மேவி உய்வதற்கென உரைத்த கொரல் ஆகலான் இதற்கு முறையே பலன் கை குலுக்கும் பிரத்தியட்சமான அழியா அனுபவ அடிசேர்க்கும் மெய்ப் பொருளும் – சாமான்ய சிற்றறிவரும் ஓர – மற்ற னன்மனத்தராய்க் கவனிக்கிற் பலன் கைவராதென வெள்ளையாகத் தெற்றென விளையாட்டுச் சிறுவரும் ஓரக் கிடக்குகின்ற பொம்மை அருத்தமும் வைத்துப் படைத்த தெனக் காண் – இவை உலகமே உய்ய.

இப்படிக்கு

சாலை ஆண்டுரு

தோத்திரப் பா

பரிசுகுரு வேமறையின்
 தரிசனை பண் ணுருவே
வரதகுரு னிறைகுமுத
 விரிகருணை பொழியு
னிறைதவுசி னறையொழுகு
 மறைமணிக ளிலகு
மறைவலுனு வலரரசு
 மணிசிகர மேரே
அறமுதலா யதுவுதவு
 மதிபதியோ ருறவே
துறவலரா குவவரம
 தருதகுபே ரரசே

னிறைமதிய முலவுகுல
னிலையொளிரு னிறைவே
இறைவனடி சேருகொர
லீதெனுஞ முரசே

விஞ வசனம்

தேவ தேவேசனே - திரிலோக உலாவா - னெறிஞ வாளாயுதா - தெய்வப் புலமை ஐயரவர்கள் திருமதி ஞப் பிழம்பாம் எழிற் றிருக்கொரலில் செவியிற் சுவையுணரா வாயுணர் வுடையோரெல்லாம் மிருகங்ஙளென்றும் - இவர்கள் இருந்நா லென் அவிந்து போஞ லென்ன வென்றும் - மகா ஆத்திரத்துடனே இவ்வளவு கர்ண கடூரமாக மக்களாயுள்ளவர்கள் யூகிக்கில் அவமான ஆத்திரச் சுறுசுறுப்பு உண்டாகும்படியாய்க் கூறியிரானின்ற காரணத்தை - சாதாரண மக்களும் அறியும் படியாய் அடியேங்ஙளுக்கு அருள் செய்ய வேண்டும் குரீஸ்வரா-

விடை

பறவையூர் வனங்ஙாலி
இவைகட் கெல்லாம்
பகுத்தறிவாம் மணிவயிறில்
பசியு மில்லே
இறையெடும்வாய் குடற்கேகும்
உடல்வ னக்கும்
இருசெவியும் உயிர்த்துளையாம்
திட்டோ ராது
குறைமுடிக்க உடலெடுத்தோன்
அறிவா காரக்
குலமணியின் அறிவுவயிறு
பசித்துக் கேட்டும்

னிறைசெவிக் குணவருந்நார்
மாடே என்றும்
னின்ருலென் அழிந்நாலென்
றுரைத்த னேரே

விஞ

வித்துவப் புலவோ ரெங்கும்
விளம்பும்விற் பனங்கள் யாவும்
னித்தமும் செவிக்கு ஊட்டும்
னிலமக்கட் குணவே யென்று
எத்திசை னடிகர் ராகம்
ஏர்செவிக் கின்ப மென்று
புத்திய ரென்போர் மண்ணில்
பேசுவ தருள்செய் வீரே

விடை

பேசுவோம் அவர்க ளின்பம்
பேரழி விளையாட் டோடே
வேசறு கடுப்பிற் கல்லால்
வேறெதுங் ஙாணற் பாற்ரு
பேசொணுப் புகழு டம்பின்
பேரறி விஞக்கா காரம்
மாசறும் ஆலவாய் னேர்
மடுப்பது மாயா வீடே.

தோத்திரம்

புகழுந்திருக் கயிலைகுல பூபா
திகழும்பரம் பரையிலகு தேவே
னிகழுறுசன் மார்க்கனிலை மேரே
அகிலம்விழை தருமஅவ தாரா.

ஆதியே துணை

2.

சர்வ மதங்களிலும் ஆணியாய் ஊணியுள்ள

சாகாக்கலை கிரந்தம்

எமனை அணுகவிடாமல் விலக்கிக் காக்கும்
தவ ஆதிக்கப் பரிசுத்த ஆவித் தெய்வம்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள்

விரோதிகிருது௵ வைகாசிமீ 24உ (7-6-71) னீத னெறிக் கோடாயித சன்னதத் திருக் காப்புக் கங்கணத் திருவிழா னிகழ்ந்தபோது-தங்களுடைய சத்திய தேவ பிரம்மகுல மக்களுக்குத் திருவாய்மலர்ந் தருளியது -

இதைப் படிப்பவர்களுக்கு வேண்டிய கைம்முதலாவது - இதுகாலம் இத் தேவபூமியில் செயலில் னடந்தேறிக்கொண் டிருக்கும் சாகாக்கலை என்னும் பிரம்ம வித்தையை மக்கள் உள்ளங்களில் ஊணிப் பதிப்பிக்க எழுந்த இந்த மெய்க் கிரந்தமானது அளவில் சிறியதாயிருக்கு தென்று னினையாமல் மகா னிகரற்ற முழுச்செயலை யுடையதென்று னிறுத்தி னிறுத்து னன்றாய்க் கவனித்துப் படிப்பார்களாக -

ஆதியே துணை

மனிதர்களுக்கு மட்டும் தானே தெய்வம் – வேறு எதற்காவது தெய்வம் வேண்டுமா? எண்பத்துநான்கு நூறாயிரம் ஜீவராசிகளில் வைத்து எல்லாம் தெரிந்தவன் மனிதன்தானே. மனிதனுக்கு எல்லா வேலையும் செய்யத்தெரியும். தனக்கு வேண்டிய உணவுப் பொருள்களைத் தானே தேடிக்கொள்வான். சீக்கு வந்நால் தனக்கே போக்கிக்கொள்ளத் தெரியும். கல்வியினுடைய தரமோ – அவ்வளவும் தெரியும். மனிதன் ஒருவன்தானே எல்லா வேலையும் செய்கிறவன். அப்படியிருக்க – தெய்வம் என்ற ஒன்று இவனுக்கு எதற்காக? ஏதாவது ஒரு வேலையைக் குறித்துத்தானே வேண்டும். அரசன்முதல் ஆண்டிவரை உலகத்தில் எல்லோருக்கும் எந்நக் காரியத்துக்காகத் தெய்வம் வேணும்? 'அ' என்ற அட்சரத்திலிருந்து சர்வ வேதங்களையும் சர்வ கலைக் ஞானங்களையும் கற்றுத்தர வாத்தியார்கள் இருக்கிறார்கள். எந்நச் சீக்கு வந்நாலும் சங்காரம் பண்ண வைத்தியர்கள் இருக்கிறார்கள். கேஸ் ஜெயிக்கவும் தீர்ப்புகள் கூறவும் வக்கீல்களும் ஜட்ஜுகளும் இருக்கிறார்கள். உணவுக்கோ வேண்டியதெல்லாம் செய்ய ஆட்கள் இருக்கிறார்கள். அப்படியிருக்க மனிதர்களுக்குத் தெய்வம் எதற்காக? பணம் சம்பாதிக்கவா? பணம் உண்டாக்குவதே இவன்தானே!

ஒரு ஏழையாக இருந்நால் சம்பாதித்துப் பணக் காரனுகிக் கொள்ளலாம் – சீக்காளியானுல் ஒரு வைத்தி யரைக்கொண்டு குணைப்படுத்திக் கொள்ளலாம். பாவம் செய்துவிட்டால் மெய்யான தவப்பாரவான்ஙளே அடுத்து மன்னிப்புத் தேடிக் கொள்ளலாம். ஆனுல் தீட்டாகிச் செத்தாலோ அலகையுடல் எடுத்து எக்கோடி காலத்துக் கும் னரகத்தில் கிடந்து அவஸ்தைதப்பட வேண்டியது தான். அலகையுடல் அழிகிறதில்லே. தீட்டு அடையாளம் வந்துவிட்டாலோ ஞறிப் புழுத்துப் போவது மட்டுமா? பின் னீங்ஙாது னரக அனலில் வெந்து உருக வேண்டும். அந்ந ஊரின் பெயரே னரகம் என்ருல் அங்ஙுத் தின்பதற்கு மிட்டாயா இருக்கும்? னரகலேத்தான் தின்ன வேண்டும். அங்ஙு அவஸ்தைதப்பட்டு அவமா னப்பட்டுத் துன்பப் படுகிறதே தவிர உயிர் அழிகிற தில்லே. எவ்வளவு ஞளேக்கு அந்ந அவஸ்தை? எக் கோடி காலத்திற்கும். அப்படிப்பட்ட முடிவில்லா னெடுங் ஙால னரக அவஸ்தைதக்காகவா ஞம் வந்நோம்? அதற்காகவா இறைவன் மனிதனுக்கு அறிவைக்கொடுத் தான்? அதற்காகவா வேதங்ஙளும் கலேக்ஞானங்ஙளும் இவனுக்கு இறக்கப்பெற்றது?

ஒருவனுக்குத் தெய்வம் கட்டாயமாக வேண்டும் – வேறு எந்ந குறை இருந்நாலும் பரவாயில்லே. பெண்டு பிள்ளே இல்லாவிட்டாலும், காசுபணம் இல்லாத ஏழை யானுலும், ஞேய்னெடியில் வருந்நினுலும் பரவாயில்லே. அதனுல் அவன் ஒன்றும் கெட்டுப் போகிறதில்லே. வேறு எது இல்லாவிட்டாலும் தெய்வந்நான் ஒருவனுக்

குக் கண்டிப்பாக வேண்டும். ஏனென்றால் கற்பகோடி காலத்துக்கும் அவஸ்த்தைப்பட னரகத்திற்கு அனுப்புகிற எமன் வந்துவிடுவானே. அவனைச் சங்காரம் பண்ணித் தப்பவைக்கிறதற்குத்தான் தெய்வம் கட்டாயமாக வேண்டும். இது மகா முக்கியம். எல்லாக் காரியங்களிலும் வைத்து இது மகா முக்கியம்.

மனிதன் பிறக்கிறபோது பிரசவம் ஆச்சா என்று கேட்கிறோம். சவம் என்றால் பிணம் அல்லவா? அப்படி அதை அழைக்கலாமா? ஆம் - அப்படி அழைப்பதற்கு ஒரு ஞாயம் இருக்கிறது - அதாவது - கருவறையில் இருக்கும்போது பேச்சு மூச்சு இல்லாமலிருந்து வெளியே வந்தபின்தான் பேச்சு மூச்சு வருவதினாலும் இறுதியில் இவனைச் சவமாக்கப் பிறவிப்பிணி என்ற எமன் அதுனேரம் முதல் இவன் தலையில் காத்துக்கொண்டிருக்கிறதினாலுமே அப்படிச் சொன்னது.

அந்த ஆபத்தை விட்டு னீங்கவேண்டுமென்பதற்காகத்தான் அவனுக்கு ஒரு தெய்வத்தின் பெயரை எடுத்து வைக்கிறார்கள். தனக்கு வைக்கப் பெற்ற அந்தத் தெய்வப் பெயருக்குள் ஆகும் தகுதியைத் தன் வாழ்னாளில் ஒருவன் சம்பாதித்துக்கொள்ளவில்லையென்றால் தலைமேல் காத்துக் கொண்டிருக்கும் கோரமாகிய எமன் கைப் பட்டுவிடுவான். உடனே இவனுக்கு வைக்கப்பெற்ற தெய்வப் பெயர் போய்ச் சவம் என்ற னிலைக்கு னிசமாகவே ஆகிவிடுவான். அப்படி ஆகாமல் தப்பிக்கவேதான் செயலுடைய ஒரு மெய்யான தெய்வம் கட்டாயம் வேண்டும். இல்லாவிட்டால் இவனை ஞசஞ்

ஞெய்ய இவனுக்குள்ளேயே கெத்துக்கெத்து என்று காத்துக்கொண்டிருக்கும் எமன், தீட்டை வெளியாக்கி னரகவாதி என்ற தீர்ப்புக்கு ஆக்கி விடுவான் - அப்புறம் இவன் கதி என்ன?

இவன் பெண்டுபிள்ளை உறவினர்கள் எல்லோரும் இவன் கட்டிய வீட்டிலேயே இருந்நுகொண்டு, இவன் வாங்ஙிக்கொடுத்த துணியைக் கட்டிக் கொண்டு, அப்பா- ஞங்கள் னல்லா யிருக்கணும்- னீ இங்ஙு வந்நுவிடாதே- என்றுசொல்வதோடு-சாணிச் சட்டியைக் கரைத்து வை- பொறியை இறை - எள்ளைத் தெளி- தூக்கு தூக்கு - சீக் கிரம் தூக்கு என்கிறார்கள். இன்னும் பிணத்தைப் பார்த்தாலே தீட்டு- இழவைக் கேட்டாலே தீட்டு- குளி - உடனே குளி - என்று சொல்லுகிறார்களே. இவனைப் பற்றிக் கேள்விப்படுவதே அவ்வளவு கொடுமையான தீட்டு என்று இருந்நால் இவன் அடையப்போகும் அதோகதி எப்படிப்பட்ட மகா கோரமானதாக இருக் கும்? அந்நப் பேராபத்து வராமலிருக்க எவ்வளவு எச் சரிக்கையாக இருந்நு ஒரு னிஜமான தெய்வத்துணை யைத் தேடிக்கொள்ள வேண்டும். அந்நத் தெய்வத்தின் கையில்தான் சாகாக்கலையாகிய இப் பிரம்மவித்தை னிஜச்செயல் விளங்ஙினிற்கிறது.

பிறவிப் பிணியாகிய எமவாதையில் சிக்கி ஞறிச் செத்து அலகையாகி னரகத்திற்கு ஆளாகும் பேராபத் திலிருந்நு மனிதனை மீட்டுப் பரமபதத்திற்கு ஆளாக்கும் அரிய பெரிய செயலுக்குத்தான் தெய்வம் வேண்டும். வேறு எந்ந அற்ப உதவிகளுக்காகவும் தெய்வத்தை

னினைப்பானேயாகில் அந்நப் பாவமே இவனை னரகவாதியாக்கிவிடும். காசுபணம் தேடவும் சிக்கைப் போக்கவுமா தெய்வம் வேணும்? 'என் தொடையைக் காப்பாற்று- என் வயிற்றைக் காப்பாற்று – என் முழங்காலைக் காப்பாற்று' - என்று கவசம் பாடுகிறார்களே. இதற்குப் பெயர் பக்திக் கவசமா? இதைக் காட்டிலும் தெய்வத்தை அவமானப்படுத்தும் சண்டாளத் துரோகத்தனம் வேறு உண்டா?

எமபடரை னீக்கிச் சிவமயம் ஆக்கும் ஒரே அரிய செயலுக்குத்தான் தெய்வம் வேண்டும். வேறு எதற்கும் தெய்வத்தின் பெயரைக்கூட உபயோகிக்கக் கூடாது. அந்த அற்ப எண்ணத்தைத் தூக்கி எறி. வெகு பாடுபட்டுப் பணம் செலவழித்து ஒருவன் பெரிய அரசனைப் போய்ப் பார்த்தான். அரசன் சந்தோஷப்பட்டு என்ன வேண்டும் என்று கேட்க – அவன் தன் மனைவிக்கு ஒரு சுளகு வேண்டுமென்று கேட்டால் அந்த அரசனுக்கு எப்படியிருக்கும்? அற்ப உதவியைக் கேட்டதோடு அரசனை அவமானப் படுத்திய குற்றத்திற்கும் ஆளாகிறனல்லவா? வயிற்று வலிக்கும் இடுப்பு வலிக்கும் பணம் சம்பாதிக்கவும் கேஸ் ஜெயிப்பதற்குமா தெய்வம் வேண்டும்? உயர்ந்த உன்னத தெய்வத்திடம் அற்ப காரியத்தையா வேண்டுவது? அப்படியானல் தெய்வத்தை எவ்வளவு அற்ப வேடிக்கைப் பொருளாக னினைத்துவிட்டார்கள். இவன் செய்கிறதைத் தெய்வம் செய்ததாக ஒப்புக்குச் சொல்லிக் கொள்கிறன். தான் தின்பதை அதனிடம் காட்டிவிட்டு இவனே தின்றுவிடுகிறன்.

ரத கஜ துரக பதாதி என்று சொல்லப்பட்ட நால் வகை சைன்யங்களை வைத்து ஆளுகிற ஒரு வல்ல அரசனே யானாலும், அறிவுடைய மதி மந்திரியே யானாலும், இன்னும் எத்திற வல்லபம் படைத்த யாவரானாலும் பிறவிப்பிணி என்று சொல்லப்பட்ட மரண ஆபத்தைத் தடுக்க முடியாதே. அந்த எமன் யாருக்கும் அஞ்சுகிறவனல்லவே. அரசனைக் கண்டோ, படைகளைக் கண்டோ அவன் அஞ்சுகிறவனா? எல்லாம் அவன் கைக்குள் அடக்கம். எமன் வந்து இவன்மீது கைபோடுகிற அந்த எல்லையில் யாருடைய அறிவும் யாருடைய வல்லபமும் யாருடைய எந்த உதவியும் வந்து எட்டித் தொடமுடியாதே. அவ்வளவு பெரிய ஆபத்தைக் கொண்டுவந்து விடுகின்ற அந்த எமனுடைய எல்லையில் அவனைத் தட்டித் தூக்கி எறிந்துவிட்டு மனிதனை விடுவித்துப் பரம பதத்திற்கு ஏற்றும் அரிய பெரிய செயலுக்குத்தான் தெய்வம் வேண்டும்.

யுகங்கோடி காலத்திற்கும் அவஸ்தை அவமானத்தில் போய் மாட்டிக் கொள்ளாதபடிக்கு மகிழ்ச்சிக்கும் மணத்திற்கும் திரும்புகிற வாழ்க்கையே அது. அது வெறும் வார்த்தையா? இதை யாராவது எப்போதாவது பேசியது உண்டா? இதை எந்தக் கடையிலாவது வாங்க முடியுமா? சதுர் யுகத்திற்கும் சர்வ வேதத்திற்கும் இது ஒரு மகுட முகூர்த்த காலமானதால் கலிக் கடையில் இதை உங்கள் காதில் மாட்டி வைக்கிறோம். எமன் எதற்கு அஞ்சுவான்? இவன் செய்கிற தான தருமத்திற்கா? பெண்டு பிள்ளை உறவினர்கள் ஏராளமாக

இருக்கிறார்கள் என்பதற்கா அல்லது பணக்காரனாக மதிப்புடையவனாக இருக்கிறான் என்பதற்கா அவன் அஞ்சுவான்? இப்படி எதற்கும் அஞ்சாத எமனை எப்படித் தடுப்பது? ஈசனுடைய முகம் ஒன்றுக்குத்தான் அவன் அஞ்சுவான். தீட்சைகள் பெற்றிருக்கிறார்களே என்றும் அஞ்ச மாட்டான். அவன்தான் எல்லா தீட்சைகளும் தெரிந்தவனாச்சே? எல்லாம் தெரிந்த எமனை வேஷம் போட்டா ஏமாற்ற முடியும்?

எந்த ஒரு மனுவினுடைய இதய தாமரையில் ஈசன் விளைந்து விளங்குகிறானோ அந்த ஒரு முகத்துக்கு மட்டும்தான் எமன் அஞ்சுவான். அதற்குப் பெயர் ஈசன் என்று சொல்வதில்லை. ஏனென்றால் ஈசனுக்கு உடல் இல்லை. ஈசனுடைய சக்தியும் மனுவினுடைய தேகமும் சேர்ந்து வந்து எமபடரை நீக்கிப் பரமபதம் ஆக்கும் செயலுடைய திருவுருவமே தெய்வம் – அவர்களே குரு பிரான். அந்த ஒரு திருமுகத்துக்கு மட்டும்தான் எமன் அஞ்சி விலகுவான். ஈசனே மனுவாக வந்த அந்த நேச முகத்தைத்தவிர உலகத்தில் வேறு எதற்கும் அந்தச் சக்தியில்லை. இது வார்த்தை அல்ல. பிரத்தியட்சம். இப்படி நிரூபணை இல்லாதபடிக்குச் சொன்னால் நீ நம்புவாயா? இதை உன் உயிரில் ஒட்ட வைத்துக் கொள். சாவுடைய எல்லையில் எமனுடைய ஆக்கினை உன் மீது மோதாதபடிக்கு உதவி செய்யும் செயலுடைய தெய்வம் எங்கே இருக்கிறது? காட்டு. சர்வ உலகத்திலும் தேடிப்பார் – உன் மண்டையைத் தட்டிப் பார் – டேய் பாருடா.

பெரிய ஆபத்தாகிய கொடிய மரண அவஸ்தை இறுதினேரத்தில் இவனுக்கு வருதே - அந்த னேரத்தில் இவன் காலமெல்லாம் பாடுபட்டுத் தேடிய வீடு மனே மாடு ஆடு உற்ருர் உறவினர் எதுவாயிருக்கட்டும் - வந்து உதவுமா? உதவுவது இல்லே - மதிப்பிலடங்காத ஒரு மாணிக்கமே ஒருவன் சம்பாதிக்கட்டும். அது - சாவுடைய னேரத்தில் வந்து உதவுமா? உதவாது - அதிருக்கட்டும் - தன்னேவிட்டு எப்பவும் னீங்காத தன் சொந்தச் சொத்தாகிய கண் காது மூக்கு கை கால்கள் கூட அந்த னேரத்தில் இவனேக் கைவிட்டு விடுகின்றன - அதுனேரம் இவனுடைய மனமாகிய னினேவும் அறிவும் எதிர்பாராமல் வந்து மோதும் மரணம் என்ற அந்த ஆபத்தைத் தாங்கமுடியாமல் தட்டுண்டு தடுமாறுகின்றன. மேற்கொண்டு அந்த அவஸ்தை யுகங்கோடி காலத்துக்கும் மாருத னீங்காத னரகலாகிய தீட்டை இவன் மீது வாரி இறைத்து - இவன் ஒரு பாவி என்று - வெளிக்காட்டி விடுகின்றது. ஏனெனில் - எல்லா சக்திகளேயும் எல்லாச் செல்வ சம்பத்துக்களேயும் பெற்றிருந்நாலும் அந்நக் கொடிய பேராபத்தாகிய மரணத் தருவாயில் உதவக்கூடிய ஒரு அருந்துணேயை இவன் தேடிக்கொள்ளவில்லே - அந்த ஞெதியற்ற னேரத்தில் உதவுகின்ற ஒரு திருவுருவை இறைவன் தயார் செய்து தனது முத்திரை சன்னதங்களுடன் மனித குலத்துக்கென்று அனுப்புகிருன் - அப்பேர்க்கொத்த அரிதினும் அரிதாகிய அந்த உதவியை இவனே பாடுபட்டுத் தேடி அடைய வேண்டும். ஏனெனில் அத் திருஉருவின் உதவி இவனுக்கு அவ்வளவு கட்டாய அவசியம் - இறைவனல் இன

மாகப் பரிசாகத் தயார் செய்து வழங்கப்பெற்ற அந் நத் திருவுருவின் உதவியை இவன் பெறவில்லையானால் முடிவில்லாத னீண்டகால அவஸ்தையில் போய் மாட் டிக்கொள்ள வேண்டியதுதான்.

மனித குலத்திற்கு முக்கியமானது வாழ்க்கை. அவஸ்தை அவமானம் கஷ்டம் னஷ்டம் முதலிய எந்த இடரும் இல்லாத வாழ்க்கை அல்லவா வாழ்க்கை. அந்த னித்திய பேரின்ப வாழ்க்கையை இந்த ஊன உடலிலா அடைய முடியும்? முடியாது. அலகையாகி அவஸ்தைக் குப் போகிற உடல் வேறு. இளமை மாறாத பேரின்பம் அனுபவிக்கும் பரமபத உடல் வேறு. தீட்டும் பரிசுத்த மும் பக்கத்திலா இருக்கிறது? இது அஸ்தகிரியானால் அது உதயகிரியன்றோ?

ஆலயம் தெய்வம் என்றதும் மக்கள் எண்ணம் எங்கே போகிறது? திருப்பதி திருத்தணி காஞ்சி காசி சிதம்பரம் ஸ்ரீரங்கம் முதலிய இடங்களுக்குத்தான் போகி கிறது. அங்கே மேற்சொன்ன அந்தச் செயல் இருக் கிறதா? எமனணுகாப் பரிசுத்தத் தவமாகிய தனிச் செயலைச் செய்யும் உயிருடைய தெய்வம் இருக்கிறதா? இல்லை – மக்களுக்குத் தெய்வம் ஒன்று வேண்டும் என்று ஞாபகமூட்டவே அவைகள் உண்டாக்கப்பெற்றன. ஆனால் னிஜ ஆலயத்தையும் மெய்ச் செயலுடைய தெய் வத்தையும் ஒருவன் தேடி அடையாவிட்டால் னீண்ட கால அவஸ்தையே வந்துவிடும். எமனுடைய அமளி யைத் தடுத்து னித்தியத்தில் ஆக்கும் ஒரு மெய்யான

தெய்வத்தினுடைய உதவி னமக்கு வேண்டும் என்ற னினைவு னன்மனத்தவர்களுக்கே வரும்.

ஆகவே - எது மெய்யான தெய்வம்? இறுதியில் எமனிடம் சிக்கி நூறிப் புழுத்துச் சாகாமல், பரிசுத்த மூத்தி தேகத்தில் புகுத்தாட்டிவைக்கும் ஈசனுடைய சக்தியைச் செயலாக்க - மனித தேகம் ஏற்றுவந்நு ஞசிக்கு வெளியே மூச்சோடாத தவ வல்லபத்தில் உலகில் ஒப் பற்று விளங்நுபவர்களே தெய்வம். இந்நச் செயலுடைய தெய்வம் - இந்நச் சாகாக்கலை வைபவச் சிறப்பில் மக் களை ஏற்றுவிக்கும் தெய்வம் - இன்று எங்கே இருக் கிறது? னன்ருகத் தேடிப்பார். அறிவுகொண்டு ஆலோ சனை பண்ணி மாருட்டம் இல்லாமல் னேராக னினைத் துப் பார். செயலுடைய தெய்வம் அல்லவா மனி தனுக்கு வேண்டும்? குறியில்லாதவன் ஆண் மகனு? ஞணையில்லாதவள் பெண்பிள்ளையா? பரமபதத்தி லாக்கும் செயலில்லாதது தெய்வமாகுமா? அவைகளை னம்பித்தானே பாடு படுகிருர்கள். செலவு செய்கிருர் கள். னீயும் அப்படித்தானே இருந்நாய். இப்ப னினைத் துப் பார். எமனிடமிருந்நு தப்ப எப்படிப்பட்ட அறி வும் யாருடைய னேசமும் வேண்டும்? தெய்வம் இருக்கு மிடந்நானே ஆலயம்? செயலுடையதுதானே தெய்வம்? செயலுடைய மெய்யான தெய்வம் இருப்பது ஒரு மரத் தடியே யானுலும் ஒரு காவணமே ஆனுலும் பெரிய முத்து மாளிகையே ஆனுலும் அதுவே ஆலயம். இங்நு தவிர வேறு எங்காவது னிஜச் செயலுடைய ஆலயம் உண்டா? மெய்யான தெய்வம் உண்டா?

இவ்வளவு பிரத்தியட்சமான னிஜமான திட்டமான னித்திய செயலுடைய தெய்வத்தின் இந்த ஆலயம் உலகத்தார் கண்ணுக்கு எப்படி இருக்கிறது? ஆலயம் என்ற பெயர்மட்டும் உள்ளதும் செயல் துளியும் இல்லாததுமாகிய அவற்றை எவ்வளவு மதிக்கிறார்கள்? அந்த அளவில் ஆயிரத்தில் ஒரு பங்கு கூட இந்தச் செயலுடைய ஆலயத்தை மதிக்கமாட்டார்களே! னிச்சயம் ஆலயம் அவைதான் என்று கருதுகிறார்கள். உடல் பொருள் ஆவி எல்லாம் அதற்கே செலவு செய்கிறார்கள். பலன் வந்ததா என்று பார்க்கிறதே இல்லை. இந்த ஆலயத்தினுடைய உண்மை அவர்களுக்குத் தெரியுமா? தெரியாது என்று சொல்வதால் றாசிச் சாகும் னரக ஆபத்திலிருந்து தப்ப முடியுமா? மெய்யை மெய்யென்று அறியாதவர்கள் கதி அதோகதிதான்.

இந்தப் பிரம்மாண்டமான உலகத்தில் உதயகிரியிலிருந்து அஸ்தகிரி வரைக்கும் தென்துருவமுதல் வடதுருவம் வரைக்கும் னிறைந்திருக்கும் மனுக்குலம் அவ்வளவு பேருக்கும் மெய்யான செயலுடைய தெய்வம் வேணுமே - அதற்கு என்ன செய்கிறார்கள்? பொய்யான அனியாய வழியிலேயே போய்க் கோடானு கோடி பேர் னரகத் தீயில் மாண்டு னாசமாகிறார்கள்.

இங்கு மெய்யான தெய்வத்துணை கொண்டு மீட்படைய வந்திருப்பவர்களோ மிகமிகக் குறைவு. அதையும் இதையும் அளந்து பார்! ஆடு மாடு ஈ எறும்பு கோடா கோடியாக இருந்தாலும் அவ்வளவையும் ஒரு மனிதனுக்கு ஈடாகச் சொல்ல முடியுமா? அவ்வாறே உலகிலுள்ள மனுச் சதனம் அவ்வளவையும் சேர்த்

தாலும் இங்நு வந்நு மீட்படைந்ந ஒரு தலேக்கு ஈடா குமா? ஆகாது.

செயலுடைய தெய்வம் எது? மெய்யான ஆலயம் எது என்று ஒரு வழக்குப் பண்ணி னியாயம் பேசிப் பார்க்கலாமா? ஆலயங்நள் னிறைய இருக்கின்றன என்று ஆயிரக் கணக்கானவர்கள் வாதாடட்டும். அவர் களுக்கு எதிராக னின்று செயலுடைய தெய்வம் இங்நுத் தவிர வேறு எங்நுமில்லே என்று ஒரே ஒருவர் கூறட்டும். னிருபணேயில் இந்ந ஒருவர் சொன்னதே ஜெயிக்கும்.

னீ இப்பொழுது உட்கார்ந்திருக்கும் இடம் எவ் வளவு உன்னதச் செயலுடையது என்று னினேத்துப் பார். எந்நப் பாரதூரமான எல்லேக்கு னீ வளர்ந்நு வந் நிருக்கிருய் என்று எண்ணிப்பார் – இது உங்நள் னினே வில் ஆணி அறைந்நாற்போல் இருக்க வேண்டும்.

னீ தனித்த உன்னதமானவன் என்று உனக்கே தெரியாது. மெய்யான தெய்வத்தையும் னிஜமான ஆலயத்தையும் கண்டறிந்நு மீட்படைந்நவன் னீ. தெய்வம் என்ற பெயரால் மற்றதை வணங்நுபவர்களெல் லாம் தீட்டாகி னரக அவஸ்தைக்கே போகிறவர்கள். இந்ந உலகத்தில் இது வேறு எங்நும் இல்லாதசெயல் – வேறு யாருக்கும் கிட்டாத னிஜனிதி. இதுவே சாகாக் கலே – ஆகையினுல்தான் ஐற்பது ஆண்டுகளுக்கு முன்ன மேயே இராஜகெம்பீரத்தில் இச்செயலேக் குறிவைத்து இவ்வாறு பாடிவைத்துள்ளோம் –

> இல்லே இல்லேஅ கிலத்தில் லாதது
> வல்ல வல்லப மீறியெ தார்த்தமொன்
> றுள்ள துள்ளதொன் ருர்க்குங்கிட் டாதது
> எல்லே மெய்வழிச் சாலேஇ சைவதே!

ஆதியே துணை

ஏகனாயகன் என்னும் சர்வ சாட்சி வித்தாகிய சர்வேஸ்வரனால் முத்ராங்கச் சன்னதங்கள் பெற்றுள்ள இதயப் பிரகாசப் பாரவான்கள் ஸ்தாபித்தருளிய மதச் சார்பினையுடைய மக்களே அடைந்து உய்கின்ற பெரும் பதப் பேரின்பச்

சாகாக்கலை பெற்றவர்கள் ஜீவப் பிரயாணம் ஆன தால அடையாளம்

1. உலகத்தில் செத்தவர்களுக்கு இறுதி னேரத்தில் தீட்டு என்று ஏற்படுகிற - ஆணுக்கு சுக்கில ஜலமாகிய கசப்பு ஜலம் வெளியாகிப் பிண னாற்றம் எழும்புகிறதும் பெண்ணுக்கு சுரோணிதக் கசப்பு ஜலம் வெளியாகிப் பிண னாற்றம் எழும்புகிறதும் --இல்லாமல் பரிசுத்தமாக மணத்துடன் இருப்பார்கள் சாகாக்கலை பெற்றவர்கள்.

2. ஜீவப் பிரயாணம் ஆன பின்னும் தேகத்தில் கேசாதி பாதம் வெதுவெதுவென்று சூடிருக்கும். விறைத்து விறுவிறுப்பு ஏருது. உரித்த வாழைத்தண்டை வெய்யிலில் போட்டால் எப்படித் துவளுமோ அப்படியே கை கால் முதலிய அங்கங்களெல்லாம் துவண்டபடி இருக்கும்.

3. பாவக்கனம் ஏருமல் தேகமானது பூக் கூடையைத் தூக்குவதுபோல இருக்கும்.

4. கை கால்களில் சொடுக்கு எடுத்தால் னெட்டிவரும்.

5. ஆண்டவர்களின் பாடல்களோ திருவாக்கியங்களோ திருநாமமோ ஜீவப்பிரயாணம் ஆன தூல பிம்பம் இருக்கும் எல்லையில் ஆரவாரத்துடன் ஒலிக்கப் பெறும் னேரங்களில் அவர்கள் மேனியிலே வியர்வை கொப்பளிக்கும் - துடைக்கத் துடைக்க வியர்வை மேலும் மேலும் கொப்பளிக்கும்.

6. வயோதிகமாய் உள்ளவர்கள் ஜீவப்பிரயாணமாகி னேரம் அதிகம் ஆகஆக அவர்கள் முகத்தில் இளமை பூத்துப் பசுமஞ்ஞள் வர்ணம் உலாவும்.

7. பிராணன் னீங்கியவுடன் தொண்டை அடைத்துக் கொண்டு ஒரு சொட்டு ஜலம் கூட உள்ளே இறங் ஙாதே - அந்ந அடையாளம் இல்லாமல் மெய்வழித் தெய்வமவர்களின் சன்னிதியிலிருந்நு காஷாய தீர்த் தம் கொண்டுவரப்பெற்றுக் கொடுத்தால் அதைச் சாப்பிடுவார்கள் - ஒரு மாதம் சென்று கொடுத்தாலும் கூட இக்காரியம் னடக்கிறது.

8. பிராணன் னீங்குமுன் கூனிக் குறுகி யிருந்நவர்கள் - கால் கை வராமல் இருந்நவர்கள் - புண் முதலியவற் ருல் துர்னாற்றம் வீசிக்கொண் டிருந்நவர்கள் அத் தேகக் குறைகளும் னாற்றமும் னீங்கிச் சாகாக்கலை யின் வைபவச் சிறப்புடையவர்களாக ஆகின்ருர்கள்.

9. அடக்கமானபின் வெளியே னாற்பதுனாள் போட்டு வைத்திருந்நாலும் தேகம் கெடுவதில்லை. இது னாங் ஙள் னேரில் பார்த்த அடையாளம்.

10 மண்ணில் புதைத்தால் தேகத்தை மண் தீண்டாது - இவைகள் தான் சாகாக்கலை பெற்றவர்களின் தூல அடையாளங்கள் - தேகத்தை மண் தீண்டாததிலும் மூவகை அடையாளங்கள் இருக்கும் என்று சன்னி தியில் வெளியாகியுள்ளது.

இத் தேவ அடையாளங்கள் - ஆண்டவர்களின் வெறுப்புக்கு இலக்காகாமல் அவர்களின் நிகரற்ற கிரு பையை இறுதி நேரம்வரை பெற்றவர்களுக்கே கைப லிதமாகி நடந்து வருகிறது - இது சத்தியம்.

ஆண்டவர்களின் திருச் சன்னிதி யடைந்து அவர் களின் அன்புக்குப் பாத்திரமாகிக் கொண்டவர்கள் எப் பெரும் பாவங்கள் செய்தவர்களாக இருந்தாலும் அப் பாவச் சேருனது ஆண்டவர்களின் கிருபையென்னும் வெயிலினல் - வெளியே யாருக்கும் தெரியாமலே- உலர்த் தப்பெற்று இச் சாகாக்கலையின் பலனை அனேகம் பேர் கள் பெற்று விளங்குவது எங்களுக் கிடையில் பிரத்தி யக்ஷம் - ஆகையால் உலகத்தில் எவ்வளவு பெரிய பாவி யாக இருந்தாலும் அன்னவரைப் பாவி என்று சொல் லாதே என்ற சர்வ வேதங்களினுடைய தீர்ப்பானது அறுபத்தேழு சாதிகள் ஒரே குலமாக ஆகி இருந்துவரும் இங்கே செயல் நடைமுறையில் - அது நிஜமேதான் என - எழுபது வருடகால அனுபவத்தில் கண் நேர் விளங்கிவருகிறது.

ஆதியே துணை

3. சாகாக்கலை கிரந்தம்

[தொடர்ச்சி]

பிரம்மோதய சாலை ஆண்டவர்கள் இராஜகெம்பிரத்தில் அருளிச்செய்தது

சர்வ உலகிலுமுள்ள மனுத்தலைகள் அவ்வளவும் எத்தனையோ விதவிதமான ஜாதிகளாக இருக்கின்றன - அவைகள் ஒவ்வொன்றுக்கும் வெவ்வேறான எண்ண மிருக்கிறது - ஆனால் அவைகளுக்காக இப்பூமிக்கு வந்த எல்லா வேதங்களும் ஒரே இறைவனால்தான் இறக்கப் பெற்றன - வேதங்களுக்குள் வேற்றுமை காணவே காணோமே - அப்படி இருக்க மனித இனத்திற்குள் இவ்வளவு வித்தியாசம் ஏன்?

வேதம் என்றால் என்ன - எல்லா வேதங்களும் எதற்குள் அடக்கம் - என்று கேட்டால் யாருக்கும் தெரியாது. கண் காது மூக்கு வாய் இவைகளுக் குள்ளாகத்தான் எல்லா வேதங்களும் அடக்கம். கண் காது இவற்றைக் கொண்டு அனுபவிக்கிறதில் ஏதா வது ஏற்றம் வித்தியாசம் இருக்கிறதா? இல்லை - அப்படி வித்தியாசம் உள்ள ஜாதி இருக்கிறதா? இல்லை - எந்த வேதத்திலாவது மேற்சொன்ன னடைமுறையில் வைத்து வித்தியாசம் இருக்கிறதா? ஒரு வேதத்திலும் வேற்றுமை இல்லை.

திருக்குரான் வேதத்தில் லட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் இருந்ததாகச் சொல்லப்படுகிறது. சென்ற ஹிஜிரி ஆயிரத்து முன்னூறு வருஷங்களுக்குள் அவர்களில் இன்னார் இன்னார் இருந்தார்கள் என்று கணக்கு எடுத்துவிடலாம் - அப்படி எடுத்தால் மிகக் குறைவான எண்ணிக்கைதானே வரும் - ஆகவே லட்சத்து இருபத்து நான்காயிரம் நபிமார்கள் என்ற கணக்கு - சதுர் யுகத்திலும் வந்த செம்மல்களைக் கூட்டி எடுக்கப்பெற்ற கணக்கே என்று தெரிகிறது. அப்படியிருக்க - மற்ற வேதங்களை அவர்கள் வெறுக்கிறார்களே? அது ஏன்?

நாம் என்ன சொன்னாலும் உங்கள் மனதிலே ஒரு அழுத்தமான இருட்டு இருக்கிறதே - அது உங்களை விட்டு விலகமாட்டேன் என்று கெட்டியாக அழுத்திப் பிடித்துக்கொண்டு இருக்கிறதே - அந்த இருட்டானது என்னவென்றால் - செத்த பிறகு ஒன்றுமில்லை என்று நீங்கள் நினைப்பதுதான். உலகத்திலுள்ள எல்லோரும் அப்படியே நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். மனிதன் நித்தியத்திற்காகவே படைக்கப்பெற்றவன். இவன் எக்கோடி காலத்திற்கும் சாகப் போகிறதே இல்லை என்று தெரியாது - இப்போதிருக்கிற இந்த அநித்திய தேகத்தில் கஷ்டம் ஏறினால் உயிர் வேறு உடல் வேறாகப் பிரிந்து கொள்ளும். அதற்குப்பின் நித்திய உடல் ஒன்று இவனுக்குத் தரப்படப்போகிறதே அந்த அடுத்த உடல் எக்கோடி காலத்திற்கும் எந்த அவஸ்தைக்கும் அழிகிறதே இல்லை. அது எதைப்போலென்றால் - கல்நார்

இருக்கிறதே? அதை நெருப்பில் போட்டால் நெருப்புடன் சேர்ந்து எரியும் – ஆனல் அந்தக் கல்னுர் வேகுமா? வேகிறதில்லே– அந்த அக்கினியின் வாதைமட்டும் அதற்கு உண்டு - தான் அழிந்து போகிறதில்லே - அப்படிப்பட்ட அழியா னரக் தேகம் இவனுக்குத் தரப்படும். அந்த னரக தேகம் எந்த அவஸ்தைக்கும் எந்த அடி உதைக்கும் எப்படிப்பட்ட இம்சைக்கும் அழியவே அழியாது. சுவர்க்க தேகமோ எப்பொழுதும் 18 அல்லது 20 வயதளவில் னின்று மாருத தங்கத்திருமேனியாக விளங்கும். இப்படியாகச் சுவர்க்கமும் அழியாது - னரகமும் அழியாது. மனிதனே இவ்வாறு னித்தியத்திற்காகவே இறைவன் படைத்தான் - இவன் எப்போதும் அழிகிறதே இல்லே – இவன் இருந்நால் ஒன்று சுவர்க்கத்தில் இருக்கணும் – இல்லாவிட்டால் னரகத்தில் இருக்கணும் – இந்த இரண்டில் ஒன்று இவன் அடைந்தே தீரணும் – ஆகவே மனிதன் எக்கோடி காலத்திற்கு அழிகிறதே இல்லே - அழியவே முடியாது. இது திடமான வார்த்தை.

இறைவன் மனிதனே சுவர்க்கத்திற்காகவே படைத்தானே தவிர னரகத்திற்காக அல்ல. எப்படி என்ருல் னும் மக்களைப்பெற்று வளர்க்கிறேமே - அதனுல் செலவாகிப் போகுது என்று பார்க்கிறேமா? இதிலே அதிலே குறைத்து மிச்சம் பண்ணலாம் என்று செலவைச் சுருக்கிச் சிக்கனம் பண்ணுவது வேறு எந்தக் காரியங்களில் இருந்நாலும் - னம் பிள்ளேகளின் வளர்ச்சி விஷயத்திலே னமக்கு அந்த எண்ணம் வருகிறதா? மிகவும் ஏழையாயிருந்நாலும் அந்த எண்ணம் வருவதில்லே.

தன்னிடத்தில் எவ்வளவு சக்தி உண்டோ அவ்வளவும் அவர்களுக்குச் செய்யத்தான் தோணுமல்லவா? ஆம்! நும் ஒரு முள்ளை உண்டாக்குவோமா? ஒரு இலையின் காம்பை உண்டாக்க முடியுமா? முடியாதே. இறைவன் உண்டாக்கி இருக்கிற ஆயிரத்தெட்டு அண்டங்களையும் நம்பேரிலே என்ன குறிவைத்து உண்டாக்கி இருக்கிருன் – நுமெல்லாம் இறைவனின் மக்கள் – இறைவன் நம் தந்தை அல்லவா? அந்தத் தந்தை நம்மீது வைத்திருக்கிற இரக்கத்தைக் கொஞ்சம் கவனித்துக் கேளுங்கள். உங்கள் மண்டையில் படவே படாது. எல்லாவற்றையும் முண்டாதாரமாக நினைக்கக் கூடாது. பாம்பு புலி எல்லாம் என்ன காரணத்திற்காகப் படைக்கப்பெற்றன – என்ன அறிவு நமக்கு உண்டாவதற்காகப் படைக்கப் பெற்றன – என்று எம்மைக் கேட்டால் தான் தெரியும்.

வேப்ப மரத்திலுள்ள பூவில் எவ்வளவு தேன் இருக்கும்? துளியிலும் துளியாய் மிகவும் கொஞ்சந்தானே யிருக்கும் – அதை யாராலும் எடுக்க முடியுமா? முடியாது – அதற்குத் தேனீ என்ற ஜாதியையே உண்டாக்கித் தேன் எடுக்கும் கருவிகளாகிய நுட்பமான ஆயுதங்களை அவற்றிற்குக் கொடுத்துத் தேனை எடுத்துக் கூடுகட்டிச் சேகரித்து நமக்குக் குடம் குடமாகக் கிடைக்கும்படி இறைவன் ஆக்கி வைத்திருக்கிருனே – எந்த சயன்ஸ் படித்து எப்படிப்பட்ட நுட்பமான கருவியைச் செய்தாலும் பூவிலிருக்கும் தேனை எடுக்க முடியுமா? முடியாதே. அதற்காக ஒரு ஜாதியையே படைத்துக் கொடுத்த இறைவனின் இரக்கத்தை இப்ப எண்ணிப்

பார். அவன் னம் பேரில் எவ்வளவு தயவு உடையவன் என்று னன்ருக எண்ணிப்பார். அப்படிப்பட்ட இறைவன் உன்னை அவஸ்தைப் படவா படைத்திருப்பான்? ஞும் னம் பிள்ளைகளுக்கு இவ்வளவு அருமையாகவா படைத்துக் கொடுக்கிருேம்? னம் பிள்ளைகளுக்குத் தலை வலி காய்ச்சல் என்று வந்து விட்டால் அவர்களிடத்தில் னமக்கு இரக்கம் வருதே - அம்மாதிரி இரக்கம் கூடவா இறைவனுக்கு னம்மேல் இருக்காது - எக்கோடி காலத்திற்கும் ஞம் மேன்மையாக இருக்க வேணுமென்றே எண்ணி எண்ணி னம்மைப் படைத்துள்ளான். ‘‘படைத்த படைப்பெல்லாம் மனுவுக்காக’’ என்று ஒரு சுலோகம் சொல்வார்கள் - யானைக்காகப் படைத்ததாகக் கூறவில்லையே - தேன் எடுக்க ஒரு ஜாதியையே படைத்தது உன்னைக் குறிவைத்துத்தானே - இதை னீ னினைத்துப் பார்த்ததுண்டா? இப்படியே இறைவன் செய்துள்ள ஒவ்வொரு காரியத்தையும் னினைத்துப் பார் - சந்திர சூரியன் முதல் இந்த ஆகாயத்திலே உள்ள சத்துவங்களை அடுக்கடுக்காகப் படைத்தானே - இந்தப் பூமியில் விளையும் சர்வ விளைவுக்காக வேண்டியதெல்லாம் படைத்தானே - இப்படி ஆயிரத்தெட்டு அண்டங்களையும் மனுவின் முகத்திற்காகவே படைத்துத் தந்தவன் இந்த மனுவை அழிந்து போகவா அல்லது அவஸ்தைப்படவா படைத்திருப்பான்? ஆனுல் இவன் இறைவனுக்கு எவ்வளவு விரோதியாய்ப் போனுல் இந்த னரக அதோ கதிக்கு ஆளாக்கப் படுவான் என்று னன்ருக னினைத்துப் பார்.

மனிதன் எப்பொழுதும் அழிகிறதே இல்லை. அரசன் முதல் ஆண்டிவரை - ஆணாக இருக்கட்டும் பெண்ணாக இருக்கட்டும் - படித்தவர்களாக இருக்கட்டும் படிக்காதவர்களாக இருக்கட்டும் - எல்லோருக்கும் இந்த அனித்திய தேகம் போய் னித்திய தேகம் வரும். அந்த னேரத்திற்காக இப்பவே னம் அறிவைக் கொண்டு சுவர்க்க தேகத்தை னமே தேடிவைத்துக் கொள்ள வேண்டும். தவறினால் எக்கோடி காலத்திற்கும் அவஸ்தைப்பட னரக தேகம் தானே வந்து விடும். இப்படி அவஸ்தையில் போய் மாட்டாமல் னித்திய சுவர்க்கத்தைச் சம்பாதிக்கவே னூறு வயதை இறைவன் னமக்கு இனமாகத் தந்நான்.

ஒருனாள் வயதைக் கிரயம் கொடுத்து வாங்க முடியுமா? சூரியன் உதயகிரியில் தோன்றி அஸ்த கிரிக்குப் போகிறதே அந்த ஒரு னாளின் கிரயம் என்ன? ஒரு மனிதனுக்கு ஒரு னாளைக்கு இவன் மூக்கில் 21600 சுவாசங்கள் ஓடுகிறதே - அந்த ஒரு னாளை உன்னுடைய பணம் எல்லாவற்றையும் கொடுத்தாலும் சம்பாதிக்க முடியுமா? அல்லது அதில் ஒரு சுவாசத்தைக் கிரயத் திற்கு வாங்க முடியுமா? முடியாது - அப்படிப்பட்ட னிகமத்தாகிய வஸ்துவை னூறு ஆண்டு காலம் எதற்காக உனக்குக் கொடுத்திருப்பான்? னல்லா புத்தியோடே னினைத்துப் பார். தவறி னரக லோகத்திற்கு னீ போய்விடாத படிக்கு அந்தப் பரமபதம் அடைந்து னித்திய யௌவன தேகத்தை அடையட்டும் என்றல்லவா அருமையான அறிவையும் வயதையும் உனக்குக்

கொடுத்தான் - ஆனுல் யாராவது அந்த னித்திய தேகத்தை அடைகிறுர்களா?

சுவர்க்க தேகத்திற்குள் புகுவதற்கும் னரக தேகத்திற்குள் புகுவதற்கும் உள்ள வித்தியாசத்தை இப்பவே இந்தத் தூலத்திலேயே காட்டுகின்ற அடையாளங்களை னும் பேச்சிலும் னூல்களிலும் வெளியாக்கி இருக்கிறோம் - முன்பே இந்த வித்தியாசம் இருந்து வந்தது தான். அதனுல்தான் ஒருவர் இறந்து அடக்கமான இடத்தை ஆலயம் என்று கொண்டாடுகிறுர்கள். ஆனுல் மற்றவர்களை - அவர்கள் தாய் தந்தையராகவே இருந்நாலும் - செத்த உடனே பேய் என்று சொல்லித் தம்மை வந்து பிடித்துக்கொள்ளும் என்று பயப்படுகிறுர்கள். இரண்டுக்கும் திட்டமான அடையாளங்கள் இருக்கின்றன. இந்த உலகம் எப்படிப் பிரத்தியட்சமாக இருக்கிறதோ அப்படிப் பிரத்தியட்சமான திட்டமான அடையாளங்கள் வேறு வேருக இருக்கின்றன. இவன் இன்னுன் - இவள் இன்னுள் - இவர்கள் சுவர்க்க லோகம் ஜோடியாகப் போய் மகிழ்ச்சி அடையப் போகிறுர்கள் என்று இங்கேயே அடையாளத்துடன் தெரியும் - எப்பவும் இந்த இரண்டு அடையாளங்களும் இருந்நதுதான் - அதில் ஒரு அடையாளம் இறந்நவுடன் கசப்பு ஜலம் வெளியாகி அதனுல் பிணனுற்றம் எழும்பி- விறு விறுப்பேறி - உடல் கனத்து - பல்லும் கிட்டித் தொண்டையில் ஒன்று மிறங்காமல் அடைத்து - விறைப் பேறிப் போகும் - முந்தி மூன்று மணங்கு இருந்நவன் செத்தபின் கனத்து ஐந்து அல்லது ஆறு மணங்காக ஆகிவிடுவான் - அவன் மேலெல்லாம் எங்கு தொட்

டாலும் விஷம் – அவன் முகமெல்லாம் அவலட்சணப் பட்டுப்போய்ப் பார்க்கப் பயங்கரமாகிவிடும். இந்த அவலட்சணம் உண்டாவதற்குக் காரணம் எமன் என்ற இஸ்ராயில் அவனைப் பீடித்ததால் அல்லவா? இந்த அடையாளம் வந்துவிட்டால் நரகத்திற் காளாகிவிட் டான் என்ருகிவிடுகிறது' அப்படி இல்லாமல் இன்னெரு அடையாளம் ஜீவ வித்து வெளியாகாது மணத்துடன் பரிசுத்தப் பிரயாணம் ஆகுவது – அவ்வாறு ஆகி இருந் நால் எமன் தீண்டவில்லை என்று ஆகிறது – இது என்ன சின்னக் காரியமா?

இவ்வாருக அந்த இஸ்ராயில் என்ற எமனை மிதித்து ஏறுகின்ற தவத்தை உடையவர்கள் உலகத் தில் அந்த அந்தக் காலத்தில் வந்து உதயம் செய்கிருர் கள். அவர்களுடைய கிருபையாலேயே இந்தப் பரம பத வாழ்வு ஒருவருக்குக் கிட்டுகிறது. அவர்கள் உன்னைப்போலவே மனுத்தூலத்தில் வந்நாலும் தங் ஙளின் தவ விளைவால் எமனை மிதித்து அப்பாலே ஏறும் சக்தி பெற்று வருகிருர்கள். இந்த உலக காரியத்தை எல்லோரும் அனுபவிக்கிற இளமை காலத்தில் தங்ஙள் உடல் பொருள் முதலாகிய சர்வத்தையும் கைவிட்டுத் துறந்தவர்கள் அவர்கள் – அவர்களுக்கே தவம் சித்திக் கும். ஓடிக்கொண்டிருக்கும் இந்த மூச்சு உள்ளவே ஸ்தம்பிச்சு – வாசி யென்னும் சவாரியேறி – இந்தத் தூலதேகத்தை விட்டு ஜீவ தேகத்துக்குள் பாய்ந்து - ஏழு அண்டங்ஙளும் கடந்து போகும் வல்லபத்துக்குத்தான் தவம் என்று பெயர். அந்த நிலையில் யாரும் கண்டால் பிரேதமாய்ப் போச்சே என்று அந்தத் தூலத்தை எடுத்

துக்கொண்டு போய்ப் போட்டுவிடுவார்கள். அவர்களுக்கு அப்போது உயிர் இருக்காது. ஆகையால் தவக் காலத்தில் தங்கள் இனமாகிய மாணுக்கர்களைக் காவல் வைத்துத் தூலத்தைப் பாதுகாப்பார்கள் - இல்லாவிட்டால் ஆள் சந்திப்பே இல்லாத காடோ மலையோ பார்த்துத் தனித்த எல்லையில் போய்த் தவத்தில் இருந்து கொள்வார்கள். அவர்கள் தேகமானது அந்தத் தவ ஏற்றத்தால் முற்றிலும் மாறிப்போகும். துவாத சாந்தப் பெருவெளி கடந்து ஏறுகின்றதாகிய வல்லப தவம் அவர்கள் உள்ளத்தில் ஏறியதும் அதற்குரிய அடையாளச் சின்னமானது அவர்கள் தூலதேகத்திலேயே தெரியவரும் - அவர்களின் அமுத வாவிலே எல்லா மதங்களின் வேத வாக்குகளும் வந்து வட்டாடும் - அவர்களின் சொந்த மதமோ செயலில் வந்து உடந்தையாக நிற்கும் - மேலும் அனேக ஆண்டுகள் ஆக ஆக - தவமானது மிகுந்து ஏற ஏற வேல் உடுக்கை சங்கு சக்கரம் முதலிய தெய்வீக முத்திரை சன்னதங்களானது அவர்கள் தூல தேகத்திலும் பிரத்தியட்சத்தில் காண எழுந்து விளங்கும் - அந்தத் தேவ முத்திரையானது பூலோகத்தில் வேறு யாருக்கும் இருக்கவே இருக்காது - அந்த ஒரே ஒரு தலைக்குத்தான் அபுரூபமாக இருக்கும். இவ்வாறாக இறைவனுடைய சன்னத முத்திரைகள் பெற்ற அவர்களின் எண்ணத்துக்குள்ளாகி அருளைப்பெற்ற ஒருவன் ஆயிரம் மைலுக்கு அப்பாலே இருந்தாலும் எமனை - "அடே அங்கு அவன் பக்கம் போகாதே" என்று சொல்ல - எமன் அவனை விட்டு விலகிக் கொள்வான் - அவனுக்கு முத்தி தேகம் கிடைக்கும்.

இவ்வாறு இறைவனின் சன்னதம் பெற்ற ஒரு தவ மேருவின் இரக்கத்திற்குப் பாத்திரமாகிற னற்குணம் உனக்கு வருவதற்காக வேண்டியே உபதேசம் என்று சொல்லி-கண்ணில் கண்டதை யெல்லாம் சொல்லி வைப்பார்கள் - இந்த உபதேசம் அத் திருமேனியரின் ஒரு ரோமத்திற்குக்கூடச் சமமாகாது – ஆயிரத்தெட்டு உபதேசம் வாங்கினாலும் எதில் வாங்குவாய்? சைத்தான் உட்கார்ந்திருக்கும் கண்ணில் – பாம்பு உட்கார்ந்திருக்கும் செவியில் - வண்டுலாவும் மூக்கில் - னாய் உட்கார்ந்திருக்கும் வாயில் - இவைகளில்தானே உபதேசம் என்று வாங்குவாய்? அப்படி வாங்கின உபதேசத்தை எத்தனை கோடிதரம் உருப்போட்டாலும் அது அவர்களின் ஒரு ரோமத்தின் உபயோகம் ஆகுமா? னிஜச் செயலுடைய மெய்ஞ்ஞானப் பாரவான்கள் – அதாவது தேவ சன்னத முத்திரை தரித்து வந்துள்ள செம்மல்களின் இரக்கத்தினால் தான் ஒருவனுக்கு எமன் விலகுவானே தவிர மற்ற எந்த உபதேசத்திலும் அவன் விலகவே மாட்டான்.

பாய்மன வீட்டிற் பேய்குடி யிருக்கும்
  பேறறி வடிமையங் ஙாகும்
வாயினில் னாயும் னாசியில் வண்டும்
  மதுசெவி தனில்விஷப் பாம்பும்
ஈயணை ந் திடும்கண் ணிபுலீசன் வீடா
  மிப்படிக் கென்றுனீ தெளிந்து
பாய்வாசி முனைக்கால் வழிகண்டு செவ்வேட்
  பதியுரு வத்திடை யடிக்கீழ்

வாசிகா லுச்சி கண்டத்தின் வழியாய்
ஊசியின் தமர்வழி யோடிப்
பேசரு மூளை மண்டலக் குகைமேல்
பெலஞானக் கண்ணொன் றங் கிருந்து
வாசனை கேள்வி யிருகண்வா யெவைக்கும்
வல்லமை யளிக்குமக் கண்ணே
ஈசன்றன் னிருப்பும் ரவிகோடி வீசும்
இருதய மலர்விரிந் நெழும்பும்.

சன்னதப் பாரவான்களுடைய அன்புக்குப் பாத்திரமாகா தவர்கள் னுறிச் செத்து னரகத்தையடைவது னிச்சயம் – சத்தியம் சத்தியம். இந்த வார்த்தை கொஞ்சங்கூடத் தவறவே தவுறது – எத்தனை கோடி செல்வ மிருந் நாலும் - எந்தப் பதவியி லிருந்நாலும் – திரவியத்தைக் கோடி கோடியாகக் குவித்து அதைத் தருமமென்று ஜனங்களுக்கு அள்ளி அள்ளி வீசினுலும்கூட எமன் அஞ்சு மாட்டான். எப்பேர்க் கொத்தவர்களானுலும் அவன் கையில் சிக்கியே தீர்வார்கள். இவன் செய்கிற அந்தத் தருமத்தால் எமன் அஞ்சுகிறதில்லை. மெய்த் தவப் பாரவான்களின் இரக்கம் இவன்மீது படுவது ஒன்றுக்குத்தான் எமன் அஞ்சி ஒதுங்குவான். அந்த ஒரு தெய்வ உள்ளம்தான் இந்தத் தனி அதிகாரத்தைப் பெற்றுள்ளது. அந்தப் பாரவான்களுக்கு உணவின் பேரிலே இச்சை இருக்காது. ஏய் – இந்த உலகத்திலே னீ அனுபவிக்கிருயே இன்பம் - அதை – தானும் அனு பவிப்பதைப் போலக் காட்டிக்கொண் டிருப்பார்களே தவிர அவர்களுக்கு னிஜமா அதன் மேல் இச்சை இருக் காது. குருவி கொக்கு சாப்பிடும் அளவுக்கே அவர்கள் உணவு உட்கொள்வார்கள். உன்னைப் போல் எருமை

மாட்டார். மூச்சு ஓடுவது அவர்களுக்கு இருக்காது. இழுத்து இழுத்துப் பார்த்தாலும் மூக்கு வெளியே மூச்சு ஓடாது. ஏழு வானங்களையும் ஓர் நொடிக்கு ஓர் அண்டம் கடந்து சுற்றி வருகிற வாசி யென்ற குதிரை ஏறிச் சவாரி செய்கிறவர்கள் அவர்கள்.

"ஜகத்குரு மின்னலைவிட வேகமாகச் செல்லு கின்ற ஒரு குதிரையை உடையவர்களாக இருப்பார்கள். அதன் மேல் ஏறிச் சவாரி செய்துகொண்டு பூமியிலும் ஏழு வானங்களிலும் பிரயாணம் செய்வார்கள்" என்று நாரத மகா முனி புங்கவரவர்கள் தீர்க்கத்தெரிசனச் சபையில் படிக்கப்பெற்றது.

அந்தச் சவாரி இந்தக் காலத்தில் அல்ல – இந்தப் பீத்தத் தூலத்தைத் தூக்கித் தோளில் போட்டுக் கொண்டு போவதல்ல. அது நேரம் அவர்கள் புகுந் துள்ள தூலம் கோடி சூரியப் பிரகாச தூலம். அது தான் நித்திய தூலமாக உனக்கு அடுத்தாற்போல் தரப்பெறுவதும் இருக்கிறது. அத் தெய்வ உதவியால் தான் நீ சுவர்க்கத்தைச் சம்பாதித்துக்கொள்ள வேண் டும் – தவறினால் நரகத்தில் கண்டிப்பாகத் தள்ளப்படு வாய் – அதிலிருந்து யாரும் தப்பவே முடியாது.

அரசனானாலும் ஆண்டியானாலும் மனுத்தலை மட்டும் அழிகிறதே இல்லை. இந்த உலகத்தில் நீ கோடி படிப்புப் படித்திருந்தாலும் நீ அறிய வேண்டிய ஒன்று இதுவேதான். இதுதான் சத்தியம். இந்த ஒரு எண்ணம் உனக்கு இருந்தால் போதும் – எல்லாம் கைவர வாகும். இதை அறிவதற்கே நீ படிப்ப

தெல்லாம் – இதை உணராமல் எத்தனை கோடி சாஸ்திரம் நீ படித்தாலும் பயனே இல்லை.

இந்நத் தூலமானது தாயினுடைய கர்ப்பத்தில் இருந்நபோது அதற்குப் பெயர் சவம் – பிறந்நது சவமானதினால்தான் பிரசவம் என்று அதை அழைக்கிறோம். ராஜாவாயிருந்நாலும் – என்ன – என் பிள்ளையைச் சவம் என்று சொல்லலாமா எனக் கோபிக்கிறதில்லை, பிறந்நது எது? சவம். அதுனேரம் மூச்சு இருந்நதா? பேச்சு இருந்நதா? இல்லை. கர்ப்பத்தில் மூச்சும் பேச்சும் இருந்நால் தாய் பிழைப்பாளா? னல்லா னினைத்துப்பார். இது உனக்குத் தெரியாத ரகசியமா? இதை நீ உன் உலகத்தில் கேட்டிருக்க மாட்டாயே தவிர – படித்திருக்க மாட்டாயே தவிர – யாரும் சொல்லியிருக்க மாட்டார்களே தவிர – எம்முடைய இந்ந வார்த்தையைக் கேட்டால் உனக்கு னன்றாக விளங்கத் தெரியும். இந்ந மூச்சும் பேச்சும் தாயின் கர்ப்பத்தில் இருக்காது. ஆனால் இந்ந மூச்சை வேறு பக்கமாக அங்கே சுழட்டி வைக்கப் பெற்றுள்ளது – எப்படி யென்றால் தவளை மீன் போன்ற ஜலம் வாழ் ஜந்நுக்களுக்கு இருப்பதுபோல வைக்கப் பட்டு மூச்சு சுழன்று கொண்டு உள்ளேயே இருக்கும். தாயின் கருவறையை விட்டு வந்நு வெளி ஆவி அடித்து உடனே சடாரென்று ஒரு எல்லையிலிருந்நு பிரிந்நிட்டு சுவாசமானது வெளிக் கிளம்புகிறது.

இந்ந மூச்சை னூறு வயதளவில் ஒவ்வொருவருக்கும் இறைவன் பங்கி வைத்திருக்கிறான். மனிதனின் வயதின் அளவு – முதல் உற்பவ னேரத்தில் தகப்பனுடைய எண்ணத்தில் வைத்து இருக்கிறது. மனித

னுக்கு ஐந்து ஐந்து நாழிகை கொண்டது ஒரு கலை ஆகும். இவ்வாறுகக் கலை மாறி மாறி ஓடும். அப்படி ஒரு கலையானது மாறிய உடனே ஜனித்தால் இவனுக்கு நூறு வயதாயிருக்கும். நூறு வயதிற்கு மேல் இருப்ப வர்கள் தங்களுடைய தபோ உன்னதச் செயலினுல் வயதை அதிகமாக்கிக் கொள்கிருர்கள். சுவாசக் கலை பிறந்து ஒரு நாழிகைக்குப் பின் நாலு கலையிருக்கும் போது ஜனித்தால் எண்பது வயதாயிருக்கும். ஒவ்வொரு நாழிகைக்கும் இருபது வயதாகப் பங்கிக் குறைக்க வேண்டும். அரை நாழிகை இருக்கும்போது ஜனித்தால் அந்தக் குழந்தை பத்து வயது தான் இருக்கும். கலை மாறுகிறபோது ஜனித்தால் பிறந்ததும் இறந்து போகும். ஆகவே உனக்கு வயது நிர்ணயித்து நீ ஜனிப்பிக்கப் பெறுவது எங்கே இருக்கிற தென்ருல் உன் தகப்பனுடைய அது நேர எண்ணத்தி லிருக்கிறது - இதை உன்னுல் எட்டி அறிய முடியாது. படைத்த இறைவனுக்குத்தான் அது தெரியும். அல்லது இறைவனுடைய சக்தி பெற்றவர்களுக்குத்தான் தெரியும். அகமியத்தில் அந்த அருந்நலத்தை எட்டிப் பிடித்து இன்ன இடத்தில் இன்ன செயல் நடக்கிற தென்பது அவர்களுக்குத்தான் தெரியும்.

இறைவன் என்ருல் கை கால் இல்லாதவ னுச்சே. ஆகவே ஈசனுடைய வேலையை மனித தூலத்தில் வந்துதான் ஒருவர் செய்ய வேண்டும். அவர்களே மனுஈசன் அல்லது குரு அல்லது பாரவான்கள் என்று அழைக்கப்பெறுகிருர்கள். குரு என்ருல் உன் இதய இருட்டைச் சங்காரஞ் செய்து பிரகாசத்தில் மாற்றி வைக்க வல்லவர்களாகும்.

அதிருக்கட்டும் - எத்தனைகோடி உபதேச மானு லும் கண் காது மூக்கு வாய் முதலிய ஐந்துக்குள் அடங்கினவைதானே - இவை எல்லோருக்கும் எப்பவும் உள்ளதுதானே - இதனால் உனக்கு என்ன வந்துவிடும்? இறுதியில் எமன் கையில் செருப்படிதான் வரும். இந்தக் குட்டு மந்திரத்தாலா கோரங் கொண்ட எமன் பயந்து விடுவான் - அவன் இந்த உபதேசம்போல் ஆயிரம் கோடி கற்றவனுச்சே. இதற்கெல்லாம் அவன் பயப்படவே மாட்டான். னெடுங்காலம் தவங்கள் ஏறி னின்று இறைவனின் சன்னத முத்திரை பெற்று வந் துள்ள மெய்ஞ்ஞானப் பாரவான்களின் எண்ணம் ஒன்றுக்குத்தான் எமன் கட்டுப்பட்டவன். அவர்கள் உன்னை னினைத்த மாத்திரத்திலேயே உன் பக்கத்தில் வர எமன் னடு னடுங்குவான். வேறு எதற்கும் இந்த செயற்கரிய செயல் னடக்கவே னடக்காது. னீ பெறு கிற உபதேசத்தினுல் எமன் விலக மாட்டான். ஆனுல் இந்த உபதேசம் எதற்காகக் கொடுக்கப்பெறுகிற தென்றுல் - மனுஊசனுக வந்திருக்கிற குரு கொண்டல் அவர்களின் ஆற்றல் இப்படிப்பட்டது என்று னீ அறி வதற்காகவே. அவர்களது வேதவிளக்க வார்த்தைகளை னீ தெரிந்துகொள்வதால் மட்டும் பயனில்லை. அவர் களின் இரக்கத்திற்கு உரிய சற் பாத்திரனுக னீ ஆகு வதால்தான் உனக்குச் சுவர்க்க பதவி கிட்டும். அதை விட்டு அவர்களின் வெறுப்புக்கு ஆளானுல் அடியோடே தொலைந்து சர்வ னுசமாகப் போய் எக்கோடி காலத்துக் கும் னரகத்தில் அவஸ்தைப்பட வேண்டியதுதான்.

எத்தனை கோடி சாஸ்திரம் படித்து இதை னீ தெரிந்து கொள்ள முடியும்? தெரிந்து கொள்ள முடியவே முடியாது.

உனக்கு முத்தி வந்துவிடு மென்று சொல்லி உபதேசம் கொடுப்பவன் உன்னை ஏமாற்றி வயிறு வளர்ப்பவனே ஆகும். "முத்தி தர வல்லவர்கள் யார்? அவர்களுடைய லட்சணம் என்ன?" என்று யாரும் யோசிப்பதில்லை. மனு ஈசனுக வந்திருக்கிற அவர்களுக்கு இறைவனுடைய சன்னத முத்திரை கட்டாயம் இருக்கும். வேறு யாருக்கும் அவை இருக்கவே இருக்காது. இப்படித் திட்டமாக அறிந்துள்ள மக்களைப் போலிகள் ஏமாற்ற முடியுமா? முடியாது. அவர்களைப் பிராட்டிப் பேசிச் செயிக்க முடியுமா? முடியாது.

எமன் எல்லையில் வாயினுல் ஏதாவது சொல்லி ஆகக் கூடியதா? அது சர்வத்தையும் நாசம் பண்ணுகிறவானாக அல்லவோ னிற்கிறது - அதை மாற்ற ஒரு அரசனுல் முடியுமா? யாருக்கும் முடியாது. தவ மேதைகளுக்குத் தான் எமன் வல்லபத்தை மாற்ற முடியும். ஊண் இச்சை உறக்கம் அவ்வளவையும் தனக்குச் சத்திராதி என்று மாற்றி - செத்தாலும் சரி என்று ஒரு முனைப்பாடு கொண்டு காலகாலம் னின்ருர்களே அந்தச் சிங்கங்களுக்குத்தான் அது முடியும். மூச்சோடாத் தவம் என்ருல் சும்மாவா?

"மூச்சடங்கும் இடத்திருக்க – எவராலும்
முடியாது – இருப்பதிங் னெளிது தம்பி"

இதைச் சொன்னது யாராக இருக்கும்? (அனந்நாதி தேவர்கள்:- இந்நச் செயல் கைவரவாகிய ஆண்டவர்கள் தான்). வாய்ப்பேச்சிலா ஞானம் வரும்? முத்தி கிடைக்கும்? உன் குட்டுமந்திரத்தா லெல்லாம் அது னடக்கவே னடக்காது. அந்ந ஆகம வேதங்ங ளீன்ற அண்ணல் எங்கே? (இங்கே இங்கே என்று அனந்நாதி தேவர்கள் ஆரவாரித்தார்கள்).

சாகாக்கலே என்ற கிரந்நத்தை னும் முன்பே வெளியாக்கி இருக்கிறோம். அதில் சொல்லப் பெற்றுள்ள லட்சணம் இந்ந உலகத்தில் எங்ஙாவது உண்டா - அல்லது முன் வந்ந வந்ந வேதங்ஙளிலாவது இவ்வளவு தெளிவாக இருக்கா? வேத காருண்யர்களைத்தான் னமக்கு னன்ருய்த் தெரியுமே – ஆதியில் ஸ்ரீ ராமபிரான் முதற்கொண்டு ஸ்ரீ கண்ணபிரான் ஸ்ரீ ஜனகாதியர்கள் எல்லாம் வரிசை வரிசையாக வந்நார்களே – கடைசியில் றஸுலுல்லர னபிகள் னுயகம் மக்கத்தில் வந்நார்களே – இப்படியே வடலூரில் வள்ளற்பிரானவர்கள் வந்ந காலம் வரைக்கும் னமக்குத் தெரியுமல்லவா? சரி - இவ்வளவு காலமாக னெடுக வந்ந அவர்களின் கிரந்நங்ஙள் இருக்கின்றனவா – இல்லையா? இருக்கின்றன. அவர்கள் தங்ஙள் செயல்களை வைத்து அவற்றில் பாடியிருக்கிருர்களா அல்லது உன்னுட்டம் ஊமைக்கோட்டான் மாதிரி போய் விட்டார்களா? இல்லை- பாடி வைத்துள்ளார்கள். எங்கே – அவ்வளவையும் எடுத்துப் பார் – அவற்ருேடு னம்முடைய சாகாக்கலே கிரந்நத்தை வைத்து எடை போட்டுப்பார். இது என்ன செயலுடையது என்று அப்பத்தான் தெரியும். எத்தனை

பேர்களை அவர்கள் மெய்யில் நிலை நிறுத்தி அந்த வேதங்களை உண்டாக்கி இருக்கிறார்கள்? நூறு ஐம்பது நாற்பது ஐந்து இரண்டு ஒன்று அல்லது ஒன்றுமே இல்லை. ஆனால் இன்றைக்கு இங்கே எத்தனை பேர்களென்று பார் - சர்வ மதங்களைச் சேர்ந்த 67 ஜாதிகளடங்கிய பல்லாயிரக் கணக்கான ஆண்களும் பெண்களும் நம் சபையில் இப்போ இருக்கிறார்களே.

போன வாரத்தில்தானே நடந்தது - ஈரோடு லக்காபுரத்திலே பண்ணாடி ஜாதியிலே பிறந்த ஒரு பெண்ணுக்குக் கிடைத்த பதவியைப் பார் - அவள் குடிசைக்கு ஒரு பிராம்மணன் ஒரு வெள்ளாளன் போவானா? போக மாட்டார்களே. அவளுக்காக வேண்டி அவ்வளவு பேரும் போய்ப் பூக்கூடையைத் தூக்கினாற்போல் தூக்கினார்களே - ஏன் அது? யார் அது? எம் கையால் இடி பட்ட ஒரு பெண் - அவளுக்கு வயதோ அறுபத்து மூன்று - அடக்கமான மறுநாள் எப்படி எந்த வயசில் இருந்தாள்? முப்பது வயது பெண்ணாட்டம் தெரிந்ததே - அவள் எந்த உபதேசம் வாங்கினாள் - ஒரு உபதேசமும் வாங்கவில்லையே - இந்தக் கையால் ஒரே ஒரு அடிதான் தலையில் வாங்கினாள் - ஏன்? காஷாயம் கொடுக்கிறபோது தலையில் முக்காடு போட்டுக்கொண்டு சேலையால் முகத்தை மறைத்துக்கொண் டிருந்தாள் - "ஏண்டி இப்படி முகத்தை மறைத்துக் கொண் டிருக்கே" என்று இடித்தேன் - முகத்தை மூடியிருந்த துணி விலகியதும் வாயில் ஒரு பல் வெளியே நீட்டிக்கொண் டிருந்தது தெரிந்தது - அதனால் தான் வெட்கப்பட்டுக்கொண்டு அப்படி மறைத்துக்கொண் டிருந்தாள். இதுதானய்யா அவள்பெற்ற உபதேசம் - உங்கள் எல்லோருக்கும் இது

தெரியுமே – அவள் உபதேசம் ஒன்றும் வாங்கலையே - எம் கையால் காஷாயம் தானே பெற்றாள் – அதோடு எம் கையால் ஒரு இடி வாங்கினாள் – அவ்வளவுதான் – என்ன ஆச்சுது? எக்கோடி காலத்திற்கும் அழியாத சுவர்க்க பதவி வாழ்வு அவள் கைவர வாச்சுது.

உலகமெங்கும் தொழுகை வணக்கம் என்று சொல்லி முக்கோடி காலத்துக்கும் தன் தேகத்தின் மேலெல்லாம் தழும்பாகிக் காயமாகிக் கரணம் அடிக்கிறார்களே – என்ன வருது? ஆறு காலம் பூஜை பண்ணுகிறார்களே என்ன வருது? மணியாட்டிப் பூசை போடுகிறார்களே அதனால் என்ன வருது? கடைசியில் பிண நாற்ற னீர்தான் வெளியே கக்குது.

இந்த உலக வாழ்க்கை எம் மாத்திரம்? கோடான கோடி காலத்திற்கும் மனிதன் அழியப்போறதில்லையே - அழிய முடியாதே – இந்த ஆத்திரம் ஒவ்வொருவருக்கும் ஏன் வரவில்லை? இந்த னினைவே வராதபடிக்கு உன்னை ஏதோ மறைத்துக்கொண்டு இருக்கிறது. மேற் கொண்டு புல்லர்கள் வந்து 'புத்தி சொல்லுகிறேன் – உபதேசம் கொடுக்கிறேன்' என்று சொல்லி எல்லோரை யும் நாசமாக்குகிறான்கள் - இது உங்களுக்கு அறிவில் படுகிறது இல்லை – எக்கோடி காலமிருந்தாலும் மனிதன் அழிகிறதில்லை. ஒன்று னித்தியனாகப் பரம பதத்தில் இருக்கவேண்டும் - இல்லாவிட்டால் னரகத்தில் கிடந்து எக்கோடி காலத்துக்கும் அவஸ்தைப் படவேணும் என்று எடுத்துச் சொல்லுவாரும் இல்லை.

"மாரு திருக்கவந்த மறையோன் சொரூபமிது
அழியாச் சிறப்புடைய ஆண்டோன் சொரூபமிது
என்றும் இருக்கவந்த ஈசன் சொரூபமிது
அழித்துவிடாதேஎன்று அறைந்தேன் உலகினுக்கே"

இப்படி எந்த வேதத்திலாவது யாராவது சொல்லியிருக்கிறார்களா? இல்லவே இல்லை. இதுவரை இங்குள்ளதுபோல் யாராவது மெய்ஞ்ஞான வாழ்வில் 67 ஜாதிகளிலுமுள்ள ஆண் பெண்களை வைத்து ஆண்டிருக்கிறார்களா? எங்கே காட்டு - பார்க்கலாம்.

"னித்தியத் தின்பிறவி னீயெடுக்கா தேயிருந்து
கெடுத்துவி டாதேயென்று கூறும்கொ ரல்இதுவே"

(ஆண்டவர்கள் தங்கள் தொண்டையைத் தொட்டுக் காட்டி) இந்தக் கொரல்தான் கூவுது - கேட்டாக் கேள் - கேட்காவிட்டால் போய் அவஸ்தைப் படு.

அடபாவி - என்றைக்கும் னீ இருந்தே தீரணுமடா - அப்படி இருப்பது னித்திய சுவர்க்க வாழ்வில் இருக்க வேணுமா? இதைச் சம்பாதிக்கத்தானே உனக்கு னூறு வயதை இறைவன் தந்தான் - இந்த மேலாம்பரமான அறிவையும் உனக்குத் தந்தான் - வேறு எதற்கும் அல்லவே - இந்த உலக வாழ்வு முடிந்ததும் ஒன்று னரக தூலம் எடுத்து னித்திய னரகம் என்று சொல்லப்பட்ட உலகத்தில் னீ இருக்க வேணும் - இல்லாவிட்டால் வர்ணனைக் கடங்காத அழகினையுடைய னித்திய தூலம் எடுத்து சுவர்க்கம் என்று சொல்லப்பெற்ற உலகத்தில் இருக்கவேணும். சுவர்க்கத்தில் எட்டு ரகமிருக்கிறது - னரகத்தில் ஏழு ரகமிருக்கிறது - னரகம்

சுவர்க்கம் என்ற பெயர்கள் ஆண் பெண் எல்லோருக்கும் தெரியுமே. அந்த உலகத்துக்குப் பேரே னரகம் என்றல் தின்பதற்கு அங்கு மிட்டாயா இருக்கும்? னல்லா னினைச்சுப் பாருங்கள் – ஏ ஐயா – ஏ அம்மாக்க மார்களே - அங்கு னாகல்தான் இருக்கும் – அல்லது சிவந்த னிறமான கள்ளி இருக்கும் - அதன் காரலோ தொண்டை புட்டுப் போகும்படிக் கசப்பதாயும் தேள் கொட்டுவதுபோல் விஷமுடையதாயும் ஒவ்வொரு ஓரத்திலும் பதினறு முட்களைக் கொண்டதாயு மிருக்கும். னரகத்தில் அதுதான் உணவு. அந்த னரக வேதனையை எவ்வளவு னளைக்கு அனுபவிக்க வேணும் தெரியுமா? யாரையும் இந்த உலகத்தில் தண்டித்தால் மூன்று மாதம் மூன்று வருஷம் பத்து வருஷம் இருபது வருஷம் என்று தானே தண்டிப்பார்கள் - அப்புறம் விடுபட்டுத் தப்பிக்கலாமே – ஆனல் னரகமோ யுகங் கோடி யுகங் கோடிகோடி காலத்துக்கும் மீளாத அவஸ்தை யாச்சே. இது தெரியாமல் – செத்துப் போனல் ஒண்ணுமில்லே என்று லேசா னினைச்சு எல்லோரும் அனியாயமாகப் போகிறர்களே. ஏய் – னீ சாகப்போகிற தில்லே. கட்டாயமாக னரகத்தில் கொடிய னெருப்பிலும் அடி உதையிலும் அவஸ்தைப் பட்டுக் கேவலப்படப் போகிறய்– உஜார் - அது இல்லாது தப்பி முடிவில்லா மகிழ்ச்சியில் யுகங் கோடி கோடி காலத்துக்கும் சுவர்க்கத்தில் இருக்க வேணு மென்று உன் னினைவில் போய் உட்காரட்டும் என்றுதான் இந்தப் பிரசங்கம் னும் எடுத்தோமே தவிர உனக்குப் புத்தி சொல்வதற்காக அல்ல. னும் எப்படிப் பேசினலும் அது உன் னினைவில் ஆணியாய்ப் போய்ப் பதிய மாட்டே

னென்கிறது. மனிதனுகப் பிறந்த னும் எக் கோடி காலத்துக்கும் இருக்கப் போகிறவர்கள். இப்பவே இந்த மனித உடல் இருக்கும் போதே சுவர்க்க லோக மகிழ்ச்சியைச் சம்பாதித்துக் கொள்ள வேணும் - தவறினல் எக்கோடி காலத்துக்கும் னரகத்தில் அவஸ்தைப் பட வேணுமென்று கட்டாயமாய் எல்லோர் னினைவிலும் வரட்டும் என்ற ஒன்றுக்காகத்தான் காலமெல்லாம் எம்முடைய பாடு. இதை அறிய ஒரு புஸ்தகமா வேண்டும்? இதோ ஒரு வார்த்தையில் சொல்லி விட்டோமே - னறுக் கென்று உன் னினைவில் இதை ஆணியாய் ஊணி வைத்துக்கொள்.

னும் எக்கோடி காலத்துக்கும் சாகிறதில்லை - இந்த அனித்திய தேகம் போய் னித்திய தேகம் னமக்கு வரப் போகிறது. னமக்கு இப்போ இருக்கும் இந்தத் தேகம் வெட்டினல் வெட்டுப்படும் - வருத்தம் அதிகம் கொடுத்தால் இந்த உடலை விட்டு உயிர் பிரிந்து போகும்- ஆனல் அந்த னித்திய தேகம் அப்படிப்பட்ட தல்ல. தீயை வைத்து எவ்வளவு கொளுத்தினலும் அதில் வரும் வாதையை அனுபவிக்கிறதைத் தவிர செத்துப் போகிறதில்லை. ஐயோ ஐயோ என்று கால மெல்லாம் கத்திக்கொண்டே இருக்க வேண்டியதுதான். அந்த னரக னித்திய தேகத்தை வாளால் அறுக்க அறுக்க ஐஸ் கட்டியை அறுத்தால் பின்னே ஒட்டிக் கொண்டே வருவதைப்போல் ஒட்டிக்கொண்டு வருமே தவிர பிளவு படுவதில்லை. அறுப்பதால் ஏற்படும் அந்தக் கொடூரமான வாதையை அனுபவிப்பானே தவிர உயிர் எடுபட்டுப் போவதில்லை. மனிதனை இறைவன் மகா உன்ன

தத்தில் எண்ணிப் படைத்தது இப்படிப்பட்ட அவஸ்தைக்காகவா?

இந்த உலகத்தில் ஞம் பார்க்க எவனுவது தீட்டு வெளியாகாமல் பிண ஞற்றம் இல்லாமல் சாகிருனு? இல்லையே. ஐயையோ - எல்லோரும் ஞறித்தானே சாகிருர்கள். இந்த உலகத்தில் - இந்த அதோகதிக்கிடையில் ஞம் வந்துதான் சிலருக்கு அதை மாற்றி மணத்தோடு அடக்கமாகும்படி ஆக்குகிறோம். மற்ற எல்லா மனுத்திரனும் அடியோடே ஞறித்தானே சாகிருர்கள். இந்த எச்சரிப்பை உன் னெஞ்சில் அழுத்தமாக வைராக்கியமாக வைத்துக் கொள். இல்லாவிட்டால் போனதுதான் - போ - யாருக்கென்ன. இதை னறுக்கென்று தெரிவிப்பதற்காக வேண்டியே வேத வேதாந்த னூல்களெல்லாம் வந்தன.

உபதேசம் என்று வாங்குகிருர்களே - அங்கே எமன் பதி எல்லையில் வந்து அது என்ன பண்ணப் போகுது? உன் கண் காது மூக்கு வாய் எல்லாம் உன்னிடம் தானே இருக்கு - அதெல்லாம் செயலற்று அடைபட்டுப் போகுமே - எமன் எல்லையில் அதா வந்து உதவி செய்யப் போகுது - அது என்ன னன்மை செய்யும்? உன் ஒரு ரோமத்தின் பிரயோசனம் கூடச் செய்யாது. கண் காது மூக்கு வாய் என்று வாங்குவதா உபதேசம் - இல்லவே இல்லை. தவ மேருவாகிய செம்மல்களின் கருணையான இரக்கம் உன் மீது பாய வேணும் - அதுதான் உனக்கு முத்தி னல்கும். ஒரு பெண் ஒரு குடிகாரனைக் கட்டிக்கொண்டு காலமெல்லாம் அவனைத் தன் வசப்படுத்தி அந்த முரட்டு மூடனேடு வாழ்கிருளே -

அந்நப் பெண்பிள்ளைக்கு இருக்கும் சாமர்த்தியம் ஜாக்கிரதை கூடவா உனக்கு ஒரு ஆண்பிள்ளைக்கு இந்நத் தெய்வ வாழ்வில் இல்லாமல் போகும் ?

தவத்ததிகாரச் செம்மல் ஒருவர் எல்லோருக்கும் வேணும் - அவர்களோ இந்ந னில உலகத்தில் அருமையாய் ஒருவர் தான் இருப்பார்கள். பொய் வேஷதாரிகளோ திருடர்களோ ஏராளமாய் இருப்பார்கள். இங்கே இராஜகெம்பீரத்தில் ஒரு சண்டாளன் இருந்நானே - அயோக்கியத் திருடன். ஙம் இந்ந ஊருக்கு வரும் போது அவனுக்கு வயது ஏழு - அவனுடைய தாய் வாவம்மா முந்நாணிச் சீலையைப் பிடித்துக்கொண்டு போவான் - அவன் ரெங்கூனுக்குப் போய்த் திரும்பி வரும்போது இந்நக் காவணம் தலை தட்டும்படி வளர்ந் திருந்நான். அவன் தாய் பேரில் ஙம் வைத்த இரக்கம் அவள் பிள்ளை பேரிலும் வருமே! ஆகவே ஙம் அவன் மேல் இரக்கப்பட்டு உபதேசம் கொடுத்தோம். அவன் கையில் அது என்ன ஆச்சு - தன் தலைக்கே கல் ஆச்சு - அது மட்டுமா - அந்ந அஜாஸில் எத்தனையோ ஆயிரக் கணக்கானவர்களையும் கெடுத்துத் தன் ஊராகிய னரகத்துக்கே எல்லோரையும் கூட்டிப் போய் விட்டானே. அவன் எப்படி ஙறி ஙக்குத் தள்ளிச் செத்தானே அது போலவே அவனைப் பிரியமாய் னினைத்தவர்கள் எல்லோரும் ஙறிச்சாகவே சாவார்கள் - திட்டமாக அவர்களுக்கு அதோ கதிதான் - சந்நேகமே இல்லை. அப்படிப்பட்ட கொடூரமான தீட்டு அமலுடையவன் அவன் - சைத்தானில் வைத்து ஒன்று ரெண்டல்ல - ஆயிரம் சைத்தான்களைச் சேர்த்து ஒன்ருக்கப்பட்ட

அழினரக சைத்தான் - அவன் மேல் இரக்கப்பட்ட வனுக்கும் அதோ கதிதான் வரும் இப்படியே னம் சபையில் சேர்ந்த ஞலு பேர் ஞசமாய்ப் போஞன்கள். அடே அழி பாவி - இங்கு எத்தனையோ ஆண் பெண் ஏழை பாழை படித்தவர் படிக்காதவர்கள் எல்லோரும் பரமபத வாழ்விற்குத் தாக்கலாகி யிருக்க உனக்கு மட்டும் ஏன் இப்படிச் சனியன் பிடித்தது - இதுவா ஞானம்? அது உன்ஞல் முடியுமா - அது என்ன அவ்வளவு சின்ன வேலையா - உன்ஞல் ஆகக்கூடியதா? ஒரு ஞள் இரவு தனித்து மலையில் காட்டுக்குள் போய் உட்கார்ந்திருப்பாயா - அது உன்ஞல் முடியுமா? எவ்வளவு காலம் ஞம் அவ்வாறு இருந்நோம் - அப்போது உன்னைப்போல் எம் வாய் உணவு தேடி இருக்குமா? இல்லையே. இலைக் கத்தாழையைத் தின்றுகொண்டு தான் எவ்வளவோ காலம் தவத்தில் ஏறியிருந்நோம் - எல்லா ஞான முத்திரைகளாகிய சன்னதங்களும் எல்லா வான் பட்டங்களும் வந்து விட்டன. போதும் விடு என்ருலும் ஞம் விடாமல் னின்ரும் - ஏறட்டும் என்று மேலும் மேலும் முனைந்து னின்ருமே - அது என்ன வாய்ச் சொல்லால் னடக்குமா? அது வெறும் வார்த்தையா? இல்லை. எப்படிப்பட்ட மன்னர்கள் எல்லாம் இருக்கிருர்களே - எவ்வளவோ கற்றவர்களெல்லாம் இருக்கிருர்களே - இந்தக் காரியம் யாராலாவது செய்ய முடியுமா? எமன் கண்டு பயப்படுகிற தவ வல்லப மல்லவா அது? அடே எமனுக்குத் தெரியாத உபதேசமா னீ வாங்கி விடுவாய்? அவன் படிக்காத படிப்பா னீ படித்து விடுவாய்? வேதங்களில் சொல்லப் படுவதாவது - இப்லீசானவன் உனக்கு மேல்

தலை கழுந்நலா படித்திருப்பான் - அவன் பண்ணுத வணக்கமே கிடையாது - அவன் முள் முனையிலே கூட சஜீதா செய்திருக்கிருன். னீ அப்படியா செய்திருக் கிருய்? உன் செயலை வைத்து எமனை ஜெயிப்பது எப்படி? உன் ஈனச் செயலா அங்கு செல்லும்? உன் ஞற்ற வாயால் பேசுகிற உபதேசமா அவனிடம் செல்லும்?

ஆகையால் உன்னைப்போல் தேக மெடுத்து வந்து தன் தவப் பாட்டால் தன்னுடைய தேகத்தை மாற்றித் தன் சுவாசத்தை மாற்றி வாடாத னிலைத்த தவத்தில் ஏறி னிற்பவர்களாகிய ஒரு மெய்ஞ்ஞானச் செம்மலின் இரக்கம் உன்மேல் பாய வேணும் - அது கிட் டினல் ஒரு வார்த்தை கூட னீ படிக்கவேண்டியதில்லை - அவர்களின் மறைமொழி வாய்மையின் உன்னதத்தை னீ தெரிந்து கொள்வதற்கே படிப்பு வேண்டும் - ஆனல் எமன் எல்லையில் தப்ப அவர்கள் இரக்கம் உன்மேல் பாய்ந்நால் போதும் - பலதிலும் பழகும் மனிதனை மற்றவன் ஏமாற்றி விடாதபடி இருப்பதற்கே உப தேசம் வாங்குவதும் அதன்பின் வேதனுால்களைச் சாட்சி யாகப் படிப்பதும். அதற்குத்தான் சாஸ்திர அறிவும் வேண்டும். ஆனல் மேற்சொன்ன தவ மேராக னின்று சர்வ சிரஞ்ஜீவி வரங்களையும் அளக்க வல்ல தெய்வ குணம் படைத்தவர்கள் வாய்த்துக்கொண்டால் எந்த அறிவும் எந்தப் படிப்பும் வேண்டிய தில்லை - அவர்களு டைய னேசம் மட்டுமே னமக்கு வேண்டும் - அதை விடாப்பிடியாக னும் கைப்பற்றிக் கொண்டால் போதும். இதைத் தான் "அன்பே சிவம்" என்று சைவாகமத்தில்

கூறி வைத்துள்ளார்கள் - அவர்கள் கையில் உள்ள முத்திச் செயல் சர்வ உலகங்ஙளிலும் சர்வ வேதங்ஙளிலும் உள்ள ஏட்டிலே வாசகத்திலே கிடையவே கிடையாது. ஒருவன் எல்லா வேதங்ஙளை யும் முக்கி முக்கிப் படித்தாலும் ஓதிவிட்டுக் கதறு கத றென்று அழுது கத்தினுலும் எமனுடைய சந்நிப்பிலே அவை எதுவும் வந்து கொஞ்சுங்கூடப் பயன்படாது - உன்னுடைய அந்நப் பாட்டினுலெல்லாம் பிணனுற் றம் கிளம்புவது னிற்காது - உலகத்திலுள்ள அவ் வளவு வேதங்ஙளையும் ஓது ஓதென்று ஓதிப்பார் னடக் குமா? காலில் அடிச்சா பல்லா விழும்? செய்யவேண்டிய தைச் செய்தால்தான் எதுவும் முடியும் - செய்யக் கூடாத தைச் செய்தால் ஆகவேண்டியது ஆகுமா? ஆகாது. தேவ சன்னதமாகிய இறைவனின் முத்திரை பெற்றவர் கள் யாரென்று தேடிப் பார்த்து இப்பவே அவர்கள் பால் அடைந்நுகொள் - னீ தப்பிப்பாய். அப்படிச் செய்யாமல் செத்தால் அப்புறம் ஒண்ணுமில்லை என்று னினைக்கிறுயே - அது இல்லவே இல்லை - எக்கோடி காலத்துக்கும் னரகத்தில் கிடந்து அவஸ்தைப் பட வேண்டியது கட்டாயம் வந்து விடும் - உஜார். இன் ெனுரு முறை சொல்லுகிறேம் - இப்பவே தப்பித்துக் கொள்.

"எல்லா மதங்ங்ளுமே இலங்ஙுதிருச் சாலையிலே
வல்லாளர் என்றெருவர் வந்நுற்றூர் பூங்கிளியே"

என்று அனந்நாதி தேவர்கள் ஸ்தோத்திரித்து ஆர வாரித்தார்கள் - தொடர்ந்து ஆண்டவர்கள்:-

அந்நந்ந மதத்தில் குருக்கள்மாரென்று சொல்லி எவ்வளவோ பேர்கள் இருக்கிறுர்கள் - அவர்கள் உப

தேசம் என்று செய்வார்கள் - அதனாலே முத்தியா கிடைக்கும்? இல்லவே இல்லை. வடலூரில் வந்த அந்த மேதை - தான் பிறந்த சைவ மதத்தைப் பற்றிப் பேசிப் பார்த்தாரே - ஒரு நலை முறை காலம் கூவிக் கூவிப் பார்த்தாரே - அருட்பா என்ற ஒரு பெரிய நூலைப் பாடி வைத்தாரே - அந்தச் சிவ முதலை அவரிடம் யாரும் எளிமையாகப் பெற்றிருக்கலாமே - பெறவில்லையே. ஆனால் தூஷணை பண்ணி எல்லோரும் நாசமாய்ப் போய்விட்டார்கள் அப்படி இருக்கக் கிரேதாயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் கலியுகம் ஆக சதுர் யுகத்திலும் வந்த வந்த சர்வ மதங்களுக்கும் அதிபதியாக ஒருவர் கல்க்கி என்றும் மகதி என்றும் நாமத்தில் ஏறி வருகிறார்கள் என்று எல்லா வேதங்களிலும் கூறியுள்ளதே - அந்தச் செயலைச் செய்கிறவர் யார் என்று தேடிப் பாருங்கள்.

அனந்நாதி தேவர்கள்:- "இதோ நாங்கள் தேடிக் கண்டு கொண்டோம் அவர்களை".

ஆண்டவர்கள்:- இப்போ இந்த உலகத்துக்குச் சொல்ல வேண்டியது என்னவென்றால்- ஏய்! மனுவாய்ப் பிறந்த நீ - ஏமாந்து கற்பகோடி கால அவஸ்தைக்குப் போய் விடாதே - அப்படிப் போவதிலேயே எல்லோருடைய நினைவும் ஓடி அலைகிறது - அதற்கு உதவி செய்ய ஏமாற்றக்கார சைத்தான்கள் நிறைய இருக்கிறார்கள். அவர்கள் கையிலிருந்து தப்பித்துக்கொள் - தப்பித்துத் தவத்துடைய ஒரு செம்மேருவின் கைக்கு இணக்கமாகி அவர்கள் பிரீதியை இப்பவே பெற்றுக் கொள் - அதுவே சுவர்க்கம். அதுவே உனக்குப் போதும். இது ஒரு பூவனை பொற்காலம். நாம் சொல்வது

வெறும் வார்த்தை அல்ல - செயல். எல்லோரும் அவஸ்தைக்குப் போவதை னும் குறுக்கே னின்று தடுக் கிறோம் - மீறிக்கொண்டு போனல் அதிலேயே போகட்டு மென்று னுமே தள்ளி விடுவோம். னிலேத்து னின்றவர் களுக்கு னிச்சயம் வாய்க்கும் வரமான அந்நச் சுவர்க்க பதி வாழ்வு!

சிவமதப் பெட்டகமாகிய சைவாகமத்தில் உள்ள ‘அன்பே சிவம்’ என்று பரிமளிக்கும் முத்திரை வார்த் தையை வைத்து இந்ந னூலேப் பார்.

னீதியெனும் பொருளான மனுக்கு லத்தை
னித்தியனும் னித்தியத்திற் கேப டைத்தான்
ஓதியிதை யுணர்ந்நறியா உயிர்க்கோ டிகள்
ஊறுபட்டு அலகைனர காள லாலே
சாதிமனுக் குலமனேத்தும் ஜீவன் கண்ட
சென்மசா பல்யகுல மாக வென்றே
ஆதிமெய் யுதயபூ ரணமாம் சாகா
ஆங்நிலயை யறிந்நவர்கள் தேவ ராமே.

4. இறைவன் மதங்களை உண்டாக்கியது ஏன்?

நம் அனைவரும் ஒவ்வொரு மதத்தில் சார்ந்திருக்கிறோம் அல்லவா? ஒவ்வொருவரும் அவரவரின் மதத்தின் பேரில் பற்றுதலாய் இருக்கிறோம். எப்பேர்க்கொத்த பற்றுதல் என்றால் தன் தாய் தகப்பன் மேல் வைப்பதை விட அதிகமான பற்றுதல். ஒருவர் மதத்தைப் பற்றி மற்றெவரேனும் இழிவாய்ப் பேசினால் குத்து, கொலை னடக்கிறதைப் பார்க்கிறோம். இப்படி ஆத்திரம் வரக் காரணம் என்ன? தாய், தந்தை, மனைவியால் பிரயோசனம் அடைகிறோம் – அவர்களைச் சொன்னால் ஆத்திரம் வருவது சரி. அம்மாதிரியாக மதம் உனக்கு என்ன பிரயோசனம் செய்தது? யாரேனும் சொல்லிக் கொடுத்தா இந்த ஆத்திரம் வருகிறது? இல்லையே! இதற்குப் பதில் இந்தப் பூலோகத்தில் எவராவது சொன்னால் ஐம்பதாயிரம் ரூபா பந்தயம் வைக்கிறோம். நம் சொல்ல வேண்டுமென்றால் எமக்கு னீங்கள் ஒரு பொடிமட்டை வாங்கிக் கொடுத்தால் போதும். (சபையில் மகிழ்ச்சி). இது பற்றி நம் அறிவித்துள்ள எமது மெய்வழிக் குல மக்களைத் தவிர மற்றைய யாருக்கும் இதற்குப் பதில் சொல்லத் தெரியாது.

அவரவரின் மதத்தின் பேரில் இப்படி உயிர்ப்பற்றுதல் இருந்தும், அதற்குரிய காரணம் இன்னது என்று யாருக்கும் தெரியாமலேயே இருக்கிறது. ஒரு மதத்தின் உண்மையைத் தெரிந்து கொண்ட ஒருவனுக்குத்தான்

அதைப்படைத்த அதே சர்வேஸ்வரனே இன்னொரு மதத்தையும் படைத்தான் என்பது னன்கு விளங்கும். தன் மதத்தின் உண்மையை அறியாதவனுக்கு மற்றைய மதங்கள் எதிரியாகவே தோன்றும். எல்லா மதங்களையும் உண்டாக்கிய மூலபுருஷன் ஒரே இறைவன்தான். இறைவனின் அருட்சக்தியே அந்நந்நக் காலத்தில் அந்நந்நப் பாஷையில் மனித தேகத்தில் புகுந்து னின்று மதத்தை உண்டாக்கியது. அந்த மதம் இந்த மனுத்தலைக்குச் செய்யும் பிரயோசனம் னிகரற்றது. அதற்கு மேம்பட்ட பிரயோசனம் எதுவுமே இல்லை.

இறைவனால் படைக்கப்பட்ட தனைத்தும் மனுக்குல முழுதிற்கும் ஒரே விதமாகத்தானே பிரயோசனப்படுகிறது. எல்லோருக்கும் அறுசுவை ஒன்று போலவே இருக்கிறது. ஒருவனுக்கு இனிப்பது, மற்றவனுக்கும் இனிப்பதாகத்தான் இருக்கிறது. உப்பு ஒரே சுவையைத் தான் எல்லோருக்கும் அளிக்கிறது. இப்படியே மண், தண்ணீர், காற்று முதலியதனைத்தும் எல்லோருக்கும் ஒரே மாதிரியாயிருக்க இறைவனால் உண்டாக்கப்பெற்ற வேதமும், மதமும் வேறு வேருகவா இருக்கும்? காலத்தையும். னாட்டையும் ஒட்டி அவற்றிற்குத் தக்கபடி வெவ்வேறு பாஷைகளில் வேதம் எழுதப் பெற்றிருக்கலாம். ஆனால் அவற்றின் அடிப்படை மெய்ச்செயல் ஒன்றுகவே இருக்கிறது. தண்ணீர் என்று சொல்லிக் குடித்தால் தான் தாகம் தீருமா? வாட்டர் என்றல் தாகம் தீராமலா இருக்கும்!

ஒரு குழந்தையைப் பெற்று வளர்த்துக் கடைசியில் அதைத் தண்டிக்க னும் ஒரு சுத்தி செய்து வைப்

போமா? வைக்க மாட்டோம். இறைவன் னம்மை விட எவ்வளவோ கோடி பங்கு கருணையாளன் ஆயிற்றே. னமக்கே இந்தக் கருணை எண்ணம் இருந்நால் எத் தகைய பேரின்ப லாபத்தை அடைய வேண்டுமென்று இறைவன் மனிதனைப் படைத்திருப்பான். அதை விட்டு னரகமாகிய கொடிய தண்டனையை மனிதன் அடைய அவன் னினைப்பானு? னும் கேட்காமலேயே இந்த மனிதனைக் குறிவைத்தே ஆயிரத்தெட்டு அண்டங் ஙளையும் படைத்தான். இறைவன் படைத்த பொருளைத் தானே ஒரு தந்தையால் தன் பிள்ளைக்கு வாங்கிக் கொடுக்க முடியும். மனிதன் உபயோகித்த கழிவுப் பொருட்களை மற்றைய ஜீவராசிகளுக்கு உணவாகிறது எனில், இப்படி உன்னதத்தில் படைக்கப்பெற்ற மனிதன் னரகலாகி, தீட்டாகி னித்திய அவஸ்தைக்குப் போகவா படைத்திருப்பான் - சிருஷ்டியில் னித்தியம் எது? அனித் தியம் எது? மனுதான் னித்தியப் பொருள். அவன் சாவதே இல்லை. மற்றவை அனைத்தும் அழியும். மனிதன் ஊழிஊழிகாலம் இருக்கின்றவன் என்பதை னிருபித்துக் காட்டவே னும் வந்திருக்கிறோம்.

உலகத்தில் ஏழு பிறப்பு என்று வாயில் சொல்லிக் கொள்கிறார்கள். செத்துச் செத்துப் பிறப்பது என்று தான் அதற்கு வியாக்யானம் செய்கிறார்கள். ஒரு பயிர் செத்துச் செத்துப் பிறந்நால் விளைவுக்கு வருமா? ஏழு பிறப்பு இன்னது என்று உலகுக்கு னும் வெளியிட்டா லன்றித் தெரியாது. முதலில் தாயின் கருவறையில் னும் ஜல ரூபமாக இருந்தோம். அந்த எல்லையில் இந்த உடல் உதிரத்திறைல் கட்டப் பெற்றது. அதன்பின் ஒரு

னேரம் வருது. பிரசவம் ஆச்சுதா என்கிறோம். பிர–சவம் அதாவது பிறந்தது சவமா? இப்படிப் பிரித்துச் சொன்னால் அடிதுடி சண்டைக்கு வந்துவிடுவார்களே. பின் ஏன் பிரசவம் என்ற அந்தப் பெயரை வைத்தார்கள்? அதற்குக் காரணம் என்னவாயிருக்கும்?

வந்திருந்தவர்கள் : தெரியவில்லை.

ஆண்டவர்கள்: சாகாக்கலை கற்றுத் தேர்ந்தவர்கள் தான் இதைப் பற்றிப் பேச முடியும். மற்றவர்கள் அறிவுக்கு இது எட்டாது. பிரசவம் என்பது சத்திய வார்த்தை. தாயின் கர்ப்பத்தில் அவயவம் எல்லாம் இருந்தும் மூச்சும் இல்லை, சப்தமும் இல்லை. இப்போது ஒருவருக்கு மூச்சு, சப்தம் இரண்டும் இல்லை என்றால் என்ன சொல்கிறோம்?

வந்திருந்தவர்கள்: சவம்!

ஆண்டவர்கள்: பிறந்த சிசு அந்த நிலையிலிருந்ததால்தான் அதற்குப் பிரசவம் என்று பெயர் வைத்தார்கள். இது ஞாயம்தானே? சிசு பூமியில் வெளியானவுடனே மூச்சு அகமுகத்தில் ஓர் எல்லையில் வில்போல் ஊன்றி வெளியில் வீசுது. அத்துடன் சப்தமும் வீறிட்டெழுகிறது. ஒரு வாசல் அடைத்து மற்றொரு வாசல் திறக்கப்படுகிறது. இந்த அறுத்தடைத்த வாசற்குள் உங்களை அழைத்துப் போகவேணும் வந்தோம். தாயின் கருவறையிலிருந்து வெளியானதும் அது முன்னிருந்த பிறவியல்லவே. பேச்சு மூச்சற்ற நிலைக்கும், அவை உள்ள நிலைக்கும் எவ்வளவு வித்தியாசம்? பிறகு இன்னொரு பிறப்பு – குழவி! அந்தப் பிறப்பில் கண், காது, வாய், மூக்கு, கை, கால் முதலிய எல்லா அங்கங்களு

மிருந்தும் ஒன்றும் உபயோகமில்லாமல் இருக்கின்றன. வாயிருந்தும் மூகையாக இருந்தோம் - கண்ணிருந்தும் பார்வையில்லை - பிறகு ஒரு பிறப்பு. பார்வை, ருசி, கேள்வி, வாசனை இவை ஒவ்வொன்ருய் உண்டாயின. அந்தப் பிறப்பில் கொதிக்கிற வடைச்சட்டியில் கை வைத்துச் சுட்டுக்கொண்டால் 'குய்யோ' வெனக் கதறிக் கொண்டே மற்ருெரு கையையும் அதனுள் விடுவான். அடுத்து ஒரு பிறப்பு வந்தது. எதனுல் னம் கை சுட்டு விட்டது என்று புரிந்து கொள்ளும் அறிவு வந்த பிறப்பு அது. அந்தப் பிறப்பில் ஒரு கையில் தின்பண்டத்தையும் ஒரு கையில் பவுனையும் னீட்டிறுல் தின்பண்டத்தைத்தான் வாங்குவான். இது தீனிப் பருவம். பிறகு பவுன்தான் அதிக மதிப் புடையது, அதைக் கொண்டு எவ்வளவோ வாங்கலாமே என்ற அறிவு வந்தது. இவ்வாருகவே சவம் என்று சொன்ன அந்தக் கீழான னிலையிலிருந்து - குழவி - மங்கை - மடந்தை - அறிவை - தெரிவை என்று ஒவ் வொரு பிறப்பாக எடுத்து வளர்ந்தோம்.

இனி ஒரு பிறப்பு எடுக்கவேண்டும். அதுதான் அறிவைக்கொண்டு பிறப்பது. னம்முள்ளேயே பிறப் பது. அந்தப் பிறப்பு அடைந்து விட்டால் எமனுக்கு னம்மிடம் ஜோலி இல்லை! இந்த மறுபிறப்பாகிய தேவப் பிறப்பு எடுக்காவிடில், னிச்சயமாக அதற்கு அடையாள மாகப் பிண ஞற்றம் எழும்பிக் கசப்பு தீட்டு ஜலம் வெளி யாகி னித்திய னரகம் இவன் தலைக்கு வந்துவிடும். அந்தக் கோர அவஸ்தையிலிருந்து மீட்சிக்கவே மதம் வந்தது. ஆகவேதான் அதன்மீது னம்மை யறியா மலேயே அவ்வளவு உயிர்ப் பற்றுதல் இருக்கிறது.

தன் தன் மதத்தில் அவ்வாறு பற்றி இருப்பவர்களைத் தான் மெய்ஞ் ஞானிகள் நம்பி ஏற்றுக் கொள்கிறார்கள். இந்தப் பற்று இல்லாவிடில் உன்னை நம்ப மாட்டார்கள்.

மாமிச வாடைக்குத்தானே புலி பாய்ந்து வரும் - புல் வாடைக்கு வருமா? வராது. அதேபோல் உன் ஜீவன், சர்வேஸ்வரன் கைவசமாகிச் சுத்தப் பிறப்பு அடைந்து விட்டால் எமன் கிட்ட நெருங்கவே மாட்டான். அந்த எமனணுகாச் செயல் எங்கே இருக்கிறது?

யானை முதல் எறும்பு கடை 84 லட்சம் ஜீவராசிகள் பேயாகப் போவதில்லையே! ஆனால் இந்த மனிதன் மட்டும் செத்தால் பேயாகப் போகிறானே. ஏன்? தனக்கு விதிக்கப்பட்ட ஒரே கடமையைச் செய்யத் தவறியதால் தான், அவை அனைத்தும் அடையாத பெரும் நரக அவஸ்த்தையை மனிதன் அடைகிறான்.

நால் வகை யோனி இருக்கின்றன அல்லவா? அதில் சினை என்ற யோனியிலே நாம் பிறந்தோம். நரி, பன்றி, ஆடு, மாடு அனைத்தும் அதே யோனியில் பிறக்கின்றன. இதை வைத்துப் பார்க்கில் அவை யனைத்தும் நம் சகோதரர்கள், சொந்தக்காரர்கள் தானே! இந்த நிலையிலேயே இருந்து விட்டுப் போவதற்காகவா, அறிவு என்ற மாணிக்கத்தை மனிதனுக்குப் பிரத்தியேகமாகக் கொடுத்தது? இல்லை. நாம் இன்னொரு பிறப்பு எடுக்க வேண்டும். ஆவிடை என்ற யோனியில் பிறக்க வேண்டும். அதுதான் ஒரு பிரம்ம நிஷ்டரின் முகத்தில் பிறப்பது. அப்படிப் பிறக்கின்றவனே தேவனாகின்றான். இந்தப் பரிசுத்தப் புனல் ஜன்மம் எடுப்பதற்காகவே

அதாவது மனு, தேவன் ஆவதற்காகவே அந்நத் தனித்த தேவயோனி படைக்கப் பெற்றது. இந்ந அருங்காரண வல்லபச் செயலேதான் அவரவர்களின் மதத்தினுடைய அடித்தளம், இதுவே னிஜமான வாழ்வு, னித்திய வாழ்வு, னித்தியச் செயல்.

உங்களனைவரையும் பார்க்கும்போது உங்களிடம் மேலும் மேலும் பேச எமக்கு ஆசையாக இருக்கிறது. இந்ந மாபெரும் தெய்வீகச் செயல் உலகம் பூராவுக்கும் உரியதாக வந்நும் ஏன் ஒரு சிலர் மட்டுமே இந்ந வசந்நத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்கள் என்று வியக்கிறோம்! ஒரு கோடீஸ்வரனுலோ, அல்லது ரத கஜ துரக பதாதி முதலிய னால்வகை சேனைகளை யுடைய பலாட்டியனுலோ எமனை வெல்ல முடியுமா? முடியாதே. அந்ந மறலியை மிதித்து ஏறி ஆள்வதற்கு இப்போது ஒரு வசந்நகாலம் வந்நிருக்கிறதே. எல்லா மனுத் தலைகளும் இதைப் பயன்படுத்திக் கொண்டு னித்திய பேரின்ப சுவர்ணலோக வாழ்க்கையை அடைய வேண்டாமா? இவ்வளவு எளிதாக ஆண், பெண் அடங்கலுக்கும் இந்ந மாபெரும் செயல் கிட்டக் கூடிய காலம் வேறெப் போதாவது வந்நதா? இல்லை.

சாமி, சாமியார் என்று பெயர் வைத்துக்கொள்கிறானே; அந்நச் சொல் குறிக்கும் சாவை மீறும் செயல் இந்ந ஒரே ஒரு எல்லையில்தானே பிரத்தியட்சமாக இது காலம் னடக்கிறது. வேறு எங்குமே இல்லவே இல்லையே!

எல்லா வேதங்களும் எம் செயலைப் பற்றியே பேசுகின்றன. னாம் வெகு பிரயாசைப்பட்டு மதுரை

யம்பதியில் கட்டின ஆலயத்தின் லட்சணத்தையும், அதை அரசாங்கத்திற்கு ஒப்புவித்துவிட்டு இந்த வனந் நரப் பிரதேசத்தில் குடியேறிய கால வர்ணனையையும், இவ்வாருக ஞம் னடத்திவரும் செயல் அடையாளங்க ளனைத்தையும் தீர்க்கதரிசிகள் எழுதியிருக்கிருர்கள். முன் வந்த கிரந்தங்களில் சர்வ மதத்தினரும் எம்முடைய இந்த எல்லைக்குத் திரள் திரளாக வருவார்கள் என்று கூறியிருப்பது போலவே னீங்கள் இன்று னூற்றுக் கணக்கான மைல்கள் தொலைவிலிருந்து வந்திருக் கிறீர்கள்.

''னீதமாம் கும்பல் கும்பல்
ஆகஉள் னுழைவதைப் பார்ப்பீர்கள்''

என்று இந்த எல்லையில் இப்போது னடக்கும் மெய்ச் செயல்கள் பற்றிய சாட்சியங்களைப் பல ஆயிரம் வருடங்களுக்கு முன்னுலேயே வந்த வேதகர்த்தர்கள் எழுதியிருக்கிருர்கள் எனில் இது மனுத்தலைக்கு வேண்டிய எவ்வளவு அத்தியாவசியமான மாபெரும் செயலாக இருக்கும்?

''வேதன் உதவி வெற்றி வீறியே எழும்பும்னுள்
ஜாதி மெய் ஆண்டவர் சன்மார்க்க னெறிக்குள்ளே
னீதமாம் கும்பல் கும்பல்
ஆகஉள் நுழைவதைப் பார்ப்பீர்கள்'' என்று

ஞன்மறையில் கூறி வைத்துள்ளபடியே வேதனின் உதவியால் வெற்றி வாழ்க்கையைக் கைபோட னீங்கள் வந்திருக்கிறீர்கள். வெறும் வேடிக்கைக்காக இவ்வளவு தூரம் பிரயாசைப்பட்டு வரவில்லையே?

வந்திருந்தவர்கள்: ஆம்! நாங்கள் இங்குள்ள மெய்யை அறியத்தான் வந்தோம்.

ஆண்டவர்கள்: சுவர்க்கமும், நரகமும் மனிதனுக்காகவேதான் படைக்கப் பெற்றன. இரண்டுமே அழிவதில்லை. மனிதனானவன் நித்திய சுவர்க்கப் பதவி பெறுவதுவே இறைவனின் குறி. இவ் வார்த்தைகள் உங்களுக்குப் புதிதாகப் படுகின்றன. ஆனால் இந்நச் செயல் முன் இல்லாமலில்லை. பரம்பரையாகவே இருந்து வருகிறது. உன் குருக்கள்மார்கள், பாட்டன் பூட்டன் தான் இதை மறந்துவிட்டார்கள். ஈசனுடைய அடி நிழலை யடையவே நாம் வந்தோம். இப்போது நாம் பார்க்கும் சந்திர சூரியாள், மண் மலை கடல் இவை யனைத்தும் மாறும். மனு ஒருவனே மாருதவன். நித்தியன். மாருத பேரின்பப் பெருவாழ்விற்கு அவனை ஏற்றுவிக்கவே நாம் வந்திருக்கிறோம். நீயும் எம்மைப் போலவே தூலமெடுத்து வந்தும் நித்தியத்தைக் கை போடாமல் போகிறாயே என்று நாம் சதா விசனப்பட்டு அதே கவலையாக இருக்கிறோம். ஆனால் நீயோ, "ஜீவனைப் பார்க்க முடியுமா?" என்ற உலகத்தில் குடியிருக்கிறாய். படித்தவர்கள், படிக்காதவர்கள் எல்லோரும் அதே எண்ணத்தில்தான் இருக்கிறார்கள். மனுக் குலத்திற்குத் தன் தன் மதத்தின் மீதுள்ள பற்றுதலை, எவரறிவுக்கும் எட்டாத அந்த ஒட்டுதலை, இன்னதென்றறிவித்து அந்தந்த மதத்திலுள்ள அடிப்படையான மெய்ச் செயலை அவரவர் உள்ளத்திலும் ஒட்டுவிக்கவே நாம் வந்திருக்கிறோம்.

5.

சாதாரணமாகப் பறவைகளும் விலங்குகளும் குளிப்பதில்லையே. அந்த நினைப்பே அவைகளுக்கு வருவதில்லை. ஆனால் மனிதனுக்கோ தினந்தோறும் குளிக்க வேண்டியிருக்கிறது. ஒரு நாளைக்குக் குளிக்காவிட்டாலும் இவனுக்கு அருவருப்பாக இருக்கிறது. மாட்டின் மலத்தைக் கையில் எடுத்து வீட்டைச் சுத்தம் செய்கிறோம். ஆனால் மனிதனுடைய மலமோ காறித் துப்பும்படியான அவ்வளவு அசூசியாயிருக்கிறது - உயர்ந்த நறுமண உணவு அருந்தும் இவனுக்கு இப்படி நாற்ற மடித்தும், மட்டமான உணவை உண்ணும் ஆடு மாடுகளுக்குக் குற்றமில்லாமலும் இருக்குதே - அது ஏன்?

சபையோர்: தெரியவில்லை.

ஆண்டவர்கள்: ஆடு மாடுகளைப்போல் அறுசுவை அருந்தாமல் இருந்தால் இவனுக்கும் நாற்றம் இருக்காது. ஆனால் அறிவு வேண்டுமென்றால் அறுசுவை உணவு கட்டாயம் வேண்டும். அறுசுவை இல்லாமல் தின்றால் அறிவில்லாத மந்தியாக மங்ஙானியாகப் போய்விடுவான்.

இவன் இவ்வளவுதான் சாப்பிடவேண்டும் என்று கணக்கிட்டுச் சொல்ல இவனுக்குள்ளாகவே கள்ளங் கபடமற்ற ஒரு கணக்குப்பிள்ளை நியமிக்கப் பெற்றிருக்கிறார். அவர் வேறு யாருமல்ல. இவன் வயிறு நிறைந்ததும் வருகிற ஏப்பந்தான் அது. "போதும்" என்று அலறிக்கொண்டு எச்சரிக்கிறது. இவனோ அதையும் மீறி வெறிகொண்டு தின்கிறான்.

மெய்ஞ்ஞானிகள் எதையும் மிகவும் நுண்ணிய நுணுகிய அறிவுடன் கவனிக்கின்றவர்க ளல்லவா? அடுத்த பிடியில் அளவு சரி ஆகிவிடும் என்ற எச்சரிப்பு வருமுன்னரே உணவை நிறுத்திக்கொள்வார்கள். எவ் வளவுதான் விருப்பமான பண்டமா யிருந்நாலும், எவ் வளவுதான் பசி மிகுந்திருந்நாலும் அவர்கள் அந்த நுட்ப வரம்பைத் திவலையும் தாண்டவே மாட்டார்கள். இந்தத் திட சித்தக் கட்டுப்பாடு கைவரப் பெற்றவர் களே அறுசுவை உணவு அருந்தினதால் உண்டாகும் நாற்றத்தை மாற்றிக்கொள்வார்கள் - தூல நாற்றத்தை மாற்றவல்ல வானவிழ்தம் ஒன்றை அவர்கள் மிகுந்த தவப்பாடுற்றுத் தன்கிரயம் செய்து வைத்திருப்பார்கள். அந்த அவிழ்தம் எந்த எல்லைக்குள் அடங்கியிருக்குமோ அந்த எல்லையை அறிந்நாலல்லது - காலமெல்லாம் தூல முழுதும் அத்தர், புனுகு, ஜவ்வாது முதலிய வாசனை பூசி வந்நாலும் இவன் நாற்றம் போகாது. இந்த வாசனைத் திரவியங்களால் மூக்கை ஏமாற்றலாம். ஆனல் தன் உடல் நாற்றம் விலகாது. கட்டுப்படும் ஸ்தானத்தில் சுவாசம் கட்டுப்படுமேயானல், அந்த நாற்றத்தை அறவே சுட்டெரித்து இல்லாமலே ஆக்கிவிடலாம். இதுதான் அகமுக சூக்குமச் செயலுக்கும் வெளித்தோற்றத் தூலச் செயலுக்கும் உள்ள வித்தியாசம்.

அறுசுவையானது மயனரூபமான ஆவியாக இருக்கிறது. மூச்சு லயமாகும் மனேலய சூக்கும வல்லப மானது அதற்கு அரசனுகி அதன் தீய வாடையைச் சுட் டெரித்து விடுகிறது. உள்ளமை ஓர்மை உறவால் சுவாசம் உள்ளடங்கினவுடன் சகலத்தையும் சங்கார ம்

செய்யும் வல்லமை உண்டாகிறது. இந்நச் செயல் எந்நப் புராண இதிகாச சூத்திரச் சாத்திரத்திலாவது பேசப்பெற்றிருக்கிறதா? இல்லேயே. அழல் ஞற்றத்தைப் பரிசுத்த இந்நிரியமாக மாற்றிக்கொண்டவர்கள் முழுக்கு விலக்கில்லாதவ ராகிருர்கள். னீதிச் சொல் மணம் வீசும் அவர்களே பாவ தோஷ மற்றவர்கள். விதி கடந்நவர்கள். அவர்களிடத்தில் விஸ்வ ஞதம் விளேவு ஏறிச் செயலுக்கு வந்நுள்ளபடியினுல் அவர்கள் ஞவின் முனே, சகல மதி வாக்காதிக்கச் சாட்டைகொண்டு விளாசுகிறது. உன்னேப்போல அவர்கள் னினேத்து னினேத்துப் பேசவேண்டியதில்லே. ஏனெனில் உன் தேகம் அல்ல அவர்கள் தேகம். உன் கருவிக்குல மல்ல அவர்கள் கருவிக்குலம். ஆகவே உன் செயல் அல்ல அவர்களின் திருமேனித் திருச் செயல்.

உணர்வு பூரணமாய் ஒலிக்கும் அவர்களின் ஞதம் னீ கேட்கும் மட்டையான சத்தம் அல்ல. அவர்களின் னிறை உணர்ச்சி உன் மழுங்கிப்போன குறை உணர்ச்சி அல்ல. அவர்களின் னுணுகிய னுட்ப இன் சுவை உன் மரத்துப் போன ஞவின் ருசி அல்ல. அவர்களின் தெய்வீக சந்நன கந்நம் னீயே உண்டாக்கினுகரும் னெடி னேர வாசனே அல்ல. அவர்களின் அண்டமெல்லாம் விழுங்கிய தோற்றம் னீ காணும் ஏழு சாண் தோற்றமல்ல. இவை அனேத்தும் செயல் மீறிய ஏற்றத்தால் வார்த்தைகளேக்கொண்டு விவரிக்க இயலாத அதி மகோன்னத தவனிலேயில் அத் திருமேனியின் பால் னிறைந்நு இருக்கின்றன.

6

ஒரு தாயின் கருவறையில் உன்னைப் போலவே நாமும் ஜனன மெடுத்தோம். உன்னைப்போலவே நாள் தோறும் வளர்ந்து இந்த மனித உடலில் வந்தோம். பின் ஆளுக்கொரு வேலை பழகினோம். ஒருவர் உழவு செய்யவும், ஒருவர் கலப்பை செய்யவும், இப்படியே ஒவ்வொருவரும் ஒவ்வொரு தொழில் செய்யப் பழகி னோம். ஆனாலும் எல்லோரும் கட்டாயமாகச் செய்ய வேண்டிய வேலை ஒன்று உண்டு. அதை மறந்துவிட்டுப் பேய்க் களவாடிகளாகத் திரிகிறார்கள் - தான் பிறந் துள்ள மதம் தனக்கு இறுதியில் வரும் எம வாதையை மாற்றுவதற்காக வந்த வாள் என்பதை மறந்துவிட்டு அலைகிறார்கள் -

ஒருவன் லாபம் அடைய எண்ணிப் பொழுதெல்லாம் பாடுபட்டுச் சம்பாதித்ததை, சாயங்காலம் ஐந்தொகை போட்டுப் பார்க்கும்போது னஷ்டமாகக் கண்டானே யானால், அவன் தொடர்ந்து அந்த வியாபாரத்தைச் செய்யலாமா? செய்யக்கூடாது. வாழ்நாளில் இவனை அறிவாளி, கெட்டிக்காரன் என்று புகழ்ந்துகொண்டிருந் தார்கள். ஆனால் இறுதியில் சாதிகெட்ட பாவி எமன் தன் கையில் சிக்கி மீளா னஷ்டவாளியாக னரகவாதி யாகப் போகிறார்கள். அதே வியாபாரத்தை நாமும் செய்ய லாமா?

சைவத்தின் அடையாளம் சாவுடைய னேரத்தில் பரிசுத்தமா யிருப்பது அல்லவா? அவரவர் எச்சத்தால் தக்கார் இவர் தகவிலார் இவர், என்று திட்டவட்டமாகக் காணப் பெறுவது அல்லவா? ஆனால் இவன் தன் ஏட்டுப் படிப்பைக்கொண்டு ஒருவர் செய்த பாவ புண்ணியம் -

தக்கார் தகவிலர் - என்பது அவரவரின் மக்களாற் காணப்பெறும் என்று அர்த்தம் பண்ணுகிறுன். அந்த அர்த்தம் சரியென்றுல், கொடியோனுகிய இரண்யனின் வயிற்றில் புண்ணிய மூர்த்தியாகிய பிரகலாதர் எப்படி உதித்தார்? பிள்ளையை எச்சம் என்றுல், இவன் வெளி யாக்கும் மலமும் எச்சந்நானே? அதையும் ஏன் இவன் தூக்கி மடியில் வைத்துக் கொள்ளக் கூடாது? மேல் படிப்புப்படித்தவர் என்கிறுரே-எங்கே, இப்படி ஒருனிலை பேருன அதிசய வார்த்தை சொல்லட்டும் பார்க்கலாம்? "கழுதைக்குக் கழுதை ஆசீர்வாதம்" என்பார்கள் - அது போல் ஒருவருக் கொருவர் பாசாங்கு புகழ் பேசிக் கொள்கிறுர்கள். கடைசியில் பார்த்தால் அவர்கள் னேக்கமெல்லாம் பொய்ப் பொருள் தேடுவதில் தான் இருக்கும்.

ஞம் ஏன் பிறந்நோம் - னம் கதி முடிவில் என்ன வாகும் - என்று ஆய்ந்நு தேடுகிற தேட்ட முடையவனே மனு. இதைக் கற்பிக்கும் கல்விதான் கல்வி. காலமெல் லாம் இவன் மனித உணவைத் தின்றுவந்நாலும் இந்ந எண்ணம் வராதவரை னரன்தான். இந்ந எண்ணம் வந்நால்தான் மனு ஆவான். ஆணவம், கன்மம், மாயை என்கிற முப்பாழிலேயே வாழ்பவன், முப்பாலுக்கு எப்போது போவான்?

கருவில் அறுசுவையற்ற வெறும் ரத்தத்தின் எசன் சாகிய ஆவியை உண்பதால்தான் குழந்நைக்கு வாய் ஞற்றமில்லை. பிறகு காமப்பால் அருந்நுகிறுன். அப் புறம் மெள்ள மெள்ள ஞற்றத்தைச் சேகரித்துக் கொள் கிறுன். கர்ப்பத்தில் சுவாசம் இல்லை. பேச்சுத் தொனி

யும் இல்லை. பிறக்கவிட்டு இரண்டும் உண்டாகின்றன. இப்படியே படிப்படியாகக் குழவி, குதலை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை என்று ஆறு பிறப் பெய்துகிறான். இவ்வளவு அருமையாக ஆறு பிறப்புக்கள் பிறந்தும், இவனுக்குக் கடமையாக விதிக்கப்பட்ட ஏழாவது பிறப்பு எடுக்காவிட்டால் வாழ்வின் அந்திப் பொழுதில் தெரியும் அந்த னஷ்டம்.

ஆனால் அறிவுகொண்டு ஒரு தேவ மெய்க்குரு பிரானிடத்தில் ஏழாவது பிறவி எடுத்தானேயாகில் இறுதியில் லாபம் குமுகுமுத்து னிற்குமே. னித்திய சாயுச்சிய பதவி எளிதில் கைவசமாகுமே - ஏன் இது மக்கள் உள்ளத்தில் படவில்லை?

6.

னும் தவத்திற்குப் போனதும் னீங்கள் உங்கள் இஷ்டம்போல் விடுதிக்குப் போய்ப் படுத்துக்கொள்ளக் கூடாது. னமக்காக னமது ஆண்டவர்கள் தவசுக்குப் போயிருக்கிறார்களே என்று எண்ணி பெரிய வணக்க னேரத்தில் எழுந்து விழிப்புடன் பாடிப் படித்துக்கொண்டிருக்க வேண்டும். அதுவும் இன்று முதல் அப்படி னிச்சயமாக னீங்கள் இருக்கவேண்டும். காலையிலே னீங்கள் எம்மை அறவலம் வந்து கை ஏந்துவது, தவப் பயனை னும் கொடுக்க அதை னீங்களே கையை னீட்டி ஏந்தி வாங்கிக்கொண்டதாக ஆகும். அதுவும் காலை 4.30 முதல் 6 மணிவரை இத் தவப்பாட்டில் னீங்கள் இருப்பது மிகவும் னன்று.

6. திருவல்லிக்கேணிப் பிரசங்கம்.

சென்னை திருவல்லிக்கேணி ஹிந்து உயர்நிலைப் பள்ளியில் கீலக ௵ புரட்டாசி மீ 11௳ (27-9-1968) வெள்ளிக்கிழமை மாலை 7 மணிக்கு, பிரம்மோதய சாலை ஆண்டவர்கள் நிகழ்த்திய திருவருட் பேருரை:-

"அறுவகைச் சமயத் தோர்க்கும்
அறுமுகத் தெய்வ மாகி
செறிதரு பிரம் மம்னுன்
என்றுசின் மயிலி லேறி
குருமுனிக் கருளிச் சீவ
குகைதொறும் வீற்றி ருந்த
மறுவிலாக் குகனைப் போற்றி
மாய்த்தனன் பிறவி யெல்லாம்"

அதாவது, ஜீவ குகைதோறும் வீற்றிருந்த மாசு மறு இல்லாக் குகனைப் போற்றி யல்லவா பிறவி மாய்த்தனன் என்று இச் செய்யுளில் கூறியிருக்கிறது? கல்லிலோ, செம்பிலோ, மண்ணிலோ, ஆகாயத்திலோ, சந்திரனிலோ, சூரியனிலோ அல்ல அந்தக் குகன் வீற்றிருப்பது-மனுவின் ஜீவ குகையில்தான் அவன் வீற்றிருக்கின்றான். ஆகவே அத் தெய்வம் நம்மோடு பேசும் அல்லவா, பார்க்கும் அல்லவா, கேட்கும் அல்லவா, எதையும் தன் கையிலே பிடிக்கும் அல்லவா? இப்படியே எல்லா வேலைகளையும் செய்யுமல்லவா அந்த மறுவில்லாக் குகன்? ஆம்.

ஆனால், நாம் இத்தனை காலம் எண்ணி வணங்குவது மறுவுடைய குகனைத்தானே. அதனால் என்னவாவது செய்யமுடியுமா? அது நம் கைக்கொண்டு செய்து வைத்தது தானே? எதற்காகவேண்டி அப்படிச் செய்து வைத்தார்கள்? சிறு குழந்தைகளுக்குத் தெய்வம் ஒன்று இருக்கிறது என்ற பாடத்தைக் கற்பிக்க வேண்டியே, உலகத்தில் கல்லிலோ, மண்ணிலோ, செப்பிலோ, வெள்ளியிலோ அல்லது தங்கத்திலோ சிலைகளைச் செய்து அவற்றிற்குத் தெய்வ நாமங்களைச் சூட்டி வைத்தார்கள். அவைகளைச் செய்தது யார்? நம்முடைய பணத்தால் நாமே பிரயாசைப்பட்டுச் செய்ததுதான் - எதற்காக வேண்டிச் செய்தோம்? சிறு குழந்தைகள், தெய்வம் ஒன்று இருக்கிறது என்று அறிந்துகொள்வதற்காகவே அப்படிச் செய்தோம். இவ்வாறே உலகிலுள்ள ஆலயங்கள் அனைத்தும் நம் முன்னோர்களால் கட்டப்பெற்றன.

'நாமே உண்டு பண்ணின தெய்வம் நமக்கு என்னவாவது செய்யுமா?' என்று யோசித்துப் பாருங்கள்; நாமே உண்டு பண்ணின தெய்வம் நமக்கு ஒன்றும் செய்யாது. ஆனால் நம்மை உண்டு பண்ணியதும், நம்மை உருவாக்கியதுமாகிய தெய்வம் ஒன்று இருக்குமே - அது எங்கே இருக்கிறது? இந்த மனுத்தலை என்று சொல்லப்பெற்றவனின் இதய கமலமாகிய ஜீவ குகையில்தான் அந்தப் பரம வித்தாகிய ஸ்ரீ சிவசுப்ரமண்ய குகன் இருக்கிறது. அதை உன் இதய தாமரையில் வெளியாக்குவதற்காகவே நாம் வந்திருக்கிறோம். உன்னைப் போல பிரசங்கம் செய்துவிட்டுப் போகிறவர்கள் நாமல்ல - நம்மைப்போலே இவரும் பிரசங்கம்

செய்வார் என்று எண்ணித்தானே இங்கு வந்நாய்? அதற்காக ஞும் வரவில்லே. இவ்வளவு காலம் னீ கேட்டதும் பொய், செய்ததும் பொய். ஞும் சொல்வதனைத்தையும் எம்மால் னிருபணே செய்யமுடியும். உன்னே அந்ந மெய்ச் செயலில் பழக்கவே ஞும் இத்நூலம் எடுத்து வந்துள்ளோம். உன் தலேயைத்தட்டி மாற்றி அதற்குள் இந்நப் பிரணவ முதலே வைத்து இறுத்துவதற்காகவே ஞும் வந்நுள்ளோம்.

விபூதி என்ருல் என்ன? அதன் அர்த்தம் என்ன? அதன் பெருமை என்ன? அது பணம்கொடுத்து வாங்கக் கூடியதா? அல்லது பிரயாசைப்பட்டுச் சம்பாதிப்பதா அது? இல்லே. வி-பூ-தி என்ருல் வெற்றி தருகின்ற பூப்போன்ற தீ என்றல்லவா பொருள். அது எங்கே? தெய்வ லோகத்தில், ஸ்ரீமன் ஞாராயணனிடத்தில், அவர்கள் திருக்கரத்திலல்லவா அது இருக்கிறது. அது னமக்கு எப்படிக் கிடைக்கும் என்று னினேக்கிருயா? அதை எம் கைக்கொண்டு தருவித்து உனக்குத் தருவோம். அந்ந விபூதி எக்கோடி காலத்திற்கும் அழியாதது. அதன் கோடிசூரியப் பிரகாசச் சுடர் என்றும் மாருதது. சினிமாவில் பார்த்த காட்சி மறைந்நுவிடுகிறதே, அதுபோல் மறைந்நுவிடுவதல்ல அது. தூக்கத்திலேயும் உன்னிடத்தில் பிரியாமல் னிலேத்து னிற்கும் வல்லபமுடையது அது. அந்நத் தெய்வீக குகனுடைய னிஜமான விபூதி கிடைக்கிறவரைக்கும் சிறு பிள்ளேகளுக்குக் கற்பிப்பதற்காகவே விபூதி என்று சொல்லி அடையாளமாக இதை (னெற்றியில் தங்கள் திரு விரல்களால் சமிக்ஞை காட்டி)ப் பூசிக்கொள்ள எடுத்து வைத்தது.

அந்த னிஜமான விபூதி கிடைப்பது சாமான்யமா? இல்லை. எங்கேயோ அபூர்வமாக ஒருவருடைய கையிலல்லவா இருக்கிறது? ஒரு ஜாதியிலே ஒரு மதத்திலே பிறந்து ஒரு தெய்வப் பெயரையும் உனக்குச் சூட்டிவைத்து விட்டபடியால் அதற்காகவேண்டியே விபூதி என்ற பெயரைச்சொல்லி அந்த அசல் கிட்டுமட்டும் இதைப் பூசியேதான் ஆகவேண்டும் என்று பெரியோர்கள் எடுத்துவைத்தார்கள். சாம்பல் என்று வீணாக விட்டு விடக்கூடாது. பக்தியோடு அள்ளி னெற்றியில் பூசிக் கொண்டுதான் ஆகவேண்டும். இப்படி எடுத்து வைத் தது எதற்காக? அந்த னிஜ விபூதியான பரமபத வரவு னமக்குக் கிட்டவேண்டுமென்ற ஆசை ஒவ்வொரு வருக்கும் வரவேண்டும் என்றுதான். ஆனால் இந்த னகலா பரமபதம் தரும்? தராதே.

னும் சிறு பிள்ளையாய் இருக்கும்போது மண்ணைக் குவித்து வீடு கட்டினது னம்மெல்லோருக்கும் னினை விருக்கிறது அல்லவா? அந்த வீட்டில் இன்றைக்குக் குடியிருப்போமா? குடியிருக்க மாட்டோமே. னிஜமான ஒரு வீடு கட்டிக்கொண்டல்லவா இப்போது குடியிருக்கி றோம். அதே போல சிறு பிள்ளைகளுக்காக வேண்டி விபூதி என்று எடுத்துவைத்த அது னிஜமான பலன் தருமா? தராது. கங்காளன் பூசும் கவசத் திருனீறு என்றைக்கும் மங்காத தாயிற்றே.

அறுபத்து ஏழு ஜாதிக ளடங்கிய பல்லாயிரக் கணக்கான மக்கள், ஆண்களும் பெண்களும் இன் றைக்கு எம்கையிலிருக்கிறார்கள். அனைவரும் இந்தப் பிரகாசமான விபூதியை மங்காமல் பூசிக்கொண்டு

இருக்கிறவர்களே. எம் கையகத்திலுள்ள மக்களின் கூட்டம் அவ்வளவையும் திரட்டுவோமாகில் "இந்தப் பட்டணத்தை எங்கே கொள்ளையடிக்க வந்துவிட்டார்களோ" என்று நீங்கள் நினைப்பீர்களென்றேதான், சென்னைக்கு ஒருத்தரும் வரவேண்டாம் என்று சொல்லித் தாக்கீது கொடுத்துவிட்டு வந்தோம். அப்படியிருந்தும் இவ்வளவு திரளாக இதோ வந்திருக்கிறார்கள். எவ்வளவு பணம் செலவழித்தாலும் 67 ஜாதிகளை ஒரே குலமாகச் சேர்க்க முடியுமா? முடியாதே. உலகத் தேட்டுக்காகவோ, அல்லது உலக சம்பத்துக்காகவோ இப்படிச் சேருவார்களா? வேறு வேறான இவர்கள் மனம் ஒன்று சேருமா? ஒருக்காலும் சேராதே. பின் எம்மிடம் எப்படி ஒன்றுசேர்ந் திருக்கிறார்கள்?

இந்த வார்த்தைகள் முன் எப்போதாவது உங்கள் காதில் விழுந்திருக்கிறதா? ஒரே குலமாகவேண்டும், ஒரே தெய்வத்தையே வணங்கவேண்டும் என்றெல்லாம் பிரசங்கம் செய்கிறார்களே. வாயில் சொன்னதால் மட்டும் அது ஆகுமா? எங்கேயாவது அப்படி ஆயிற்றா? எந்த வல்லபம் இதை ஆக்கும்? நாமா இப்படி ஆக்கினோம்? அந்தக் குகனுடைய நிஜச் செயலல்லவா இப்படி ஆக்கியிருக்கிறது? தோற்றத்தில் நாமும் உன்னைப் போலவே தானே இருக்கிறோம். இந்த இடத்திற்கு நாம் பறந்து வரவில்லையே. உன்னைப்போலவே நடந்துதான் வந்தோம். ஆகையால், நீதான் நாம்; நாமேதான் நீ. அப்படியிருக்க, எம் கையில் என்ன சக்தியிருந்தால் 67 ஜாதிகளை ஒரே குலமாக ஆக்கி இந்தச் செயலை நடத்திவைத்திருக்க முடியும்? மனிதனாலேக்குத்தான் இது

லபிக்கிறது. மற்ற எந்த ஜந்துக்களுக்கும் இல்லை. மனிதனை ஈசனாக ஆக்குகின்ற அந்தச் சக்தியுடையது வே பிரகாசமான நிஜ விபூதி. என்றும் மங்காததும், கங்காளனால் பூசப்படுவதுமாகியது அதுவே.

ருத்ராட்சம் என்ற பெயரைச் சொல்லி அரை அணுவுக்குக்கொட்டையை வாங்கிக்கட்டிக்கொள்கிறோம். நன்றாக யோசித்துப் பாருங்கள். உருத்திரன் என்றால் எமன். அச்சம் என்றால் பயப்படுவது. இந்தக் கொட்டைக்காயைக் கண்டா உருத்திரனாகிய எமன் அஞ்சுவான்? அஞ்சமாட்டான். ஆகவே அவன் அஞ்சுகின்ற நிஜச் செயலுடைய குளிகை ஒன்று இல்லாமலா இருக்கும்? அந்தக் குளிகையின் வல்லபச் செயலை வைத்துத் தானே அதற்கு ருத்ராட்சம் என்ற நாமம் வைத்திருக்க வேண்டும்! அந்த அசல் ருத்ராட்சத்தை ஒருவர் தருகிற வரைக்கும், அதன் பெயரைச்சொல்லி இந்தக் கொட்டையைக் கட்டிக்கொள்வது சம்பிரதாயமாகிவிட்டது. ஆனால் நிசமான பலன் தருவதல்ல இது. நம் அப்பன் பாட்டன் ஒருவருக்கும் இது பலன் தரவில்லை. நிசமான ருத்ராட்சம் அல்லவா பலன்தரும். இவ்வாறு எல்லாம் நகலாகவே இருக்கிறது. இவையெல்லாம் நகல் என்று சிறு பிள்ளைகளின் முன் சொல்லக்கூடாது. அவர்கள் இவற்றை நகல் என்று கண்டுகொள்ளக்கூடாது. ஆனால் வயது வந்தவர்களுக்குச் சொல்லாமல் புத்தியில் படாதே என்று நாம் சொல்லவேண்டியிருக்கிறது. இதை எடுத்துக் காட்டினால்தான் அசலின்பேரில் ஆத்திரமான ஆசை உண்டாகும் என்றே நாம் இந்த ரகசியத்தை வெளியே சொல்கிறோம். இதை எடுத்துச் சொல்வதற்கு

ஞதி இதுகாலம் வரை இல்லாதிருந்தது. இப்போது அந்த னிஜ னிதியை னிருபணையோடு எடுத்துத்தர ஒரு வசந்நம் வந்துள்ளது.

எல்லோரும் தன் தலையினுடைய - மனிதத் தலையினுடைய - தரம், லக்ஷணம், யௌவனம் அறியாமலே இருக்கின்ருர்கள். இவ்வாருன அதன் உன்னத தரத்தைக் கண்டு யமன் னடுங்கும் பொருட்டே மனிதனுடைய தலை படைக்கப்பெற்றது. ஆனல் அதே யமனைத் தன் எஜமானனுக ஆக்கி, அவன் கையில் மாட்டிக் கொள்ளாதவர்கள் இன்றைக்கு இந்த னெடிய உலகத்தில் யார் இருக்கிருர்கள்? அந்தத் தூர்த்தன் கையில் சிக்கினதற்கு அடையாளம் என்ன? அவன் கையில் சிக்கியவனுக்குக் கசப்பானது - ஜீவத்தண்ணியானது - வெளியாகி விடும். அது வெளியான உடனே படுனாற்றம் கிளம்பி உடல் விறைத்துப் போகும் - எல்லாமும் அவலட்சணமாகிவிடும். எக்கோடி காலத்திற்கும் மாருத அவஸ்தைக்குரிய அலகையாகி னரகத்திலேயே கிடக்கவேண்டிய அடையாளம் வந்துவிடும்!

மனிதன் னித்தியனுகையால் இவன் அழிவதே இல்லை. அழிந்துபோவதற்கென்று இவன் படைக்கப் பெறவில்லை. ஒன்று - பரம பதத்தில் னித்திய மகிழ்ச்சியோடுஎக்கோடி காலத்திற்கும் வாழவேண்டும் - அல்லது னரகத்தில் னித்திய அவஸ்தையை அனுபவித்துக் கொண்டிருக்கவேண்டும். மற்றைய படைப்பு எல்லாம் அழிந்து போய்விடும் - இவன் னித்திய வஸ்துவாகையால் அழிக்கப்பட்டுப் போவதில்லை.

ளும் இதுவரை ஆறுதரம் பிறந்து அறிவுப் பிறப்பாகிய இந்த வளர்ச்சிக்கு வந்திருக்கிறோம் என்பது யாருக்கும் தெரியாது. ஒரு குழந்தை பிறந்தவுடனே பிரசவம் ஆச்சுது என்றுதானே சொல்கிறோம் - வேண்டுமென்றே மட்டமாகப் பேச நினைத்து இப்படிச் சொல்வதில்லையே. அதன்பேரில் ஏதாவது கோபமா? இல்லையே. பிரசவம் என்றால் என்ன? தெரியாது. தெரியவில்லையா? மூச்சும் சப்தமும் இல்லை என்றால் அதற்குப் பெயர் என்ன? சவம். கருவில் மூச்சும் சப்தமும் இருந்தால் தாய் பிழைப்பாளா? பிழைக்கமாட்டாள். ஆகையால் பிறந்தவுடனேயே - ஒரு வாசல் அறுத்து, ஒரு வாசல் அடைக்கப் பட்டதும் சடாரென சுவாசம் வீறிட்டு வெளியே வந்து சத்தமும் எழுகிறது. அந்த ரகசிய ஸ்தலம்தான், அந்த அறுத்தடைத்த திருவாசல்தான் குகனின் வாசஸ்தலம். அதன் பின்னர்தான் குழந்தைக்கு ஒரு பெயர் வைக்கிறோம். மூச்சும் பேச்சும் உண்டாகிவிட்டதால் சவம் என்ற பெயர் போய்விட்டது. சவமாக முன்னிருந்தோம்- இப்போது உயிர் பெற்றுக் குழந்தையானோம் - வேறு பிறவி யெடுத்தோம்.

குழந்தை பிறந்தவுடன் காது கேட்கவில்லை - கண் பார்க்க வில்லை - வாய் ருசிக்கவில்லை - இப்படியே சிறிது காலம் இருந்தோம். பிறகு இந்தப் பிறவியிலிருந்து மங்கை, மடந்தை, அரிவை, தெரிவையென மாறி மாறி ஆறுவது பருவத்திற்கு வந்தோம். இன்றைக்கு அறிவு ஜொலிக்கிற பருவத்திற்கு வந்துள்ளோம். ஒருவர் நமக்குச் சொல்லுகின்ற வார்த்தை, நன்மை அல்லது தீமை; இது சரி இது சரியில்லை; இது மட்டம் இது உயர்வு

என்று னன்றாக னிதானமாகத் தெரிகிற அறிவு இப்போ வந்திருக்கிறது. அந்த னித்தியமாகிய அறிவு எங்கே யிருக்கிறது என்றால், இந்த அனித்திய தூலத்திலே தான் இருக்கிறது அய்யா! இந்தத் தூலம் னிரந்தரமாக னிற்பதில்லையே; ஆனால் னம்முள் இருக்கும் அறிவுத் தூலம் என்றைக்கும் அழியாதது. அந்த னித்திய தூலத்தில் குடியேறிக்கொள்ளும் அருகதை மனிதனுக்கு மட்டுமே உண்டு. அந்தப் பிரணவ ரூபம், பிரணவத் தூலம் எங்கே? அதைப் பெறவேதான் னும் வந்தோம். மனிதன் னித்தியன் - அவன் எக்கோடி காலமும் இருந்து வாழவந்தவன் என்றே, அவனுக்காகவே இந்தப் பிரம் மாண்டமான உலகத்தை உண்டாக்கி ஆயிரத்தெட்டு அண்டங்களையும் படைத்தது. உலகத்திலுள்ள னீ பார்க்கும் அத்தனையும் அனித்தியம். ஆனால் மனுத்தலை மட்டும் னித்தியம் - அது அழிந்துபோகிறது என்றுதான் எல்லோருடைய னினைப்பும் - அது அழிவதே இல்லை; அலகையாய் னரகத்திலோ அல்லது சுவர்க்கவாசியாய் பரமபதத்திலோ எப்போதும் இருக்கிற பொருள் அது.

மரணத்தில் இரண்டுவிதமான மரணம் இருக் கிறது - அவற்றிற்குப் பிரத்தியட்சமான அடையாளங் களும் இருக்கின்றன. எதைப்போலவெனில் ஒரு ஜெயில் சூப்ரண்டெண்ட் வீட்டைவிட்டுப் புறப்படுகிறார். அவர் கூட இரண்டு போலிஸ்காரர்களும் இருக்கிறார்கள். 'எங்கே அய்யா போகிறீர்கள்' என்றால் ஜெயிலுக்குப் போகிறேன் என்கிறார். மற்றொருவனும் வம்புதும்பு அடி தடி செய்ததினால் கைதியாகி இரண்டு போலீஸாருடன் போகிறான். 'எங்கே போகிறாய்' என்றால் ஜெயிலுக்குப்

போகிறேன் என்று அழுதுகொண்டே சொல்லுகிறான். இரண்டு பேரும் ஜெயிலுக்குத்தான் போகிறார்கள். சூப்ரண்டெண்ட் எதற்குப் போகிறார்? அதிகாரம் அமல் செய்து சம்பாதிக்கப் போகிறார். இவன் எதற்குப் போகிறான்? அடிபட்டுத் துன்பப்படப் போகிறான் - இரண்டும் பக்கமா? இல்லை. உதயத்திற்கும் அஸ்தமனத்திற்கும் இருக்கிற வித்தியாசம் அல்லவா! அதே போல நித்திய சுவர்க்கத்திற்குப் போகிறவர்களுக்கும் நிங்கா அவஸ்தைக்குப் போகிறவர்களுக்கும் தனித்தனி அடையாளம் உள்ளது.

அது சரி - இறைவன் நம்மை அவஸ்தைக்குப் போகப் படைத்திருப்பானா? 1008 அண்டங்களையும் நமக்காகவே படைத்து இனாமாகத் தந்த இறைவன், கடோசியில் துர் நாற்றம் வீசும் அலகைத் தேகமெடுத்து அவஸ்தைக்குப் போகவா படைத்திருப்பான்?

நாம் ஒரு பிள்ளையைப் பெற்றுப் பந்தோபஸ்தாக ஆசையோடு பாடுபட்டுப் பணம் செலவிட்டு வளர்க்கிறோம். இவ்வளவும் செய்து கல்யாணம் முடித்த பிறகு, அந்தப் பிள்ளை நன்றாக வாழவேண்டுமென்று நினைக்கிறோமா அல்லது அதைச் சாகடிக்க ஒரு அரிவாள் வாங்கி வைப்போமா? நன்றாக இருக்கவேண்டுமென்று தானே நினைக்கிறோம். சாகவேண்டும் என்று நினைக்க மாட்டோம். நம்மால் ஒரு முள்ளுமுனை கூடச் செய்ய இயலாது. இறைவனால் படைக்கப்பெற்றதையே நாம் எடுத்து வழங்குகிறோம். இப்படி கையாலாகாத நமக்கே இந்தக் காருண்ய எண்ணம் வருகிறதே, அந்த எண்ணம் யாருடையது? இறைவன் தந்ததுதானே. அப்படி

யிருக்க மனிதனுக்கென்றே 1008 அண்டங்களையும் படைத்த இறைவன் அவன் அழி னரகத்தில் போய்த் துன்பப்படுவதை விரும்புவானு? விரும்ப மாட்டான். அப்படியிருக்க, இவன் னரக அழிவுக்குப் போவானே யாகில் படைத்தவனுக்கு எவ்வளவு வியாகூலமாக, அவமானமாக இருக்கும்? னிச்சயமாக மனுக்களனைவரும் பரமபதத்திற்காகவே இறைவனுல் படைக்கப்பெற்ருர்கள். ஆகையால் யாவரும் இப்பொழுதே னித்திய உடலெடுத்து அந்ந னித்திய தேகத்தில் னுழைந்நு கொள்ள வேண்டும். னுளைக்கல்ல.

அதுவே சர்வேஸ்வரனுக்கு னும் செய்யக்கூடிய னன்றி. அந்ந வேலையைச் செய்வதற்கென்றே உரிய சன்னதத்தோடு இறைவனுல் அனுப்பப்பெற்று வந்நுள்ள தேவரூபம், னித்திய தூலமாகிய அதில் னுழைவதற்கு இப்பொழுதே உன்னைப் பழக்குவார்கள். அப்படிப் பழகினுல், இந்நத் தேகத்தை னீ விடும்போது னித்திய தேகத்திற்குள்ளாக னுழைந்நுகொள்வாய். அதன் மகிழ்ச்சி அளவிடற்கரியது. ஒருவன் கிழவனுகை இறந்நு போனுலும் இளம் வயதி லிருந்நதுபோல அவன் முகம் மாறிவிடும் - னுட்கணக்கில் வைத்திருந்நாலும் சோபிதமாகவே இருக்கும்- உடம்பு வேர்த்துக்கொண்டே இருக்கும்- கை கால்கள் விறைத்துப்போகாமல் துவண்டு இருக்கும் - குழந்நையைப்போல் முகம் அழகுத் தோற்றம் கொடுக்கும் - இந்தப் பரிசுத்தப் பிரயாணத்தைச் சாவென்று சொல்லலாமா? சொல்லக்கூடாது.

இன்னொருவித சாவு இருக்கிறது. அதன் அடையாளம்- செத்ததும் உடல் படுனுற்றம் எடுத்து விறைத்து

விடுகிறது - வெற்றிலைப் பாக்கு வைத்து சீதேவியை வாங்குகிறார்கள். அவன் அதோகதிக்குப் போய்விட்டான் என்று அது காட்டுகிறதல்லவா? மேலும் கோவில் கதவைச் சாத்துடா, இது தீட்டு, அது தீட்டு என்கிறார்கள். தீட்டென்றால் நமக்கெல்லாம் உதவியானதா? இல்லையே- தீட்டாகிப் போய்விட்டானென்று கோவில் கதவைச் சாத்தினால் இவன் எந்த ஊருக்குப் போகிறான்? பரம பதத்துக்கா? அகோரமாக விறைத்து விறுவிறுத்து விகாரப்பட்டுப் போகும் இதுதானா பரமபதத்திற்குக் குடிபுகும் அடையாளம்? இவனா சிவலோகம் ஆளப் போகிறான் அல்லது திருநாடு அலங்கரிக்கப் போகிறான்? இல்லவே இல்லை. நாறிச் செத்தவனை, "சிவலோகப் பிராப்தி அடைந்தாரென்று விசனத்துடன் தெரிவித்துக் கொள்கிறேன்" என்று சொல்கிறார்களே, அவர்கள் விசனத்தோடே தெரிவித்துக்கொள்வது நியாயமான வார்த்தைதான். சத்தியமாக நிஜமே சொல்கிறார்கள் - ஏன்? இந்த நரக அடையாளத்துடன் போகிறவர் அங்கே உதைபட அல்லவா போகிறார்? அது விசனத்திற்குரியதுதானே; ஆகையால் கவலையைத் தெரிவிப்பது நியாயந்தான்.

மனிதனுக்குத் தந்திருக்கிற பேரறிவானது மற்றெந்த ஒரு படைப்புக்கும் இல்லை. எப்படியெனில், நமக்கு நூறு ரூபாயிருந்தால் போதும் என்ற எண்ணம் வருவதில்லை. இருநூறு ரூபா இருந்தால் தேவலை என்று தோன்றுகிறது. இருநூறு வந்தாலும் ஆயிரம் இருந்தால் தேவலை என்று இப்படியே மேலே மேலே ஆசை வளர்கிறது. இவ்வாறு மேலே போகும் எண்ணம்

எறும்பு முதல் யானைவரையிலுள்ள எண்பத்து ஒன்று நூருயிரம் ஜீவஜெந்துக்களில் எந்த ஒரு ஜாதிக்காவது வருவதுண்டா? இல்லை. இந்த எண்ணம் உனக்கு வருவதற்குக் காரணமாக இருக்கிற உன்னதப் பிரணவப் பொருளை, உனக்குள்ளாகவே வைத்து இறைவன் படைத்திருக்கிருன். னல்லா யோசித்துப் பாருங்கள். அந்த எண்ணம் னமக்குச் சும்மா வந்தது அல்ல. அந்தப் பிரணவ தேகத்திலிருந்துதான் இந்த எண்ணம் உண்டாகிறது. இப்படி யோசிக்க யாருக்காவது வருகிறதா? அந்தத் தேகத்திலிருந்து வரும் கூவுதலால் தான் இவனுக்கு இந்த எண்ணம் உண்டாகிறது. இறைவன் னமக்குள்ளே கட்டுப்பட்டு இருக்கிருன். னும் முதலில் சொன்னேமே, அந்தச் செய்யுளில் விளக்கப் பட்டதுபோல் ஜீவ குகையில் கட்டுப்பட்டு இருக்கிருன். அதுவே இவ்வாருன எண்ணம் னமக்கு உண்டாவதற்குக் காரணம். ஆனல் னும் எல்லோரும் னம் ஜீவ குகையில் இருக்கும் "அந்த ஜீவனைப் பார்க்கிறதா! அது முடியுமா?" என்று னினைக்கிற அந்த உலகத்திலேயே இருக்கிருேம்.

இக் கடத்துக்குள்ளேயே யாரும் அளப்பதற்கரிய இன்னெரு உலகம் இருக்கிறது. அந்த உலகத்திலே குடியேறினல் ஜீவ உலகில் இருந்து பழகலாம். னமக்குச் சுண்டுவிரல் தெரியுமல்லவா – அதிலிருக்கும் னகம் தெரியுமல்லவா – னகத்திலுள்ள வரம்பு எல்லாம் தெரியுமல்லவா? அதே போல அந்த னித்திய உலகு தெரியும் போது ஜீவனும் பிரத்தியட்சத்தில் விளங்கும். ஜீவன் னித்தியப் பொருளாயிற்றே! அலட்சியப்படுத்தக் கூடிய

7

பொருளல்லவே. அதைத் தெரிந்துகொள்ள நீங்கள் ஏன் ஆசைப்படுவதில்லை என்று கேட்கிறோம். நாம் ஆசைப் பட்டோம் - எம் அறிவைப் பார்க்க ஆசைப்பட்டோம். நீங்களோவெனில் 'அடேயப்பா அறிவைப் பார்க்க முடியுமா?' என்ற உலகிலே உட்கார்ந்திருக்கிறீர்கள். எழுந்திருங்கள். நிச்சயம் பார்க்கலாம்.

பகவான் இந்தத் தூல தேகத்தோடு இருந்து நடத்திய ஸ்ரீமத் பகவத்கீதையை, அந்தச் சரித்திரத்தை எழுதியகாலம் முதல் இன்று வரை, நாம் ஓயாது கூட்டம் கூட்டமாக, ஒருவர் அல்ல, இருவர் அல்ல, பல்லாயிரக் கணக்கானபேர்கள் படித்து வருகிறோமே! அந்த ஏட்டில் எத்தனை பாட்டுக்கள்? (எழுநூறு சுலோகங்கள் என்று சபையோர் சொல்ல)- எழுநூரு? ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு---- பத்து (என்று ஒவ்வொரு விரலாக விட்டு எண்ணிவந்த ஆண்டவர்கள்) இப்படியே எழு நூறு என்று எண்ணுவதற்கே அதிக நேரம் ஆகும் போல் இருக்கிறதே, அப்போ அதிலுள்ள 700 சுலோகங் களையும் படிக்க எத்தனை நாள் பிடிக்கும்? அதைப் பாரா மல் பாராயணம் பண்ண எவ்வளவு காலமாகும்? அதற் குப் பூராவும் அர்த்தம் பண்ணுவதற்கு எத்தனை வருஷம் பிடிக்கும்? அது போகட்டும், பகவத் கீதை எங்கே உண் டாயிற்று? போர்முனையிலே துரியோதனாதியருக்கும் பஞ்ச பாண்டவர்களுக்கும் இடையே நடந்த யுத்தக் களத்திலே யல்லவா அது உண்டாயிற்று? வீட்டிலல்ல வே - கொலைக்களத்தில்தானே பகவத்கீதை உண்டா யிற்று? ஆம். நம்புகிறாப் போல ரொம்பப் பொருத்த மாகத்தானே இது இருக்கிறது? இல்லை. அந்தக்

கொலேக்களத்திலே பகவான் இவ்வளவு சுலோகங்களே யும் படித்துக்கொண்டே யிருந்நாரோ? எதிரிகள் இவர் சும்மா படிக்கட்டுமென்று பார்த்துக்கொண்டே இருந்நார் களோ? எதிரியினுடைய தலேயானது தனது வாளுக்கு இரை, தன் தலேயானது எதிரியினுடைய வாள் முனேக்கு இரை என்று ஒருவரோடொருவர் பொருதி முட்டிக்கொண் டிருக்கிற தருணத்திலா இவ்வளவு பெரிய கீதையைப் படித்துக்கொண் டிருந்நார்? அங்ஙு படித்துப் போதித் திருக்க முடியாது என்று னன்ருகத் தெரிகிறதல்லவா? அப்போது பகவத்கீதை பொய்யா? இல்லேயே. பக வான் பகவத்கீதை உபதேசித்தது சத்தியம். பின் அந்நச் 'செயலுடைய பகவத் கீதை' எங்கே?

உலகத்தில் பவக்கோள் தலேயெடுத்து வருங்காலத் தில் னுன் வருவேன் என்ற ஒரு சத்திய வார்த்தை அந்நக் கீதையில் இருக்கிறதல்லவா? ஆம்.

'சாவாது பிறவாது தனிமுதலா யிருந்நனுன்
ஆவாயிவ் வுலகுபடும் அழிதுயர்தீர்ப் பதற்காக
மேவாது னின்றேயென் மாயையினுல் மெய்யேபோல்
ஓவாதுவந்நு பிறந்நிடுவேன் யுகந்நோறும்
யுகந்நோறும்'

என்று பகவான் கூறியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்களல்ல வா? இப்பொழுது என்ன ரொம்பப் புண்ணியம் மிகுந்ந காலமோ? னெருப்புத் தண்ணியானது பூமியில் விளேகிற காலமல்லவா இது - பூமியானது உண்டாகி ஆயிர மாயிரத் தாண்டுகள், கணக்கில்லாத னெடுங்கால மாயிற்றே. னம் கண் முன்னுள்ள இப்பிரம்மாண்ட சிருஷ்டி

ஒரு கூரிய இருளாக இருந்ததே - அது எந்தக் கோடி காலமாக இருக்கும். அதிலிருந்து புழுக்கம் உண்டாகி ஜலம் உண்டாகினது எந்தக் காலம் - பிறகு பூமி உண் டானது கணக்கில்லாத எவ்வளவு நெடுங்காலம். அதில் புல் பூண்டு முதல் மற்ற ஜீவராசிகளை எல்லாம் உண்டாக்க எவ்வளவு காலம் ஆகியிருக்கும் - கடைசி யாக அதில் மனுமுளை உண்டாக்க எவ்வளவு காலம் ஆகியிருக்கும் - இவனுக்காகவே ஆயிரத்தெட்டு அண் டங்களையும் இப் பூமியில் உண்டாக்க எவ்வளவு நெடுங் காலம் ஆகியிருக்கும் - அப்படி உண்டாக்கப்பெற்ற பூமி யில் இப்போது தீத்தண்ணீர் தோன்றி எத்தனை வருஷம் ஆயிற்று? நூறு, நூற்றுப்பத்து வருஷங்களுக்கு மேல் இருக்காது. நம் சிறு பிள்ளையாக இருந்தபோது எம் சித்தப்பன் 'கடையிலே சீமெண்ணெய் ஒரு அணாவிற்கு ஒரு புட்டி விற்கிறது, இனி விளக்கெண்ணெய் உப யோகிக்க வேண்டாம், என்று சொல்லி அதை எம் தாயா ரிடம் வாங்கிக் கொண்டுவந்து கொடுத்தார். அந்தக் காலத்தில் இப்போது போல விளக்குகள் கிடையாது. அகல் விளக்குத்தான். அதிலே திரி போட்டு, எம் தாயார் அந்த எண்ணெயை ஊற்றித் தீக்குச்சி வைத்த வுடன் குப்பென்று தீப்பிடித்துக் கொண்டது. அதைக் கண்டு 'அய்யோ பாவி மவனே, இப்படி ஏகமா பிடிச் சிடிச்சே' என்று பயந்து கத்தினார்கள். அதற்குச் சித்தப்பன், 'இல்லே அண்ணாம் பெஞ்சாதி - இதுக்கு வேறே விளக்கு இருக்குது' என்று சொல்லிப் போய், சுட்டி விளக்கு ஒன்று ஒரு தம்பிடிக்கு வாங்கி வந்தார். இது நடந்தது எமக்கு நன்றாக ஞாபக மிருக்கிறது. ஆகையால் நூறு அல்லது நூற்றுப்பத்து வருடங்

ஙளுக்குள்ளாகத்தான் இந்நத் தீத்தண்ணீர் வந்நது. அதற்குமுன் இல்லை. இந்நக் குறுகிய காலத்திற்குள் பூமியில் பிரம்மாண்டமாக இத் தீத்தண்ணீர் எங்ஙும் விரிந்நுவிட்டது.

இந்நத் தீத்தண்ணீர் குடிப்பதற்கு ஆகுமா? வெள்ளாமைக்கு ஆகுமா? பின் எதற்கு ஆகும்? எல்லாவற்றையும் தகித்துச் சர்வனாசம் செய்வதற்குத்தான் ஆகும். இந்நத் தீத்தண்ணீர் ஜலம் ஊறி வருகிற எல்லையில் வருகிறதே! முதலில் அபுரூபமாக உண்டாகி, இன்று பல தேசங்ஙளில் எவ்வளவு விரிவாகக் கிடைக்க ஆரம்பித்துவிட்டது. ஞள் ஏற ஏற இது என்ன செய்யும் என்று உங்ஙளுக்கு இப்போது விளங்ஙாது.

வருகிற காலத்தில் ஒரு பெரும் அவஸ்த்தையைச் சந்நிக்கப் போகிறீர்கள். அந்ந னேரம் யாராலும் னிவர்த்திக்க முடியாத மகா கோரமாகிய காலமாக இருக்கும். மகா சிரேஷ்டமான பரமபதத்திற்காகவே தலை தாங்ஙி வந்நுள்ள மனுக்குலம் ஒரு அகோர காலத்தைச் சந்நிக்கப் போகிறது. எம்மைக் கேட்டால் இதைக் கணக்கிட்டு இந்நச் சமயம் என்று சொல்வோம். சூரியனுக்கும் சந்நிரனுக்கும் இன்னும் இத்தனை ஞள்தான் இருக்கிறதென்று எம்மால் சொல்லமுடியும். இப்பேர்ப்பட்ட காலத்தில் ஞம் வந்நு உங்ஙள் முகத்தைப் பார்த்து இதைப் பேசுகிறோம்.

அதிருக்கட்டும் - பகவத் கீதையானது சத்தியம் என்று மேலேசொன்னோமே - அருச்சுனனுக்கு விஸ்வரூபத்தைத் தந்நருளியதும், பிரம்மாண்டமான படையைத்

துச்சமாக எண்ணி வெற்றியுடன் கடக்கக் கூடிய பலாட்டியத்தைத் தந்ததுமான அந்தக் கீதை எங்கே இருக்கிறது? அது இப்ப இல்லையென்று சொல்வதற்குக் கோடி கோடி பேர் சாட்சி இருக்கிறார்கள். அந்த வல்லபத் தோடு இருந்தது என்று சாட்சி சொல்வதற்கு அவர்கள் காலத்தில் ஐந்து பேர்கள் தான் இருந்தார்கள். ஆனால் எம்முடைய காலத்திலோ அதன் நிஜச்செயலை அறிந்து சாட்சி சொல்லக் கூடிய பல ஆயிரக்கணக்கான 67 சாதிகள் அடங்கிய ஒரு பெரும் கூட்டத்தையே உண்டாக்கி விட்டோம். முத்திக்கு உரிய கீதையானது எவ்வளவு நேரத்திற்குள்ளாக நடத்தக் கூடியதாக இருக்கும்? எதிரிகளிடமிருந்து எறியப்பட்ட ஆயுதமும், பாண்டவர் பக்கமிருந்து எறியப்படும் ஆயுதங்களும் வந்து சந்திக்கிறதற்குள்ளாக நடக்கிற கீதையாக அல்லவா, அவ்வளவு சுருக்கமாகவல்லவா இருக்க வேண்டும் - அது எங்கே? இல்லையா? இருக்கவேண்டு மே? இது காலமோ விபரீதமான காலம். 'இப்படிப்பட்ட காலத்தில் வருவேன்' என்று பொய் சொல்லியா இருப் பார்கள்? அது எங்கே அய்யா? வருகிறேன் என்று சொன்னார்களே - அது சத்தியம் தானே; எங்கே வந் திருக்கிறார்களென்று தேடிப் பார்க்கலாமா? எங்கே தேட லாம்? சாப்பாட்டிலா, கட்டிடத்திலா, மலை காடு செடிகளிலா?

வள்ளுவர் பிரானவர்கள் சொன்னது எம் காதில் விழுந்தது. 'மறைமொழி மாந்தர் பெருமை நிலத்தில் நிறைமொழிகாட்டும்' என்பது செயல் அடையாளமா அல்லது ரூபத்தின் அடையாளமா? ரூபந்தான் நமக்குத்

தெரியுமே- மகாவிஷ்ணுவானவர் ஒரு மயில் இறகைச் சிரஸில் அணிந்து, மாட்டின்மேல் சாய்ந்துகொண்டு, புல்லாங்குழலை ஊதிக்கொண் டிருப்பார் என்று. அது ஞமாக உண்டாக்கிய உருவம். ஆனல் பகவானை அறிய வேண்டுமானுல் செயல் அடையாளம்தான் வேண்டும். அந்நச் செயல் அடையாளம் உடையவர்கள் பவக்கோள் னிறைந்ந இந்நக் காலத்தில் னிச்சயமாக வந்திருக்க வேண்டுமே? பகவான் வந்துதான் இருக்க வேண்டும். அவர்களைத் தேடிப் பார்க்க வேண்டும். இன்று தொடங்கியாவது தேடுங்கள்.

பகவனின் கீதை யன்னுள்
 பற்குணர் தமக்கும் ஈந்து
யுகயுகம் வந்து கீதை
 உங்கட்கும் தருவே னென்று
ஜகந்நனில் உற்ற வாக்குத்
 தாமெங்கே புழங்கு தென்று
இகந்நனில் தேடு வார்கள்
 இவர்கள்மெய்ம் மனத்த ராமே.

அந்ந னீலமேக சாமளவர்ணப் பிரான் ஒருமொழிக் கீதையாகிய மெய்க்கீதையை ஆறுபேருக் கீந்திருக்கிருர் கள். ஒரு தலைமுறை காலம் அவர்கள் பிரயாசைப் பட்டும் தங்கள் தாயாரைச் சேர்த்து ஏழுபேருக்குத் தானே இதைச் செய்து வைக்க முடிந்நது? இப்போது பவக்கோள் மிஞ்ஞி னிற்கிற காலமாக இருக்கிறதே. பகவான் கீதையில் சொல்லியுள்ளபடி அவர்கள் இந்நக் காலத்தில் வந்துதானே இருக்கவேண்டும்? அவர்கள் எங்கே வந்திருக்கிருர்கள் என்று னன் மனத்தர்கள்

தேடாமல் இருக்கலாமா? இன்றைய தினத்திலிருந்து நீங்க ளெல்லோரும் இந்த எண்ணத்திலே வாழ வேண்டும் என்றேதான் நாம் இதைச் சொல்லுகிறோம். நீங்கள் தேடினால் அந்த அரிய சந்திப்புக் கட்டாய மாகக் கிட்டும்.

பகவானின் கீதை தன்னைப்
பகர்வதின் பலன்தான் என்னே
பகவனின் ஒருசொல் கீதை
பவம்அழி விஸ்வ ரூபம்
தகவகாண் டீப மற்றும்
தருதவ ததற்கின் றாளில்
பகவனும் வரக்கூ டாதோ
பார்குரு வந்நிட் டாரே.

இப்போது ஒரே ஒரு பாயிண்ட் பேசுகிறோம். ஒரே ஒரு வார்த்தை. முன் சிவ மதம், வைஷ்ணவ மதம், புத்த மதம், ஜைன மதம் என்று வெவ்வேறு உண்டா யினவே. இன்று அவைகளின் பெயரைச் சொல்லிக் கொண்டு ஒன்றுக்கொன்று அடி தடியாக இருக்கின்றது. ஆனால் அவை படைக்கப் பட்டபோது இப்படியா இருந் நது? அவற்றைப் படைத்தவர்கள் ஒருவருக் கொருவர் எதிரியா? அந்த றப்பாகிய இறைவனுக்கு அண்ணன் தம்பிகள் இருந்து, ஒருவருக் கொருவர் உராய்ந்து சண்டை போட்டுக்கொண்டு உண்டாகிய வேதங்களா? அப்படி இருக்குமா? சத்தியமாக இல்லை. சர்வ வேதங்க ளையும் ஒரே இறைவன்தான் உண்டாக்கியது. ஒரே இறைவனால் உண்டாக்கப் பெற்றவை அவை என்றால் மனித குலம் முழுவதும் ஒரே ஜாதி தானே? ஒரு

ஜாதிக்கும் மற்றொரு ஜாதிக்கும் அறுசுவை மாற்ற மாகவா இருக்கிறது? இல்லையே. ஆகவே ஒரே மாதிரி அறு சுவையை உண் டனுபவிக்கிற மனித குலம் அனைத்தும் ஒரு ஜாதி தானே?

எந்த ஒரு காரியத்திற்காக சர்வவேதங்களையும் அனுப்பினான்? ஒரே செயலாக, ஒரே வார்த்தையாகச் சொல்லுங்கள் பார்க்கலாம். தெரியாது. சர்வ வேதங் களும் ஒரே செயலுக்குத்தான் வந்தன. எந்தக் கற்ப கோடி காலத்திற்கு முன் உண்டான வேதமாக இருக் கட்டும், சமீப காலத்தில் உண்டான வேதமாகவே இருக் கட்டும், எல்லாம் மனித தலைகளுக்காகவே ஒரே அடை யாளக் குறிப்புடன் அனுப்பபப்பட் டிருக்கின்றன. அது என்ன என்று எம்மைக் கேளுங்கள், சொல்கிறோம். அதாவது, இந்த அனித்திய உடலுக்குள் னித்திய உடலானது ஒன்று இருக்கிறது. இந்த உடலை விடுகிற போது, தவருதபடிக்குப் பரமனுடைய கையில் சிக்கி, அந்த னித்திய தேகத்தில், வைர தேகத்தில், ஒளி தேகத் தில், ஒப்பில்லாப் பிரணவ தேகத்தில் னுழைந்துகொள் வதைக் கற்பிப்பதற்காவே வேதங்கள் அனைத்தும் வந்தன. இப்பொழுது பார்த்தாலோ உலகத்தில் வேதம் பூராவும் ஓதினவராகவே யிருந்தாலும், இறுதியில் பிண னாற்றமும் கசப்பு ஜலமும் வெளியாகியே சாகிறார்கள். அப்போ அவர்கள் னிஜமாகவே தம் மதத்தின் னிஜச் செயலில் படிந்திருந்தவர்களா? தான் பிறந்த ஜாதியில் னிஜமாக இருந்தவர்களா? இல்லை. னும் இன்ன ஜாதி என்று இவர்களாகச் சொல்லிக் கொள்ளலாம். வேதம் சண்டைக்கா வரப்போகிறது? இவன் வேண்டுமென்றால்,

எல்லோ ரோடும் சண்டைக்கு வரலாம். ஆனால் வேதம் சண்டைக்கு வரவே வராது; பேசாமல்தான் இருக்கும்.

வேதத்தில் சொல்லப் பெற்றுள்ளதோ பரிசுத்தம். அதுதான் வைணவமும், மாசு மறு களங்கம் இல்லாத பரிசுத்த மாகிய சைவமும் ஆகும். அந்தப் பரிசுத்தத்தை எப்போது கை போடுவது? ஜைன மதத்தினரா யிருக் கட்டும், புத்தமதத்தினரா யிருக்கட்டும், இஸ்லாமிய மதத்தவரா யிருக்கட்டும், எவரும் அந்தப் பரிசுத்தத் தைக் கைபோடுகிற னடைமுறையில் இல்லை. அந்தப் பரிசுத்தம் எங்கே இருக்கிறது? அதை இப்பவே கை போடவில்லை யென்றால் கடைசியில் அதற்கு அடையாள மாகப் பிண நாற்றம் வந்துவிடுகிறது. காதில் கேட் டாலும் ஓடிப் போய்க் குளிக்க வேண்டும். ஆயிரம் மைலுக் கப்பாலிருந்நாலும் செத்தான் என்று காகிதம் வந்நாலே அதைக் கிழித்துப் போட்டுவிட்டுக் குளிக்க வேண்டு மென்றால் – எவ்வளவு பெரிய தீட்டாக அது இருக்க வேண்டும்? மனுவாக இருந்நது இப்படித் தீட் டாகப் போகலாமா! இதற்காகவா இந்த அரிய தேகத்தில் வந்நது? இல்லையே.

முன் வந்ந வந்ந எல்லா வேதங்களும் ஒரே எல்லை யில் ஒன்று கூடி, மெய்வழி என்ற நாமத்தோடு தனித்த ஒரு பரிசுத்தப் பாதையிலே இதுநாள் போகுது. மெய்க்கு மாற்றமான பாதைகளை வெட்டிப் போட்டுத் தீ வைப் பதற்காகவே நாம் வந்திருக்கிறோம்: எதற்காக மக்களா கிய நாம் எல்லோரும் பிறவி எடுத்தோம் என்று சிந்திப் பதில்லை – எவ்வளவு பணம் சம்பாதித்தாலும், எத்தனை வீடுகளைக் கட்டினாலும், எவ்வளவு திரவியம் திரட்டி

ஞலும், முடிவில் எல்லாவற்றையும் போட்டுவிட்டுத் தானே போகப் போகிறேம். னம் கூட ஏதாவது வருமா? அவஸ்தைதான் வரும்.

அவஸ்தை வருவதற்கா இவ்வளவு காலம் இங்கு வாழ்ந்நது? இதற்காகவா இறைவன் உன்னத அறிவை மனிதனுக்குத் தந்நான்? இதற்காகவா ஒரு மதத்திலே சார்ந் நிருந்நோம்? சகல மதங்களின் உண்மை எது? னிறையான திசையாகிய சாவுடைய னேரத்திலே பரிசுத்த அடையாளம் யாருக்கு இருக்கிறதோ அவர்கள் தான் தங்கள் வேதத்தில், மதத்தில், சார்ந்நிருந்நவர்கள் என்று வேத சாட்சியோடு னிரூபணை யாகிறது. ஆகையால் மதங்களுக்குள் ஒன்றுக்கொன்று வேறுபாடு இல்லே. இல்லவே இல்லே. அவைகளினுடைய மெய்க் கருத்து இறுதி னேரத்தில் பரிசுத்தத்தில் குடி புகுவது ஒன்றே ஒன்றுதான்.

சக்கிலி என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு சொல்லுவாய். இறைவன் எந்ந ஒரு ஜாதியையும் மட்டமாகப் படைக்கவே இல்லே. சக்கு + இலி. அதாவது, பரிசுத்தன். பிரம்ம னிஷ்டன். இதை முகத்தைச் சுளித்துக் கொண்டு சொல்வானேன்? அது மட்டமான ஜாதியா? இல்லேயே - எதற்காக வேண்டி ஒன்றை மட்டமாகவும் மற்றென்றை ஏற்றமாகவும் சொல்லவேண்டும்? இதை எம் முன்ஞல் சொல்லித் தப்பிக்க முடியாது.

அனேவரும் னரனுகத்தான் பிறந்நோம். னம் தாயும் தகப்பனும், மனேவியும், ஞமும், அனேவருமே காமம் என்ற வெறியினுல்தான் பிறந்நது. தகப்பனிடத்திலிருந்நு வெளிவந்ந வித்தானது காம எண்ண

மாகிய அனல் பற்றிக் கிளம்பிக் கசிய, அது னேரம் காற்று உண்டாக, வரும் வழியில் மண் தண்ணியையும் சேர்த்துத் தாயுடைய னிலத்திற் போய் விழுந்நது. இவ்வாறு ஐந்து பூதங்களும் ஒன்று கூடியே எல்லா மனித தேகங்களும் உண்டாயின. இதில் வித்தியாசம் எங்கிருக்கிறது? ஏன்தான் இப்படி ஒரு சாதிக் கொரு சாதி அடித்துக் கொள்கிறதோ தெரியவில்லை. இந்ந வழக்கு எப்போது தீரும்? எம்மிடத்தில் வந்நால்தான் தீரும். அதுவரை எந்ந எல்லையிலும் அது தீராது.

வெறியினல் னரனுய்ப் பிறந்நோம். அழுகப் பிறப் பிலே அவலட்சணமாக ஒரு சவம் போல்ப் பிறந்நோம். பிறகு வளர்ந்து அறிவுடைய ஒரு உச்சத்திற்கு வந் நோம். வேதங்களை ஆராயும் சக்தியும் பெற்ருேம். ஆனல் னும் குடியிருக்கும் இந்ந வீடோ அனித்தியமாக இருக்கிறது. அதைத் திருத்தி மாற்றவேண்டும். இப் பொழுதே னித்திய தேகத்தில் னுழைந்து பழகிக் கொள்ள வேண்டும். சாவு வருமுன் செத்துப் பழக வேண்டும். இதுவே சன்மார்க்கம். பரிசுத்த னல்ல மார்க்கம்.

சாவருமுன் சாப்பழக்கம்
பழகுவது மெளிதோ
சாவந்நிடில் சமர்த்துமுன் றன்
படிப்புமங்கே செலுமோ
சாவருமுன் சாப்பழக்கம்
பழகுவதிங் கெளிதே
சற்சனர்க்கே யாகும் ....

சன்மார்க்கம் என்ருல் என்ன? மின்னல் கிரண மாகிய ஜீவ தேகத்தைக் காட்டித் தருகிறவர்கள் உனக்குக் காட்டித் தந்து, பெறுகிற வண்ணம் னீ பெற்று, அந்நஜீவதேகத்துக்குள்ளே ஞள்தோறும் னீ னுழைந்து னுழைந்து பழகுவதே சன்மார்க்கம். இவ்வாறு பழகி, இந்ந அனித்திய வீட்டை விட்டு அந்நப் பிரணவ வீட்டிற்குள் பாய்ந்து னிற்கும்போது அதற்கு அடையாளமாக மூச்சு இருப்பதில்லே. இதுவே னிஷ்டை. ஒரு பிரம்ம னிஷ்டரிடத்தில் பழகுபவர்களுக்கு இப் பிரம்மச் செயல் னிஜமாகவே கைவரவு ஆகிவிடுகிறது.

ஒரே தரத்தில் எல்லோரும் பிறந்நோம். ஒரே இறைவன் ஒரே காரியத்திற்காகவே னம்மைப் படைத்தான். எமனணுகாப் பரிசுத்தத்தைக் கைபோடும் அந்நக் காரியத்தை அறியாததாலேதான் ஒருவனுடைய எண்ணம் மற்ருெருவன் எண்ணத்தை ஒப்புக்கொள்ளாமல் அடுத்த ஜாதியைக் கோரமாக னினேக்கச் செய்கிறது. எம் கைவசப்பட்டாலோ இந்ந எண்ணம் தொலேந்நே போகும். உன் ஜீவ தேகம் உனக்குத் தெரியாததால் அடுத்தவனேப் பார்த்துப் பழிக்கிருய். அவனிடத்தில் இருப்பதும் ஜீவன்தானே. இது தெரியுமட்டும் வேற்றுமை போகாது. இது தெரியுமானல் சமத்துவமும், ஒருமைப்பாடும் விளங்கும். எப்படியெனில் ஒரு விளக்கை னல்ல அழகான வீட்டில் வைத்தால் சந்நோஷமாகத் தகதக வென்று எரியும் - அதைக் கக்கூஸில் கொண்டுபோய் வைத்தால் சுணங்கி ஞணிக்கொண்டு எரியுமா? எரியாது. எப்போதும் ஒரே மாதிரிதான் எரியும். அதே போல எவ்வளவு மட்டமான தேகமாக

இருந்நாலும், அதிலேயும் ஜீவன் குடியிருக்கிறது. அது வேறொரு உன்னதமான தேகத்தை விரும்பி தானிருக்கும் தேகத்தை விட்டுப் போவதில்லை. னம்மில் உள்ள ஜீவ தேகம் தெரிந்நால் இன்னொருவனுடைய ஜீவதேகமும் தெரியும். ஒப்பிட்டுப் பார்த்தால் இரண்டும் ஒரே விளக்காக இருப்பது அறியவருகிறது. பிறகு இத் தூல வித்தியாசம் வரவேவராது. அது வரைக்கும் வேற்றுமைச் சனியனது யாரையும் விட்டுப் போகாது.

வேதங்களின் னிஜச் செயலும் அவைகளைப் படைத்த இறைவனும் ஒன்றாகவே இருக்க, வேறொருவனை அன்னியன், கீழ் ஜாதிக்காரன் என்று மனம் னினைப்பது எது வரைக்கும்? இந்நத் தூலம் இருக்கும் வரை அவ்வாறு னினைக்க வரும். ஏனெனில், தூலத்திலே வைத்துத் தான் ஏற்றத் தாழ்வு தெரிகிறது.

'தேகமுள்ள வரைக்கும் னீங்கா
ஏகபேதச் சாதிச் சண்டை'

ஜீவ தேகத்தைக் கண்டபின் தான் தூலதேகத்தின் எண்ணம் மாறும். இவ்வாறு எங்கும் சமரசமாக விளங்கக் கண்டபின், இந்நத் தூலதேக பேதங்களெல்லாம் போய்விடும். இன்னொருவனைப் பார்த்தவுடனே அவனுடைய ஜீவதேகம் உனக்குத் தெரியும். அது தன்னது தான் என்று விளங்கும். இறைவன் ஒன்று என்பதற்கு னிரூபணையான சாட்சி இதுவே. ஒரே வேதம் என்பதற்குத் திண்ணமான செயலும் இதுவே. வயிற்றுச் சோற்றுப் பாட்டுக்காக, குருக்கள்மார்கள் தாங்கள் மட்டும் ஒரு பாடும் இல்லாமல் பிழைக்க, என்னென்ன

இழவையோ ஏகமாக இப்படித் தாறுமாருகப் பிரட்டி, மேல் சாதி யென்றும் கீழ்ச் சாதி என்றும் கோரத்தில் மனத்தைப் பழக்கிவிட்டார்கள். ஞமும் அந்த வழியி லேயே இதுவரை போய்க்கொண் டிருக்கிரேம். வேறு ஜாதி என்ருல் அவன் சோறு ஆக்கச் சட்டியைக் கவிழ்த்து வைத்தா ஆக்குகிருன்? இல்லேயே. பின் ஜாதி ஏது? சண்டை எதற்கு? அனேவருக்கும் ஒரே விதி, ஒரே பலன், ஒரே செயல். எல்லாம் ஒரே மாதிரி இருக் கிறது. மனிதனுக்கு மனிதன் பேதகம் செய்வதால் தான் இறைவனுக்கு மாற்றக்காரர்களாகி யமன் கையில் சிக்குகிருர்கள். இறைவன் னம்மை இப்படி வீணிற் போவதற்காகப் படைக்கவில்லே.

இங்குள்ள னீங்களனேவரும் தூரத்திலிருந்தும் பக்கத்திலிருந்தும் வந்து னன்ருக னிதானித்துக் கேட் டீர்கள். இந்தப் பிரசங்கத்தைச் செய்துவிட்டுப் போவ தற்காக இங்கு ஞம் வரவில்லே. னீங்கள் எத்தனேயோ பிரசங்கம் கேட்டிருப்பீர்கள். இது பிரசங்கமா? இல்லே; செயல். உன்னுடைய தலேயை னித்தியத்தில் மாற்று கின்ற செயலேயே னீங்கள் இங்கு கேட்டீர்கள். இதை னீங்களும் கட்டாயம் பெறவேண்டும். (தங்கள் பிள்ளே களேச் சுட்டிக்காட்டி) பெற்றவர்கள் இதோ இருக்கிருர் களே. ஆண் பெண் ஆகிய இவர்க ளனேவரும் உங் களேப்போல் மனிதர்கள் தானே. எது னம் தலேக்கு அவசியமோ, அதை னிச்சயமாக இப்பவே எல்லோரும் பெறலாமே. அதற்கு ஒரு வசந்தமான னேரம் வந்திருக் கிறதே.

சாமியார் என்று வேஷம் போட்டுத் திரிகிறனே; அவனுக்கு அந்தச் சாமி என்ற பெயரினுடைய லட்சணமே தெரியாது. சா—மி என்றால் என்ன? அந்தச்சொல்லுக்கு என்ன அர்த்தம்? சா — சாவை, மி— மீறினவர்கள். இவனென்ன எமனை மீறியவனா? அவனுக்குள்ளாக மாட்டிக்கொண்டுதானே முழிக்கிறன்? பெயர் மட்டும் சாமியார் என்று வைத்துக் கொண்டதினால் அவனை அடிக்கவா போகிறோம். முத்து என்று பெயர் வைத்துக் கொண்டால் என்னய்யா இவன், உருண்டையாக வெள்ளையாக இல்லையே; இவனுக்கு முத்து என்று பெயர் வைக்கலாமா என்று சண்டைக்கா போகிறோம். சும்மா சாமியார் என்று பெயரை வைத்துக்கொள்வான். அவனிடம் அச்சொல் குறிக்கின்ற நிஜச் செயல் இல்லை. ஆகவே அவர்களை நம்பி நீங்கள் வீணாகப் போக வேண்டாம்.

நாம் ஒரு கிழவர்; இவ்வளவு நேரம் வரை, உங்கள் முன்பாகப் பேசிக்கொண்டிருந்தோமே; என்ன பேசிக் கொண்டிருந்தோம்? மனிதனாகப் பிறந்த எல்லோரும் வீணாகப் போய்விடாமல் சமரச சன்மார்க்கத்தின் வழியைப் பற்றி எக்கோடி காலத்திற்கும் நித்திய தேகத்தில் குடிஏறி நிரந்தர வாழ்க்கையில் வாழலாமே; அதற்கு இதோ ஒரு பூவண காலம் வந்து குதித்து நிற்கிறதே என்றறிவிக்கவே நாம் பேசினோம்.

இதுவரை வந்த செம்மல்களைப் பின்பற்றினோர்களைக் கணக்கிட்டுச் சொல்லலாம். ஒருவர் காலத்தில் 25 பேர், ஒருவர் காலத்தில் 36 பேர், இன்னொருவர் காலத்தில் 7 பேர், 4 பேர் என்று தான் இருந்தார்கள்.

சும்மா சம்ராக்ஷணைக்காக, உதவிக்காகச் சேர்ந்தவர்கள் ஆயிரமாக இருக்கலாம். நும் மெய்யைப் பெற்றவர்களை மட்டும் சொல்கிறோம். ஆனால் இன்றோ பல்லாயிரக் கணக்கான பேர் நம்மிடம் அதைப் பெற்றிருக்கிறார்கள்- நீங்களும் ஏன் பெறக் கூடாது?

7.

"காலம் கடந்த கலிக்கடையில்" என்று ஆரம் பிக்கும் பாடல் சபையில் படித்துக்கொண்டு வரும் பொழுது — "பூமி பவப் பாரம் ஏறி யேறிப் பொங்கி விழும் நாள் நெருங்குதம்மா — மிஞ்சும் மனுமுளை வித்துக் கென்று மீறும் சிறு திட்டோர் இந்தியாவில் — என்றுரைத்த நம்ம புத்தர் பிரான்" - என்ற வரிகள் வந்ததும் பாடலை நிறுத்தி, ஆண்டவர்கள் -

புத்த பிரான் அவர்கள் இதை - அந்தக் காலத் திலிருந்து பார்த்துச் சொல்லுகிறார்கள் - "பவக் கோ ளானது அதிகரித்து அதனால் இவ்வுலகம் அழிந்து போகும்போது இந்தியாவில் ஒரு சிறிய திட்டானது மிஞ்சும்" என்று அவர்களுடைய தேவ தீர்க்க திருஷ் டிக்குத் தோன்றிச் சொல்லியிருக்கிறார்கள். ஆனால் அவர் களுக்கு அது எந்த இடம் என்று திட்டமாகத் தெரியுமா? தெரியாது. உனக்கு நும் அறிவித்ததால் இந்த இடம் தான் அது என்று நிச்சயமாய்த் தெரியும். நும் சொல்லு கிறோம், அந்த மீட்புச் செயல் இந்த இடத்தில் கட்டாயம் நடக்கப்பேகிறது- அந்த வல்லபத் திருச்செயல் இப் போது எம் கைக்கு வந்நாயிற்று. அதற்கான ஒரு எச் சரிக்கைப் பரிசாக 'பூரணமூலப்பழம்' என்ற நுமங்

8

னொடுத்து இதை உங்களுக்கு முன்னரே ஞும் அறிவித் திருக்கிறோம்.

இன்று முதல் ஒரு வருஷ ஜீவ ரஸ்த்து உங்கள் கையில் இருக்கவேண்டும். ஒரு வருஷத்திற்குக் கம்மி யாக இருந்நால் னிச்சயம் அந்ந அமளி னேரத்தில் யாராயிருந்நாலும் அவஸ்தைப்பட்டே தீரவேண்டும். பால் சுரக்கிறவர்களுக்கும் கருப்பிணிகளுக்கும் அந்ந னேரம் கொடிய அவஸ்தை னேரமாக இருக்கும். முத் தர்கள் பதித்த சித்தி புரமாகிய இந்ந னீதி னகரத்தில் அவர்கள் இருக்கலாகாது. இருந்நால் இந்நப் பூமியும் சேர்ந்நு அதமாகும். னீங்களும் அதில் மாட்டிக் கொள்ள னேரும் – அப்படி னேர்ந்நால் ஞும் மட்டும் துண்டாக உங்களை விட்டு ஒதுங்கிக் கொள்வோம். ஆகவே அவர்கள் இத் தேவ பூமிக்கு வெளியிலே இருந்நு கொண்டு வந்நுபோகட்டும். இங்கே குடியாக இருக்கக் கூடாது. இத் தேவ சட்டத்தை மீறியவர்களுடன் னீ தொடர்பு கொண்டால் உன்னையும் அது இழுத்துவிடும்– ஜாக்கிரதை. னீ எப்பொழுதும் எம் னினைவிலேயே ஒட்டி யிருக்கவேண்டும். பிரளய கோர அவஸ்த்தையில் இருந்நு தப்பிப் பிழைக்கிற ஆண் பெண் எல்லோரும் மேற்சொன்ன பத்தியத்தில் ஜாக்கிரதையாய் இருக்க வேண்டும். வெளி உலகத்திற்கும் இத் தேவ பூமிக்கும் இடையில் வித்தியாசம் தவத்தளவில் வைத்து எவ்வள வோ கோடா கோடி இருக்கிறது. அது உனக்குத் தெரி யாது. னீ இருக்கவேண்டியது இந்நப் பத்திய மாகிய ஒரே ஒரு எண்ணத்தில்தான். வயோதிக மானவர் களுக்கும் பால்யமாக இருக்கிறவர்களுக்கும், ஆண்

பெண் எல்லோருக்கும் ஒரே சட்டம் தான். ஓர் அற்ப னேர னினைவு தானே அது. ஏன் அதை மாற்றிக் கொள்ளக் கூடாது? ஆண்கள் கௌபீன சுத்தராயும், பெண்கள் தங்கள் மறைவிடச் சுத்தராயும், இருக்க வேண்டும். பிழைக்கிறவர்களுக்கு இந்நக் கட்டுமானம் வேண்டும். ஞம் இப்போது உங்களுக்கு உத்திரவிட்டருளியதை னீங்கள் ஒருவருக் கொருவர் பேசிக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உங்கள் னினைவில் இது படியும்.

இன் னேரத்திற்கு வேண்டிய சத்திய ஒழுக்கத்திற்கு இணங்கி னடக்காதவர்கள் இங்கு இருந்நால், னல்ல பதார்த்தத்தோடு கூடிய உணவில் கொஞ்சும் னரகலை வைத்தது போல அவ்வளவும் வீணாகப் போய் விடும். தீ ஒரு துளிதானே பட்டது – அது எல்லாவற்றையும் அல்லவா எரித்து விட்டது. அதுபோல் ஒரு தலையானது சத்தியக் கேட்டில் இருந்நாலும் அந்நத் தீங்கு எல்லோரையும் பற்றிக்கொள்ளும். எம்முடைய இந்நவார்த்தைகளை மலைபோல எண்ணிக் கைக்கொள்ள வேண்டும். இது மகா முக்கியம். கர்ப்பக் குடலானது திருகித் திருகித் துண்டாடி வாய் வழியாகக் கக்கும் னேரம் வருகிறது. அன்று – உத்தம மேருவாகிய புத்த பிரானவர்கள் பார்க்கும்போது இந்நச் சந்நர்ப்பம் எவ்வளவு தூரமாக இருந்நது. ஆனால் இப்போது னம் கைக்கு எட்டுகிற எல்லைக்கு வந்நுவிட்டது. ஒரு பொருளை ஆயிரம் மைல் தூரத்திலிருந்நு பார்ப்பதற்கும் பக்கத்திலிருந்நு பார்ப்பதற்கும், எவ்வளவு வித்தியாசமோ அந்ந வித்தியாச அளவில் ஞம் அந்ந னேரத்தைப்

பார்க்கிறோம். இன்று காலையிலிருந்து இதை உங்களுக்குச் சொல்லணும், சொல்லணும் என்று நினைத்துக் கொண்டே இருந்தோம். இந்த எச்சரிக்கையை உங்களுக்குச் சொல்லும்படியாக நீதி எம்உள்ளிருந்து சுரண்டித் தீவிரப் படுத்துகிறது. எல்லோரும் எப்பட ஆலயத்தில் வந்து நம் முன் சேருவார்கள், இதைச் சொல்லி விடலாம்என்று இருந்தோம். இப்போது உங்கள் காதில் இதைப் போட்டுவிட்டோம். இதை உங்கள் காதில் கேட்டதோடு நீங்கள் சும்மா இருக்கக் கூடாது. ஒருவருக்கொருவர் இதைப் பற்றிப் பேசிக்கொள்ள வேண்டும். உலகம் கண்டிராத ஒரு அரிய பெரிய காரியம் நடக்கப் போகிறது. அதை நின்று முட்டித் தாங்குகிறவர்கள் தாங்குகிறார்கள். நீ அவர்களுக்கு உதவியாக நிற்கக் கூடாதா? பாரதூரமாக நினைத்தால்தானே அது பெரிதென்று தெரியும். அழிய நிற்கிற அந்நப் பூமிக்கும், நும் இருக்கிற இந்நச் சத்திய பூமிக்கும் இடையே உள்ள வேறுபட்ட அடையாளம் இதுதான். இந்நச் சத்திய ஒழுக்கமே நும் வாழும் இந்ந பூமிக்கு ஒரு வேலியாகும்! "மாண்டார் வருவாரோ" என்று ஒரு சுலோகம் இருந்து வருகிறதே - ஆனால் "மாண்ட மனு வனைத்தும் மண்ணிலிருந்து எழுப்பி வருவார்கள்" என்று கூறப்பெறும் நேரம் எப்படிப்பட்ட காலமாக இருக்கும்?

'காலையில் விதைபோட்டு மாலையில் அது உணவுக்கு வருமா –இந்நச் செயல் ஆகக்கூடியதா? என்றால்– ஆகவே ஆகாது– என்றுதானே நினைக்கவரும். அப்படி ஆகக்கூடும் என்பது எவர் அறிவுக்காவது எட்டுமா?

எட்டாது - அப்படி உண்டாகி வருவதானல் மண் தண்ணீர் ஆகாயம் முதலிய எல்லாம் பிரண்டு தானே வரும். இந்த மனிதனை ஒரே அழகுடைய யவ்வன வயதில் வைப்பதாக இருந்நால்- அதுவும் பிணி, மூப்பு, சாக்காடு அண்டாத ஒரு சுத்த னித்திய மேனியில், ஒரே அளவில், எக்கோடி காலத்திற்கும் வைப்பதானல், அது எப்படியிருக்கும்? இப்பொழுது உள்ள பறவை, மாடு மரம், ருசி பசி அனைத்தும் மாறி ஒரு புதிய உலக மானது, யவ்வன அழகினை உடையதாய் உதயமாகும். இப்படி ஆகும் என்று னீ னினைத்திருக்கிருயா? இல்லையே. னினைக்கமுடியுமா? 'முடியாது - ஆகவே ஞம் சொன்ன இடத்தில், சொன்ன குறியில் னீ னிற்க வேண்டியது தான். உன் யோசனை, குயுக்தி எல்லாம் அந்த னீதி உலக உற்பவ காரியத்தில் செல்லாது. இதை ஞமா சொல்லுகிரேும்? இது எம் வாயிலிருந்து வரவில்லை. ஆதி பிரம்மத்தின் வேத ஞத ஒலி இது என்று னினை - பார்த்தால் எல்லாம் ஒரே வார்த்தையாகத்தான் இருக் கும். ஞம் சொல்லுவதைப் பேதகமாக எண்ணிவிடாதே. அப்படி எண்ணிஞ யானல் உன் தலையைத் துண்டாடி விடும். எத்தனையோ பேர் இப்போது இங்கு இல்லாமல் இருக்கலாம். ஆகவே இதை ஒருவருக்கொருவர் பேசிக் கொள்ள வேண்டும். பவப் பாரத்தின் மிகுதியினுல் இவ்வுலக வடிவு, வேஷம், கழன்று உருக் குலைந்து போகப்போகிறது. இதற்கு முகூர்த்தக் கால் ஊணி னூற்றைம்பது ஆண்டுகளுக்கு மேல் காலம் ஆகிவிட்டது. ஜலம் ஊறுகிற எல்லையில் தீத்தண்ணீர் உண்டான

தற்குச் சந்தோஷப் படுகிறுன். னஞ்ஞு உண்டாக்கியது கொல்வதற்கு - இவன் அதை மகிழ்ச்சியுடன் சாப்பிடு கிறுன் என்றுல் இந்த உலகம் அழிவிற்கே னிற்கிறது என்று தெரிகிறதல்லவா? ஆம்.

தேவனுக ஆவது ஒன்றுதான் அறிவு, மற்றது அறிவு அல்ல. தேவன் ஆன பிறகுதான் இது விளங்கும். மறுபிறப்புப் பெற்றுள்ள உங்களுக்கு இந்த ஜாக்கிரதை கட்டாயம் வேண்டும்.

8.

செய் னன்றி

மனிதனைக் கருவில் அமைக்கும் போதே னித்தியம் என்ற கருவில் அமைத்தான். அதாவது மறலி கை தீண்டாத ஒரு தேகத்தைப் பெற்று னீடூழி காலம் வாழும் அந்தச் சுவர்ணபதி வாழ்க்கைக்கே இவனை இறைவன் படைத்தான். அழகிலும், பலத்திலும் யாரும் மதிக்க முடியாததாயும், இன்பமோ மாருத இன்பமாயும், பிணி என்பதோ இல்லாததாயும், முடிவே அற்றதாயும் உள்ள னித்திய வாழ்விற்கே படைத்தான்! இவனிடத்தில் உள்ள ஒரு கருவிக்காக - உதாரணமாக இவன் ஞவுக்காக - உலகத்தில் அனந்தம் வஸ்துக்களைப் படைத்தான். இவ்வாறு மனிதனுக்கென்று இறைவன் படைத்திருக்கும் அளவு சங்கையற்ற பொருள்களைப் பார்த்தால் என்ன காரியத்திற்காக, என்ன செயலைக் குறிவைத்து அவற்றைப்படைத்திருக்க வேண்டும் என்று யாரும் எண்ணுவதில்லை. இறைவனுடைய கருணையினுலேயே இவன் மதலை குதலை மடந்தை மங்கை முதலிய ஆறு பிறப்பு

களும் மாறி மாறிப் பிறந்து வளர்ந்நான். கடைசியில் எந்ந ஜீவ ராசிகளுக்கும் இல்லாத அறிவைத் தந்நான். அந்ந அறிவென்ற மாணிக்கத்தை வைத்து இவன் இந்ந அழிவுலக வாழ்க்கையில் னல்லா யிருக்கணும், சீக்கில்லா மலும், அழகுடனும், கவலையில்லாமலும் உன்னதமாயி ருக்கணும் என்று எண்ணுகிருன். அவ்வாறு இவன் னினைத்தபடியே இவ்வுலக வாழ்க்கையில் மேன்மையா யிருந்நாலும் இறுதியில் இவன் கதி என்னே!

எமன் என்ற கரிக்கிடாயன் வந்நு, "இவன் எப்படிப் பட்ட கெட்ட மனுஷன் பார்த்தியா, இவன் ஒரு னரகப் பயல், இவனை யோக்கியனென்று இத்தனை னாள் னீங்கள் எல்லோரும் வைத்திருந்நீர்களே" என்று அடையாளத்துடன் சுட்டிக் காட்டியவுடனே - இவனைச் சேர்ந்ந ஜனம், இனம், தாய், பிள்ளை அனைவரும் குபீ ரென்று எமன் பக்கம் சேர்ந்நுகொண்டு - "அட சண் டாளா, னரகப் பயலே, னீ இப்பேர்ப்பட்டவனு, தூ தூ, வெளியே தூக்கு - இனிமேல் னீ இங்நு வந்நிடாதே- னுங்கள் னல்லா யிருக்கணும் - சாணிச் சட்டியைக் கரைத்து வையுங்கள் - அதில் விளக்குமாறைப் போட்டு வையுங்கள் - பார்த்தவர்கள் கேட்டவர்கள் ஓடிப் போய்க் குளியுங்கள்" என்று இவ்வாருன பல மரியாதைகள் இவனுக்கு னடக்கிறதே - அப்படி அவர்கள் இவனைக் காறித் துப்பிச் செய்யாவிட்டால் அந்நத் தோஷம் அவர்களைப் பிடித்துக்கொள்ளும் என்றல்லவா அந்நக் கர்மாக்கள் எடுத்து வைக்கப் பெற்றுள்ளன -

“இவ்வாறான எரிநரக அழிவுக்குப் போகிறாயே, நித்திய உலகில் நித்தியனாக இருக்க வந்தவனாச்சே நீ – இப்படி நாறிச் சாகலாமா – எம்மைப் போலவே பிறந்தவனாச்சே” என்று கட்டிக்கொண்டு அழுவது தான் நாம் இனி செய்யும் பிரசங்கம். இதுதான் நாம் அவைகளுக்குச் செய்யவேண்டிய கடைசி உபதேசம். உலகத்திற்கு வேண்டிய கடைசிப் பிரசங்கமும் இதுவே. கால காலங்களெல்லாம் கடந்து ஓடிக் கடைசி நாட்களும் வந்துவிட்டது. அருமையான மனித தூல மெடுத்த இவன் இப்படி அநியாயமாகப் போகலாமா? இறைவன் எவ்வளவோ பிரயாசைப்பட் டல்லவா இவனுக்காக இவ்வளவு அண்டாண்டங்களையும் படைத் தான். அந்தப் பிரயாசை யெல்லாம் இவன் நினைக்கக் கூட வில்லை யென்றால், இறைவனுக்கு ஏதாவது நன்றி செய்திருப்பானா? ஒவ்வொன்றாக நின்று கவனித்துப் பார்த்தால் இறைவனுக்கு இவன் எத்தனை விதமான நன்றி கெட்டவனாக இருக்கிறான் என்று தெரியும். இந்த நன்றிகெட்ட பாவக்கடன் அனைத்தையும் சேதித்துக் கடன்கட்டி – அதோடு மறலியாகிய எமன் வந்து இவனை அவமானப் படுத்தாமல் விலக்கி – என்றென்றைக்கும் வனப்புடைய அழியாத தேகமாகிய எமன் அணுகா வல்லப முத்தி தேகத்தைத் தருகின்ற ஒரு உதவி இருக்குமே – அதைத்தான் செய்நன்றி என்றார்கள். அப்படிப்பட்ட செய்நன்றியைச் செய்தவர்களுக்கு வையகமும் வானகமும் மாற்றலரிது என்கிறார்கள். யாராலும் செய்ய முடியாத நன்றி இதுதான் – “செய் யாமற் செய்த உதவி என்றும் – செய்நன்றி” என்றும் வள்ளுவர் பெருமான் கூறி யுள்ளதும் இதுவே –

9.

"தன்னையறியாத ஒருவன் குர்ஆன் வேதத்திற்கு அர்த்தம் சொன்னல் அதைக் கேட்கிறவர்கள் னரகம் போவார்கள். அவ்வாறு அர்த்தம் செய்கிறவன் ஒரு அஜாசிலாகவே இருப்பான்" என்பது னபிகள் னயகம் அவர்களின் தீர்ப்பு. வேதத்தை ஓதினேன் என்கிருர்களே - அந்த வேதத்தைக் கரையான் அரித்து விடுமே - அதற்கே அது தாங்காதே. அதுவா இறுதியில் வரப்போகிற அந்த எமனகிய இஸ்ராயீலைத் தடுக்கப் போகிறது? எமபடரை னீக்கப் போகிறது?

சாவுடைய னேரத்தில் கசப்பு பிண னற்றம் வந்து விடுகிறதே - அதை மாற்றிக்கொள்ள வழி தேடாமல், தாங்கள் படித்ததை இன்னெருவருக்குச் சொல்ல வந்து விடுகிருர்களே. தங்களுக்குப் புரியாததற்கு முன்னே இன்னெருவருக்குப் புத்தி சொல்ல வந்துவிடுகிருங்களே. அதனல் என்ன பலன் வருது? தாங்கள் கெடுவதோடல்லாமல் பிறரையும் கெடுக்கிருர்கள்.

இவன் —"படித்தவன், ஓதினவன் காலமெல்லாம் தொழுதவன்" என்று தன்னை உயர்வாக னினைத்துக் கொண்டு மற்றவர்கள் ஓதாதவர்கள், படிக்காதவர்கள் என்று கேவலமாகப் பழிக்கிருனே. இவனுக்கும் அவனுக்கும் என்ன வித்தியாசம்? இவனுக்குந்தானே அவனைப் போலக் கடைசியில் தீட்டு ஜலக் கசப்பு வந்து விடுது. பிறகு இவன் ஓதின பிரயோசனம்தான் என்ன? ஆகவே இவன் படித்ததெல்லாம் வெறும் பருவராட்டுப் பண்ணி தன் ஜீவனத்திற்கு, இரந்து தின்று வயிறு வளர்க்க என்று தெரிகிறதல்லவா?

இப்படி எல்லோரும் ஞறிச் சாகிருர்களே! ஓதிக் கொடுக்கிருர்களே! அவர்கள் மக்களுக்கு கடைசியில் வருகிற இந்த இழிவைப்பற்றி வெளியே சொல்லுகிருர் களா? சாவுடைய னேரத்தில் தனக்கும் அந்த னரக அடையாளம் வந்து விடுதே? அப்போது என்ன செய் வான்? காலமெல்லாம் மக்களிடத்தில் அனியாயமாகப் பிடுங்கித் தின்ருனே - இன் னெடிய உலகத்தில் இதைப் பேசுகிற ஒரு எல்லை உண்டா? இதை எடுத்துப் பேசி எச்சரித்து உதவக் கூடிய ஒரு துணை, எமனுடைய அதிகாரத்தை முறியடிக்கக்கூடிய அருந் துணை அல்லவா ஞம் தேட வேண்டும்! எமனுடைய அதிகாரத்திற்கு முன் யாருடைய அதிகார மாகிலும் செல்லுமா? செல் லாது. அந்தக் கோரனுடைய அதிகாரம் செல்லவொட் டாது தடுக்கும் அதிஜெயச் செயலானது அகில உலகத் திற்கும் ஒன்றே ஒன்றுதானே இருக்க முடியும்.

எமபடரை மாற்றுகின்ற செயலைப்பற்றி எவ்வள வோ கிரந்தங்களில் பலப்பல ராக ரகமாகச் சொல்லி வைத்திருக்கிருர்கள். ஆகவே, அதைச் செய்யவல்ல வர்கள் யாராயிருக்க வேண்டும்? அவர்களுக்கு ஞம் என்ன கைம்மாறு செய்யமுடியும் – செய்யாமல் செய்யும் இந்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றல் அரிது என்று சொன்னது சரிதான்.

“மலர்மிசை ஏகினுன் மாணடி சேர்ந்நார்
னிலமிசை னீடுவாழ் வார்”—

மலர்மிசை ஏகினுன் – யார், எப்போ?

“கற்றதனுல் ஆய பயன்என்கொல் வாலறிவன்
னற்ருள் தொழாஅர் எனின்”—

னற்ருளை மனிதன் எங்கே கண்டான்? ஆதம் பாத மாகிய அது, மனிதனுடைய உள்ளமைப் பெட்டகத்தி திலல்லவோ இருக்கிறது. தன்னை யறியாதவன் "தொழு தொழு" என்று மற்றவர்களுக்குச் சொல்கிருனே, இவன் முந்தியே முத்தி அடைந்தவனு? மற்றவர்கள் தெரியாத வர்களாம், அவர்களுக்கு இவன் புத்தி சொல்கிருனும் - என்ன படுசாமம்!

"ஆதம்பா தத்தைத்தன்னில் அறிந்துதொ ழுவும்வேணும்
அதல்லாத்தொ ழுகையது ஆற்றில்க ரைத்தபுளி"

குர் ஆனை அறியாதவர்கள் கையால் கூட அதைத் தொடக்கூடாது என்று வேதச் சட்டம் இருக்கிறது. ஒலுச் செய்த பின்னர்தானே யாரும் அதைத் தொட வேணும்: அவ்வளவு பெரிய புத்தகத்தில் கலிமா ஒரு இடத்தில் எழுதி இருக்கிறது. அதற்காகத் தானே அந்த னூலையே தொடக்கூடாது என்று எடுத்து வைத் தது. கலிமாவை அப்படி உன்னதமாக எடுத்து வைத் திருக்க, செத்துத் தீட்டாகி னஜீஸாகிவிட்ட அந்தப் பிணத்தின் மேலே கொண்டுபோய் அந்தக் கலிமாவை மட்டும் துண்டாக எழுதுகிருனே. இவன் யார்? எப்படிப் பட்ட கொடிய வங்நாபராக இருக்க வேண்டும்? எதற்கு இதைச் செய்கிருன்? கால் ரூபாய் அத்தருக்குத் தானே. னஜீஸாகப் போகவிட்டு அந்த னரகலின் மேலே வேதத் தின் தலையான கலிமாவைக் கொண்டுபோய் எழுது கிருனே. இதைக் காதாலே கேட்கும்போதே னம் மனம் சுளுக்குகிறதே - ஆனல் இதைச் செய்கிருனே, இவனுக்கு வயது கொடுத்தது எதற்காக? வயிறு வளர்க்க வா? "ஒரு தலைமுறை காலம் உன்னில் ஞன் குடியேறி

இருக்கின்றேன். என்னை நீ திரும்பிப் பார்க்க மாட்டாயா? உன்னில் இருக்கும் என்னை நீ அறியா விடில் அங்கு நீ விழி குருடனாகவே இருப்பாய்'' என் கிறதே வேதம். இத் திரு வசனங்கள் அவன்கள் கண்ணிலும் காதிலும் படுவதில்லையா?

தன் உள்ளே இவன் எங்கே பார்த்தான்? வயிற் றைத்தான் பார்த்தான். செத்து நஜீஸ் வருதே, அது தெரிந்தும் செத்த அந்த வீட்டிலேயே குளிக்காமல் சோறு ஆக்கித் தின்கிறானே. மற்ற மதங்களில் இருக் கிறதே தீட்டு என்று - பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட மதங்களில் எல்லாம் இன்னும் அப்ப டியே இருக்கிறதே! செத்தான் என்றால் தீட்டு, கோவில் கதவைச் சாத்தணும், குளிக்கணும் என்கிறார்கள். இந்த இஸ்லாமிய மதம் உண்டாகி ஆயிரத்து முன்னூறு வருஷந்தானே ஆச்சு. அதற்குள்ளே இவ்வளவு கெட்டுக் கேவலமாகப் போச்சே. மூமீனு நவர்களுக்குச் செய்யும் நடைமுறையைச் செத்து நாறி நலங்குலைய நஜீசாகப் போனவர்களுக்குச் செய்கிறார்கள் - மூமீன் என்பது எந்த அகமியச் செயலைக் கைபோட்ட பின் என்பதை இவர்கள் எப்பத் தெரியப் போகிறார்கள்?

இறந்தவனைப் புதைத்த பிறகு, அரபியிலே ஒரு மந்திரத்தைச் சொல்லி புதைக்குழி மேலே தண்ணீரை ஊற்றுகிறான். அந்த மந்திரம் என்ன சொல்லுது என்று தமிழில் அர்த்தம் பண்ணிப்பார்த்தால், "புண்ணியம் செய்திருந்தால் மோட்சத்துக்குப் போ; பாவம் செய்திருந் தால் நரகத்திற்குப் போ'' என்கிறது. அதை அடையத் தான் அவன் போகிறானே- இவன் ஏன் அதைச் சொல்ல

வேண்டும்? அந்த மந்திரம் சொல்வதினால் "செத்தவன் மோட்சத்திற்குப் போகிறான்" என்று மக்கள் நினைத்துக் கொள்கிறார்கள்.

இந்தப் பொய்ப்பொருளை சம்பாதிக்கப் படுகிற பாடு கொஞ்சநஞ்சமா? அடேயப்பா! கட்டிடம், கட்டிடம் என்று கட்டுகிறான். அந்தக் கட்டிடத்தில் குடி போகிறதுக்கு முன்னே இவன் செத்துப் போகிறான். அல்லது குடி போனதும் செத்துப் போகிறான். எப்படியும் அந்தக் கட்டிடத்துக்கு முன்னே இவன் போய்விடுகிறான். பொய்ப்பொருளைச் சம்பாதிக்கப் பொய்யிற்கே காலமெல்லாம் பாடுபட்டுப் பொய்யாகவே போகிறான்.

வேதத்தைப் பல தரம் ஓதினேன் என்கிறானே. அதற்கு மெய் அர்த்தம் தெரியுமா? அர்த்தம் தெரிந்தா ஓதுகிறான்? இல்லை. வேத முதலில் வரும், 'அலிபுலாம் மீம் தாலிக்கல் கித்தாபு" என்பதற்கு இந்தக் கித்தாபு என்று அர்த்தம் பண்ணுகிறார்களே - அப்படிச் சொன்னால் இறைவனுகிய ரப்புக்கு மாற்றக்காரன் ஆகிவிடுவோமே என்ற அச்ச மில்லாமல் சொல்லுகிறார்களே - ரப்புக்கு மாற்றக்காரன் யார்? அஜாசீல்தானே. அலீப் லாம் மீம் என்ற அந்த மூன்று அட்சரம், அளப்பதற்கு அரிய பெரிய கித்தாபாக அல்லவா இருக்கிறது. வேதமந்திரங்களைச் சும்மா வாயிலே சொன்னால் மெய்ப்பொருள் வருமென்றால் பொய்ப் பொருளும் வாயில் உருப்போட்டால் வரணுமே. வருதா? இல்லையே. அதுவே வராத போது அழியாத மெய்யா வரும்? ஒருக்காலும் வராது -

மார்க்கம் என்று சொல்லுகிறார்களே! எல்லோரும் கசப்பு வந்துதானே சாகிறார்கள். கசப்பு வருவதா

மார்க்கம்? ஆயிரம் பேர் செத்தாலும் முழுக்கோடு தானே சாகிறார்கள் – செத்த பிறகு முழுக்கானால் இவனுக்கு யார் முழுக்காட்டுவது? தனக்குத் தானே பரிசுத்தத்தில் ஆகுவது அல்லவோ மார்க்கம்!

இங்கே அறுபத்தேழு ஜாதிகள் இருக்கின்றனவே-இங்கும் மவுத் ஆகிறார்களே – அந்த னரக அடையாளம் யாராவது ஒருவருக்காகிலும் இருக்கா, காட்டு - மகாப் பரிசுத்தமாக அல்லவா பிரயாண மாகிறார்கள் – மவுத்து ஆனபின் எங்கேயாவது தேகத்தில் வியர்வை கொட்டுவது உண்டா? இல்லை. ஆனால் இங்கே மவுத்தானவர்களின் மேனியில் வியர்வை கொட்டிக்கொண்டே இருக்கிறதே. முகம் முன்னைவிட மகிழ்ச்சிக்ர இளமை பூக்க ஆகிவிடுகிறதே. றாற்பது னாள் ஆனாலும் தீர்த்தம் கொடுத்தால் மொடுக் மொடுக் கென்று குடிக்க வருகிறதே. எங்கேயாவது இப்படி னடக்குமா? இதோ இந்த ஒரு எல்லையில் அந்தப் பரிசுத்த அடையாளங்கள் பிரத்தியக்ஷத்தில் பல பேருக்கும் காண னிகழ்கிறதே – ஏன் இது மக்களுக்குப் படவில்லை –

மேலும் அப்படிக் கசப்பு வெளியாவது இயற்கை என்கிறானே. னஜீசாகச் சாவது இயற்கை யென்றால் பிறகு தொழுகை முதலியன எதற்கு? பலன் இருக்கணுமே தொழுகைக்கு, னஜீசா பலன்? எல்லாம் இப்படியே நாறிச் சாகிறான்ங. அவன் படிச்ச படிப்பு அப்படி. "னமக்கு மட்டுந்நான் சொர்க்கம். மற்றைய அவ்வளவு பேரும் காபர்கள்தான். ஆகவே தொழு, தொழு" என்கிறான். அப்படிச்செய்து கடைசியில் இஸ்ராயில் கை

யில் எல்லோரும் சிக்கி எக்கோடி காலத்துக்கும் மீளா அவஸ்தையில் மாட்டிக் கொள்ளும்படி செய்துவிடுகிறான்.

ணும் கூடிய மட்டும் அவர்களுக்குச் சொன்னோம். அறுபது வருஷம் சொல்லிப் பார்த்துவிட்டு இப்போது அவர்களை விட்டு ணும் இப்படித் திரும்பி விட்டோம். எம்மைச் சேர்ந்த மெய்வழி மக்கள் அவ்வளவு பேரையும் மறலி கைதீண்டா மெய் ஜாதியில், மாற்றி விட்டோம். கவுமுகளாகிய எம் மக்களை எங்கே கொண்டு போய்த் தள்ளினாலும், அவர்கள் எங்கே மவுத்தானாலும் மூமீன்களே. இது இன்றைக்கு இங்கே பிரத்தியட்சத்தில் இருக்கும் னடைமுறை.

இன்றைக்குப் பல மதத்திலுமுள்ள அறுபத்தேழு ஜாதிகள் ஆண் பெண் எல்லோருமே, இங்கே தன்னை யறிந்த ஒரே ஜாதியாக ஒரே குலமாக ஒரே மதமாக இருக்கிறார்களே, இது எவ்வளவு பெரிய ஆச்சரியம்!

னுயகம் அவர்களின் பெயரை மட்டும் வைத்துக் கொண்டால் அவர்கள் செயலா வந்துவிடும்? அவர்கள் கொண்டுவந்த திருக் குர்ஆனில் உள்ள 6666 ஆயத்துக்களில், 'தொழுகை' என்று இவர்கள் எடுத்து வைத்துக் கொண்டுள்ளார்களே, அது எங்கே சொல்லப் பெற்றிருக்கிறது? இல்லையே –

ஆகாத அவிழ்தத்தை - எத்தனை ஆயிரம் பேர் எடுத்து வைத்துக் கூடிக் குடித்தாலும் அது உடம்புக்கு ஆகுமா? கோவணத்தை என்ன தான் இழுத்து இழுத்துக் கட்டினாலும் அது வேட்டியாகுமா? அரைக்கைச் சட்டையை எவ்வளவு வலுக் கொண்டு இழுத்தாலும் அது

முழுக்கைச் சட்டையாகி விடுமா? வணக்கம், தொழுகை என்று னீயாக எடுத்து வைத்துக்கொண்டு எந்நக் கரணத்தை எப்படித்தான் அடித்தாலும், என்னென்ன விதமாகவெல்லாம் ஓதினுலும் அந்நக் கற்பாந்ந கோடி கால னித்திய வாழ்க்கை வந்நுவிடுமா? அப் பரமபத வாழ்வு அவ்வளவு லேசில் வரக்கூடியதா? எதை எதை எப்படிச் செய்யவேண்டுமோ அப்படி அப்படிச் செய் தால் தானே பலன் வரும். வழி விட்டு வழிச் சென்ருல் னேர் மாற்றமாக அல்லவா போய்விடும் - பாம்புக்கு விஷம் பல்லிலே, தேளுக்கு விஷம் கொடுக்கிலே. பாம் பினுடைய பல்லுக்குத் தப்ப வேண்டுமானுல் அதன் தலையை முதலில் அமுக்க வேண்டும். தேளினுடைய கொடுக்குக்குத் தப்பவேண்டுமானுல் அதன் வாலை முதலில் அமுக்க வேண்டும். அப்படிச் செய்யாமல் தேளினுடைய தலையையும், பாம்பினுடைய வாலையும் முதலில் அமுக்கினுல் என்ன கிடைக்கும்? சாவுதான் வரும். உன் எஜமானன் ஒரு வேலையைக் கொடுத் திருக்க னீ வேறே வேலையைச் செய்தால் அவனுக்கு உன்மீது விருப்பமா வரும்? இந்நத் தொழுகை யென்ற ஒப்பனையால் அந்நனித்திய வாழ்வு கைவர வாகிவிடுமா? ஒருனளும் ஆகாது - கடைசியில் னஜீஸாகிச் சாகும் உன் மார்க்கத்தையா னுயகம் கொண்டு வந்நார்கள். இல்லை. னுயகம் அவர்களுடைய குலத்தையே கருவறுத்த வன்ஙள்- இப்படி என்னென்ன கோலத்தையோ உண்டாக்கி விட்டான்ஙள்- ஆகவே அதைப் பின்பற்றி னடந்நவர்களுக்கு என்ன கிடைக்கும்? ஓயாத னரக னெருப்பு ஒத்தணம்தான்அங்ஙு கிடைக்கும்.

முழுக்கில்லாமல் அடக்கம் ஆகிறவர்கள் இந்த மெய்வழிச் சபையிலன்றி இவ் விரிவுலகத்தில் வேறெங்கே இருக்கிறார்கள்? இல்லை. ஆயிரக் கணக்கான மைல்களுக்கு அப்பால் இருந்தாலும், ஏழு கடல்களுக்கு அப்பால் யாரும் காணாத இடத்தில் இருந்தாலும், ஆணாயிருந்தாலும் பெண்ணாயிருந்தாலும், படித்தவராயிருந்தாலும் படிக்காதவராயிருந்தாலும் எமது இந்தப் பரிசுத்தம் எமது பிள்ளைகளுக்குக் கட்டாயம் போய்ச் சேரும். அப்படி இருக்க, "னமக்கு அரபிகூடத் தெரியவில்லை – தமிழ் கூட னிறையப் படிக்க வில்லை" என்று இவன்ங ஓலமிட்டுக் கத்தி ஆவதென்ன? சந்திரனைச் சகந்திரன் என்று சொன்னால் ஒளி குறைந்து விடுமா? பணம் என்பதைக் கூட சரியாகச் சொல்ல வரவில்லை – பகணம் என்கிறார்கள் – அவர்களிடத்தில் பணம் எங்கே இருக்கும் என்று ஒரு கோடீசுவரனைப்பார்த்துப் பரிகாசம் செய்கிறான். ஆனால் இவனிடத்திலோ – ஒரு வேளைச் சோற்றுக்குப் போடும் உப்புக்குக் கூடக் காசு இல்லையே. பணத்தைப் பகணம் என்று சொல்லுகிறவர்களிடத்திலோ வைர மலையாய் ரத்தின மலையாய்க் குவிந்து இருக்கிறதே – பொறாமைப் படலம் படிந்த கண்களுக்கா அது தெரியப் போகிறது –

10.

யுத்தம் என்பது தலைவன் என்றிருக்கிற ஒரே ஒருவன் வயிற்றை வளர்ப்பதற்காக ஒரு தேசத்தையே கொலை கொடுப்பதாகும். ஒரு தெருவிலுள்ள பிச்சைக்காரர்கள் இன்னொரு தெருப் பிச்சைக்காரர்களோடு அடித்துக் கொள்வார்களே அது போலவும் – ஒரு தெரு

9

ஞய் இன்னொரு தெருவுக்கு வரக்கூடாதென்று அடுத்தத் தெருநாய்கள் அதன்மேல் பாய்ந்து கடிப்பது போலவும், தேசத்துக்குத் தேசம் யுத்தம் பண்ணுகிறது - அதற்காக னல்ல வயசு பிள்ளைகளைக் கொண்டு போய்க் காவு கொடுக்கிறார்கள் - இந்நக் கொலைக்குப் பெயர் தேசபக்தியாம். இதனால் வீர சொர்க்கமா வரும்? ஒருவனுடைய எச்சில் மதிப்புக்காக - தான் னீடித்துப் பதவியிலிருக்க, ஆசைப்படும் வெறிக்காக ஒரு தேசமே பலியாகிறது - என்று எவர் மண்டையிலாவது படுகிறதா? கேவலம் கடுதாசிக்கும் மட்டமாகத் தன் உடலை னினைத்து - தான் இந்த மனித உடல் எடுத்து வந்த உன்னதம் தெரியாமல் போய் விழுந்து சாகிறான். பிச்சைக்காரன்களுடைய சண்டையும், அரசுகளிடையே மூளும் சண்டையும் இரண்டும் அடிப்படையிலே வயிற்றுப்பாட்டுச் சண்டைதான். (சபையில் மகிழ்ச்சி) இதைச் சொன்னதும் உங்களுக்குச் சிரிப்புதான் வருகிறது. இப்படிச் சிரிப்பதால் சொன்ன சொல்லினுடைய கனமே மாறிவிடும் -

ஒரு பாட்டாளி வியர்வை சிந்தி ஒரு ரூபாய் சம்பாதித்தாலும் தன் குடும்பத்துக்கு அது முழுப்பயன் தருவதற்காகத்தான் செலவு செய்வான். ஒரு சூதாடி ஒரே ஞளில் பத்தாயிர ரூபாய் சம்பாதித்தாலும் எப்படிப் போகிறது என்று பார்! அனுயாசமாக வந்தது அனுயாசமாக அழிவிலே போய்விடும் - லேசாக னினைத்துக் கேட்கிற வார்த்தையும் அப்படித்தான் - ஆகவே எம்முடைய வார்த்தைகளைச் சும்மா சிரித்துக்கொண்டு கேட்டால் உங்கள் னினைவில் போய் ஒட்டாது - அச்

சத்தோடு கேட்டால் தான் அதன் ஆழமும் பொலிவும் தெரியும். அது மட்டுமல்ல, செத்த வீட்டிலே வெற்றிலே போட்டுக்கொண்டு சிரித்துக் கொண்டிருந்நால் பார்க்கிறவர்களுக்கு எப்படி இருக்குமோ அப்படி உங்களைப் பார்க்கிறவர்களுக்கும் தோன்றும் - உஜார் -

ஞம் பிரளையத்தைப் பற்றிப் பேசும்போது, னீ அதில் சிக்கிக்கொண்டால் எவ்வளவு அவஸ்தையாக இருக்கும் என்ற கவலே தோயக் கேட்கவேண்டும். ஞம் எதைப்பற்றிப் பேசினலும் அது னீ இங்கு வந்ந பிறகு தெரிந்துகொண்ட தாகத்தானே இருக்கும்? "இங்கு வராதிருந்நால் இது னமக்குத் தெரிந்திருக்குமா, இங்கு இதைத் தெரிந்து கொண்டதற்கு ஞம் என்ன கைம்மாறு· செய்வோம்" என்ற கனங்னொண்ட னினேவோடு எமது வார்த்தைகளேக் கேட்கவேண்டும். சில சமயங்ஙளில் ஞம் அதிசயமான வார்த்தையைப் பேசும்போது அசையாமல் குறத்தனமாக சிலர் உட்கார்ந் திருப்பதைப் பார்க்கிறேம். ஒரு கோர்ட்டிலே ஒரு ஜட்ஜுக்கு முன்னல் ஒரு வக்கீல் பேசும்போது இன்னொரு வக்கீல் தன் னினேவு ஜட்ஜுக்குத் தெரியக் கூடாதென்று ஆடாமல் அசையாமல் வஞ்ஞகமாக இருப்பது சரிதான். ஆனல் எம் முன்னல் ஒருவன் அப்படி இருந்நால், அவனுக்கு ஞம் பேசுவது புரியவில்லே என்று னினேப்போம் - அல்லது அவன் ஒரு செவிடு என்று னினேப்போம்.

இன்னும் சிலர் தாங்கள் பிறந்ந சாதிப்பெயரைச் சொல்ல வெட்கப்படுகிருர்கள் - ஆகவே அவர்கள் அந்நச் சாதியின் மூல புருஷருக்கு விரோதி, துரோகி என்ருகிறது. தங்கள் குலத்து ஆதித் தந்நையின் பெய

ரைச் சொல்லவா வெட்கம் – மொட்டையாகச் சொன்னால் னம்மைச் சாதி கெட்டவன் என்று மட்டமாக னினைப் பார்களே என்று கூடத் தெரியவில்லை – அவ்வளவு அறிவு கூட இல்லை. யாரோ ஒரு குபாடன் சாதிப் பெயர் சொல்வதை மட்டமாகச் சொன்னான் – அவன் சொன்னது இப்படி விஷங்கட்டி ஏறுவது போல் ஏறிப் பரவிவிட்ட தே! அதனால் தன் தாய் தகப்பனுக்கும் அபகீர்த்தி வந்து விடுமே என்று கூடப் படவில்லை – தன் குலத்துக்குரிய தலையாகிய கிரீடத்தை எடுத்துப்போட்டார்களே என்ற மெய்யை னும் எடுத்துச் சொன்னால் அவர்கள் அறிவில் எளிதாக ஏறுகிறதா? இல்லை – கட்டாயப்படுத்தி ஏற்ற வேண்டியிருக்கிறது.

எவனுக்காவது தன் உடம்பு இளைத்துப் போகட்டும் என்று இருக்குமா? தன் பணம், வீடு, சிறப்பெல்லாம் குறைந்து போகட்டுமென்று இருக்குமா? இருக்காது – அப்படியிருக்க உன் னுமத்தை மட்டும் குறைத்துக் கொள்ளுகிறாயே ஏன்? குறைபடுகிற காலம் வந்துவிட்டது, ஆகவே குறைபடுகிறார்கள் – ஒரு மயிலானது தன் தோகையிலே இரண்டு இழந்து விட்டாலே – அவலட்சண மாயிருக்குமே – தோகையே இழந்துவிட்டால் எப்படி யிருக்கும்? இங்கு கூட, அனந்நர் பட்டத்துடன் புதுப் பெயர் வாங்கிய பிறகும் சிலர் முழுப் பெயர் போடாமல் சுருக்கிப் போட்டுக்கொள்ளுகிறார்களாம் – அவர்களுக்கு னும் ஒரு யோசனை சொல்லுகிறோம் – இந்நப் பெயர்களுக் கெல்லாம் முன்னால் சுருக்கமாக ஒரு பெயர் இருந்நதே, அதாவது "பிரசவம்" என்று, அதையே வைத்துக் கொள்ளலாமே!

ஒருவன் தன் சொந்த கண்ணுக்கும் வாய்க்கும், வாய்க்கும் கைக்குமுள்ள வித்தியாசத்தையே தீர்க்க முடியவில்லையே, மனிதனுக்கு மனிதன் உள்ள வித்தியாசத்தையா தீர்க்கப் போகிறுன்? சாதிப் பட்டங்களை வெட்டி எறிந்து விடுவதால் மட்டும் ஒற்றுமை வந்து விடுமா? மனிதன் எந்த விவகாரத்தையும் கூர்மையாகப் பார்க்கத் தெரியாதவன். அறிவைக் கொண்டு கூர்ந்து பார்த்தால்தான் எதுவும் அதன் னிஜவடிவில் தெரியும். இவனே கண்ணுல் பார்க்கிறேன் என்று சொல்லி முதுகை வைத்துப் பார்க்கிறுன். அறிவை வைத்துப் பார்க்கிறதாக னினைத்துக்கொண்டு தன் இச்சையாகிய வெறியை வைத்துப் பார்த்து னடக்கிறுன் - அதனுல் தான் ஒற்றுமையை வளர்க்கப் போகிறேனென்று சொல்லி வேற்றுமையை வளர்க்கிறுன். ஒரு ஏழை கையிலிருந்நால் ரத்தினம் புளியங்கொட்டை யாகி விடுமா? ஆகாது - அசலான ரத்தினம் யார் கையிலிருந்நாலும் ரத்தினம்தான் - அதேபோல ஒரு புளியங் கொட்டையை அரசு அமல்கொண்டு அதிகாரம்செய்தால் ரத்தினமாகிவிடாது. மதத்தினுடைய அகமிய லட்சணம் தெரியாமல் எத்தனை உலக அதிகாரம் கொண்டு அமல் பண்ணி ஒன்று சேர்க்க னினைத்தாலும் மதங்களை ஒன்று சேர்க்க முடியாது. ஒரு அரசனுகவே இருந்நாலும் அவனுக்குத் தான் பிறந்த மதத்தின் லக்ஷணம் தெரியாவிட்டால், தன் ஈனமானம் தெரியாது. ஒழுங்காகத் திருமண் சாத்தவும், ஒழுங்காக விபூதி பூசவும் தெரியாது. இந்தப் பொய்ச் செயல்களைக்கூட ஒழுங்காகச் செய்வதற்கு வராதவனு ஞானத்தை வைத்து ஆளமுடியும்? மதந்தானே ஞானம்? வயிறு பசித்தால் உணவு தேடு

கிறாயே, ஏன்? நோய் வந்தால் மருந்து தேடுகிறாயே, ஏன்? அப்படியிருக்க மதம் மட்டும் வேண்டாமா? மதம் இல்லா விட்டால் நற்குணம் கொஞ்சமும் ஒட்டாது. நற் குணத்தை, அதாவது இதத்தை அதமாக மாற்றுகிற தீயனாகத்தான் அவன் இருப்பான். அவனால் உல கில் அடிதடிதான் அதிகமாகுமே ஒழிய சமத்துவமோ சமரசமோ பரவாது.

11.

ஒரு நாள் ஒருவர் ஒரு அலங்காரப் பந்தலிட்ட அழகிய மேடை மீது நின்றுகொண்டு – ஒலி பெருக்கியை வைத்துக்கொண்டு - பிரும்மாண்டமான கூட்டத்துக் கிடையே பேசிக்கொண்டிருக்கிறார். அவருடைய எடுப் பான தோற்றமும் மிடுக்கான உடையும், மிகவும் உயர்ந்த பேச்சு நடையும், அவர் பெரிய மனிதர் என் பதைக் காட்டுகின்றன. ஜனங்கள் ஒற்றுமையோடும் ஒழுங்கோடும் வாழவேண்டும் என்று பேசுகிறார். அவரு டைய பேச்சை ஆச்சரியத்தோடும் அதிசயத்தோடும் எல்லோரும் கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். “இப்படி யாராலும் பேச முடியாது, எவ்வளவு அழகாகப் பேசு கிறார் பார்த்தீர்களா” என்று ஒருவருக்கொருவர் வியந்து பேசிக்கொள்ளுகிறார்கள். திடீரென்று எங்கிருந்தோ ஒரு முரடன் ஓடிவந்து மேடை மீது பாய்ந்து ஏறி அவர் சட்டையைப் பிடித்து இழுத்துத் தள்ளி சோட்டால் சடார், சடார் என்று சாடுகிறான். அவரோ அவனைக் கண்டு கழி, கழி என்று கழிகிறார். ஜனங்கள் – “ஏன் இப்படி இந்தப் பெரிய மனிதரை அடிக்கிறீர்கள்” என்று

அந்த முரடனைக் கேட்கிறார்கள். "இவனா பெரிய மனிதன்? இதோ பாருங்கள், இவன் எவ்வளவு அயோக்கியன், அழிம்பன், அசிங்கியம் பிடித்தவன் என்பதற்கு இதோ சாட்சி அடையாளம் பாருங்கள்" என்று ஒரு சீட்டை எடுத்துக் காட்டுகிறான். அந்தச் சீட்டைப் பார்த்ததும் தான் ஜனங்களுக்குப் புத்தி வருகிறது. எல்லோரும் அந்த முரடன் பக்கம் சேர்ந்துகொண்டு அந்தப் பெரிய மனுஷனை வேஷக்காரன், மோசக்காரன், சண்டாளன், சனியன் - தூ, தூ என்று பழிக்கிறார்கள். "தானே திருந்த வேண்டிய இவன் நம்மைத் திருத்த வந்து விட்டான் - சமரசம் வேறே பேச வந்து விட்டான்" என்று வசைமாரி பொழிகிறார்கள். பாவம். அந்தப் பெரிய மனுஷன் கதி கடைசியில் இப்படி யாச்சுது. இப்படி யான போலிப் பெரிய மனுஷன்களின் சாயம் வெளுக்க வரும் முரடன்தான் யமன்; இப்ப இது யார் கதை என்று தெரிகிறதா?

12.

உன் உடம்பிலிருந்து சிரசு போனால் என்ன ஆகும்? கெட்டு நாறிப் போய்விடும். ஆகவே இந்த உடலுக்கு சிரசு எவ்வளவு பிரதானமானது? உனது உடலில் உயிர் இல்லாவிட்டால் என்ன ஆகும்? உடல ழிந்து நாசமாகும். ஆகவே உடலுக்கு உயிர் எவ்வளவு பிரதானமானது? இதெல்லாம் உனக்கு முக்கியமானது, பிரதானமானது என்று நினைக்கிறாயே. அவற்றை யெல்லாம் விட முக்கியமானது ஒன்று இருக்கிறது என்ற நினைப்பு உனக்கு வருமா? வராது - வரவில்லை.

அந்த அதி முக்கியமானது ஞம்தான். உனது உயிருடலுக்குச் சிரசு ஞம்தான்.

இன்னும், உலகத்தில் வைத்து மிக்க மலிவான பொருள் ஞம்தான். இது எக்கோடி காலத்திலும் இப்பூமிக்கு வராத மகா மகா அருமைப் பொருளாக இருந்தும் - ஒரு மலிவான பொருள்போல் மனுக்குலத்தின் தலைக்கு இதுனுள் கிட்டுவதற்குக் காரணம், இது எல்லோருக்கும் வேண்டிய - மிக மிக அத்யாவசியமாய் வேண்டிய - இது இல்லாவிட்டால் னித்திய னரகப் பிராப்தி கிட்டிவிடுமே, அத்தகைய ஒரு பொருளாக - இவன் மீட்புக்குக் கட்டாயம் வேண்டிய பொருளாக இருப்பதால்தான், இப்படி மலிவான பொருளாக வந்திருக்கிறது.

ஜீவாத்மா, பரமாத்மா என்று பேசுகிருயே. அவை இன்னது இன்னதென்று தெரியுமா? தெரியாது. ஜீவாத்மா என்பது னீ. பரமாத்மா என்பது ஞம். னீ பெண். ஞம் ஆண். எமது உரிமைப் பொருளாகிய ஜீவாத்மாவை ரட்சிப்பது பரமாத்மாவாகிய எமது கடமையாகிவிடுகிறது.

13.

பகல் 3 மணிக்கு, சபாமண்டபத்திற்கு விஜயம்செய்த போது அங்கு ஒருவருமில்லாமையால் ஆண்டவர்கள் இத்திரு வசனத்தை எழுதி முடித்தார்கள்: -

“ஏ மனிதனே! னீ தேவ தேவேசன் முதலாய அழியா வரத்தண்ணலனைவரும் அளவிலாக் காலம் அழி

யாப் புகழ் புகழும் அப் புகழுக்குப் பிறந்நவன். ஞூம் அதை னிரூபிக்க வந்நிருக்கிறோம்.

னீ அதை விட்டுவிட்டு புழுக்களெல்லாம் சேர்ந்நு ஒரு பெரும் புழுவைப் புகழுவதைப் போல், இவ் வழி ஞவினர் அனைவரும் புகழ்ந்ந உன்பாடு இறுதியில் என்னே? இவ் வழியுலகே அழியும். உன்னைப் புகழ்ந்ந வர் அதற்கு முன் அழிவார். அவர்கள் உன்னைப் புகழ்ந்நது, அவர்களுக்கு முன் அழியும். மிருகங்ஙள் கூடி ஓர் மிருகத்தை உயர்த்திக் காட்டுகின்றன - இப்ப டியே தருக்கினம் முதலாயதும் உளது - உ்ஜார்.

14.

ஊர்வனம் பறவையினத்தை என்னவென்று னினைக்கும்? பறவையினம் ஊர்வனத்தை என்னவென்று னினைக்கும்? வேறு வேறு இனம் என்று னினைக்கும். அதேபோல்மனித இனத்தைத்தேவர்கள் என்னவென்று னினைக்கவேண்டும்? உங்ஙளுக்கு ஏன் இந்நத் தோற்ற வித்தியாசத்தின் உணர்ச்சி ஏற்படுவதில்லை? ஞல்வகை யோனி, எழுவகைத் தோற்றம் என்று சும்மாவா எடுத்து வைத்தார்கள்? உன்னை ஏற்றி வைத்திருக்கும் பரிசுத்த தேவ னிலையின் உன்னதத்தை உனக்கு ஞம் அறிவிக்கவே அது எடுத்து வைக்கப்பெற்றது - ஆனால், னீ அதை அறவே மறந்நு, அண்ணன் கழுதை, மாமன் கழுதை, சித்தப்பன் கழுதை என்றெல்லாம் பழைய னரப் பிறப்புப் புழுதியிலேயே புரண்டு உறவாடுகிறாயே. உன் தோற்றம் தேவனாக மாறியும் பழைய அவலப் பிறப்பின் பிடியை னீ ஏன் விடவில்லை? னரன் என்ற தோற்றத்திலிருந்து

அமரன் என்ற தோற்றத்தில் மெய்யாகவே உன்னை நும் ஏற்றி வைத்துள்ளோம். ஆகவே இனியாவது நீ அமரன் என்ற சத்திய உணர்வில் சதா இருக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் இறுதியில் உன் கதி என்னவோ? உன் கை கொள்ளாத பெரிய முதல் ஒன்றை நும் தந்திருக்க, அதை நீ ஒரு விரல் நுனியில் தொட்டுப் பார்த்துவிட்டுப் போவதாகவே முடியும் - உஜார்.

உனக்கு ஏன் இந்த மட்டமான புத்தி வருது தெரியுமா? இத் தேவப் பிறப்பைப் பெறுவதற்கு எம்மைப் போல் நீ உடல் பொருள் ஆவி அனைத்தையும் தத்தம் செய்து பெறவில்லை. பெறுவதற்கு முன்னும் அப்படிச் செய்யவில்லை. பெற்ற பிறகும் செய்யவில்லை. அந்தப் பாடுபட்டுப் பெற்றிருந்நால் உனக்கும் நீபெற்றது வேறு புதிய பரிசுத்தப் பிறவி என்ற எண்ணம் நிச்சயமாக வந்திருக்கும் - ஏமாற்றுப் பருவராட்டால் எதுவும் வரவே வராது. சத்திய ஒட்டுதலால்தான் இந்த மெய் வந்து கிட்டும். எம னெல்லையில் நீ எப்போதும் நின்று கொண்டிருக்கிருய் என்பது ஏன் உன் நினைவில் இருப்பதில்லை? உன் நினைவை மரணபயச் சவுக்குக் கொண்டு மாறி மாறி அடித்தால்தான் அது, தான் பெற்றுள்ள தேவப் பிறப்பாகிய மறுபிறப்பு உணர்வில் நிலையாக ஒட்டி நிற்கும்.

எம் மானத்தைக் காக்கவும், நும் ஏற்றுக் கொண்டுள்ள பெருஞ்செயலின் விஸ்தரிப்புக்காகவும், எம் பிள்ளை என்ற முகதாட்சண்யத்திற்காகவும், ஒருவரையும் எம வாதையில் அகப்படாமல் எம் ஓங்கிய தவ வல்லமை

யினுல் இரட்சித்து வருகிறேம். அப்படியில்லாமல் இவன் யோக்கியதையாலா அந்நப் பரிசுத்த எல்லேக்குப் போக முடிந்நது? இல்லே. அதற்குப் பாடுபடாமலேயே அந்ந உன்னதத்திற்கு ஆக்கப்பெறுகீறீர்கள் என்ற எண்ண மாவது உங்கள் னினேவில் மாருமல் இருக்க வேண்டும். ஏனெனில் மன்னிப்பு வாசல் அடைக்கும் காலம் அதி சமீபத்தில் வந்நுவிட்டது. அத் தருணத்திலிருந்நு எங்கும் கத்தி முனேயில் னீதித் தீர்ப்பு னடைபெறும் – உஜார்.

எழுவகைத் தோற்றமே இன்னதென்று தெரியாத உலகத்தில் ஞம் வந்நோம். ஏழ்பிறப்பு என்ருல் இன்னது இன்ன தென்பதை எடுத்துக் காட்டினேம். மனிதனுடைய ஏழு பருவங்கள் தாம் ஏழ்பிறப்பு என்று ஞம் அறிவிக்காமற் போயிருந்நால் இந்ந உலகம் எந்நக் காலத்திலாவது அதை அறிந்நு கொள்ள முடியுமா? முடியாது - ஒரு பருவம் முடிந்நு அதன் சுவடே இல்லா மல் அறவே மாறி 'இன்னெரு பருவம் அதற்கும் மேம் பட்டதாக விளேகிறது என்பதை ஞம் அறிவிக்குமுன் எப்பேர்க்கொத்த படிப்பாளிக்காவது விளங்கிற்ரு?' முன் பிறப்பில் ஞயாக இருந்நு செத்து, இன்னெரு பிறப் பில் கழுதையாகப் பிறப்பது என்றல்லவா அனேவரும் னினேத்துக்கொண்டிருக்கிருர்கள். செத்துப் பிறப்ப தென்று உவமைக்காகத்தான் சொல்லப்பட்டது. செத்து மறுபடி பிறந்நாலும் எட்ட முடியாத அதிசய விளேவு களாக, உடலும் அறிவும் அதனதன் இயல்பிலிருந்நு முற்றிலும் வேருக மாற்றப் பெறுகிறது. தின்பண்டத் தையே பணத்தைக் காட்டிலும் பெரிய சொத்தாக னி னினேக்கும் குழந்நைப் பருவமும், வீடு வாசல் னில

புலனைச் சொத்தாக னினைக்கும் மனிதப் பருவமும் ஒன்ரு? இல்லை - அந்நப் பருவத்தில் தனக்கு னன்மை, உன்னதம் தேடிக்கொள்ள வேண்டும் என்கிற அறிவு வருதே, அந்த அறிவு சாமானிய அறிவா? மற்றைய ஜீவராசிகளுக்கு அத்தகைய அறிவு உண்டா? இல்லை. ஆகையால் உன் உன்னத தோற்றத்தையும் பிறப்பையும் கவனத்தோடே சதா எண்ண வேண்டும்.

னீண்டகால னித்திய வித்தினை இவனுக்குள்ளே வைத்துப் படைத்ததினுல்தான் இவனுக்கு இவ்வளவு அளவற்ற ஆசை உண்டாகிறது. அதைக்கொண்டு னித்திய பேரின்ப வாழ்வைச் சம்பாதிப்பதற்குப் பதிலாக - காலமெல்லாம் பாடுபட்டு அனித்தியமாகிய மாட மாளிகை, மதிப்பு, உலகப்புகழ் இவற்றையே சம்பாதிக்கிருன். கடைசியில் மறலி கையில் சிக்கி சொரணை கெட்டுத்திக்கு முக்காடி உறுமிச் சாகிருன். ஆயுளெல்லாம் சுகபோகமாக வாழப் பாடுபட்டுத் தேடியவற்றில் ஏதாவதொன்றைக் கொண்டு இந்தத் துகடத்தைக் கிஞ்ஞித்தாகிலும் மாற்ற முடிந்நதா? முடியவில்லை. ஆகவே இவன் பாடுபட்டுத் தேடிப் பெற்றது னிசமான சுகபோகமா? இல்லை - னீங்கா னரக அவஸ்த்தையே.

ஒருவனுக்கு னீ கொடுத்த வேலையைச் சரியாகச் செய்யவில்லையென்ருல் உனக்கு அவன்மேல் எவ்வளவு கோபம் வரும்? உனக்காக இவ்வளவு னுண்ணிய கருவிகளாகிய அங்கத்துலங்களைக் கொடுத்து, அவை ஒவ்வொன்றிற்கும் தக்க அண்டங்களையும் படைத்திருக்க, அவையாவற்றையும் னீ வீணுக்கினுல், படைத்த இறைவனுக்கு உன்மேல் கோபம் வராமலா இருக்கும்? கட்டாயம்

வரும். உன்னைக்கேட்டா னீதித்தீர்ப்பு னடக்கப் போகிறது? இல்லை. அந்நத்தீர்ப்பு எல்லையில் உன்னைக் கேளாமலே, உன் கட்டுக் கடங்காமலே, உன் வாய் பேசும் - உன் கண் பேசும் - உன் ஒவ்வொரு அங்கமும் அதனதன் குற்றப் பத்திரிகையை அதுஅதுவாகவே வாசிக்கும் - அப்பேர்க்கொத்த யதார்த்த மெய் னீதி மன்றத்திலல்லவா அந்ந புக இறுதித் தீர்ப்பு னடக்கப்போகிறது - இனி வரப்போவது னித்திய உலகம். அங்கே இரண்டில் ஒன்றுதான் கிடைக்கும். அதாவது னீடிய பரமபத பேரின்ப வாழ்வு, அல்லது னீங்காத கொடிய னெருப்பு ஒத்தணமாகிய னரகம்.

உன்னைப் போலவே மிருகங்களுக்கும் பல், னவு, தொண்டை, எச்சில் முதலியன படைத்திருக்கிறன். ஆனல் அவை உன்னைப்போல் அறுசுவையை ருசிக்க முடியுமா? அவைகளால் உன்னைப்போல் பேசமுடியுமா? இந்ந அரிய முதலானது மனிதனைத் தவிர வேறு எந்நப் படைப்புக்கும் கொடுக்கப் பெறவில்லையே. ஆகையால் தான் இவனுக்கு மட்டும் னீதித்தீர்ப்பு வருகிறது. இவன் பிறருக்குப் புத்தி சொல்லப் போகிறன், தீர்ப்பு அளிக்கிறன். ஆனல், இவன் தலையிலே இருக்கிற னித்திய னன்மையை இவன் உணர்வதில்லை. பொறுமையே உருவாகிய காருண்யக் கடலாகிய இறைவன், னீதியெனும் பொருளான மனுக்குலம் தனக்குரிய னித்தியத்தைக் கைபோடுவதற்கென்றே தீர்க்கத்தரிசிமார்களையும் அனுப்புகிறன் - ஆனல் அவர்களை இவன் கவனிப்பதில்லை. அதற்குப் பின்னும் கோபம் வராமல் காலகாலம் பொறுத்திருந்நு பார்த்துவிட்டு இறுதியில் இவனுக்குப்

பயம் உண்டாகும்பொருட்டுத் தண்ணீரில் நெருப்பைக் கலந்து பூமியில் உண்டாக்கினன். இதையும் இந்த வெறியன் திடீர்ச் செல்வம் என்கிறானே? இனி இவனுக்கு எக்கோடி காலத்துக்காவது நன்மை தீமை பற்றிய உணர்வு வருமா? ஆகவே இந்தத் திருத்த முடியாத உலகை அழித்துக் கொளுத்தவேண்டியதுதான் என்ற முடிவுக்கு வந்துவிட்டான். இந்தத் தீத்தண்ணீரைப் பற்றி வேறொருவர் அறிவுக்கும் படாததை இந்தக் கானகத்தில் வந்திருக்கிற ஒருவர் மட்டும் சொல்கின்றார்களே என்கிற ஆச்சரியம் வரவேண்டாமா? முன்னே வந்த செம்மல்கள் தங்களின் நுண்ணிய மதியினால் பேசியிருக்கும் திருவசனங்களில் ஒன்றுகூட எடுக்காமல், அதற்கும் மேம்பாடான தலைகொள்ளாத திருவசனங்கள் உதயமாகிவருகின்ற இந்த எல்லை எதுவாயிருக்கும்?

இவன், தனக்கு நற்கதி தேடிக்கொள்வது பற்றி அடுத்த பிறவியில் பார்த்துக் கொள்ளலாம் என்கிறானே – அது சரி– இந்தப் பிறவியில்தான் வேறு இவனுக்கு என்ன வேலை? இந்தப் பிறவி கேலிக்கா கொடுக்கப் பட்டது? இந்தப் பிறவியில் எவ்வளவு நாசுக்காகப் பிழைத்தாலும், ஏழு கோடிக் கோயிலே கட்டினாலும், தன்னையும் கெடுத்துப் பிறரையும் கெடுத்த பாவம்தான் அதிக அதிகமாக இவன் தலைக்கேறும். ஆனால் இவனோ தன்னைப் புண்ணியன் என்று நினைத்துக் கொண்டு பாழாகிறான்.

இவ்வளவு பிரதானமான மனித தூலத்தில் ஏதாவது ஒரு கருவி கெட்டாலும், மனிதன் என்கிற

பெயர் போய்ச் செவிடன், குருடன் என்ற னஷ்டமான பெயர் உண்டாகிவிடுகிறது. ஒரு மாடு னொண்டியானல் னொண்டி மாடு என்றுதான் சொல்லுவோம். அப்பவும் மாடு என்ற பெயர் போய்விடவில்லை. ஆனல் மனிதனுக்கோ மனிதன் என்ற பெயர் போய் னொண்டி, குருடன் என்ற அவப் பெயரே வந்துவிடுகிறது. அதே போல் சர்வத்தையும் ஆட்சிபுரிகிற கிரீடாதிபதிகளுக்கெல்லாம் கிரீடாதிபதியாகிய இறைவனுக்கு இவன் கடனுளி என்று னினைக்காவிட்டால், இவனுக்கு னிச்சயமாகத் தீர்ப்பு வந்துவிடும்- எமன் கையில் சிக்கிப் பிசாசு என்ருகி விடுவான். இவனை, இறைவன் ஒவ்வொரு பிறப்பாக ஆறு பிறப்புவரை வளர்த்து வந்தது 'தேவப் பிறப்பாகிய ஏழாவது பிறவி எடுக்க அல்லவா? அதுதான் இவன் இறைவனுக்குச் செலுத்த வேண்டிய கடன். அந்த வித்யா தத்துவக்கடனை, அமானிதக் கடனை, எந்தக்கோடி காலத்திலாவது இவனல் கட்ட முடியுமா' அது எட்டாப் பெருங் னடன். அறிவுக்கோ னினைவுக்கோ எட்டாத கடன். இந்தக் கடனை உனக்காக ஒருவர் கட்டி முடித்து, ஏழாவது பிறப்பும் தருகிருர்கள் என்ருல் அவர்கள் யாராக இருக்கவேண்டும்? இதை லேசாக னினையாதே.

15.

ஜீவப் பிரயாணமானவர்கள் இத் தூலத்தைவிட்டு னித்திய தூலத்தில் புகுந்துகொண்ட படியினல் ஒரு கோடி எண்ணம் தொலைந்து, வேருெரு எண்ணமே இல்லாமல், ஒரே னித்திய எண்ணத்தில் லயித்து விடுகிருர்கள். அவர்களுக்கு உன்போல் இனிப் பாடில்லை-

அந்நக் கரையில் வந்து சேர்ந்து கொள்வார்கள் - ஆனால் னீ காணப்போகும் இறுதிப் பிரளயக் காட்சிகளையும் அவர்கள் காணப்போவதில்லை. உனக்கோ ஒரு தேள் கொட்டினாலே அந்ந உபத்திரவத்தால் இந்நத் தெய்வ ஒட்டுதலும் னினைப்பும் மறந்துவிடுமே. இந்நத் தகையில் இருக்கிறவனுக்கு, எமன் தனது முழு வல்லபத்தோடு கூத்தாட னிற்கிற அந்நப் பிரளய னேரத்தில், சர்வத்தையும் சங்காரம் பண்ணி னிற்கிற அந்ந எல்லையில், எந்ந எண்ணம் னிற்கப் போகிறதோ என்ற கவலையால்தான் உங்களைச் சதா உஜார் படுத்திக் கொண்டிருக்கிறோம்.

எழு பிறப்பு என்றால் செத்துச் செத்துப் பிறப்பது என்றுதானே எல்லோரும் னினைக்கிறார்கள். னீயும் அப்படித்தான் னினைத்தாய். எழுவகைத் தோற்றம் இன்னது இன்னதென்று தெரியாமல் எப்படி முண்டாதாரமாகப் போச்சோ அதுபோலவே ஏழு பிறப்பு என்பதையும் செத்துச் செத்து ஏழு பிறப்பெடுப்பது என்று னினைக்கிறார்கள் - ஒரு மரம் முதலில் ஒரு பூண்டு போல் இருந்து விளைந்து செடியாகிப் பிறகு மரமாகியல்லவா கனி கொடுக்கிறது. செத்துச் செத்து உண்டாகி யிருந்நால் பலன் கொடுக்குமா? இதை னாம் உனக்கு முன்னமேயே சொல்லியிருந்நால் தெரியாதவர்கள் என்று எம்மை மட்டமாக னினைத்திருப்பாய். குழந்தைக்குப் பால் புகட்டும் பருவத்தில் கரும்பைக் கொடுக்கலாமா? கொடுக்கக் கூடாது - அதுபோல, பருவம் வரட்டுமென்று உனக்காக னாம் எவ்வளவோ காலம் இந்ந வார்த்தையைச் சுமந்து கொண்டு இருந்

நோம். னம்மை இன்னுர் என்று அறிந்து கொள்ளும் பக்குவம் உனக்கு வந்நவுடன் இனித் தட்டமாட்டாய் என்று இப்ப இதைச் சொல்லுகிரேம். 'என்ன உரங் கொண்டு என்ன திட்டத்துடன் மெய்யை விளக்கு கிரேம்' என்று உனக்கு இப்பப் படுகிறதா?

ஆறுபிறப் பின்னதென்று அறியாய் பெருமகனே
ஆறுபிறப் பின்விபரம் அங்ஙம்தெ ரிவதிங்ஙே

இவ்வுடலில் ஏழ்பிறப்பும் இருப்ப தறியாமல்
செத்துப்பி றப்பதென்று சொல்வார் அறியாதோர்

இவ்வுலகி லேயலேந்து எந்நவிதத் தேட்டாலும்
அங்ஙேஅ றியவொண்ணு ஆறுபிறப் பானகுறி

தெரிவதுஇங் ஙேயப்பா திரண்டேழு தன்பிறப்பும்
இப்படிஇ ருக்குதென்று எவரும் அறியார்கள்

இந்ந வார்த்தைகளே உலகம் பூராவையும் எதிர் வைத்தல்லவா சொல்கிரேம். இந்ந உடல் மாறிப் பிறப்பது போல் ஒவ்வொரு பருவத்திலும் முன்னிருந்ந அனித்தியக் கருவிக்குலங்ஙள் போய் னித்தியக் கருவிக் குலங்ஙள் உண்டாகின்றன - அதற்கேற்ப செயல், எண்ணம் எல்லாம் வேருகின்றன. குழவி, குழந்நை, குதலே, மங்ஙை, மடந்நை, அறிவை, தெரிவை - என்ற இந்நப் பிறப்புகளேப் பற்றிப் பிரித்து இப்படி வியாக்யா னம் யாரேனும் இதுவரை செய்தது உண்டா? இந்ந உல கத்தில் எப்பவாவது, யார் ஒருவர் அறிவுக்காவது இது எட்டியதுண்டா? இல்லேயே. அப்படி அருமையான இதை ஒருவனுடைய அறிவுக்கு எட்டும்படி எடுத்துக் கொடுப்பதாயிருந்நால், அது எவ்வளவு பிரம்மாண்ட மான வார்த்தை. அப்படிப் பெற்றவன் எத்தனே கோடி திரவியத்தைக் கைபோட்டவனுகின்ருன் -

"கோவில் குளம் கட்டினேம், தான தர்மம் செய்தோம், ஆகையால் ஞும் ஒஸ்தி, இன்னெருவர் மட்டம், ஆகவே அவரவருக்குத் தக்கபடி பதவி கிடைத்தால் போது" மென்கிருன். உலகம் பூராவும், ஆண் பெண் அனைவரும், அப்படியே அதே எண்ணத்தில் மூழ்கியிருக்கிருர்கள். அரைக்கால் கிணறு தாண்டியவனை விட, அரைக்கிணறு, முக்கால்கிணறு தாண்டியவன் ஒஸ்தி என்று னினைக்கிருன். ஆனல் இவனும் அவனும் கடைசியில் விழும் எல்லை ஒன்றே என்று னினைப்பதில்லை. இவன் ஏழாவது பிறப்பு பிறந்தல்லவா னித்தியத்தை அடைய வேண்டும். அல்லாமல் இவன் முதல் பிறப்பிலோ அல்லது ஆருவது பிறப்பிலோ போனலும் இரண்டும் ஒன்று தானே, ஒரே னரகக் குழி தானே. அறிவென்ற மாணிக்கத்தைக் கொடுத்ததால் இவன் பெயர் மனு ஈசன். அந்தத் திமிரினுல் இவன் வாயில் வந்ததை யெல்லாம் கண்டபடிப் பேசி மெய்ஞ்ஞானிகளைத் தேடி யடையாமல் னுசமடைகிருன்.

இவன் ஏழாம் பிறப்பாகிய மறுபிறப் பெய்திய பின்னரும் தவறு செய்ய இடமிருக்கிறது. தேவ சட்டப்படி னடக்கா விட்டால், முன்னிருந்த பழைய னிலைக்கே இவன் னினைவு சாய்ந்துவிடும். ஏனெனில், இவன் னினைவு இவனை எப்பவும் கீழ்னிற் றள்ளவே னிற்கிறது. அப்படித் தவறு ஏற்பட்டு விட்டால் இவனது ஜீவ வித்து சிதறிப் போக னேரிடும். பிறகு என்றும் மீளா னஷ்டமே. அவ்வாருன கற்பாந்த கோடி கால அமளியிலிருந்து இவனைத் தப்புவிக்கவே எம்முடைய வார்த்தைகளைச் சதா வருஷிக்கின்ருேம். இந்த இணை

யற்ற மொழிகளின் சொரூபம் சாதாரண மக்களின் னினைவிலும்கூடத் தைப்பதற்காகவே,

“ஏழ்பிறப்பு னித்தியத்தில் இருந்நாள வந்த மன்னே
னித்தியவாழ் வுக்கென்றே னிலத்தில் படைத்தமனு
ஆரம்பி றப்பிலேயே அனித்தியனுப் போனுக்கால்
ஏழாம் பிறப்புடலம் எடுக்காமல் போவாயேல்
பேராப்பெரு னட்டமுடன் பொணமென்ற பேரும் வரும்
தேருப் பிணனுற்றம் சிதறிவிடுஞ் ஜீவவித்து
என்றுமே மீளாமல் எரினரகம் போவாயே
இதற்காக உன்னை இறைவன் படைக்கவில்லை”

என்று பாடி வைத்தோம் - மனுத்தலையின் சிறப்பை இவ்வளவு பாரதூரமாகவா இவன் னினைக்கப் போகிறுன். உலகம் பூராவும் மனுத் தலையின் உன்னதத்தையும் அதற்கு வரனிற்கும் ஆபத்தையும் அறியாதவர்களாகவே இருக்கிறுர்கள். பிரதானமான ஆபத்தை, என்னும் னீங்காத ஆபத்தை மாற்றுகிற செயலைப் பற்றிப் பேசப் பெறுகின்ற இந்த எல்லையை, எவ்வளவு பிரதான மானதாக னினைக்க வேண்டும்? இதைவிட்டு வீணுக்கெல்லாம் எவ்வளவு பெரும் கூட்டம் போட்டு அலைகிறுர்கள்.

அனைத்தும் னிரூபணை செய்தாக்கும் இடம் இந்த ஒரே எல்லை தானே. இவனுக்குப் பயந்து வில்லு வளைகிறது என்று னினைக்கிறுன். அது எதற்காகவளைகிறது என்று தெரியாது. சரேலென்று அதனிடத்திலிருந்து அம்பு பாயும் போதல்லவா அது ஏன் வளைந்தது என்று தெரியும். இவனுக்குக் கண்ணியம் கொடுத்து இவ்வளவு எளிதாக எதற்காக எழுதுகிறேம்? இவனுக்கு இதை னும் இப்படி எடுத்துச் சொல்வதற்காக இவன்

னமக்கு என்ன செய்தான்? அனைத்தும் னிருபணை செய்து னரகை இருக்கும் இவனைத் தேவனாகை ஆக்கும் இடம் இது ஆயிற்றே. இறைவனிடத்தில் இவன் பெற்று வந்த வித்தியாதத்துவக் கடன் சும்மாவா- இவனுக்குத் தரப்பெற்றது? னீ யாருக்காவது எதையாவது இலவசமாகக்கொடுப்பாயா? கொடுக்கமாட்டாய். இதைப் பற்றி னீ எப்போதாவது னினைத்ததுண்டா? அந்தக் கடனைத் திருப்பிக்கட்ட ஏதாவது வழி தேடினாயா? உனக்கு இந்த னினைப்பை ஊட்டக்கூடிய ஆள் எப்போதாவது வந்ததா? ஏழாம் பிறப்பு எப்பேர்க்கொத்த தகையானது? வையகமும் வானகமும் தந்தாலும் ஈடு செய்யமுடியாத எட்டாப் பெருங்கடனை மாற்றி வைக்கின்ற இந்த எல்லை என்னவாயிருக்கும் என்று சிந்தித்துப் பாருங்கள்.

16

இறைவன் என்ன பாடுபட்டு, என்ன யுக்தி பண்ணி, ஒரு பூவைப் படைத்திருப்பான்? அப்படிப் படைத்தது எதற்காக?

சபையோர்: மக்கள் முகர்வதற்காக.

ஆண்டவர்கள்: இவன் முகராவிட்டால் என்ன? இவன்தான் னாற்றம்பிடித்த பயலாச்சே. அதைப்பற்றி அப்புறம் பேசுவோம் - செவிக்கு உணவு எது? செவி உணவின் பலன் என்ன?

சபையோர்: தெரியவில்லை.

ஆண்டவர்கள்: வாயுணவு இந்த அனித்திய உடலை வளர்ப்பதற்காக என்று யாவற்றிராளும் அறிவார்கள். ஆனல் செவியுணவு எது, அது எதற்காகத் தரப்பெற்றது என்பது தான் எவருக்கும் எட்டவில்லை. னித்திய தேகமெடுத்து வாழ்வதுதான் செவியுணவின் பலன் என்று இந்த அகில உலகத்திற்கும் அறிவிக்கவேணும் வந்துள்ளோம். அந்த வுணவை யார் கையில் தரப்பெற்று இந்த உலக முழுதினுக்கும் வழங்கப்பெற வேண்டுமோ அவர்கள் கையிலே இறைவன் அதை ஒப்படைத்தாயிற்று. அந்தச் செவியுணவின் பலனை ஏராளமானபேர் இங்கு பெற்றிருக்கிருர்கள். இனியும் பெற விரும்புவோர் பெற்றுக்கொள்ளலாம்.

வாயுணவு, செவியுணவோடுங் நூட இன்னெரு உணவும் இந்த மனுவுக்கென்று படைக்கப் பெற்றிருக்கிறது. இறைவன் உன்னைப் படைக்க வென்று உன் தாயினுடைய கருப்பறையில் ஒரு னுள் உன்னைக் கொண்டு போய்ச் சேர்த்தா னல்லவா – அப்போதே உன்னுடைய வயது வாளுளாகிய பொக்கிஷத்தை உன் சுவாசத்திலே வைத்துப் படைத்தான் – அந்தச் சுவாசத்திற்கு வேண்டிய உணவைத்தான் இந்தப் பூவிலே வைத்துப் படைத்தான். அதுதான் உன் ஜீவ உணவு. ஆகவே மணத்துடன் பூவைப் படைத்தது உன் ஜீவ வளர்வு வாழ்வுக்கேயன்றி வெறுமனே மோப்பம் பிடிப்பதற்கல்ல என்று தெரிகிறதா? இப்படி வாயுணவென்றும் செவியுணவென்றும் ஜீவ உணவென்றும் உன் மேம்பாட்டுக் கென்றே, னீ கேட்காமலேயே இறைவன் படைத்தானே, அந்தக் கடனை னீ எப்போது

கட்டுவாய்? இதைத்தான் திருவள்ளுவ னயனார் அவர்களும் 'செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும் வானகமும் மாற்றலரிது, என்றார்கள் - னூறு ரூபாய் காசுக்குப் படாத பாடுபட்டு அல்லும் பகலும் மாடாக உழைத்து உன்னுடைய தூலத்தை வளர்க்கிறாயே - அப்படி வளர்த்த உன் தூலம் இப்போது என்ன விலை பெறும்? னிர்ணயிக்கமுடியாத கிரயம் பெறும். ஆனால் உன் ஜீவன் போன பின் அது என்ன விலை பெறும்? ஒரு காசுக்குக் கூட ஆகாத சவம் ஆகிவிடும் - அப்படி ஆகாதபடி உன்னுடைய தூலக் கருவிகளனைத்தையும் பாதுகாத்து அவற்றை அளவுகடந்த விலை மதிப்புடையனவாக வைத்திருக்கின்ற உன் ஜீவனை சதா வளர்க்கின்ற அந்தப் பரட்டுக்கு இறைவனுக்கு னீ என்ன கைம்மாறு செய்வாய்? அந்நனன்றியே எட்டாப் பெருங்கடனாயிருக்கும்போது, உனக்கு னித்திய தேகத்தை அளக்கின்ற பெருங்கருணைச் செயலுக்குக் காணிக்கையாக உன் தலையையே வெட்டிச் சமர்ப்பித்தாலும் அதற்கு ஈடாகுமா?

அந்த னித்தியப் பொருள் எம் கைக்கு எப்படி வந்தது? அதற்காக இந்த உலக வாழ்வையே னாம் அர்ப்பணித்தோம். இவ் வுடலை அதற்காகவே தேய்த்தோம். எலும்பெல்லாம் பொடித்துச் சதையெல்லாம் பிய்த்துப் பிய்த்துக் கொடுத்தோம். அனித்தியன் எம்மை ஏழை என்று ஏளனம் செய்தான். அதை னாம் ஒரு சிறிதும் பொருட்படுத்தவில்லை. அதனால் எமக்கு அணுவளவு கூட னஷ்டமில்லை. எல்லா வகையிலும் எவரும் பெற முடியாத னித்திய லாபகரப் பெருவாழ்வு எம்

கையில் கிட்டியது - அதோடு 'எல்லோரும் எமன் கை அடக்கம், அந்த எமன் எம் கை அடக்கம்' என்ற யாரும் பெற முடியாத வல்லபமும் னம் கையிலாச்சுது - இன்னும் உலகத்திலுள்ள விலைமதிப்புக் கடங்கா மனுத் தலைகளை யெல்லாம் விலை கொடுத்து வாங்கும் அளப்பதற்கரிய பெரு னிதியமும் எம் கையில் இருக்கிறது. இவ்வாறெல்லாம் இருப்பினும் னும் ஒரு ஆண்டிதானே - என்ன ஆண்டி? சர்வ உலகத்திற்கும் ஆண்டி; சர்வ உலகத்தையும் ஆளுகின்ற ஆண்டி. னும் ஒருவர் இல்லை என்றால் அந்தக் கடுவாயாகிய எமன் முன் னீ என்ன செய்வாய்? அவனை அடக்கி ஆளுகின்ற சொத்து உன் கையில் என்ன இருக்கிறது?

திருவள்ளுவ னுயனாரின் னிறை மொழி உனக்கு அளக்க முடியாத அகமியத் தோற்றமாய் விளங்குகிறதே அது ஏன்? ஆனால் இந்த எல்லையை வந்து அடையாத ஒருவனுக்கு அது குறளாக அதாவது குட்டையாகவல்லவோ இருக்கிறது? அதற்குக் காரணம் அவன் வாழும் உலகம் குட்டை, னினைவும் குட்டை, அவனும் குட்டை. னீயும் முன் அந்தக் குட்டை ஊரில் தான் இருந்நாய். னீ இங்கு வந்து அண்டிய பிறகுதான் உன்னை எம் ஆலவாய்ச்சூலில் வைத்துக் கருவாக்கி, அண்டமெல்லாம் விழுங்குகின்ற மகா அற்புதமான விசுவருபக் காட்சியில் ஏற்றி உருவாக்கி, ஒரு னள்ளிரவில் தேவர்களெல்லாம் கண்டதிசயிக்கப் பெற்றெடுத்தோம். அன்று முதற் கொண்டுதான் உனக்குப் பெரிதைப் பெரிதென்று எண்ணவும், பேசவும் எளிதாயிற்று. அத்தகைய இந்த எல்லையில் னீ வைத்துள்ள அன்புக்கு

மேற்பட்ட அன்போ, அல்லது அதற்குச் சமத்துவமான அன்போ வேறு எங்காவது நீ வைத்திருந்தால், அந்தப் பக்கம்தான் கடைசி நேரத்தில் உன் தராசு இழுக்கும். அவ்வாருன தகாத இழுப்பின் காரணமாக எம் கையை விட்டு நீ தவறினுல், நீ ஒரு அரசனுகவே யிருப்பினும் அந்த எமன்பதி எல்லையில் உன் தொண்டையில் கசப்பிறுல் செய்த சூட்டரிவாள் அறுத் தேறுமே. பிறகு அந்த நித்தியக் கொடுநரக அஸ்த்தைக் கல்லவா போய்விடுவாய் - ஆகவே உனக்கு இங்கு என்ன உஜார் ஒட்டுதல் வேண்டும்?

மூலபுருஷர்கள் குலத்தை வகுத்து மக்களை நீதியில் நடப்பித்தார்களே, அவர்கள் குலங்களை வேறு வேருக வகுத்தது எதற்காக? வரப்பில்லாமல் வயல்களெல்லாம் ஒரே பரப்பாக இருந்நால், அதில் தண்ணீர் தேக்கி வேளாண்மை செய்ய இயலாதல்லவா? அது போலவே மெய்ஞ்ஞானப் பயிர் செழிக்கும் பொருட்டு சாதி வகுத்துப் பாத்தி கட்டினுர்கள். ஆனுல் அவர்கள் எல்லோரும் நடத்தின செயல் ஒன்றேதான்.

ஒன்றே குலமென்று வாயில் மட்டும் சொல்லிக் கொண்டால் போதுமா? பல்லாயிரக் கணக்கான எம் மக்களுக்கு ஒன்றே குலம், ஒருவனே தேவன் என்பது உயிருக்கு உயிரான பிரத்தியட்சச் செயலாகிவிட்டதே, இப்படி ஆகியிருப்பதற்குக் காரணம் அவர்கள் தேவப் பிறப்பாகிய வேறே பிறப்பெடுத்ததினு லல்லவா? ஆகவேதான் எம் மக்களுக்கு எடுத்ததெல்லாம் மாசு மருவற்ற திட்டவட்டமான தீர்மானமாக இருக்கிறது. சந்தேகப் பொதுப் புலமைப் பேச்சே இங்கு இல்லை.

பல நூற்றாண்டு காலம் உலகமெல்லாம் சுற்றிப் படித்தாலும் இங்கு காணப்பெறும் சமரச சன்மார்க்க ஒருமைப்பாடு கிட்டுமா? ஒருக்காலும் கிட்டாது. இங்குள்ள ஒவ்வொருவரும் அந்த இறை சூலில் வைத்து மறுபிறப் பெய்ததினால்தான் இத்தகைய சத்திய ஒருமைப்பாடு வந்தது. இங்கு வந்து சேராத ஒருவனுக்கு நீ மறுபிறப் பெய்தி யிருப்பது தெரியுமா? தெரியாது. உன்போல் அவனும் தெய்வச் சூலில் பிறந்தா லல்லவா அது தெரியும். இந்த எல்லையை விட்டு வெளியே ஆயிரம் ஊர்களில் தேடிப் பார்த்தாலும் ஒரு மறுபிறப்புப் பெற்ற தலையைக் காணமுடியுமா? முடியாது. இப்போது மறு பிறப்புப் பெற்றுத் தன்னை அறிந்த மக்களே நிறைந்த ஒரு ஊரையே உண்டாக்கி விட்டோமே. மற்றும் ஊர் ஊருக்கும் அங்கங்கே, ஐந்து, பத்து, நூறு மெய்வழித் தலைகள் இருக்கவும் செய்துள்ளோம். எந்தக் காலத்திலும் இல்லாத இந்த அதிவல்லபச் செயல், இந்தக் காலத்தில் மட்டும் ஏன் உண்டாக வேண்டும்? அதற்கான இறைவனின் திட்டம் ஒன்றிருக்கு மல்லவா?

முன் வந்த செம்மல்கள் – அப்பர், சுந்தரர், மணிவாசகப் பெருமான், வடலூர் வள்ளல் இவர்களெல்லாம் இந்த மெய்ஞ்ஞானப் பயிரேற்றுவதில் வஞ்சகமாகவா பாடுபட்டார்கள்? உண்மையாகவே உயிரைத் தியாகம் செய்து தானே பாடுபட்டார்கள்? அவர்களுக்கு ஒரு இராச்சியத்தையே கொடுத்தாலும், தாங்கள் நடத்த வந்த மெய்ஞ்ஞானப் பாதையை விட்டு மாறுவார்களா? மாறமாட்டார்கள். எவ்வளவு இடையூறு வந்தாலும் அவர்கள் வைராக்கியம் மங்குமா? மங்காதே.

உடல், பொருள், ஆவி அனைத்தையும் தத்தம் செய்து பன்னிரண்டு வருடங்கள் ஆசானிடம் பூரண ஒட்டுதலோடு அரும்பாடுபட்டதால்தான் அது அவர்களுக்குக் கிடைத்தது. எமக்குக் கிடைத்ததும் அவ்வாறேதான்.

எம் உற்றார் உறவினர் ஆயிரக்கணக்கானவர்கள் இருந்தார்கள். அவர்களில் ஒருவருக்கும் அது கிட்டவில்லையே, ஏன்? அதற்கு அவர்கள் பாடுபடவில்லை.

தவத்தின் மேம்பாட்டினால், எம் கையில் தனித்த அதிகாரம் படைக்கப் பெற்றது. முன்வந்த செம்மல்கள் ஒவ்வொருவரும் ஒரு தவ மேருவே ஆனாலும் அவர்களில் யாராவது எழுபது வருடம் வாடாத தவம் செய்தார்களா? எல்லோருமாகச் சேர்ந்து அந்தப் பாட்டை எம் தலையில் கட்டிவிட்டார்கள். எம்முடைய ஓயாத தவத்தின் பலனாகத்தான், உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் பண்ணிப் பெறவேண்டும் என்று காலகாலமெல்லாம் இருந்த கண்டிப்பான சட்டத்தை நாம் மாற்றி, உங்கள் எல்லோருக்கும் இந்த மெய்ம்மை ஜீவ ரட்சிப்புப் பரிசை இவ்வளவு எளிதாக வழங்கி வருகிறோம். அறுப்புக்காலம் முடிந்து விட்டதே, இனி அறுப்புக்காலம் வராதே, அடுத்த உலகுக்கு வித்து வேண்டுமே என்றுதான் கைக்குக் கிடைத்ததையெல்லாம் வாரிச் சேர்க்கிறோம். திட்டமான இந்த மீட்பு நெறிச் செயலில் எமக்கு ஓய்வே கிடையாது.

ஒரு காரியம் நடப்பதற்கு முன்பு அதன் முதல் நாழிகையில் அது இன்னதாகத்தான் இருக்கும், அது இப்படி இருக்கும் என்று ஒருவரால் சொல்ல முடியுமா?

முடியாதே - அப்படியிருக்க இங்கு னடப்பதை - திருமூலர், மாணிக்க வாசகப் பிரான் முதலிய எல்லோரும் இறுதித் தீர்ப்பர் இன்ன பேருடையவர்களைத்தான் திருமணம் செய்திருப்பார்கள் - பனிமதி மங்கை பங்ஙனுக வருவார்கள் - இன்ன காட்டிற்கு வந்து தோற் போர்வை னீக்கி செம் பட்டுடையோடு இரத்தின அணிகலன் அணிந்த இன்ன திருமேனியராய் விளங்குவார்க ளென்றெல்லாம் அவர்களின் தவத்துறை மேம்பாட்டால் தீர்க்கத் தெரிசனம் கூறியிருக்கிறுர்களே. இன்னும் - எம் மக்கள் அறிவென்ற அளப்பரிய கடலில் ஏறி மெய்ஞ்ஞான அருளுணவு வாரிவாரிவழங்ஙத் தின்று புஜபல தாஷ்டீகர்களாக எமனுக்கும் அடங்காதவர்களாய் இருப்பார்கள் என்று வீரப்பிரம்மம் அவர்களும் கூறியுள்ளார்களே - "இது என்ன காலம் இறைவன் திருவருள் - பன்னகாலங்ஙள் பார்த்தனம் கேட்டிலே" என்று இந்த வசந்தத்தை னினேந்து னினேந்து மக்கள் உள்ளம் ஏன் பூரிப்படையவில்லே?

முதலில் பதின்மூன்று வருடங்ஙள் தேடித்தேடி அருப்பாடுபட்டு இரண்டு மூன்று மக்களைத்தான் மெய்வழியில் பெற்ருேம். இப்போதோ அறுபத்தேழு சாதிக ளடங்ஙிய பல்லாயிரக் கணக்கான ஆண் பெண் இருபாலாரும் எம் மக்களாகத் திரண்டு இருப்பினும் னம் பாடு னிற்கவில்லேயே. இன்னமும் தொடர்ந்து பாடுபட்டு வருகிறேமே - ஒவ்வொரு தலேயையும் இந்த மெய்யில் திருப்ப எவ்வளவு முயற்சி! இவ்வளவு திரளாக இருந்தும் "தென்னன் - பேராசை வாரியன்" என்பதற் கிணங்ங ஒரே ஆத்திரத்தோடு ஏழை என்றும்

பணக்காரன் என்றும் வித்தியாசம் பாராமல் மேலும் மேலும் இந்த அரும் பெருஞ் செயலை வேகமாக விரித்து வருகிறோம். காலம் கடந்த கலிக்கடையில், பவப் பாரத்தால் ஆலம் அதிரும் இந்த னேரத்தில் பணக்காரனுக்குப் பல புத்தி வருகிறது. ஆனால் ஏழையோ ஆத்திரத்தோடு இந்த மெய்யில் ஈடு படுகிறான்.

புகழைத் தேடுகிறானே அதைச் சுலபமாகக் கைபோடும் வழி தெரியுமா? னிஜமான புகழுடம்பை, அழியாத புகழுடம்பை எய்த வழி, சர்வமும் எதற்குள் அடக்கமோ அந்தத் திருமேனி உன்னைப் புகழும்படி செய்துகொண்டால் போதும் - சர்வ உலகும், னித்திய காலம் புகழும் புகழ் உன் கைவரவாகும். மயிரைப் போட்டு மலையை இழுக்க இலகுவான வழி யிருக்கும்போது, அதை விட்டு விட்டு ஒவ்வொரு கல்லாகக் கொண்டுவர ஒருவன் முயற்சித்தால் அது முடிந்த காரியமா? அத்தனை பாரங் கொண்ட ஒரு மலையை, எப்படி மயிரைக்கட்டி, அதுவும் அறுந்து போகாமலே இழுக்க முடியும்? — என்று ஆண்டவர்கள் வினவ - வெகு னேரம் சபையோர் பதில் சொல்லத் தெரியாமல் இருந்துவிட்டு "ஆண்டவர்கள் தான் தெரிவிக்கவேண்டும்" என்று விண்ணப்பிக்கவும்- (இளனகை பிறங்க) ஆண்டவர்கள்: - "உன்னை இழு" என்றுனும் சொல்லும்போது மலைக்குப் பின்புறம் உன் கண்ணுக்கு மறைவாக இருந்துகொண்டு மாக்குப் போட்டு உன் பக்கம் னகர்த்துகிறோம். னீயோ அதை அறியாமல், மயிர் கூட அறுமல், னீயே இழுத்து விட்டதாக எண்ணி ஆச்சரியப்படுகிறாய். அதல்லாமல் என்ன தவம் செய்து னீ இந்த ஞானம் பெற்றாய்? ஒரு பாடு

மில்லாமல் வேடிக்கை விளையாட்டாகவே சிரித்துச் சிரித்தே னும் ஊட்ட, நீ பெற்றுவிட்டாயே – இதை நீ நினைத்துப் பார்த்ததுண்டா? மதியைச் சார்ந்து நின்ருல் மனிதனுல் ஆகாத காரியம் ஒன்றும் இல்லை.

17.

ஆண்டவர்கள்: ஓணம் என்கிருர்களே, அது என்ன?

சபையோர்: அது ஒரு பண்டிகை.

ஆண்டவர்கள்: பண்டிகையா?

சபையோர்: ஆமாம் – அதை மலையாள தேசத்தில் வெகு விசேஷமாகக் கொண்டாடுகிருர்கள்.

ஆண்டவர்கள்: அது சரி. வெகு விசேஷமாக, வெகு விமரிசையாக, ஓணம் பண்டிகையைக் கொண்டாடுகிருர்களே, இதில் என்ன பிரயோஜனத்தைக் கருதி அப்படிக் கொண்டாடுகிருர்கள்? அந்த விமரிசை என்ன வென்று பார்த்தால் – ஒரே சாப்பாடு, கூத்து, கும்மாளம் தான். அறிவுக் கென்று ஒரு தேட்டமும் காணும். மனிதன் கடைசியில் போகிற அவலட்சண அதோகதி அவஸ்தையை எடுத்துக் காட்டக் கூடிய ஒரு பேச்சாவது அதில் உண்டா? இல்லை – இவன் அன்ருடம் செய்கிற ஆகா வெறிச் செயல்களைத்தானே அன்றைக்கு இன்னும் கொஞ்சம் அதிக வெறியோடு செய்கிருன். அன்ருடம் ஒரு பாட்டிக் கதை பேசுவது போல அன்றைக்கும் ஒரு வெட்டிக் கதையை விவரிப் பான். அதற்குமேல், அறிவுக்கானது ஒன்று மிருக் காது. பெரியோர்களின் சரித்திரம் என்று சொல்லி

அதில் ஊர்ப்பட்ட பொய்யை ஏற்றியிருப்பான். சாதாரண நாட்களில் உலக வியவகாரங்களில் இவன் பேசுகிற பொய்யே அதைவிட ஆயிரமடங்கு தேவலாம் என்று இருக்கும். பகாசுரன் வேரோடு மரத்தைப் பிடுங்கிப் பல்லைத் துலக்கினான் என்பான். அப்போது அவனுடைய ஒவ்வொரு பல்லும் ஒரு பெரிய பாறையாய் இருந்ததோ என்னவோ!

ஒவ்வொரு புராணக் கதையிலும் அவதார புருஷர்கள் அரக்கர்களைச் சங்காரம் செய்வார்கள். சங்காரம் செய்வது என்றால் கொலை செய்வது என்று இவன் அர்த்தம் சொல்வான். கொலை செய்வதுதானா பெரியோர்களுக்கு வேலை? அதற்காகவா அவர்கள் அரும்பாடுபட்டு மெய்ஞ்ஞானத்தைப் பெற்றுத் தவ சிரேஷ்டர்களானார்கள்? சங்காரம் என்றால் கொலையல்ல. அரக்கி, அரக்கரை விலக்கித் துலக்கி அமரராக்கும் அருட் பெருங்கருணைச் செயலுக்குத் தான் சங்காரம் என்று பெயர்.

பெரியோர்களோடு யுத்தம் பண்ணுகிற ஆசாமி சாமானியப்பட்ட ஆசாமியாக இருக்கலாமா? இருக்கக் கூடாதல்லவா? ஆகவேதான் அந்த அசுரன் மலைகளையெல்லாம் கையாலே பெயர்த்து எறிவது. ஒருவேளை, அப்போதிருந்த மலைகளெல்லாம் சிறு பிஞ்சுகளாக, ஒவ்வொன்றும் ஒரு சுண்டக்காய் அல்லது கத்தரிக்காய் அளவில் இருந்திருக்கவேண்டும்! நாளடைவில் அவை பெரிதாகி இப்போது இருக்கும் அளவுக்கு வளர்ந்திருக்க வேண்டுமென்றும் நாம் வைத்துக்கொள்ள வேண்டியது தான் (சபையில் மகிழ்ச்சி).

அரக்கனைப்பற்றி இவ்வளவு அளந்நவன் பெரியோர்களைச் சும்மாவா விட்டுவிடுவான்? அவர்களைப் பிடித்து ஆறு தலைகளும் பன்னிரண்டு கைகளும் வைத்துக் கட்டிவிட்டான். இந்நக் கோலத்தில் இறைவன் எதிரில் வந்நால் இந்நப் பக்த கோடிகள் என்ன ஆகியிருப்பார்கள்? ஐயையோ என்று பயந்நு அலறியடித்துக்கொண்டு ஓடியிருப்பார்கள் - பிறகு இறைவன் அவர்கள் பின்னாலே துரத்திக் கொண்டு ஓடவேண்டியதுதான். பெரியோர்களுடைய தூல னடைமுறைகளெல்லாம் சாதாரண மக்களுக்கு உள்ளதுபோல் இருக்கக் கூடாது என்றே னினைக்கிறான். அவர்கள் உண்பது உடுப்பது போன்ற சாதாரணச் செயல்களும் அசாதாரணமாகவும் விபரீதமாகவும் இருந்நால்தான் பெரியோர்கள், இல்லாவிட்டால் பெரியோர்கள் அல்ல, என்ற உருப்படா எண்ணத்தைத்தான் அந்நக் காலப் புலவர்கள் கதைகளின் மூலம் பரப்பிவிட்டார்கள். பெரியோர்கள் என்று சொன்னால் அவர்கள் னம்மைப்போல் அறுசுவை உணவு உண்ணக் கூடாது, தழை கொழை தான் உண்ணவேண்டும் என்கிறானே, அவர்கள் அசாதாரணமாக-னமக்கு மாற்றமாக இருக்க வேண்டும் என்பதற்காகத்தானே அப்படிச் சொல்லுகிறான். இல்லாவிட்டால் அவன் அப்படிச் செய்துபார்த்து ஞானத்தை அடைந்நு பலன் கண்டவனா? அப்படியானால் எல்லோரும் வாயால் சாப்பிட்டால், பெரியோர்கள் மூக்கினால் அல்லது காதினால் சாப்பிடுவார்கள் என்று எழுதியிருந்நானானால் இன்னும் அதிகப் பொருத்தமாயிருக்கும்!

பெரியோர்களின் அவதாரத்தைப்பற்றி விடும் சரடு இன்னும் விபரீதமாயிருக்கும். ஆண் பெண் சம்பந்

நத்திலேதான் எல்லோரும் உற்பத்தியாவது என்றுனிய தியிருக்க, சில பெரியோர்கள் ஆணின்றியே திடுதிப் பென்று மாயமாக வந்து ஒரு பெண்ணின் வயிற்றில் உதித்து விடுவார்கள்! இதைவிடப் பிரமாதமாகப் பொடகத் தெரிந்த புலவன், ஒரு ஆணு மில்லாமல் ஒரு பெண்ணுமில்லாமலே பெரியோர்களைப் படைத்து விடு வான். திடுதிப்பென்று ஏதாவது ஒரு துளசிச் செடியி னிடமாக ஒரு தெய்வீகக் குழந்தை தோன்றிற்று என் பான். இப்படியுமொரு ஆதாரமற்ற அவந்தரையான ஞானம் இருக்குமா?

இன்னொரு புலவன் தன் கதையில் வரும் பெரியோர் களுக்கு அதிக மவுசு வரவேண்டும் என்று விரும்பினான். முன் சென்றவர்களை விட அதிக தெய்வீகச் சக்தியுடைய வர்கள் என்று ஜனங்கள் நினைக்க வேண்டும், அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தான். விபரீதத்தைக் கொஞ்சம் அதிகமாக்கினால் தேவலை என்று அவனுக்குப் பட்டது. பிறப்பதற்கு முன்னமேயே அற்புதங்கள் செய்தார்கள் என்று பொடக முடிவு கட்டினான். அப்படி அவன் கட்டின கதைதான், பெரியோர்கள் தாயின் வயிற்றிலிருந்தபோதே வெளியிலே இருந்தவர்கள் பேசிய தைக் கேட்டுக் கொண்டிருந்தார்கள் என்பதும், தாயின் வயிற்றுக்குள் இருந்தபடியே கையை நீட்டித் திருட னைப் பிடித்தார்கள் என்பதும் போன்ற பொய்கள்.

எல்லோருக்கும் பின்னாலே வந்த ஒரு புலவன் முன் னாலே வந்த புலவர்கள் சொன்ன பொய்களை யெல்லாம் தூக்கி விழுங்குகிற பொய்யைக் கண்டுபிடித்தான். நம் கண்ணெதிரிலே உள்ளதையே மிகவும் தைரிய

மாக அடியோடு மாற்றிப் புரட்டிவிட்டான். அரபி தேசம் கொடிய கான லடிக்கும் காய்ந்த பாலைவனம் என்று யாருக்குத் தெரியாது - அங்கே போய் இடி மின்னலுடன் அடை மழை பெய்து சமுத்திரம் போல் வெள்ளம் புரண்டோட, அங்குள்ள காடுகளில் மான், மரை, னரி, புலி, சிங்கங்கள் கூட்டம் கூட்டமாய் குளிரில் னடுங்க னின்றன என்று பொடகிறு னென்றுல், அவன் பேரியோர்களைப்பற்றி எழுதியுள்ள கதையிலே எள்ளள வாவது உண்மை யிருக்குமா?

உங்கள் பெரிய ஞச்சியாருடன் ஞம் மக்கத்துக் குப் போயிருந்நோமே - அப்போதுதான் ஒரு வாளி தண்ணீருக்கு அங்குள்ளவர்கள் படுகிற அவதிப்பாட்டை ஞம் பார்த்தோம். கிணறு கிடுகிடு பாதாளம்வரை ஆழமாக இருக்கும். தண்ணீர் இறைப்பவர்களின் தோள்கள் திரண்டு அவர்கள் தலைக்குப் பக்கத்தில் இரண்டு சிறு தலைகள் இருப்பது போல் தெரியும். வாளிக்குக் கட்டியுள்ள கயிற்றைச் சுருட்டிப் போட்டால் ஒரு பெரிய வண்டி கொள்ளாது. ஒரு ஞள் தண்ணீர் இறைக்க ஞம் அங்குள்ள ஒரு கிணற்றில் வாளியை இறக்கியதும், அது னீண்ட னேரம் கிணற்றிற்குள் பிரயாணம் செய்துகொண்டே யிருந்நது. எவ்வளவோ னேரமாயிற்று. எத்தனையோ தரம் எட்டி எட்டிப் பார்த்தோம். வாளியோ தண்ணீரை எட்டிய பாடில்லை. ஒரு வேளை அந்ந வாளி, தண்ணீரை முகந்நுவர இந்நியா வுக்கே புறப்பட்டுவிட்டதோ என்று னினைத்தோம். இதையெல்லாம் பார்த்ததும் உங்கள் பெரிய ஞச்சி யாருக்கு மக்கத்தைப் பற்றிப் புலவன்கள் கூறிவைத்

துள்ள பொட கெல்லாம் னினைவுக்கு வந்துவிட்டது - "ஊரிலிருக்கும் போது என்னமோ சொல்லுவீங்களே - மக்கத்திலே ஆறுகளும் காடுகளும் ஏராளமாயிருக்கு மென்று - அதற்கொரு பாட்டுக்கூட சீராப் புராணத்தி லிருந்து படித்துக் காட்டுவீங்களே - இங்கே அப்படி யெல்லாம் எதுவும் காணுமே" என்று எம்மைக் கேட் டதும், எமக்கு எப்படி யிருந்திருக்கும்? உடனே நாமும் விட்டோம் சமயோசிதமாக! "அதெல்லாம் இங்கே தான் இருக்கின்றன. இந்தத் தரையைத் தூக்கிக் கொண்டு பார்த்தால் அடியிலே அதெல்லாம் இருக்கும்" என்றோம். நாம் வேறென்ன சொல்ல முடியும்? (சபை யில் மகிழ்ச்சி).

புலவர்களுடைய அண்டப் புளுகுகளையும் ஆகாசப் புளுகுகளையும் பார்த்துப் பார்த்து மனம் வெறுத்துத் தானோ என்னவோ -

தைபிறந்தது மார்கழி முடிவிலே
நெய்பிறந்தது அரிசிமு னையிலே
மெய்பிறந்தது வேதியர் மொழியிலே
பொய்பிறந்தது புலவர் வாயிலே

என்ற பாட்டை அந்தக் காலத்திலே பாடி வைத்துள் ளார்கள்.

பெரியோர்களைப் பற்றிய இப்படியான காது கசக்கும் பொய்களைக் கொஞ்சமும் மனம் சுளிக்காமல் ஆயிரக்கணக்கில் கும்பல் கூடிக்கொண்டு கேட்கிறார் களே, அவர்கள் என்ன பயனை அடைந்தார்கள்? கும்பல்

கூடிய இடத்தைச் சுற்றி இரவெல்லாம் ஞற அடித்து விட்டுப் போனதுதான் மிச்சம். ஓணத்தைப் பற்றியோ, அது தன் தலைக்கு எவ்வளவு அவசியம் என்பது பற்றி யோ ஒன்றும் தெரியாது.

ஓணம் எங்கேயிருக்கிறது என்று தெரியுமா? அது என்ன என்ருவது தெரியுமா? மனித அறிவு கொண்டு அதை எட்ட முடியுமா? சிவச் செங்கோலேந் திய தவாதிக்கச் செம்மல்கள் மட்டுமே "ஓணம்" என்ற எல்லைக்குப் போக முடியும். அவர்கள் இந்தத் தூல தேகத்தில் இருந்தபடியே, இத் தூல வாசனையை உதறி எறிந்து ஒகவிட்டுவிட்டுப் பிரம்ம விம்ப கோளமாகிய ஜீவ லோகத்தில் பாய்ந்து அளவு கடந்த னெடுந்தூரம் செல்வார்கள். அவ்வாறு செல்லும்போது அங்கே திக்குத் திசை தெரியாத காரிருட் கடலொன்று குறுக் கிடும். அந்தப் பாரப் பரப்புடைய பெருங்கடலைக் கடந்து மேவிச் சென்ருல் அங்கொரு மலை தோன்றும். அம் மலையை அடையும்போது மறலியாகிய எமன் எதிர்ப் படுவான். தவராஜர்கள் அவனைத் தங்கள் தந்திர உத்தியினல் உறவாடி வசப்படுத்திச் சினேகிதம் செய்து கொள்வார்கள். அவன் அதையும் மீறி மூர்க்கத்தனம் செய்தால் அவனேடு கொஞ்ஞுவது போன்ற ஓர் உபா யத்தால் வசியம் செய்யப் பார்ப்பார்கள். அவன் அதற்கும் இணங்காவிட்டால், அவனை அந்த மலையின் உச்சியில் உதைத்துத் தள்ளி மிதித்துப் போடுவார்கள். அந்த மகோன்னத எல்லைக்குப் பெயர்தான் ஓணம்.

18.

இறைவன் இந்த உடலின் வளர்ச்சிக்காக உனக்கு வாயைத் தந்து அதற்கு வேண்டிய உணவிற்கான அண்டங்களை சங்கோப சங்கமாக எங்கும் படைத்திருக்கிறான். உன் ஜீவ தேக வளர்ச்சிக்கு நீ மதி அமுதம் அருந்த வேண்டுமென்று, உனக்குச் செவியைப் படைத்து, அதை வாரி வழங்குவதற்கு ஒரு தேவனுட்டுச் செம்மலையும் அனுப்பி வைக்கிறான் - உன் ஜீவ கூட்டிலே அடைந்திருக்கும் வயதைக் கனக்க வைக்கவும், அங்குள்ள அனல் மாருதிருக்கவும், உன் சுவாசத்திற்கு உணவாக நறுமணத்தையும் படைத்துள்ளான் - இத்தகைய ஜீவ உணவை நீ அருந்துவதற்காகவே நறுமண மலர்களை, அரும்பாடுபட்டு வளர்த்துத் தக்க பருவத்தில் அதற்கு உகந்த வாசனையை யூட்டி உனக்குக் கொடுக்கிறான் - அவ்வளவு அருமையான சிருஷ்டிப் பொருள்களாகிய மலர்களை ஒருவன் பிணாறுற்றத் தீயில் போட்டால் அது என்ன பாதகச் செயல்? அப்படிப் போடுவது அந்த நெருப்பின் கொடுமையைத் தணிக்க உதவுமா, அல்லது அந்தப் பிண நாற்றத்தை மாற்ற உதவுமா? இல்லையே. உன் பெண்டு பிள்ளை சொத்துச் சுதந்திரம் இவைகளை நீ எவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்கிறாய்! உன் அழி பொருள்களின் மீது உனக்கு இவ்வளவு நோட்டம் இருக்குமானால், எல்லாச் செயல்களையும் ஏகமாகப் பார்த்துக்கொண்டிருக்கும் சர்வக்ஞனுக்கு அவனது அருமைப் படைப்பை இப்படித் தூஷிப்பது எவ்வளவு காரமான ஆத்திர மூட்டும்? இறைவனுடைய ஆத்திரம் இவனைச் சும்மாவா விடும்?

அந்த அதிபாதகத்தின் னீளத்தை எம்மால் சகிக்க முடியாமல் தான்,

"ஜீவாவி யுண்ணுதற்கே சீர்மணம லர்படைத்தான்
னரகஎ ரினெருப்பில் னறுமணப்பூ வைப்போடும்
பொல்லாங் ஙறிவே பெருகிவருங் ஙாலம்உஜார்"
என்று ஞம் எச்சரித்துள்ளோம்.

எப்பாடுபட்டாவது னம் கட்டை கடைத்தேறி மீட்படைய வேண்டும். னம்மைப் பெற்ற தாய் தந்நையர்களே யாயினும் இந்ந மெய்ச் செயலுக்கு இணங்ஙவில்லை யென்றால், அவர்களின் உறவை விட்டு ஞம் விலகிக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும், அவ்வரவரின் ஜீவன் கடைத்தேறும் பொருட்டே, மறலி கைதீண்டா னித்திய தேகம் எடுக்கவே இந்நத் தெய்வீக சபையில் சேர்த்துக் கொள்ளப் பெறுகிறார்கள். புருஷன் சேர்ந்நிருக்கிற காரணத்தால் மனைவியையோ மனைவிக்காகப் புருஷனையோ சேர்த்துக் கொள்ளப் பெறுவதில்லையே - இது உங்ஙளுக்கு எப்பவும் ஞாபகமிருக்க வேண்டும்.

19.

தேவ குலத்திலிருந்து னம்முடைய இந்நச் சத்திய தேவ பிரம்ம குலம் பிறந்நது - இதிலிருந்து மூன்றாவது கட்டத்தில் ஒரு குலம் பிறக்கப் போகிறது. அப்போது ஒரு கேவலங் கெட்ட பேடியும் தன்னிச்சையாய் "ஞானும் ஞானத்துக்கு வருகிறேன்" என்று சிங்ஙம் போல் பாய்ந்து வருவான். ஏனென்றால் தொட்டவுடன் தேவத் தங்ங உடலாய் இவனது தூலம் மாறிவிடும் அற்புதச்

செயல் நிகழப் போகிறது. அதைக் கண்டால் எவனும் ஆசையுடன் ஓடோடி வருவான். நம் போகும் பாதையிலே இப்படி ஒரு சந்திப்பான காலம் வரப்போகிறது.

தங்கமாக்குவது என்றால் என்ன? பிரதானமானது அறிவுதானே. படிப்பே இல்லாத ஒருவன் காலமெல்லாம் ஒரு யசமானனுக்குக் கையேந்திக்கொண்டிருக்கிறான். அவன் இங்கே வந்து சார்ந்து படிந்நதும் அவன் வாக்கிலே ஒரு புது மணம் பூக்கிறது. அதற்கு முன் மிகப் பெரிய மனிதர், மிகப் பெரிய படிப்பாளி என்று எண்ணியிருந்த தன் எசமானனே திகைக்கும் படியான முறையிலே பேசுகிறான் – இவன் பேசுவதைக் கேட்டு அந்த எசமானனுக்கோ திட்டு முட்டு அடிக்கிறது. “இவன் ஒன்றுமே தெரியாமலல்லவா இருந்நான் – இப்போது நம்மையே மடக்கி மடக்கிப் பேசுகிறனே. முன்னே நம்மை வணங்கி விட்டு, நம் விபூதி கொடுத்தால் வாங்கிப் பூசிக்கிட்டு ரொம்பப் பணிவாயிருந்நான். இப்ப என்னடா என்றால் உங்களுக்கு அசலான விபூதி தெரியுமா, அசலான ருத்திராட்சம் தெரியுமா என்கிறன். உயிரைப் பிடுங்கறாப்போல அல்லவா கேள்வி கேட்கிறன். என்ன சங்கதி என்று தெரியவில்லையே - தலைப்பாகை வேறே கட்டிக்கிட்டிருக்கான். ஓகோ, மெய்வழிச் சாலைக்குப் போய்விட்டு வந்திருக்கிறன், அதான் இப்படிப் பேசறன்– அங்கப் போனாலே இப்படித்தானய்யா ஆயிடறாங்க” என்று உன்னை முற்றிலும் வேறு ஆளாக நினைத்துப் பேசுகிறன். ஆகவே, கவனிப்பாரற்று மிதிபட்டுக் கிடந்த ஒரு ஓட்டாஞ்சல்லி தங்க மாக்கப் பெற்றதுபோல், நீயும் இங்கே

எம் கையகத்தில் ஆக்கப்பெற் றிருக்கிருய் – அங்கே இதைவிடப் பெரிய பெரிய பள்ளிக்கூடங்கள் இருக்கின் றனவே, அங்கெல்லாம் படித்த படிப்பினலே இப்படி ஆகிவிட முடியுமா? எப்பேர்ப்பட்ட படிப்பாளியா யிருந் நாலும் பொய் வேடதாரிகளேயும், சோம்பேறி வீணர் களேயும் பெரியோர்கள் என்று னம்புகின்றவன் தானே னீ? உன் அப்பன், பாட்டன் எல்லோரும் அப்படித் தானே இருந்நார்கள்? இந்ந எல்லேக்கு வந்ந பிறகு தானே - “னம்முடைய கண் அன்றைக் கிருந்ந கண் ணல்ல, காது அன்றைக் கிருந்ந காதல்ல, னம்முடைய ஞடி னரம்பெல்லாம் அன்றைக்கிருந்நவை யல்ல” என்று னீ உணரும்படி அவற்றை யெல்லாம் மேலானவை களாக மாற்றிப் படைத்த பிறகுதானே - அந்ந வேட தாரிகளின் குட்டு உனக்குத் தெரிந்நது. அப்படி அல் லாமல் பெரிய படிப்பாளி என்று, தான் முன்னே அஞ்ஞிக்கொண் டிருந்நவனே ஒரு ஞேஞ்ஞாஞக இருந் நவன் போட்டு ஏறி மிதிக்க முடியுமா? சர்வத்துக்கும் எசமாஞயிருப்பதைத் தனக்குள் தானே ஒருவன் தெரிந்நு கொண்டதால்தான் அந்ந ஊட்டம், அந்நத் திடம் வருகிறது.

உன்னே அவன் வேறே பிறப்பாக னினேக்கிருனே. இந்நத் தேவப் பிறப்பைப் பெற்றதிலிருந்நு அப்படிப் பட்ட னினேப்பு உனக்கு எப்போதாவது வந்நதா? இதன் உன்னதத்தை ஏன் னீ னினேத்துப் பார்க்கிற தில்லே? இதை னீ சாதாரணமானதாக னினேப்பதற்குக் காரணம் கூட உனக்குத் தெரியாது. அதுவும் ஞம் சொன்ஞல்தான் தெரியும். ஒருபாடும் படாத உனது

தலைக்கு இது இனமாக ஏற்றப் பெற்றுள்ளதால்தான், இந்நப் பிரம்மாதிக்கச் செயலின் அருமை தெரியாமல் போய்விட்டது.

அந்த நினைப்பு உனக்கு வராமைக்கு ஒரு உவமானம் சொல்லுகிறோம். ஒரு மாடு மேய்க்கிறவன் மகனுக்கு என்ன புத்தி வரும்? வழியில் முழங்கம்பு கிடந்நாலும் தாத்துக்கோலுக்கு ஆகுமென்று பொறுக்கி எடுத்து வைப்பான். அதே சமயத்தில் ஒரு அரசனுடைய மகனுக்கு என்ன புத்தி வரும்? இந்த மாதிரி உடை உடுத்தலாம், அந்த மாதிரி வாகனம் ஏறிப்போகலாம், இந்த ஆபரணம் அணியலாம், அந்த அலங்காரம் பண்ணிக் கொள்ளலாம் என்ற எண்ணத்திலேயே இருப்பான்- யாரோ ஒருவருடைய இரக்கத்தால் திடீரென்று நீ ஒரு சிவராஜ குடும்பத்திலே வந்து பிறந்துவிட்டாயே- உனக்கு அந்த அரசன் மகனைவிட ஏற்றமான எண்ணம் வரவேண்டாமா? குலமே வேறேயாக மாறிவிட்டதாலே, மேன்மையானதைப் பற்றி மேன்மையான எண்ணந்தானே உனக்கு வரவேண்டும். அங்கே ஒரு அரசன் வீட்டில் பெற்று வளர்த்த பிள்ளையா, நும் இங்கே பெற்று வளர்த்தது? இல்லையே. சந்திர சூரியா ளனைவரையும் வெளியாக்கிய அக்காணிமுளை ஆறுபடை வீட்டின் சுத்தாவிக் கலாமணி மண்டப ஒத்தாணி முத்தவுசின் உசுவாச நிசவாசக் குகைக் கருவறையில் - வானம் வாவெனக் கூவைப் புதுக் கலவை னறை தூப தீபாலங்காரத்துடனே யல்லவோ நும் இங்கே உன்னைப் பெற்று வளர்த்தோம். அந்த னரப்பிறப்பு வேறே இந்தத் தேவப் பிறப்பு வேறே என்று நீ நினைத்தால்தான் உனக்கு

னிஜமான வீரம் உண்டாகும். அறிவு உண்டாகும். ஐசுவரியம் உண்டாகும். எதையும் காரண காரியப் பொருத்தத்துடனே னினைத்துப் பார்ப்பதுதானே அறிவு. இங்கே வழங்கப்பெறும் மதிச்செல்வம் உன் தலையில் பெருக்கமாக ஏறி, என்ன மதமதத்துப் போயிருந்நால் இதை னீ திருப்பி னினைத்துப் பார்க்காதிருப்பாய்? பத்து ரூபாய், னூறு ரூபாய் போவதை ஒருவன் அலக்ஷியமாய் னினைப்பதாக இருந்நால் அது அவனுடைய என்ன பணத் திமிரராயிருக்கும்?

உங்களுடைய தெய்வத் தனித் தந்நை ஒரு கோடீஸ்வரர் அல்லவா? ஆம். ஒரு கோடீஸ்வரர் மட்டும் என்று னினைக்கிறீர்கள். இல்லை. அவர்கள் னாலு கோடீஸ்வரர் - கோடிகடந்ந விராட்குரு அவர்களே - ஏனெனில் அவர்கள் னாலு கோடி கண்டவர்கள் - னாலு கோடி கண்டவர்களே னாதராகும். முதலில் ஒரு கோடி கண்டதும் தேவ சன்னதங்கள் பெறுவார்கள் - அப்புறம் இரண்டு கோடி, மூன்று கோடி, னாலு கோடி என்று ஏறுவார்கள் - அது என்ன ஈடு இணையற்ற ஏற்றமாயிருக்கும்! கோடி என்பதெல்லாம் பிரம்மரந்நிர எல்லையிலேயுள்ள வெவ்வேறு தலங்கள் - அழியாத் திருப்பாதத்துக் குள்ளேயுள்ள தமர்கள் - அவை ஒவ்வொன்றிலும் கட்டிடங்கள், பண்டக சாலைகள் அதிசயக் குவியல்கள் சங்கஞ் ஞங்கமாக உள்ளன. மிகப் பெரிய ஒரு ஆல மரத்தின் வாது கிளை இலை முதலியவற்றை அதன் வித்தினுள்ளேயே னுழைந்நு காண்பது போல அவற்றைக் காணவேண்டும். ஒரு மரத்திற்குக் கிளை

என்றும் இலை யென்றும் காய் என்றும் இருப்பதுபோல, நாலு கோடி மூன்று கோடி முதலிய தலங்கள் உள்ளன. ஆலமரத்திலே ஒரு வாதைக் காட்டி "அதோ அந்த வாதுக்கு னேரே கண்ணை வைத்துப்பார், அதற்கு மேலே அதோ தெரிகிறதே ஒருகிளை அதன் னுனியி லுள்ள துளிரிடத்தில் காய் வரப்போகிறது" என்றால், கொஞ்சனேரம் பேந்தப் பேந்த விழித்துவிட்டுப் பிறகு, என்னமோ எதற்கும் ஒரு ஆமாம் போட்டு வைப்போம் என்று, 'ஆம் தெரிகிறது' என்பான். அதுபோல உன்னை வம்பிலே பிடித்துத் தள்ளிக் கொண்டுபோய் ஒரு எல்லையில் னிறுத்தி "அதோபார், அதுதான் பாத னிலை – அதோ அங்கே தெரியுதா" என்றோம். னீயும் ஆமாம் போட்டாய் – அல்லாமல் அதன் பூரண எழிலையா கண்டாய்?

அதுமட்டுமா – அமெரிக்கக் கோர்ட்டிற்கு ஆத்மாவைப் பற்றி, னம் கடிதத்தில் 'ஆத்மாவை உனக்குக் காட்ட வேண்டு மென்றால், உன்னை ஜீவ தேகத்தில் கொண்டுபோய் னிறுத்தி, அதோ பார் காரண தேகத்தில் ஆத்மா இருக்கிறது எனக் காட்ட முடியும்' என்று எழுதினோமே, அப்போது னீ என்ன னினைத்தாய்? சபையோர்: இதெல்லாம் னமக்கு இப்பத் தெரியவில்லை - தெரிவிக்கும்போது தெரிவிப்பார்கள் என்றுதான் னினைத்தோம்.

ஆண்டவர்கள்: (இள னகை பிறங்க) னீ தெரியாது என்றால், "டேய் பொய்யா, னும் தந்தை உண்டு விட்டு இல்லை யென்று சொல்லுகிற வஞ்சகா" என்று தான் சொல்லுவோம். ஏனென்றால் னும் உனக்கு முன்ன

மேயே இதைச் செய்தாயிற்று. நாம் உனக்கென்று இறக்கி யருளிய அந்நப் பிறவானுட்பிறப்பு இரவிலேயும், அடுத்து திருவடி னிலையை அறிவித்த போதும் இதை உனக்கு அறிவித்தாயிற்று.

இது ஏன் உனக்கு அப்போது விளங்கவில்லை என்றால், அப்போது உனக் கிருந்த அறிவு அவ்வளவுதான். நாம் உன்னை ஒவ்வொரு எல்லையில் ஏற்றி வைக்கும்போது னீ அங்குச் செல்வதில்லை. 'உன்னால் அங்கு செல்லவும் முடியாது. ஏனென்றால் னீ உன் தூலத்துக்கும் இந்நப் புறத்திலேயே அதாவது வெளியிலேயே இருக்கிறாய். தூலத்திலே னினைவு வைத்தாலுமே போதும். பிணி வராதே. ஆனால், உன் பார்வை கேள்வி எல்லாம் வெளியேதான் போகிறது. உன் னினைவு உலாவுகிற எல்லைகளெல்லாம் நோய் சஞ்சரிக்கும் எல்லைகளே. அதனால்தான் உன் உடலிற்குள் வியாதிகள் சரசரவென்று னுழைகின்றன. எம் முன்னர் வந்து இருக்கும்போது தான் உன் னினைவு வெளியே ஓடுவது மாறி உள்ளே னுழைகிறது. சுவாசம் ஒடுங்கிஒட ஆரம்பிக்கிறது - புதுப்புது எல்லைகளில் அறிவு பூத்து னிற்கிறது - அந்நத் தெய்வீக எல்லைகளைப் பற்றி னீ சும்மா வாயிலே பேசுவதோடும் அதிசயமாக னினைக்கிறதோடும் னின்று கொள்ளுகிறாய். அப்படியிருந்நும் உன் ஜீவ தேகத்துக்கு அப்பா லுள்ளனவற்றையும் நாம் உனக்குக் காட்டுகிறோம். அதாவது அந்ந அரிய வித்தைக் காட்டி, அதைப் பிரித்து, அதனுள்ளே முதலில் அடிமரத்தைக் காட்டிப் பிறகு ஒரு வாதைக்காட்டி, ஒரு இலையைக்காட்டி,

அதிலுள்ள ஒரு துளிரைக் காட்டி, இப்படியே மேலும் மேலும் காட்டிக்கொண்டு போகிறோம். நீயும் சிரமத்தோடு எட்டிப் பார்த்து வருகிறாய் - அப்படிக் காட்டியதை மறுபடியும் சொன்னால்தான் விளங்குகிறது. ஆனால் நீ எம்மிடத்திலேயே அடுத்திருந்து பலனும் கேட்டுப் பழகுவதில்லையே - அப்படிப் பழகுவாயானால் அந்நப் பரம வித்தின் பல வாது கிளை இலை தளிர் பூ காய் பழங்களும் ஒவ்வொன்றுக்க் காட்சிப் பொருளாக உனக்கு வரும்.

நாம், நம் தாயின் கருவறையி லிருக்கும்போது அங்கு நடந்த ஜீவ பெருக்காதிக்கச் செயல்களை ஒவ்வொன்றாக எண்ணிப் பார்த்ததுண்டா? நம் ஜீவனின் வல்லபச் செயல் விளைவுதானே நம்முடைய இந்நத் தூலம் - அங்கு நிகழ்ந்த அற்புதச் செயல் வரிசைப் பாட்டினை யாரும் எண்ணிப் பார்க்க முடியாது. தாயின் கருவறையில் இத்தூல தேகத்தைக் கட்டிய எல்லாச் சாமான்களும் இருக்கின்றன. அவற்றில் காதைக் கட்ட ஆகும் சாமான்கள் மூக்கைக் கட்டுவதற்கு உதவுமா? உதவாது - நாக்கைக் கட்ட உதவும் சாமான்கள் பல்லைக் கட்டுகிறதற்கு ஆகுமா? ஆகாது. மோவாய்க் கட்டையைக் கட்ட ஆகும் சாமான்கள் நெற்றியைக் கட்டுகிறதற்கு உதவுமா? உதவாது. இப்படியே வேறு வேறான பல பலவாம் அகப்புற அங்கக் குலங்களுக்கு வேண்டிய கோடிக்கணக்கான சாமான்கள் அங்கு தாயின் கருவறையில் இருக்கின்றன. ஆனால் அவை யாவும் செயலில்லாமல் இருக்கின்றன. அப்படி யிருக்கும்போது -

உன் தகப்பனிடத்தில் குடியிருந்த ஜீவவித்து அங்கு வந்து பாய்ந்ததும் - அந்த எஜமானர் எல்லாவற்றையும் தன் திட்டப்படி ஏவி வீச - எல்லா அசைவு ஒசிவுகளோடு இந்த மனித தூலமாகிய, யாரும் கட்டமுடியாத திரு மாளிகை, வெகு வேகமாகக் கட்டி முடிக்கப் பெறுகிறது. ஜீவ வித்தாகிய அந்த எஜமானர் வந்து தட்டி எழுப்பி ஏவுகிறதற்கு முன் அங்குக் கருவறையிலிருந்த சகல சாமான்களும் சக்திகளாகிய சகல கருவிகளும் செயலற்றவைகளாகவே உறங்கிக்கிடந்தன - ஆனால் எஜமானர் வந்ததும் ஒவ்வொரு பக்கத்திலும் ஒவ்வொரு ஆளாக நின்று, கோடிக்கணக்கானபேர் மகா சுறுசுறுப்போடு இந்த அருமையான கட்டிடத்தைக் கட்டி முடிக்கிறார்கள். துப்பாக்கித் தோட்டாவில் இருக்கும் கருமருந்தானது, எதிர்ப்பட்டதைக் கிழித்தெறியும் வல்லபமுள்ள ரவையை, எப்படி மகா வேகங்கொண்டு உந்தித் தள்ளிச் செல்லுகிறதோ, அது போல இந்த ஜீவவித்து ஒரு பரமாணுவை மகா வேகத்துடன் கொண்டுபோய்க் கருவறையில் சேர்த்து இவ்வளவு வேலையையும் பார்க்கிறது. இப்படி நடைபெறுகிற மனித சிருஷ்டியின் காரண காரியங்கள் யாருடைய நினைவுக்காவது எட்ட வருமா?

அந்த ஜீவவித்திலிருந்த பரமாணுவாகிய பிரணவ சுவிட்சானது மகா மகா சுத்தம் பொருந்தியது. தன்னை யறிந்து தவமுறையில் ஏறும் வல்லபம் பெற்ற மெய்ஞ் ஞானிகளின் வானனுட்டு வேலைக்கும் அந்தப் பரமவித்துத் தான் உதவி நிற்கிறது - இன்னும் அது அவர்களின் காரண தேக மகா காரண தேக அதிவல்லபச் செயல்

களாகவும் விளங்கி நிற்கிறது - அதைச் சந்தித்து அதன் முழுப்பலனைப் பெற்றவர்களே சன்னதப் பார வான்கள்.

இந்த ஒரு கால்நாழிகை நேரம் இங்கு இல்லாத வர்களுக்கு என்ன நஷ்டம் பார் - இந்த விடிவு, இந்தத் தேவரகசியம் எப்பவாவது தெரியவருமா? இது ஒரு கால்நாழிகை நேரமா? ஒரு யுக மல்லவா? அதனால்தான் "களத்திலே வந்த மகிழ்ச்சியெல்லாம் காத்திருந்த வனுக்கு" என்றும், "நீர்த்துறையும் அம்பலமும் காத் திருந்தவனுக்கு" என்றும் சொல்லப் பெறுகின்றது.

காரண, மகாகாரண வல்லபங்கள் எல்லாம் இந்த மனுத் தூலத்தில் மட்டும்தான் உள்ளன. ஆகவேதான் ஈசனை மனுவுக்குச் சமமாக ஞானிகள் நினைக்க மாட் டார்கள். ஆனாலும், 'ஈசன்' என்பது எட்டி எண்ண முடியாத மகாப் பரிசுத்தமான ஆவியாதலால், அந்தச் சுத்தத்தைப் பற்றிப் பெருமையாக நினைப்பதே உன் அசுத்தத்தைப் போக்கும். தூலத்தை விட்டு நிற்கும் பரிசுத்த ஆத்மாவே சிவமாக இருந்தாலும், மனுவினிடம் பொதிந்துள்ள அதிசயாதி வல்லபச் செறிவைப் பார்க்கும் போது, ஈசனை மனுவுக்குச் சமமாகச் சொல்லவே முடி யாது. மனுஈசன் என்று வேண்டுமானால் சொல்லலாம்.

மனுவுக்குள்ள வல்லபங்கள் வேறு எந்த ஜீவ ராசிக்கும் இல்லை. மாட்டுக்கு இல்லாதது மனுவுக்கு என்ன இருக்கிறது என்று சொல் பார்க்கலாம் - இதோ இந்த விரல், (ஆண்டவர்கள் தங்கள் ஆட்காட்டி விரலை அசைத்துக்காட்டி) இந்த அளவுக்குள் தானே இது ஆடும்.

மாட்டுக்குள்ள ஆத்மாவின் வல்லபமும் அவ்வளவுதான். ஒரு சிறு எல்லைக்குள்ளேயே அதன் ஆத்மா சஞ்சரிக்கிறது - ஆனால் மனித னினைவோ அண்டாண்டங்களையும் காலகாலங்களையும் எட்டிப் பாய்கின்ற வல்லப முடையதாயிருக்கிறது.

இவனது ஜீவாத்மா இவ்வளவு வல்லபத்தோடு இருந்நாலும், அது பரமாத்மாவை எட்டமுடியாது. பரமாத்மா இவனுக்குள் இருந்நாலும் அது இவனுடையதல்ல. பரமாத்மா இவனிடத்தில் இல்லை என்றுதான் அர்த்தம். பரமாத்மாவே இரக்கங்கொண்டு தூலத் திருமேனி தாங்கிவந்து அணைத்து அருகிருத்தித் தொட்டுக் காட்டி அறிவிக்கும்போதுதான் தன்னிலிருக்கும் பரமாத்ம னிலையை இவன் அனுபவிக்க முடியும். அதுவும், எப்போதும் அல்ல - அவர்கள் தொட்டுக் காட்டுகின்ற அது னேரம் மட்டும்தான் அனுபவிக்க முடியும்.

ஒரு கோடியைக் கைபோட்டாலே சன்னத வல்லபங்கள் கைவரவாகின்ற தென்றால், நாலு கோடியையும் தன் வாடாத தவத்தால் எட்டிக் கைபோட்டுள்ளவர்களின் வல்லபம் என்ன அருங்காரண னிறைவாயிருக்கும். அவர்கள்தான் இறுதி னீதி னடவினுக்காக இக்காட்டகத்திற்கு இது காலம் வந்துள்ளார்கள்.

னீ அவர்களைச் சிந்திக்க, வந்திக்க, பந்திக்க னின்றால் காரணதேக, மகாகாரணதேக வல்லபங்கள் உன் கையில் செயல் அளவில் வந்து பலன் அளக்க னிற்கும். ஆனால், எமக்கு அத்தேகங்கள் மாறு அதிசயக் காட்சிப் பொருளாக விளங்கி னிற்கின்றன. செயல்

அளவில் னீ அவற்றை உணர னிற்கும் அளவுக்கும், ஞம் னேரே பொருளாகப் பார்க்க னிற்கும் அளவுக்கும் உள்ள வித்தியாசம் எப்படி யிருக்கிறதென்றால், னிழலுக்கும் அதைத் தருகின்ற பொருளுக்கும் உள்ள வித்தியாசமா யிருக்கிறது. எமக்குக் காட்சிப் பொருளாகத் துலங்கிக் கொண்டிருக்கிற அது, உன் அறிவைக் கொண்டு கூர்ந்து பார்க்கும் போது, னிழல் போல அதன் செயல் மட்டும் தெரிய னிற்கிறது. ஜீவதேகத்தில் உள்ளவர்களுக்குக் காரணதேகத்தில் உள்ளவை பொருளாக இல்லாமல் செயல் அளவில் மட்டும் அறியப் பெறுகிறது- அதே போல, காரணதேகத்தில் உள்ளவர்களுக்கு, மகாகாரணதேகத்தில் உள்ளவை பொருளாக இல்லாமல் அவற்றின் செயல் மட்டும் உணர னிற்கிறது.

மனுத்தூலத்தில் இவ்வளவு வல்லபங்கள் இருந்தும் அவற்றைக் கைபோட்டவர்கள் ஞம் ஒருவர்தான். "முகார விந்த பேத விந்து ஞாதி இன்பனுச் சூடாகர சப்த சப்தாதிய சாயல்களும்" என்று னம் ஆதி மான்மியத்தில் கூறியிருக்கிறோமே. அதன்படி இந்த மனித குலம் ஒரே அச்சிலிருந்து உண்டாயிருந்நாலும் - ஒருவருக்குத் தரப்பெற்றுள்ள கருவிகளனைத்தும் மற்ற எல்லோருக்கும் தரப்பெற்றிருந்நாலும் - எல்லோரும் ஒரே மாதிரியாகவா இருக்கிறார்கள்? ஆளுக்கு ஆள் வித்தியாசம் இருக்கிறதே - கண் காது மூக்கு முதலியன எல்லாம் ஒன்றுபோலவே தேகத்தில் முகம் என்ற ஒரே எல்லையில் அமைக்கப் பெற்றிருந்நாலும், அந்த முகத்தில் எத்தனை சாயல்கள், எத்தனை பேதங்கள் இருக்கின்றன.

சப்தக்குறியை எடுத்துக் கொண்டால் எல்லோரிடமும் அதை உண்டாக்குவது ஒரே கருவிதான், ஒரே அமைப்புத்தான் - அப்படியிருந்நாலும் தொனி ஆளுக்கு ஆள் வேறு வேருயிருக்கிறது - இத்தனை முகாரவிந்த பேதங்ஙளும், சப்த சப்தாதிய சாயல்களும் மனித ரூபத்தின் உள்ளே அமர்ந்நு ஆட்சி புரிந்நுகொண் டிருக்கிற அந்நத் தேவ சுவிட்சின் அகம் புறக் கிரண வீச்சுக்களே ஆகும். அத்தகைய அமலாண்மை ஆதியை, பிணை னிகரில்லாப் பெருவான் கடையை மனித உடல் பெற்ற ஒருவன், இந்ந உடல் இருக்கும்போதே கைபோடவில்லை யென்ருல் அவனை ஞய் னரி என்றுகூட வேதம் சொல்லாது - மலத்தில் புழுத்த ஒரு புழு என்று கூடச் சொல்ல அது சம்மதிக்காது. ஏனெனில் அவையெல்லாம் செத்தபின் பேயாகி னரக அவஸ்தைக்குப் போவதில்லையே - புண்ணிய பூமியாகிய னம் தேவ பூமிக்கு னேர் கீழே பாதாளத்தில் இருக்கும் ஞக லோகத்தில் இருந்நு வருகிற சண்டாளச் செயல்களைப் பெரிதாக மதித்து விரும்பி னடை உடை முதலிய எல்லாவற்றிலும் மாறி னடக்கிறவர்களின் அறிவை, 'அறிவு' என்று சொல்லக் கூடாது. 'அழிவு' என்றுதான் சொல்ல வேண்டும்.

முன்வந்ந செம்மல்கள் தங்ஙள் குருகொண்டலிடம் மெய்ப்பொருள் பெற்று ஒருமுகக் கூரோங்ஙத் தவத்தின் பால ஒட்டி னின்று பனிரண்டு பதின்மூன்று வருடங்ஙள் ஆகும்போது, முத்தொழிலாதிக்கம் அவர்களின் கைக்கு வரும் - பலரும் அதோடு போதும் என்று னின்று கொள்

வார்கள் - ஆனல் நாம், சென்ற எழுபத்திரண்டு ஆண்டு களாக இடைவிடாமல் ஒரே முழுமுனைப்போடு தவப் பாடுற்று வருகிறோமே - இப்படித் தவம் செய்தவர்கள் யாராவது உண்டா? இல்லை - பாட்டுக்குத் தகுந்த கூலி யுண்டல்லவா? பொழுதுக்கும் உழுகிறவருக்கும் ஒரு நாழிகை உழுகிறவருக்கும் கூலி ஒன்று? கொஞ்ஞும் கொஞ்ஞும் கூலியாக இருந்தாலும் கூட - இன் னெடுங் காலத் தவவரவு என்ன பரப்புடையதாய் திமுதிமுத்து நிற்க வேணும் - அதன் பாரப் பரப்பை எம்மாலேயே அளக்க முடியவில்லை - இன்றைக்கு நாம் ஏறிநிற்கும் தவாதிக்க முகட்டிலிருந்து பார்க்கும்போது, அன்று நாம் எழுதிய மான்மியமும், தேடுகூடகமும் அவ்வளவு சுவை வைத்து எழுதப் பெறவில்லை என்று எமக்குத் தோன்றுகிறது - ஆனால் அவை உங்களுக்கு மிகப் பிர மாதமான அறிவுப் பிழம்பாக இருக்கிறது சரிதான்.

(இத்தேவ வருஷிப்பின் அகமிய அதிசய விரிப்புக்கள் பல எழுத முடியாதபடி விடப்பெற்றன).

20.

ஞான முனை கண்ட முதல் கோட்டிலிருந்து இது வரை, இங்கல்லாமல் வேறெங்கே உயிர்ப்பயிரேற்றும் ஊர் உண்டாயிருந்தது? இல்லை - மற்ற ஊர்களோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இது எம்மட்டு என்று தான் நீ ஸரினைப்பாய். ஆனால் இது இம்மட்டோடு நிற்பதல்ல. இது ஓரளவு பெருகியதும் திடுதிப்பென்று மற்ற அபத் தப் பொய்யெல்லாம் அழிந்துவிடும். பிறகு தான் மட்டும் நிலைத்து நின்று தரணியெங்கும் பரவப்போகிறது.

அதற்கான ஒரு சூக்குமச் சூது, ஒரு கபட சூத்திரம் மனுமுளே கண்ட அன்றே செய்து முடித்தாயிற்று.

மனுப் பூண்டுகள் ஒவ்வொன்றின் தலையிலும் ஒவ் வொரு முளே கிளம்பியிருக்கிறது. அந்த முளேயே அந்தப் பூண்டை அழிக்கப்போகிறது. ஒருவன், தான் பிழைத்துக் கொள்ள வேண்டும், மற்றவன் அழிந்து போகவேண்டும் என்று எண்ணுகிற அந்த அழி எண்ணம் தான் அந்த முளே. அது வேகமாக வளர்ந்து விரைவில் பலன் தரப்போகிறது. ஆனல் பலன்தான் அவனவன் எதிர்பார்க்கும் வண்ண மிருக்காது.

வேர் மேலே வரவேண்டும், தண்டு கீழே போக வேண்டும் என்று எண்ணி ஒருவன் ஒரு விதையை எப் படி யெல்லாமோ திருப்பி வைத்து னட்டானும். முளே மேலே கிளம்பியதும் "ஆகா, வேர் மேலே வந்து விட்டது, னும் எண்ணியபடியே னடந்து விட்டது" என்று அவன் ஆனந்தப்பட்டானும். ஆனல் அந்த முளேயோ ஓரிரு னுட்களில் வில்போல் வளேந்து வேர்ப் பாகம் கீழே போக தண்டுப் பாகம் மேலே வந்துவிட் டது. அவன் எண்ணம் அவனே ஏமாற்றி விட்டது. இது போலவே மனுப்பூண்டின் தலையிலுள்ள அந்த முளேயே மனுப் பூண்டை அழிக்கப் போகிறது. அவன வன் எண்ணமே அவனவனுக்கு எதிரியானல், அதனல் அவனவனுக்கும் வரும் அழிவை யார் தடுக்க முடியும்?

இந்தப் பாரதமாவது இன்னதென்று னீ யூகிக்க முடியாத ஒரு யுத்தியினல் னிகழப் போகிறது. அது

எப்பேர்க்கொத்த யுத்தி என்றால், உண்மையிலேயே மழுங்கி மடிந்து மட்டையாக இருக்கின்ற ஒன்றை, மனிதர்கள் யாவற்றிராளுடைய கண்களுக்கும் மிகவும் கூரோங்கியதாகக் காட்டுகின்ற மகாக் கபடயுத்தி அது. விதையிலிருந்து முளை கிளம்புவதைப் பார்த்திருக்கிறு யல்லவா? அந்த முளை பார்ப்பதற்கு எப்படி யிருக்கிறது? கூராகத்தானே இருக்கிறது? ஆம். அதன் முளை பார்க்கக் கூராக இருப்பினும், அது உண்மையில் அவ்வாறு இல்லை. அது பஞ்ஞிழை போல மடிந்திருக்கிறது. இந்த மடிப்புத்தான் மண்வெட்டி போல மண்ணைப் பிரட்டித் தள்ளி முளை வெளிவர உதவுகிறது. இது இந்த உலகத்துக்குத் தெரியாது. முளை கூரானது என்றே உலகம் முழுவதும் கெட்டியாக நினைத்துக் கொண்டிருக்கிறது. இவ்வாறு மட்டையாயுள்ளதையே கூரானதாகக் காட்டுகின்ற அதே யுத்திதான், மேலே சொன்னபடி மனுவின் தலையில் அந்த ஞச முளையைக் கிளம்பச் செய்துள்ளது. அது யாருடைய யுத்தி என்று நீ நினைக்கிறாய்? சொல்லொணுக் கபடுடைய சோதிப் பெண்ணுவாகிய மார்க்கக்காரியின் யுத்தி அது! இந்த மகாக் கபட யுத்திக்குத்தான் அரபியில் ஹிக்மத் என்றுபெயர். இது அரபு வேதத்தில் மட்டுந்தான் பேசப் பெற்றிருக்கிறது என்று அவன் நினைத்துக்கொண்டிருக்கிறுன். ஆனால் அது எல்லா மறைகளிலும் பேசப்பெற்றுள்ளது என்பதை ும் எடுத்துக் காட்டி விட்டோம். ஒரு வேதத்துக்கே உரியது என்று சொல்லப்பெற்ற ஒவ்வொன்றையும் சகல வேதங்களுக்கும் உரியதாக விளக்கி விரித்துள்ளோம். சாதிப்பூவே

போதிப் பூவாயிருந்நால் தேவ விரி வரிஷிப்பு இப்படி அதிகமாகத்தானே இருக்கும்.

இவ்வாறு பூமியடங்கலுக்கும் இது விரிக்கப் பெறுவது எதற்கென்ருல், மனித குலம் முழுவதுமே தன் உன்னதத்தை யறிந்து உய்யட்டும் என்பதற்காகத் தான். மனிதனுடைய உன்னத வரலாற்றை அறிய வேண்டுமென்ருல் தருக்கினத்திலிருந்து மனிதகுலம் வரை ஒவ்வொரு இனமாகக் கவனித்துப் பார்க்க வேண்டும். அப்படிக் கவனித்துப் பார்த்தால்தான் இறைவன் ஜீவராசிகளை எப்படிப் படிப்படியாக வைத்து மனிதனைமட்டும் எந்த உச்சத்துக்கு ஏற்றியுள்ளான் என்பது விளங்கும். தருக்கினத்திலிருந்து மனிதன் வரையுள்ள எல்லாத் தோற்றங்களும் ஞன்குவகை யோனிப் பிறப்பில் முடிந்நுவிடும். ஆனுல் மனுவுக்கு மட்டும் அடுத்து ஐந்நாவதாகிய தேவ யோனியில் ஏழாவது பிறப்பெடுக்கும் அரிதினும் அரிய வாய்ப்புத் தரப் பெற்றுள்ளது.

அண்டம் என்ற ஒரே யோனியிலேயே கொசு முதல் அண்டரண்டப் பக்ஷிவரையுள்ள பல சாதிகள் தோன்றுகின்றன. எலி முதல் யானைவரையுள்ள பல வகைப்பட்ட மிருக சாதிகளுக்கும் சினை என்ற ஒரே ஒரு யோனிதான் வகுக்கப்பட்டுள்ளது. இப்படியே ஒவ்வொரு யோனியிலும் பல சாதிகள் உண்டாகின்றன. ஆனுல் தேவப் பிறப்புக்கு மட்டும் தனியாக ஒரு யோனி படைக்கப் பெற்றுள்ளது. இந்த ஒரு சாதிக்கு மட்டும் தனியாக ஒரு வீடு தரப்பெற்றுள்ளது. இந்தத் தனித்த உரிமைப் பேற்றை, இந்தத் தன்னிகரற்ற உன்னதத்தை, இந்தக்

கனங்கொண்ட பெருமிதத்தைக் கைபோடக் கூடிய வல்லபம் பெற்ற இந்த மனிதப் பிறப்பு, அழிவுக்கு வந்தது என்று கொஞ்சமும் நினைக்கவே முடியாது.

உலகத்தில் உள்ள எந்த ஒரு நல்ல விதையும் மண்ணில் போட்டதும் முளைப்பதற்காக ஆத்திரமென்ற வெறிகொண்டு நிற்கும். ஆகவே அது வேகங்கொண்டு வீறுகொண்டு முளைக்கும். இத்தனைக்கும் அது ஓரறிவுப் பிறப்புத்தானே? அதற்கே அவ்வளவு வீறு உண்டென்றால், தெய்வப் பிறப் பெய்தியவன் என்ன வீறு கொண்டிருக்க வேண்டும்? என்ன கனங்கொண்ட அறிவோடு இந்த உன்னதப் பிறப்பின் தகையை வைத்து நடத்த வேண்டும்? புல்லறிவுடையவனு அதற்குத் தகுதியுடையவன்? ஒரு எலியானது தேவ யோனியில் பிறந்து எப்போதாவது தேவப் பிறப்பை அனுபவிக்க முடியுமா? முடியாதே. அதை நும் வம்பிலே பிடித்து இழுத்து ஆக்கி வைத்தாலும் அது ஓடவே ஓடும். அந்த எலியைப்போன்றவர்கள்தான் இதைவிட்டுப் போனவன்களெல்லாம். கனங்கொண்ட அறிவுடையவனுக்குத்தான் இத்தேவப்பிறப்பை நிகரில்லாதது என்று மதிக்க வரும். அவனுக்குத்தான், கடவுள் எப்பேர்க்கொத்த காருண்யக் கடலாக இருந்தால் நம்முடைய இந்தப் பீத்த உடலில் வந்து குடியேறுவார் என்று உருக்கமுடன் எண்ணிப் பார்க்கவரும்.

எலி முதல் யானைவரையிலுமுள்ள பல சாதிகளுக்கும் சினை என்ற ஒரு யோனிதான் என்று கண்டிப்பாக விதித்து விட்டு, இந்தத் தேவ சாதிக்கு மட்டும் தனித்த ஒரு யோனி தந்தது என்ன தனிப் பெருங் கருணையாக

இருக்கவேண்டும்? யோனி என்றாலும் எப்பேர்க்கொத்த யோனி! மாசடராத, இரத்த வாடையே யில்லாத, புலால் மணம் அண்டாத, தனித்த தொரு யோனி. அது மகா சுத்தாதி சுத்தம் கொண்டது - மருவற்ற மாசற்ற மாணிக்கச் சுத்தம் பொருந்தியது. அதில் அழிவென்பது வந்து துளிகூட ஒட்ட முடியாது. அதன் அழகோ இனிக்கிற அழகு, மணக்கிற அழகு. அதன் ஒளியோ மாணிக்கப் பேரொளி.

மாணிக்கம், மாணிக்கம் என்று சொல்வார்களே தவிர, இந்த உலகத்தவர் எவரும் எந்த மாணிக்கத்தை யும் கண்டிருக்க மாட்டார்கள் என்று எமக்கு நிச்சய மாய்த் தெரியும். ஆகவே அதன் பேரொளி வல்லபத்தை உனக்காகச் சொல்லுகிறோம். வைரம் ஒன்றை எடுத்து இளஞ் ஞாடாகத் தேய்த்துவிட்டுப் பார்த்தால் அதன் சுத்தம் அதில் பட்டை பட்டையாக வேறு வேறு டாலுடன் ஒளி வீசும். அந்த ஒளி வீசும் பட்டையைப் போல் கோடி மடங்கு ஒளி கொண்டது மாணிக்கம். இவ்வளவு பேரொளி கொண்டதே தவிர, தன்பால் உயிரை இழுக் கும் மணமோ, உயிரை ஒட்ட வைக்கும் இனிப்போ அத னிடம் கிடையாது. இந்த உலக மாணிக்கம் இத் தகையது தான். ஆனால் அந்த அக உலகத்து ஜீவ மாணிக்கமோ மணக்கின்ற மாணிக்கமாகவும் இனிக் கின்ற மாணிக்கமாகவும் உளது. அதன் பேரண்டப் பெரு மணத்தில் சிறிதளவு நீட்டினாலும் அது உன் னுசியைப் பிளந் தெறிந்து விடும். அதன் இனிப்போ அளவிடற் கரியது. உலகின் இனிப்புக்கள் அவ்வளவை யும் திரட்டினாலும் அந்த ஜீவ மாணிக்கத்தின் இனிப்

பில் கோடியில் ஒரு பங்கு இருக்குமா? இருக்காது. இன்னும் அதன் பேரொளியும் பேரழகும் பெருமிதப் பரிசுத்தமும் வருணனைக் கெட்டாத பெரும் பாரப் பரப்புடையவை. காலமெல்லாம் ஈனச் செயலையே இவன் பழகிக் கொண்டதால் அந்தப் பெருமிதத்தை எட்டு மளவுக்கு இவனறிவு னீளமாக வளரவில்லை. இவனறிவுக்குத் தனித்த ஒரு பரிசுத்த விளைவு கொடுத்து வளர்த்தால்தான், அதை அந்தச் சிவ மாணிக்கப் பரிசுத்தத்தில் ஒட்டிப் படியவைத்து வளர்த்தால் தான், இவனறிவு எட்டாப் பெரு னிலைகளுக் கெல்லாம் இவனை எட்டும்படி வாரித் தூக்கும்.

உன்னதம் என்னப்பெற்ற எல்லாவற்றையும் இந்தத் தேவப் பிறப்பே ஒருசேர வாரிக்கொண்டு விட்டதால் அதற்குச் சமத்துவமானது வேறொன்றும் இல்லை. ஆகவேதான் அதற்குத் தனித்த யோனி தரப் பெற்றுள்ளது. இந்தத் தெய்வீகப் பிறப்பின் உன்னதத்தை இவன் எண்ணிப் பார்க்கட்டும் என்றுதான் இத்தனை கோடி கோகுலங்களையும், இன்னெடுங்கால காலத்தையும் இறைவன் படைத்தான்.

இன்னெடுங்காலம் என்றதும்,னமக்கு ஆதினுள் னினைப்பு வருகிறது. இன் னிலவுலகில் முதன் முதலாகத் தெய்வ னீதிச் செங்கோல் ஓச்சியது சைவம்தான். வந்த வந்த சமயங்கள் அனைத்தையும் விட மிகவும் கூரோங்கியதும் அந்த ஆதி சைவம்தான். அதை அடுத்து, சிறிது காலங் கழித்து உலகத்தில் மனித அறிவு கொஞ்சம் கட்டையாகப் போய்விட்டதால், அதற்கேற்றபடி கூர்மையைக் கொஞ்சம் குறைத்து வைண

வத்தை எடுத்துவைத்தார்கள். ஆனால் மனுவோ சைவத்தைவிட வைணவம்தான் மேலானது என்று னினைத்துக்கொண்டான். வைணவ குலாதிபர்களும் சைவத்தைவிட வைணவம் மேலான தென்றே அறிவித்தார்கள். ஏனென்றால் அந்நச் சரக்கைவிட இந்நச் சரக்கு உயர்ந்நது என்றால்தான் இவன் இதை ஏறிட்டுப் பார்ப்பான். அதற்கு இது மட்டமானது என்றால் திரும்பிக் கூடப் பார்க்காமல் போய்விடுவான். அதற்கு இது சமமானது என்று சொன்னாலும் கூட ஒருதரம் திரும்பிப் பார்த்துவிட்டு அதுதானே இது என்று ஏற்கனவே அதை னிரம்பத் தெரிந்நவன்போலே அலட்சியப் படுத்திவிட்டுப் போவான். மேலும் வைணவத்தை னடத்தவந்ந செம்மல்களுக்கு அந்நப் பெறற்கரிய புதுமைப் பேராதீனமானது சும்மாவா கிடைத்தது? தங்களையே காவு கொடுத்தல்லவா அவர்கள் அதைப் பெற்றார்கள். ஆகவே அதை மட்டமென்று சொல்ல அவர்களுக்கு உளம் துணியுமா? துணியாதே - ஆனால் உண்மையில் னடந்நது என்னவென்றால் அடுத்தடுத்து மனித அறிவு குறையக் குறைய அடுத்தடுத்து வந்ந மதங்களும் அதற்கேற்பக் கூர்மையைக் குறைத்துக் கொண்டே வந்நன என்பதுதான். குறைந்ந அறிவுக்குக் குறைந்ந அளவுதானே கொடுக்கவேண்டும். ஆகவே பாவப் பொலிவு ஏறஏற அதற்குத் தக்கபடி படிமபதத்தில் ஏற்றும் செயலின் கூரும் அடுத்தடுத்து இறங்கிக்கொண்டே வந்நது. அப்படி இறங்கி வரா விட்டால், இவன் மட்டையறிவுக்கு அது எட்டாமல் போய்விடும்.

ஆகவே சைவம்தான் உன்னதத்தின் உச்சியில், முதற்படியில், அதாவது மேல் தளத்தில் உள்ளது. அதையடுத்து ஒன்றின் கீழ் ஒன்ருக மற்ற மதங்கள் வந்தன - கடைசிப் படியில் அதாவது கலிக்கடையில் உள்ளவர்களுக்குத் தக்கபடி வந்ததுதான் இஸ்லாம். உங்களை யெல்லாம் மேலாகப் பிறப்பித்துவிட்டு நும் போய் கடைசிப் படியாகிய அடித்தளத்தில் பிறந்தோம். ஏன்? உன்னைத் தூக்கி விழுங்குவதற்கென்றே நும் அவ்வாறு பிறந்தோம். மேலும், "நும் அதில் பிறந்தால் தான் அதன் குட்டெல்லாம் தெரிந்து அதை எளிதில் மிதித் தேறமுடியும்" என்று எண்ணியே நும் அதிற் போய் அவதரித்தோம். இப்படி நும் பாரவான்களெல்லோருக்கும் கடைசியாகப் பிறந்ததால்தான், 'எம்மைச் சிறுபெண் ஆத்தாள்' என்று அந்தத் தேவமணங் கமழும் நுவினர் தங்கள் செவ்விய திருவாயால் செல்லமாக அழைக்கிருர்கள். நும் இப்படிக் கடைசியில் பிறந்திரா விட்டால் கடையனுக் கெல்லாம் கடையஞகிய கலிக்கடையனுடைய அபத்தப் பொய் அனைத்தையும் கண்டு பிடித்து அவனை அதம் செய்திருக்க முடியுமா? முடியாது. ஆகவே சிறிய பெண்ணுகப் பிறந்தும் பெரிய கபடந் நான் - சொல்லொணுக் கபடுடைய சோதிப் பெண்ணுள் என்று எம்மை வர்ணித்ததின் மர்மம் இதுதான்.

ஒரு மதத்தைவிட அதற்கடுத்த மதம் அதிக மெருகோடு வந்தது என்று நீ இதுவரை நினைத்திருந்த நினைப்பு இப்போது என்ன ஆயிற்று பார்த்தாயா? அதை நும் முற்றிலும் பிரட்டிப் போட்டுவிட்டு, இன்று உனக்கு ஒரு புதுப் பிறப்புத் தந்திருக்கிறோம் என்ருல் அது மிகையாகாது.

இந்த வேத மதியின் வரலாற்றை இன்னெடுங் காலமாக நும் எம் தலையில் சுமையாகச் சுமந்து கொண்டிருந்தோம். எப்போது இதனை இறக்குவது என்று பார்த்துக்கொண் டிருந்தோம். அதை இறக்கிவிட வேண்டும் என்ற எண்ணம் எமக்குள்ளே வேகமாகத் தான் உந்தித் தள்ளிக்கொண் டிருந்தது. ஆனால் உனக்கு அதற்குரிய பருவம் வரவேண்டுமே என்று நும் காத்துக்கொண் டிருந்தோம். இன்றுதான் அதற்குரிய தருணம் வந்து வாய்த்தது. வெளியாக்கிவிட்டோம்.

வரவர அறிவு பெருகிவிட்டது என்று எல்லோரும் சொல்கிறார்களே - அதற்கு அறிவு கூரோங்கி விட்டதென்று அர்த்தம்? இல்லை. வரவர அறிவு மழுங்கிக் கட்டையாகப் போய்விட்டது என்பதுதான் அதற்குப் பொருத்தமான அர்த்தம். எது ஒன்று பெருகினாலும் அதன் நீள அகலம் அதிகமாகுமா, அல்லது கூர்மை அதிகமாகுமா? அதன் நீள அகலந்தான் அதிகமாகும். அப்படி அதிகமாகி விரிந்தால் அதன் கூர்மை கட்டாயம் குறையும். மனித அறிவின் நடை முறையும் அப்படியே தான். ஆகவே இந்தக் காலத்தில் அறிவு பெருகி விட்டதென்பது சரிதான் -

மனித அறிவானது பெருத்துத் தடித்து மழுமட்டையாகப் போய் விட்டதாலேதான் பக்திமான் என்று சொல்லிக் கொள்ளுகிற எவனும், தான் காணாததையும் தன் கையி லகப்படாததையும், போற்றிக்கொண்டு திரிகிறான். ஒருவனுக்குத் தன் கையில் அகப்படாத பொருள் என்ன உதவி செய்யும்? ஒன்றும் செய்யாதே. தன் கையிலே ஒன்று மில்லாத இவன் பிறருக்குப் புத்தி சொல்

லவும், உதவி செய்யவும் ஓடுகிருனே, அது ஏன்? பார்வையில் படாதது என்ருல் அதை என்னவென்று சொல்வது? இல்லாதது என்றுதானே சொல்லவேண்டும்?

தான் பாராததையும் தன் கையிலகப்படாததையும் இப்படித் தீய்த்துக்கொண்டு தொழு தொழு என்று தொழுகிருனே, இவன் அதனுல் என்ன பயன் அடையப்போகிருன்? சீச்சீ! இவனு அந்நச் சுத்தமெலாம் விழுங்கிய சுத்தத்துக்குள், சுத்தத்தையும் அசுத்தம் என்று னிரூபிக்கவல்ல பேராதீனச் சுத்தத்துக்குள் னுழையத் தகுதியானவன்? இல்லை. இவன் தோற்றத்தில் மனுவே தவிர செயலில் பூச்சிதான். இவன் படிப்பும் பதவியும் எவ்வளவு பெரிதாயிருந்நாலும் இவன் செயல் பூச்சியின் அளவேதான் உள்ளது - ராசாப்பூச்சி, மந்நிரிப்பூச்சி, படித்தபூச்சி என்றுதான் இவனைச் சொல்ல வேண்டும். ராசா என்ருல் உன்னதம் என்றுதானே உலகமெல்லாம் எண்ணிக்கொண்டிருக்கிறது. அதன் உண்மை அர்த்தம் தெரிந்நால் அப்படி அதை உன்னதமாக எண்ண வராது. ராசா என்ருல் னேரான அர்த்தம் “எப்போதும் பயமாகிய இருளில் செத்துக்கொண்டிருப்பவன்” என்பதுதான். இந்நச் சாபக்கேடு அந்நப் பெயரில் மறைந்நிருப்பது இன்னெடிய உலகத்தில் யாருக்காவது தெரியுமா? ஏன் தெரியாது? அதுவும், இவன் அறிவிலுள்ள ஒரு சாபக்கேடுதான். இங்கே வந்து எம் கையகத்தான உங்களுக்கு மட்டும் ராசா, மந்நிரி முதலிய லௌகீக உன்னதங்கள் மிகவும் மட்டமாகத் தெரிவது ஏன்? காரணம், உங்களுக்கு மட்டும் அந்நச் சாபக்கேடு னீக்கப்பட்டு விட்டதால்தான்.

சில பூச்சிகளிடமுள்ள விந்தைகளைப் பார்த்தால் மனிதனைப் பூச்சியினும் மட்டமாகத்தான் னினைக்கத் தோன்றுகிறது. வண்டினத்தில் விரியன் வண்டு, மரகத வண்டு முதலிய பலவகை யுண்டு. அவற்றில் விரியன் வண்டின் உடலானது கொழிஞ்ஞிப் பூப்போன்ற அழகிய மஞ்ஞள் கலந்த பசுமை வண்ணத்தில் னீலக் கோடுகளைக் கொண்டது. அதன்மேல் இளவெயில் தட்டின உடனே அவை பளீர் பளீரென்று மின்னல் வீசும். இத்தகைய உன்னதத்தோடா மனிதனை ஒப்பிடுவது! தூ, தூ இவனுக்கு எல்லாப் பக்கமும் பொத்தல்கள். இவனுடைய ஒவ்வொரு பொத்தலிலிருந்தும் ஒரு னரகமே கிளம்புகிறது. இப்பேர்க்கொத்த னரகப் பயல் னன்மைக்குத் திரும்பட்டும் என்றுதானே காலகாலமெல்லாம் அந்த வான வேதாந்தச் சஞ்ஞீவியானது இவன் இறங்கிய இறக்கத்துக் கெல்லாம் தானும் இறங்கிக் கொண்டே வந்தது. இவன் மீது வைத்த பேரிரக்கத்தால் அது அவ்வாறு செய்தது. அதன் அளவு கடந்த இரக்கத்துக்கும் ஒரு எல்லை உண்டல்லவா? யுக யுகாந்தமென்று சொல்லப்பெற்ற உலக முடிவு னாளையிலே அது தன் பழைய உன்னத னிலையாகிய சிவ சிகரக் குரசலங்கிர்தத்துக்கே பாய்ந்து ஏறிக்கொள்ளும். அவ்வாறே இது னாளையில், இந்தச் செந்தமிழ் னாட்டு மெய்வழிச்சாலையில் அது தன் பழைய னிலைக்கு ஏறிக் கொண்டாயிற்று. அதற்கு அடையாள மாகத்தான், "ஆதிசைவமே அசலுக்கெல்லாம் அசலானது – அதுவே உன்னதத்துக்கெல்லாம் உன்னதமானது" என்று இன் னெடுங் காலமாக எங்குமே எழாத ஒலியானது, இன்று இங்கே இவ்வளவு பகிரங்கமாக உரத் தெழு

கிறது. அசலை அசலென்று தெரியக் காட்டி, உன்னதத்தை உன்னதத்துக்குக் கொண்டுவரத்தான் இந்த உத்தியோவனக் கானில் பிரம்ம முளை யொன்று கிளம்பிப் பரந்து படர்ந்து பேரிகை யடித்துக்கொண் டிருக்கிறது. தனது பண்டைப் புராதனத் தனிமுதல் முழுமுதல் னிலைக்கு ஏறவென்றே, இம் மண்பரப்பில் அழிந்து போக னிற்கும் கூட்டத்திலிருந்து இது காலம் தன்னைத் தனியே பிரித்துக்கொண்டுவிட்டது. தன்னது அல்லாதவற்றை யெல்லாம் அது விரைவில் அழிக்க னிற்கிறது. சுத்தமாகிய தன்னதில் அசுத்தமாகிய மற்றது வந்து சிறிதும் கலக்காமல் காவல் போட்டுவிட்டது. ஆகாதது வந்து கலக்குமேல் அப்போதே அதை அழித்துப் போடும்.

21.

தான் பிறந்த மதத்தின்மேல் இச்சை யில்லாதவன் மனிதர்களில் வைத்து மான ஈனமற்ற மூடனுவான் என்ருல் மதத்தையே வெறுப்பவன் மனிதர்களில் வைத்து எவ்வளவு கொடூரமானவனுக இருப்பான். மதத்தின் லஷணம் இன்னதென்றே தெரியாதவன் மதத்தில் முழுனம்பிக்கை யுள்ள பல் வேறு சாதிகளையும் ஆளுவது னியாயமாகுமா? அவனை உகந்தவர்கள் எல்லோரும் னரக வாதிகளாய்ப் போவார்கள் என்பது திண்ணம்.

தான் ஆளுகின்ற ஜனங்கள் எந்தெந்த மதங்களைப் பின் பற்றுகிருர்களோ அவற்றை எல்லாம் னன்கு அறிந்து அவைகளின் மேல் அதிகப் பற்றுள்ளவன்

தான் அவர்களின் ஞயகமாக இருக்க லாயக்குள்ளவன். மதங்களின் லக்ஷணங்களை னன்கு அறிந்து தன் உள்ளத்தில் அவற்றைப்பற்றிக் கருத்துடையவனை பிறகு அல்லவா மக்களை ஆள வேண்டும்? மதத்தின் கண்ணியம் தெரிந்தவன்தான் மதப் பற்றுள்ள ஜனங்களை அரசாளத் தகுதி யுடையவன். மதத்தில் லேசு பாசான ஒட்டுக்கூட இல்லாதவர்களையும் அதில் பூரண சத்திய ஒட்டோடு இருக்கச் சேர்த்து வைப்பவரே ஜன ஞயகம் ஆவார். சர்வ மதங்களையும் முதலில் தான் பூரணமாக உணர்ந்து அதன் பின் பிறருக்கு மத போதனைகளைச் செய்பவரே ஜன ஞயகம். அந்நந்ந மதத்தில் உள்ளவர்களுக்கு அவரவர் மதத்தின் உன்னதங்களை எடுத்துப் பேசி உணர்விப்பவரே ஜன ஞயக மாவார்.

22.

ஞல் வகை யோனியை எடுத்துக் கொள்வோம். ஒரே யோனியிலிருந்து ஆயிரக்கணக்கான லக்ஷக்கணக்கான ஜந்துக்கள் உண்டாகின்றன. சென்ஞ குன்னியிலிருந்து பெரிய சுருமீன் வரையிலும், பறவை யினங்களில் சிறிய ஈ முதல் ஒரு யானையையே தூக்கிச் செல்லும் வலிமையுடைய அண்டரண்டப் பக்ஷி வரையிலும் அண்டம் என்ற யோனியிலே பிறக்கின்றன. அதே போல் சினை என்னப்பெற்ற யோனியில் எண்ணிறந்த விலங்கு வர்க்கங்கள் பிறக்கின்றன. இத்தனை சீவராசிகளுக்கும் சாவு என்பதைப் பற்றிச் சிந்தனையே இல்லை. இது னன்மை, இது தீமை என்று பிரித்தறிகிற எண்ணம் வருவதில்லை. கிடைத்ததைத் தின்னும், வழியிருந்தால் னடக்கும், வழியில்லா விட்டால் னடக்காது. அவை

களுக்கு ஒரு குறிப்பிட்ட எல்லைக்குப் பிரயாணம் செய்ய வேண்டும் என்கிற நோக்கமோ, பாவம் புண்ணியம், காலம் அகாலம் என்பதுவோ இல்லை.

ஆனால் கோடா கோடியான விலங்கினங்கள் உற்பவிக்கும் அதே அனித்திய யோனியில்தான் முடிவில்லா நித்திய வாழ்விற்கான மனிதனும் உண்டாகிறான். நித்தியம் ஒரு எல்லை அனித்தியம் ஒரு எல்லை - இரண்டிற்கும் எவ்வளவு தூரம்? மனுவுக்கு அறிவைக் கொடுத்திருப்பதால்தான், இது நன்மை இது தீமை என்று இவனுக்குப் புலப்படுகிறது. அப்படியிருக்க அந்த அறிவின் வழிக்கு இவன் ஆளாவானா அல்லது இவனுடைய அழிவேலைக்கு அறிவை ஆளாக்கினானா? இவனுடைய அழிவேலைக்குத்தான் அறிவை ஆளாக்குகிறான் - ஏழாவது பிறப்பு எடுக்கவில்லை யெனில் மனிதனுக்கு மட்டும் நரகமாகிய தண்டனை வருதே? கட்டாயமாகக் கச்சைகட்டி இவன் தேவப் பிறப்பு எடுத்தே தீர வேண்டும் என்ற விதி இவன் தலையில் ஏற்றி யிருக்கும் போது இவனது அறிவைத் தன்னுடைய உலக கஷ்ட நஷ்டத்துக்கா பயன் படுத்துவது?

தேவ இனத்தின் பிறப்புக்கு மட்டும் அலாதியாக ஒரு யோனி, ஆவிடை என்னும் மந்திர யோனி, தனித்து எடுத்து வைத்திருந்தால் அது என்ன அருமையானதாக இருக்கும். அந்த மாசு மருவற்ற ரத்த மாமிசம் கலவாத தேவ யோனியையே சைவச் சூல் என்றும், பிரணவச் சூல் என்றும், மூமீன் என்றும், தீன் என்றும் அழைக்கப் பெறுகிறது. இந்த உன்னத அதிவல்லப தேவயோனிப் பிறப்பில் உதித்தனீ, எத்தகைய அளப்பதற்கரிய பெரு

மிதத்திலும், லக்ஷணத்திலும், கண்ணியத்திலும்.இருக்க வேண்டும். ஆனல் னீயோ அதற்கு மாருக, கீழ்த்தர யோனியில் பிறந்நவனிடம், அவனுக்குச் சமமாகப் புழங்நுகிருயே. மேல் பிறப்பிற்கு லாயக்கற்றவனுகக் காட்டு கிருயே. உனக்கு வெட்கமாக இல்லையா?

தன் வசமுள்ள பெருமுதலின் அளவு. இவ்வள வென்று தோராயமாகவாவது தெரிந்திருக்க வேண் டாமா? சுத்தமாய்க் கணக்கிட்டுத் தெரிந்திருக்கா விட்டாலும், னிதானமாக ஐந்நு சாக்குப்பை அளவிருக்கும், ஆறு சாக்குப்பை அளவிருக்கும் என்ருவது தெரிந்திருக்க வேண்டாமா? கொள்ளை போனுல் இவ்வளவுதான் கொள்ளை போயிற்றென்று தெரிவதற்காகவாவது தன்னிடத்திலுள்ளது இன்னது, இவ்வளவு அளவுடையது என்று தெரியாமல் இருக்கலாமா? அப்படி அறிந்திரா விட்டால் இறுதியில் அதற்கு வருகுது எமன் என்னும் சாட்டை.

முடிவில்லா அளப்பதற்கரிய வானனட்டு ஐஸ்வர்யத்தை அனுபவிக்க எழுந்ந துவக்க னளே னீ பெற்ற பிரம்மோபதேச இரவு. அதன் பிரம்மாண்ட னீளம் ஒரே மூச்சில் தெரிய வருவதா? உனக்குத் தேவ பட்டம் சூட்டப் பெற்ற அந்நப் புனித னள் தொட்டு, இறுதியில் உன்னுடைய இந்ந அழிதூலத்தை உதறி எறிந்நுவிட்டு, எமன்பதி கடந்நு அந்ந அழியாத னித்திய முத்தித் தூலம் னீ எய்தும் வரை உபதேசம் னிகழ்ந்நுகொண்டே யிருக்கிறது. இப்போதும் னீங்களனைவரும் அந்ந உப தேசத்திற்குள்ளேதான் இருக்கிறீர்கள். அந்ந ஒரே வீட்டில் வைத்து எப்போதும் ஓயாது உபதேசம் னடந்நு கொண்டே யிருக்கிறது.

உவமைக்காகக் கூறுவோமேயாகில் நீ முன் இருந்த சாதி – 'கல்' - இப்போது நீ இருக்கும் சாதி – 'மாணிக்கம்'. வைரத்தை இளஞ்சூடு வரும்வரை தேய்த்துப் பார்த்தால் அதற்கு நிகரான ஒரு பரிசுத்தம், நீ பழகிய உன் உலகத்தில் காண முடியாது. மாணிக்கமோ அதைவிடப் பரிசுத்தமானது. மாணிக்கத்தை உவமானத்திற்காகக் கொடுத்ததேயன்றி, ஜீவ மாணிக்கத்தின் செயலுக்கு அது ஈடாகாது. ஒரு அரசனுடைய சிரசில் ஏற்றப் பெறுகின்ற தங்கக் கிரீடத்தின்மேல் பொருந்தப் பெறுவது மாணிக்கக் கல். மண்ணிலிருந்து படைக்கப்பெற்றதுதானே கல். அப்படியான எந்தக் கல்லோடும் இணை வைக்கமுடியாத தனித்த குணமுடைய மண்ணை இறுக்கிப் பிடிக்கும் ஆவிப் பசையானது, பரிசுத்தத்தினால் சேர்த்து அழுத்தப் பெற்று, மாசற்ற சுத்தமும் அதி வல்லபப் பிரகாசமும் உடைய மாணிக்கமாக ஆகிற தென்றால் அதன் சிருஷ்டியின் நீளம்தான் என்னே? இந்த நீளம் அறியாவிட்டால் அதனுடைய விலை மதிப்புத் தெரியாதல்லவா!

அந்த அரிதினும் அரிதாகிய ஜீவ மாணிக்கத்தின் பெருமிதத்தை அறிந்ததினால்தான் இந்த இக வாழ்க்கையைத் துச்சமாக எண்ணி, எமது உடல் பொருள் ஆவியை அதற்காகவே தத்தம் செய்து, ஆசான் அவர்களே கதி யென்று அவர்கள் பின்னாலேயே தொடர்ந்தோம். நீயோ ஞானம் என்றாலே சிறிதும் தெரியாமல், அதை அடையவேணும் என்ற இச்சையும் இல்லாது இருந்தவன். அப்படியிருந்த உனக்கு நிஜமான ஞானத்தின் தன்மையை அறிவித்து, எமபடரின் அச்சத்தைக்

கிளப்பி உண்டாக்கி, தடவிச் சன்னதி இருத்தி, மறலி கைதீண்டாதபடி ரக்ஷிக்கும் னிவாரணேயை ஈந்நோம். இவ்வாறெல்லாம், படிப்படியாக உங்களுக்குச் செய்தோமே. எமக்கோ, முன் வந்த செம்மல்களுக்கோ இந்த மெய்ஞ்ஞானத்தின் பெருமையை இவ்வளவு விரிவாக, முற்கூட்டியே எவரும் எடுத்துச் சொல்லிச் செய்துவைக்கவில்லேயே. ஆனல் ஞமோ அதன் னீளத்தின் பெருமிதத்தையும், அது உன் தலேக்கு ஏற்றிவைக்கின்ற மகா மகத்துவமான னித்திய வாழ்க்கையின் சிறப்பையும், இவ்வளவு விரிவாக இரவு பகலாக எடுத்துக் கூறி உன்னே இந்த மெய்வாழ்வில் ஆக்கி வருகிறேம். உனக்குவரும் கொடூர அமளியாகிய எமபடரின் பேராபத்து எம்முடைய ஒரே சொல்லில் பஞ்சு பஞ்ஞாகப் போகும் எனில், அது எவ்வளவு அனுபவ ஆட்சியுடைய, கனம் பொருந்திய, மகா வலிமையுடைய கண்யமான வார்த்தையாக இருக்க வேணும் என்று னீ னினேத்துப் பார்த்ததுண்டா?

அந்த மெய் வாழ்வின் பெருமிதத்தைச் சொல்ல வார்த்தைகளே இல்லே. இந்தப் பூலோக வாழ்வு ஒரு பூனே ரோமத்தைப் போன்ற அற்ப வாழ்வு. இதற்காக இவன் தன் ஆயுளெல்லாம் பாடுபட்டு வீணுகப் போகிருன். இந்த அழியுலக வாழ்வின் பாடும் தேட்டமும் விரிந்து மிகவும் பெருகிப் போனதால் இவன் கண்களுக்கு ஞான பீடங்கள் புலப்படுவதில்லே. ஞாயமாகப் பார்த்தால், இப்படி அவகேட்டுக்குப் போய் விட்ட இந்தத் துச்சனின் முகத்தை அந்த ஞான தாதாக்கள் ஏறிட்டுப் பார்க்கலாமா? பார்க்கக் கூடாது - ஆனலும், அவன் வழிவந்த உங்களே ஏறிட்டுப் பார்த்துப்

பயில்பண்ணி அழைத்து அணைத்து இந்த அழியா மெய்வாழ்வில் ஆக்கினோம் - தான் பெற்ற பிள்ளை ஒரு மொண்டியாகவே இருந்தாலும் ஒரு தாய் அதை எடுத்து முத்தம் கொடுப்பது போல னடந்து கொண்டோம் - இல்லை என்றால் உங்ஙள் கதி என்ன?

ஆதிகாலத்திலிருந்தே வந்தவந்த ஞானச் செம்மல்கள் எல்லோரையும் தலையெடுக்க விடாமல் என்னென்ன கொடுமைகள் செய்து வந்திருக்கிறான்ஙள்! இராஜகெம்பீரத்தில் எமக்கு இழைத்த கொடுமைபோல அன்று அவதரித்த மூன்றாம் வேதத்தரசராகிய ஈசாவெனும் பரிசுத்த கர்த்தரவர்களையும் தலைசாய்க்க இடங்கொடாமல் துன்புறுத்தினான்ஙள் - காத்திமுல் அன்பியா னாயகமாகிய அந்தத் திடகாத்திர புண்ணிய சீலருக்குச் சொல்லொணாக் கொடுமைகள் விளைவித்தான்ஙள் - வைணவப் பேராதீன மகத்தாகிய னம்மாழ்வார் அவர்களை ஒரு புளிய மரப்பொந்தில் இருந்து வாழச்செய்தான்கள் - இன்னும் னம் தமிழ்த் தெய்வமாகிய ஸ்ரீ சுப்பிரமணியரவர்களையும் ஊரில் இருக்க இடங் கொடாமல் பாறை உச்சிகளின்மேல் போய்த் தங்கச் செய்தான்ஙள் - இப்படியே காலகாலம் வந்தவந்த செம்மல்களைச் செவிகொண்டு கேட்கமுடியாத பலபலவாம் துன்பத்திற்குள் ஆக்கினான்ஙள். ஆனால் அவர்களோ, எவ்வளவு கொடூரம் வந்து தங்ஙள் மேல் தாக்கினாலும் கலங்காத திடத்தோடு அதை எதிர்த்து னின்று போராடினார்களே - அப்படிப் போராடச் செய்தது எது? அவர்கள் ஒவ்வொருவரின் கையகத்தும் ஏந்தி வந்த அழியா அறிவுக் கூரேறிய தளாதிக்கச் சிவசக்கர வல்லமைதான் அவர்களை அப்படி எதிர்த்து

னிற்கச் செய்தது. அதன் தனி வல்லமையால் எப்பெருந் துன்பங்களையும் அவர்கள் மிதித்து ஏறித் தாங்கள் கொண்டுவந்த ஜீவரக்ஷிப்புக் காரியத்தை எப்படி யாவது செய்து முடித்தே தீருவது என்று ஒருமுனைக் கூடுரோடு னின்றார்கள் - அத்தகைய மகத்துவ வல்லபத் தைத் தருவதுவே இப் பிரம்மவித்தை. இதனுடைய பெருமையை, அழிதுயர் பெருகி எங்கும் பொங்கி வழி கின்ற இந்த அவகேடான னேரத்தில் உங்களிடம் வெளி யிடாமல் வேறு எப்போது வெளியிடுவது? "வந்த வந்த மெய்ஞ்ஞானச் செம்மல்கள் பிறந்த அதே பரிசுத்த யோனியில் னம்மையும் பிறக்க வைத்ததால் அல்லவா னமக்கும் இத் தேவ வல்லமை வந்தது" என்ற னினை வுப் பூப்பு உங்களெல்லோருக்கும் வரவேண்டும் - இந்த வீறுகொண்ட மன மகிழ்ச்சி யுள்ளோர்கள்தான் மே லோரே யன்றி, இது இல்லாதோர் கீழோரே ஆவர்.

23

னும் உங்களுக்கு ஒரு கதை சொல்லப் போகி றோம். இந்த உலகத்திலே இன்பந் தேடுகிற ஒரு வனைப் பற்றியதே அந்தக் கதை.

ஒருவன் ஒரு பாழ்ங்கிணற்றில் அந்தரத்திலே தொங்கிக்கொண் டிருக்கிறான். மேலே ஒரு கொடிய விஷப்பாம்பு இவன் உயிரைக்கொத்திப்போக மிகுந்த உக்கிரத்தோடு சீறிக்கொண் டிருக்கிறது. இவனுக்குக் கீழே கிடுகிடு பள்ளத்திலே பசியுடன் கொடும் புலி யொன்று, எமனைப் போன்ற தன்னுடைய வலிய பற்களைக் காட்டிக்கொண்டு இவனைப் பார்த்து

உறுமிக்கொண் டிருக்கிறது. மேலே பார்த்தால் பாம்பு, கீழே பார்த்தால் புலி. தப்பிக்கிற வழியே இல்லை. இந்த அபாய அவல னிலையை இவன் சதமென்று னம்பிக்கொண்டிருக்கிற அதே னேரத்தில், இவன் பற்றித் தொங்கிக் கொண்டிருக்கும் கயிற்றை இரண்டு எலிகள் கத்தரித்துக்கொண் டிருக்கின்றன. அந்த வேளையில் "இதோ கயிறு அறுந்து விழப் போகிறதே - கடுவாய் வேங்கைக்கு இரையாகப் போகிறனே - அதற்குள் இந்த னச்சுப் பாம்பும் இவனைத் தீண்டி விடுமே" என்று இவன் மீது ஒருவர் இரக்கங் கொண்டு ஓடோடியும் வந்து தம் ரட்சிப்புக் கரங்களை னீட்டி இவனைப் பிடித்துக்கொள்ளுமாறு சொல்கிறார்கள். இவன் இருக்கும் ஆபத்தான னிலைமையையும் இவனுக்குச் சுட்டிக்காட்டி எச்சரிக்கிறார்கள். ஆனால் இவனோ, அந்த எச்சரிப்பைச் சிறிதும் கவனியாமல், மேலே ஒரு தேன் கூட்டிலிருந்து சொட்டுச் சொட்டாக விழுகின்ற தேனை, மிகவும் பிரயாசைப்பட்டு எக்கி னாவை னீட்டி வாங்கி சப்புக் கொட்டிக்கொட்டிச் சாப்பிடுவதில் சந்தோஷப்பட்டுக்கொண் டிருக்கிறான்.

இதுதான் கதை - இதென்ன வெறுங்கதையா? இந்த உலகத்திலேயுள்ள மனிதர்கள் எல்லோரும் வெகு பிரயாசைப்பட்டுத் தேடி அனுபவிக்கும் இன்பத்தின் லட்சணம் இதுதான். வரப்போகும் னெடிய கொடிய னரகத் துன்பத்தை னினையாமல் அற்பனேர இன்பத்திலே இறைவன் இனமாகக் கொடுத்த இவனது ஆயுளையும் அறிவையும் அழித்துப் போடுகிறான். மேலும் இவனுக்கு வரும் ஆபத்தைப்பற்றி எடுத்துப் பேசக்கூட

றுதியற்ற உலகத்திலே, இவன் தேடாமலே வலிய ஒருவர் இவனிடம் வந்து, இவனுக்கு வரநிற்கும் கெடு கேட்டை எடுத்துச் சொல்லி, அதை விலக்க இடுப்புக் கட்டி னின்ருலும் அவர்களே அலட்சியம் செய்துவிட்டுத் தன் அழி பாதையிலேயே போகிருன். தனக்கு வரும் கேட்டையும் னினையாமல் போகிருனே, அப்படிப்போய் அங்கே என்ன ஐயா இன்பம் அனுபவிக்கின்ருன்? இவன் இன்பம் என்று அனுபவிப்பதெல்லாம் - இறு மாக இறைவன் தந்த இவனது இன்னுயிரைப் போக்கும் இழிசெயலாகத்தான் இருக்கிறது - இவனுடைய சஞ்சீ விச் சீதனமாகிய மூச்சை ஞெடிக்கி ஞெடி துண்டாடிக் கத்தரித்துத் தள்ளுவதாக இருக்கிறது - இவனுடைய வாழ்வெனும் ஜீவதருவைக் கொஞ்சும் கொஞ்சுமாக வெட்டியெறியும் வாளாயுதமாக இருக்கிறது. சாதாரண மாக ஒருவனுக்குக் கடும் உழைப்பு னேரத்தில் ஒரு சுவாசத்துக்குப் பன்னிரண்டு அங்குல மூச்சுத்தான் செலவாகும். கொடிய தூக்க னேரத்தில் கூட ஒரு சுவாசத்துக்கு ஞற்பத்தெட்டு அங்குலத்துக்கு மேல் பாயாது. ஆனல் இவன் சிற்றின்பம் என்று அனுப விக்கும் அது னேரம், இவனுயிரைப் பறித்துப் போடுகிற அளவாகிய அறுபத்திஞலு அங்குல மூச்சு செலவாகிறது. உயிரானது இந்த உடலிலே ஒட்டிக் கொண் டிருப்பது அறுபத்திஞலு அங்குல மூச்சு அள வில்தான். அது, முழுவதும் அந்த னேரம் அறுத் தெறியப்படுகிற தென்ருல் சாவுதானே? னிச்சயமாகச் சாவேதான். ஆனல் இவனுக்குள்ளே ஏதோ ஒரு உஷ்

ணம் இருந்துகொண்டு, போன இவனுடைய மூச்சைத் திருப்பி இழுத்துக் கொள்கிறது. இதில் சற்றேனும் தப்பினாலும் இவன் பிணமாவது திண்ணந்தான். இது தான் ஐயா இவர் உலகத்தில் இன்பம் அனுபவிக்கிற லட்சணம்.

இது இப்படி யிருக்க, இன்னொரு பக்கத்திலே ஒருவன் எப்போது பார்த்தாலும் துன்பம், துன்பம் என்று ஓலமிட்ட வண்ணம் ஆயுளைக் கரைத்துக் கொண்டிருக்கிறான். இவனுக்குத் தொட்டதெல்லாம் துன்பந்தான். பார்க்கப் போனால் ஒன்றுமே யிருக்காது - வெறும் வயிற்றுப் பாடாகத்தா னிருக்கும். அது இல்லாவிட்டால் மகளுக்குக் கலியாணம் ஆகவில்லை, மகனுக்கு உத்தியோகம் உயரவில்லை என்பான் - அல்லது மனைவிக்கு னகைகிகை இல்லை, உடம்பு சரியில்லை என்று ஏதாவது சொல்லுவான். இவனைகப் பார்த்து இவற்றை எல்லாம் தன் முயற்சிகொண்டு எப்படியும் மாற்றிக் கொள்ளலாம் அல்லவா? இப்படிப்பட்ட சிறு சிறு துன்பங்கள் தான் இவனுக்குப் பெரிதாகத் தெரிகிறதே தவிர, எவராலும் மாற்ற முடியாத மகாக் கொடிய துன்பமாகிய மரணம், என்னேரமும் இவனை னோக்கி னெருங்கிவந்து கொண் டிருக்கிறதே - அது ஏன் இவன் மண்டையில் படுவதேயில்லை - எடுத்துச் சொல்லியும்கூட ஏறுவது இல்லை. ஆனால் அடுத்த வேளைக்கு வயிற்றுக்கு இல்லை யென்று சதா ஆலாப் பறக்கிறான்ஐயா! இது எப்படி யிருக்கிற தென்றால், ஒருவனை னல்லபாம்பு கடித்து னஞ்சு தலைக்கு விரைந்தேறிக்கொண் டிருக்கிறபோது அவன் கொசுக்கடிக்குப் பரிகாரந்தேடி ஓடிக்கொண் டிருக்கிறதுபோல இருக்கிறது.

இதுதான் மனிதர்கள் துன்பம் என்று கதறிப் பறவாப் பறந்து திரிவதின் லட்சணமும் இன்பம் என்று தேடி அனுபவிக்கும் லட்சணமு மாகும்.

24.

ஞும் ஒரு காலத்தில் ஒரு பாலேவனத்தின் வழி யாகப் பிரயாணம் செய்து கொண் டிருந்நோம். அப்படிப் போய்க்கொண் டிருக்கும்போது ஒரு ஞள், வழியில் ஒரு பெரிய வியாபாரியைக் கண்டோம். அவர் ஒரு ஒட்ட கத்தின் மீது ஓர் அரிய பெட்டகத்தை வைத்துக் கொண்டு சவாரி சென்ருர். ஞும் அவரைச் சந்தித்துப் பேசினேும். அவரிடமிருந்ந அந்ந அற்புதமான பெட்ட கத்தைக் கேட்டோம். அவர் இரக்கப்பட்டுக் கொடுக்க அதை ஞும் வாங்கிக்கொண்டோம். அதனைத் திறந்து அதனுள்ளே இருந்ந அதிசய பொக்கிஷங்களை யெல் லாம் அறிந்துகொள்ளவிரும்பினேும். ஆகவே பத்திர மாக அவர் சொல்லியவண்ணமே திறந்து பார்த்தோம். என்ன அதிசயம்! அதற்குள்ளே அதைவிட அழகிய பெட்டியைக் கண்டோம். அதையும் திறந்து பார்த் தோம்; அதற்குள்ளும் இன்னெரு சிறிய சித்திரப் பெட் டியைக் கண்டோம். அதையும் திறந்நோம். எங்கெங் நும் யாரும் கண்டிராத எழிலோங்கிய முட்டையொன்று அதற்குள் இருந்நது. எமது தணியாத ஆர்வத்தின் காரணமாக அதனையும் திறந்து ஆராய்ந்து பார்த் தோம். அதனுள்ளே மிகவும் னேர்த்தியாக முடியப் பெற்ற முடிச்சு ஒன்றைக் கண்டோம். எம்முடைய வியப்பு மேலிட்டது. அந்ந முடிச்சினுள்ளே என்ன

இருக்கிறது என்று அவிழ்த்துப் பார்த்தோம். மிகவும் அழகிய கசகசா விதை போன்ற சிறு சிறு விதைகள் அதில் இருந்தன. ஒவ்வொரு விதையினுள்ளும் என்ன தான் உள்ளதோ என்ற எண்ணம் மேலிட்டது. உடனே நாம் ஓர் அண்டரண்டப் பக்ஷியானோம். ஒரே ஒரு விதையின் ஒரு கோடியில் நுழைந்தோம். நெடுங் காலம் பறந்தோம்– நெடுந்தூரம் போனோம்– இன்னமும் போய்க்கொண்டே யிருக்கிறோம். ஆனால் அதன் மறு கோடியைக் காணவில்லை.

25.

(28 - 9 - 67 காலை வெளியானது)

"ஆங்கிரசம் என்ற எல்லையை, யாரும் எட்டி ஏறாத எல்லையை எட்டி ஏறிக் கைப்பற்றியது நேற்று இரவு தான். நேற்று மாலை இருந்த நாம் வேறே, இன்றுள்ள நாம் வேறே. இரவு நிகழ்ந்தது அதிசயாதி அதிசயம். காரணங்களெல்லாம் கடந்த அதிகாரணக் கடல்.

மறை மரம் என்றும் சொல்லலாம். மாறு மரம் என்றும் சொல்லலாம். சந்தான மரம் என்றும் சொல்லலாம். சந்தான மரம் என்பதுதான் அதற்கு முதற் பெயர். இவ்வித நூமங்கொண்ட ஏழு வேத மரங்களுள் - ஆறு, வெவ்வேறு கோணங்களில் ஒரு வட்டத்தில் நிற் கின்றன. கடைசி மரம் துண்டாக நிற்கிறது. கையிலே ஒரே ஒரு ஆயுதந்தா னிருக்கிறது. அதை ஒரே ஒரு தரந்தான் வீச முடியும். ஒரே வீச்சில் வெவ்வேறு எல்லைகளில் உள்ள ஏழு மரங்களையும் அந்த ஒரே ஆயுதம் பொத்துக்கொண்டு வெளியேற வேண்டும்.

இதை எப்படிச் செய்து முடிப்பது என்று நாம் நீண்ட காலமாகவே நினைத்து வந்தோம். இதை உங்களுக்கு எடுத்துச் சொல்லவேண்டும் என்று எம் நினைவில் சதா முட்டிக்கொண் டிருந்தது. ஆயினும் இதுநாள்வரை இதுபற்றி நாம் வெளியே சொன்னதில்லை. இன்றுதான் நாம் அதைப்பற்றிப் பேசுகிறோம். ஏனெனில் நேற்றிரவு தான் அந்த அரும் பெரும் செயலாதிக்க வெற்றி எம் கைக்கு வந்தது. அந்த வேறு வேறு கோணங்களிலுள்ள ஏழு மரங்களையும் ஒரே ஆயுதம்கொண்டு ஒரே வீச்சில் எப்படித் துளைப்பது?

இது எவர் நினைவுக்கும் எட்டாதது. எமக்கே பல நாள் பாட்டிற்குப் பிறகுதான் இது தெரியவந்தது. எம்முடைய பெருவிரலை ஒரு குறிப்பிட்ட எல்லையில் ஒரு ஸ்விட்ச்சில் வைத்து ஒரு அழுத்து அழுத்தினோம். சடா ரென்று ஏழுமரங்களும் நகர்ந்து ஒரே நேர் வரிசையில் வந்து நின்றன. பிறகு ஒரே வீச்சில் ஏழு மரங்களையும் துளைத் தெறிந்தோம். எமது நீண்டகால தவ ஏற்றத் தினால் கைவரவான இந்த வல்லபந்தான் ஆங்கிரசம் எனப்பெறும். இதுகாலம்வரை இந்தச் செயல் யார் கைக்கும் வரவில்லை. இது இன்று எம் கைக்கு வந்தா யிற்று. பதினெட்டு ஆண்டுகளாக ஆங்கிரசத்தை நோக்கி நாம் ஓடிக்கொண் டிருந்தது இன்றுதான் முடிந்தது.

ஆறு கோணத்தில், ஆறு விதமாக இருந்த ஏழு மரங்களையும் ஒரே நேராகக் கொண்டுவந்து கோத் தெறிந்த திறம், அதாவது "ஆங்கிரச கோத்திரம்" உதயமான நாள் இன்றுதான். இதனால் எம்மைச் சேர்ந்

வர்களுக்கும் - அவர்கள் தேவர்களாய் விளங்குவதோடு- ஆங்கிரசம் என்கிற அரிய தவாதிக்க மேல் னிலைத் தகுதியும் இனுமாகக் கிட்டப்பெறுகிறது. எம்மையே சார்ந்து னின்று இதன் பலன் பெற்று உய்யப் போவது எத்தனையோ? அல்லாது எம்மைச் சாராமல் உதை பட்டுப்போவது எத்தனையோ?'' என்று அருளிச் செய்து கொண்டுவரும் அதுனேரம் -

ஆங்கிரச கோத்திரம் என்று சந்தியா வந்தன மந்திரத்தில் வருகிறது என்று ஒருவர் கூற, ஆண்டவர்கள்: இதற்கு முன் இப் பதவிலை வைப்பை யாரும் கை போட்டதில்லை. இப்போது வரப்போகிறதையே அது குறிக்கிறது. இதுவரை சர்வ மதங்களையும் எடுத்துப் பேசும் னுவு வந்ததில்லையே. சர்வ வேதங்களும் சர்வ சாதிகளும் ஒரே னுவின் ஆட்சிக்குட்பட்டு னின்றதில்லையே. அப்படி வந்துள்ள னுவையில் அல்லவா, அப்படிச் சர்வவேதங்களும் வட்டாடும் னுவினர் கையகத்தில் அல்லவா, அந்த ஆங்கிரச கோத்திரம் விளங்கும்?

முன் வந்த செம்மல்கள் முத்தொழிலுக் கரசர்களானதும் போதுமென்று னின்றுவிடுவார்கள். ஆனால் னும் அப்படி அல்ல. இன்னும் னாள்தோறும் கூலிக்குப் போவதுபோல் சென்று, தவத்தில் ஏறி ஏறி வருகிறோம். இம்மாதிரி இன்னெடுங்காலம் தவம் செய்தவர்கள் ஒருவருமில்லை.

இந்த ஆங்கிரச கோத்திரத்தைப்பற்றிப் புசுண்டர் பிரான் முதலிய மெய்ஞ்ஞான மகத்துக்கள் தீர்க்கதரிசனமாகச் சொல்லியிருக்கிறார்களே யன்றி, அவர்கள்

காலத்திலோ அல்லது அதற்கு முன்னைய காலத்திலோ இது வந்துள்ளதாக யாரும் சொல்லவில்லை.

26.

ஞமக்கல்லிலிருந்து அனந்நாதி தேவர்கள் ஞம் தேவ பூமிக்கு வந்து குழந்தைகளுக்கு முடிவைக்க, சன்னிதானத்தில் உத்தரவு வேண்டியபோது பிறந்த **ஆண்டவர்கள் வாக்கியம்:—**

ஒரு சிசுவானது தாயின் கருவறையில் இருக்கும் போது பேச்சு மூச்சற்றுச் சவமாக இருக்கிறது. பிரசவமானபின் ஜீவன் குடியேறிய அடையாளமாகச் சத்தமும் மூச்சும் உண்டாகிறது. பிறகு அந்தக் குழந்தைக்கு ஒரு தெய்வ ஞமம் சூட்டப் பெறுகிறது. கருவறையில் சவமாக இருந்த நிலையில், முளைத்த மயிரை எடுக்க வேண்டியது அவசியமாகையால், அதை நீக்கி விட்டு, ஒரு தெய்வ சந்நிதியில் புது முடி வைக்கவே இந்தப் பழக்கம் ஞம் தமிழ்ப் பூமியில் பரம்பரையாக இருந்து வருகிறது.

27.

திருப்புத்தூரில் ஞம் வசித்து வந்தபோது ஞம் தேவ மக்கள் எம்மை ஆண்டவர்கள் என்று அவர்களுக்குள்ளாகவே பேசிக்கொண்டது ஓட்டல்களிலும் இதர இடங்களிலும் பிரஸ்தாபமாயிற்று. இதைக் கண்டு பொருமையுற்ற ஒரு அச்சாபீஸ்காரன் "பொய் ஞானியைப் பொசுக்கும் சூட்டுக் கோல்" என்ற பிரசுரம் ஒன்றை அச்சடித்துக் கத்தையாகக்கட்டி, ஆண்டவருக்கு என்று விலாச மெழுதி, ஞம் குடியிருந்த வீட்டில்

கொண்டுவந்து போட்டான். நாமோ, இதைப் பார்த்து விட்டு, "நம் பெயர் ஆண்டவரல்லவே நமக்கு வேறு நாமமுள்ளதே" என்று சும்மாயிருந்து விட்டோம். ஆனால் அந்தத் துச்சன் வெளியாக்கின பிரசுரத்தைக் கண்டு சகியாத நம் பிள்ளைகள் - "அந்தப் பொருமைப் பாதகன் இவ்வாறு தகாததைச் செய்திருக்கிறானே" எனக் கோபங்கொண்டு அவன் மீது தக்க நடவடிக்கை எடுக்க எம்மிடம் உத்திரவு கோரி ஆத்திரத்துடன் வேண்டிக்கொண்டதன்பேரில் நாமும் அதற்கு இணங்கினோம் - பிறகு தேவகோட்டை கலெக்டரிடம் மான நஷ்டப்பிராது ஒன்று கொடுக்கப்பெற்று அவன்மேல் கேஸ் தொடுக்கப்பட்டது. கலெக்டர் நம் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டார். நாம் கேசுக்கு வருகிறோமென்று தெரிந்து, கலெக்டர் இருந்த அந்தப் பெரிய விஸ்தீரணமான கட்டிடத்திலும், சுற்றுப் புறத்திலும் சந்தைக் கூட்டம்போல் ஜனம் திரண்டு விட்டது. விசாரணையின்போது பிரதிவாதி பயந்துபோய் அந்தப் பிரசுரத்தில் "நான் இவர்களைக் குறிப்பிட்டுச் சொல்லவில்லையே - வேறு எத்தனையோ ஆண்டவங்க இருக்கிறாங்களே" என்று உளறினான். பிறகு எம்மை விசாரித்தபோது நாம், "ஆமாம், பழனி ஆண்டவர், மொஹைதீன் ஆண்டவர், நாகூர் ஆண்டவர் என்று எத்தனையோ ஆண்டவர்கள் இருக்கிறார்கள்" என்றவுடன் நம் பிள்ளைகள், "ஆ இது என்ன! - ஆண்டவங்க, அவன் சொன்னதற்குச் சார்பாக இப்படிப் பேசுகிறார்களே" என்று பயந்து விட்டார்கள். கேஸ் ரத்தாகிவிடும் என்று எண்ணியதுபோல் கலெக்டர் முகத்திலும் குறி காணப்பட்டது - நாம் அவ்வாறே பேசிக்கொண்டு வந்து முடி

வில், "ஆனால் இப்போது இருக்கிற ஆண்டவர்கள் நாம் தான். இப் பிரசுரம் எம்மைத்தான் குறிக்கிறது" என்றவுடன் நம் பிள்ளைகளுக்கு ஒரே குதூகலமாய் விட்டது.

இடனெருக்கடியால் கேஸ், சிவகங்கை முகாமில் தொடர்ந்து விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. அங்கு எம்மை ஆஜராகத் தேவையில்லை என்று கலெக்டர் சொல்லி விட்டார். அங்கும் கட்டுக் கடங்காத கூட்டம் - அவன் முதுகின் மேலேயே ஆட்கள் ஏறுமளவுக்குப் பெரும் திரளான கூட்டம் கூடிவிட்டது. அப்போது பிரதிவாதி, 'ஆண்டவர்களே வந்நால் தேவலை, எனக்கு மன்னிப்புக் கொடுப்பார்கள்' என்று கலெக்டரிடம் வேண்டினான். அதன்பேரில் திருப்புத்தூர் வந்து கலெக்டரின் காரிலேயே எம்மை அழைத்துச் சென்றார்கள். கூட்டத்தில் கார் செலுத்த இயலாததால் விசாரணை ஸ்தலத்திற்கு ஒரு பர்லாங்கு முன்னமேயே இறங்கி நாம் நடக்க வேண்டியதாயிற்று.

"நீங்கள் அவனுக்கு மன்னிப்பு கொடுக்கிறீர்களா" என்று கலெக்டர் எம்மைக் கேட்டார். அதற்கு நாம் "கேஸை உங்களிடம் தீர்ப்புக்கு ஒப்புவித்து விட்டோம். இனி அது எம் கேஸ் இல்லை. பாவமோ, புண்ணியமோ - நியாயமோ, அநியாயமோ - நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்" என்றோம். பிரதிவாதிக்கு 50ரூ அபராதமும் 6 மாதச் சிறைவாசத் தண்டனையும் விதிக்கப் பட்டது. அதன்பேரில் அவன் மதுரை பெரிய கோர்ட்டுக்கு அப்பீல் செய்தான். புனர் விசாரணையில் 250ரூ அபராதமும், 6 மாதச் சிறைவாசத் தண்டனையுமாக

விதிக்கப்பட்டது. மற்றும் மன்னிப்புக் கடிதமும் எழுதிக் கொடுத்தான்.

இது னடந்த சில னுட்களுக்குப் பின் னும் எம்முடைய ரிவால்வர் லைசென்சுக்காக அதே கலெக்டரைப் பார்க்க வேண்டிய தாயிற்று. அப்போது அவர் இனி னீங்கள் ஆண்டவர்கள் என்றுதான் கையெழுத்துப் போடவேண்டுமென்று கூறினர். இவ்வாறு தீர்க்கத் தெரிசியர்கள் எதிர்பார்த்த ஆண்டவர்கள் என்ற அந்நத் திருனமம் "தானே" ஏறிவந்து ஊர்ஜிதமாயிற்று.

28.

மெய்வழி பாசிபந்நா அனந்நரின் ஜீவப்பிரயாணம் பற்றித் திருச்சபையில் பேசப் பெற்றபோது பிறந்ந ஆண்டவர்கள் வாக்கியம்:—

எமக்கு அவனைப் பிரிந்நதால் உள்ள துக்கம் அவன் மனைவிக்குக்கூட இருக்காது. எமக்கு ஜனம் பெருகி வருகிறது- இருப்பினும் எம் இனத்தில் ஒருவன் போனது பெரிய துக்கமாயிருக்கிறது. அவனே துக்க மற்ற ஜீவ தேகத்தில் குடியேறிக் கொண்டான். என்ன மகோன்னதப் பதவி பெற்றிருந்நாலும், னும் இந்நத் துக்கதேகத்தில் இருப்பதால் எமக்கும் இந்நத் துக்கம் உண்டாகிறது. னும் இந்நத் துக்க தேகத்தை எடுக்காவிடில் உங்களுடைய துக்க தேகத்தை மாற்ற முடியாதே –

29.

மாலை வணக்கத்திற்குப் பின் "எமபடரடிபடு கோடாயிதக்கூரிலிருந்து ஆண்டவர்கள் வாக்கியம் - 84-

படிக்கப்பெற்றது. அதில் "பாரவான்கள் இறக்கவில்லை-னித்திய சுவர்ணபதி வீட்டில் குடியேறி யிருக்கிறார்கள்- ஆனால் உனக்கு அவர்களைப் பார்க்கும் கண்ணில்லை" என்ற பகுதி வந்ததும் வெளியாகிய ஆண்டவர்கள் வாக்கியம்:—

முந்நாளுள் காலை மெய்வழி மங்களா அனந்நகி தன்னுடைய மறுபிறப்புப் பிறந்நாள் கொண்டாடினாளல்லவா? அவள் எம் முன் மண்டியிட்டு வணங்கியபோது ஏறிட்டுப் பார்த்தோம். அருகில் அவளுடைய கணவன் சிலம்பணியும் மண்டி போட்டு அமர்ந்து எம்மைப் பார்க்கிறான். என்ன அதிசயம்! அவளும் திருமண கோலத்தில் மஞ்சுள் வீசும் சிறுபிள்ளை முகத்துடன், பச்சைக் கோடு போட்ட மஞ்சள்வர்ணப் புடவை உடுத்தித் தோற்றமளித்தாள். சிலம்பணி இப்போ எங்கே போய்க் குடியேறி யிருக்கிறான் என்பது உனக்குத் தெரியவில்லை. ஏன்? னீ அதற்கு உகந்ந நுழை கடவில் நுழைந்நு போய்ப் பார்க்கவில்லை - அதனால்தான் உனக்குத் தெரியவில்லை. இந்ந அதிசயத்தை யாரிடம் கூறுவது என்றுதான் அப்போது வெளியிடவில்லை. அதுனேரம் சிலம்பணி கலியாணம் முடிக்கிற சமயத்தில் எப்படி இருந்நிருப்பானோ, அந்ந யௌவன தோற்றத்துடன் எம்முன் னின்றான்.

30.

உருவம் பல கோடி, உயிர்ப்பொருள் ஒன்றே என்னும்படி- அதாவது அவன் வேறு நான் வேறு என்றில்லாமல் உலகிலுள்ள எல்லோரும் ஒரே உயிர், உடல்

தான் வெவ்வேறு என்னும்படி- உலகம் பூராவும் அன்பு னீதத்தால் பிணிக்கப் பெற்ற ஒரே குடும்பமாக மாற வேண்டும். அப்போதுதான் உலகத்திலுள்ள சண்டை சச்சரவு அடியோடு ஒழியும். இந்நக் குடும்ப னீதம் அகில உலகிற்கும் வரவேண்டுமானுல் உலக வல்லமை யெல்லாம், உலக முயற்சி யெல்லாம், உலக ஆராய்ச்சி யெல்லாம் ஒன்று திரண்டாலும் எட்டித் தீண்ட முடியாத எல்லையில் மறைந்துள்ள ஜீவ மந்திரம் எம் கைக்கு வர வேண்டும். அதற்குத்தான் சண்டை மூளப்போகிறது.

வெளித் தோற்றத்துக்கு ணம்முடைய எல்லை மிகவும் மட்டமாகத்தான் தெரிகிறது - ஆனுல் இங்கு னின்று அரசு ஓச்சும் எம் கையிலுள்ள தவ ஏற்றம் எத்தகையது என்ருல் ஒரே ஒரு அணுவை ணும் ஏவினுல் அதன் சிறு அசைவினுலேயே இந்த அகிலத்தை யெல்லாம் தூள் தூளாக்கிப் போடுமே அந்த உன்னதத்தை உடையதாய் இருக்கிறது.

எல்லோரும் ஒன்று என னினைப்பதுதான் வாழ்க்கை. அதுதான் இன்பம். ஆனுல் உலகத்தில் இப்போது உள்ளது துன்பந்நான் - கோரந்நான்- அழிவுதான். அந்த அழிவை அழிக்க அழிவை ஏவினுல் தான் ஆகும். “பாரினில் சண்டையைக் கோலாவிட்டால் பதமாக இது யோகம் முடியாதய்யா” என்பது தீர்க்கத் திருஷ்டியராகிய காகபுசுண்டர் பிரானின் திருவாக்கு - அதன்படியே ஒரு னேரம் வரப்போகிறது. மேலே சொன்ன ஜீவமந்திரம் உதய தோற்றமாகி வரும் அந்த னேரத்தில் எந்த ஆதிக்க அமலும் னேரில் வந்து குறுக்கிட்டு அதன் வருகையைத் தடுக்க முடியாதபடி

இருக்கவே இந்நச் சண்டை மூட்டப்படுகிறது. கர்மம் னிறைந்ந பூமியில் கர்மாவதாரம் பூண்டு, கர்மத்தைக் கொண்டே கர்மத்தை வென்று, தர்மத்தை னிலைனட்ட வேண்டியிருக்கிறது.

கர்மம் என்ருல் பாவம். பாவ உடலுக்கன்றி வேறெதற்கும் ஆத்திரமும், கோபமும், வஞ்ஞகமும் வராது. ஒரு தேர்ந்ந வஞ்ஞகனும், 'ஆகா! இவர்கள் எப்பேர்க்கொத்த யதார்த்த சொரூபம்' என்று வியந்து னம்பும் படியான கூரோங்ங்கிய வஞ்ஞகமே அது. ஊசி முனைக் கூரிலேயே பாயவல்ல கூர் எப்படி யிருக்குமோ அப்படி யிருக்கும் அந்ந வஞ்ஞகத்தின் கூர். பெரியோர் கள் இந்நப் பாவச் செயலுக்கு இறங்ங்லாமா என்று கேட்கலாம். ஆனுல் பாவத்தை அழிப்பது பாவமாகாதே.

தன் குடும்பம் என்றதும் ஒருவனுக்கு என்ன ஒட்டுதலான எண்ணம் வருமோ அதே எண்ணம்தான் உனக்கு மற்றவன் மேலும், மற்றவனுக்கு உன் மேலும் இருக்க வேணும். உனக்கு ஒரு காயம் என்ருல் மற்ற வனுக்கும் வலிக்க வேணும். அதுதான் தெய்வக் குடும் பத்தின் லட்சணம். அந்நக் குடும்பத்தில் இன்பமயத் தைத் தவிர வேறெதுவும் இருக்காது. பிணியோ பயமோ துயரோ தீமையோ செவியிலும் அங்ங்கு கேட்க முடியாது. அவை யாவும் அங்ங்கு அறவே ஒழிந்து போய், வர்ணனைக் கெட்டாத அளவுகடந்ந அழகுடையதாய் உயிர் ஒட்டுத லோடு அந்நக் குடும்பம் விளங்ங்கும்.

அத்தகைய புது ஒளியும், புது யுகமும் படைக் கின்ற பெரிய செயலின் அரிய பலனைப் பெறுவதற்

கென்றே இங்கு எம் கையில் வந்து சிக்கியுள்ள ஒவ்வொரு தலையும் எவ்வளவு உன்னதமான வித்து என்பதை நீங்கள் நன்ருக நினைத்துப் பார்க்க வேண்டும். இங்கு வந்துள்ள ஒவ்வொரு வித்தும் அன்னுட்டுக்குரிய மகாஉன்னதமான வித்து என்பதை யாரும் மறந்து விடக்கூடாது.

இந்த மண்ணுலகின் முடிவு என்னவாக ஆகப் போகிறது என்பது உன் மண்டையில் படாமல் ஈன எண்ணங்களிலேயே உன் நினைவானது எங்கெங்கோ அலைந்துகொண் டிருந்நால், சரியான நேரத்தில் அது உன்னைச் சறுக்கியே விட்டுவிடும். நீ சாலைக்கு வெளியே யிருப்பது ஊசிமுனையிலே நிற்பது போலத்தான் -கொஞ்ஞும் தவறினும் தவறியதுதான். படுபாதாளத்தில் சறுக்கிவிட்டுவிடும். வெளி உலக காரியங்களில் ஊடுருவ ஒட்டி அதிலேயே ஊறிவிட்டால், பிரளய நீதிச் செயலைப் பற்றி னும் வெளியாக்கும், தீர்ப்புத் திருவசனங்கள் உன் நினைவில் சுருக்கென்று போய்த் தைக்காது. மேலும் எம்மிடம் ஒட்டி நடப்பவனைப்போல் பாசாங்கு காட்டி வஞ்ஞகமாக நடக்கத்தான் அந்த நினைவு வரும். எம் அருகிலேயே யிருந்து இந்தப் பெரிய காரண காரிய அருட்பிரவாகத்தி லூறி, செம்மை நலம் ஏறி, நன்மை விளைகிற உருவுக்குத்தான் எம்முடைய திருவசனம் தேகாதியந்நமும் முழுவேகத்துடன் திக்கென்று பாயும். இந்த நன்மை யானது நாள்தோறும் விளைவேறி வருகிற உருவுக்கு நம் சபையிலே இன்னெரு வஞ்ஞக உரு இருப்பது இடைஞ்ஞல் அல்ல. அப்படியான ஒரு

வஞ்ஞக உரு இருப்பது, சாதிக் குதிரைக்குச் சவுக்கு இருப்பதுபோல என்று னிஃனக்க வேண்டும்.

சர்வ உலகமும் யாரும் னிஃனப்பதற்கரிய பெரியதாயிருப்பினும் அது அப்படி னிஜமாகவே பெரிதல்ல. உண்மையிலேயே அது உள்ளங்கை அளவுதான் - அதனுல்தான் "எவர் எவருமிருந்நு மணியம் பண்ணுவதெல்லாம் எண் முக்காலடிக் குள்ளே" என்ற சுலோகம் னம் ஞட்டில் வழங்குகிறது - ஆனுல், உலகம் பூராவும் ஒரே குடும்பமாக ஆவதுதான் பிரும்மாண்டமானது. சர்வமும் ஒன்ருக வருவதுதான் இன் னெடுங்காலம் வளர்ந்நுவந்ந மெய்ஞ் ஞானத்தின் முடிவான பலன். இந்ந முடிவு எப்படி னிகழப் போகிறது என்பதுதான் னின்று கவனிக்கப்பட வேண்டிய அதினிச்சயமான அதிஆச்சரியமான செயல்.

இந்நப் பைபிள் னம் கைக்கு வருவதற்காக உலகத்தின் ஒரு மூஃலயிலே ஒரு சின்னஞ் ஞிறு தீவிலே காட்டுமிராண்டியாக இருந்ந ஆங்கிலேயனுக்குப் பொழுதுபடா இராச்சியம் அளிக்கப்பட்டது. அவன் பைபிஃள மிகவும் பிரயாசைப்பட்டுப் பெருஞ் ஞெலவில் தமிழில் ஆக்கினுன். எவரும் அதட்டிக் கேட்கமுடியாத அவனுடைய அமஃலக்கொண்டு பைபிஃள இங்கே பரப்பினுன். அவன் ஏன் அப்படிச் செய்தான் தெரியுமா? "டேய், னீ இதைச் செய். தமிழ் ஞட்டிலே அதைப் படித்து அதிகம் பேர் கிறிஸ்தவ மதத்தில் சேர்வார்கள். பிறகு அவர்கள் தங்களுக்குக் கிறிஸ்தவ ராஜாங்கம்தான் வேண்டும் என்பார்கள். னீ என்றென்றைக்கும் இந்ந ஞட்டை ஆளலாம்" - என்ற எண்ணத்தைத் தேவனீதி ஊழிவிதி

அவனுக்கு ஊட்டித்தானே அவன் அதைச் செய்தான்; இவ்வளவும் அவன் செய்து முடித்தான், பைபிளும் எம் கைக்கு வந்நது. அந்ந ஆதிமூல ஆவி என்ன குறி வைத்து இவனுக்கு இந்நப் பெரிய அரசு தந்நு இங்நு அனுப்பினதோ அந்ந வேலை முடிந்நது. அவனும் இந்ந ஞட்டை விட்டுப் போய்விட்டான்.

ஆங்கிலேயனுக்கு அவ்வளவு பெரிய அரசு பெற்று ஞடாளுகிற பெலம் இருந்நும் அதை திடுதிப் பென்று விட்டுவிட்டுப் போனுனே, அது ஏன்? அரசு பிடிக்கப் பெலம் இருந்நது. ஆனுல் அதில் னிலை னிற்கப் பெலம் இல்லையோ? ஆகவே அதை னின்று கவனித் தால், பெலம் அவனுடையதல்ல என்று தெரிகிறது. அரசு பிடித் தாள்வதற்கான சுயசக்தியும், யோக்கிய தையும் இருந்நிருந்நால் இப்படிப் பறிகொடுத்துவிட்டுப் போயிருப்பானு? போயிருக்க மாட்டான். ஆகவே ஒரு தெய்வ ஆக்கினைக்கு உட்பட்டு எல்லாம் னிகழ்ந்நிருக் கிறது என்று தெரிகிற தல்லவா? னீ ஒரு வண்டியிலே சாமான் ஏற்றினுய். அந்ந வண்டிக்காரனே வழி னெடுக அவ்வளவும் தன்னுடைய சாமான்ஙள்தான் என்று பொய்ப் பெருமை யடித்துக்கொண்டு வந்நான். சேர வேண்டிய இடம் வந்நதும், அந்ந வண்டிக்காரனைப், பார்த்து "டேய்! சாமான்ஙளை இறக்கி விட்டுப் போடா" என்கிருய். அவன் எல்லாச் சாமான்ஙளையும் இறக்கிப் போட்டுவிட்டு வெறும் வண்டியோடு போய் விடுகிருன். அது போலவே, ஊழிவிதி பார்த்து "டேய் இங்நே உட்காரு" என்றதும் பிரிட்டிஷ்காரன் இங்நே சிம்மாசனத்தில் உட்கார்ந்நான். "டேய், எழுந்நு

போடா'' என்றதும் உடனே போய் விட்டான். ''அடே யப்பா. நம் பிறந்நது எவ்வளவு சிறிய தீவு. னமக்கா இவ்வளவு பெரிய அரசு இருந்நது'' என்று அவன் னினேவே கூனிக் குறுகவும் இதை விட்டுவிட்டுப் போய் விட்டான். இப்படித்தான் எல்லா அரசுகளும் ஒரு காலத்தில் எழுவதும் பிறகு விழுவதும்.

ஆதினுதனுடைய எல்லேயி லிருந்நு வருகிறது ஆக்ஞை – அந்ந ஆக்ஞைப்படி னடக்கிறது எல்லாம் - இதை யறியாமல் ''சுமந்நுகொண்டுபோ'' என்ற உத்திரவை மறந்நு சுமந்நுபோகும் சொத்தின்மேல் சொந்நம் கொண்டாடுகிறுன். தூக்கி வந்ந சுமையை இறக்கி வைப்பதற்குள் எத்தனே ஆட்டம் ஆடிவிடுகிறுன். இவனுக்கு முதலும் தெரியாது, முடிவும் தெரியாது. ஆனுல் இடையிலே 'கூகூ' என்று ஒரே பொய்ப் பெருமைக் கூச்சல். தலேயிலே சாமான் தூக்கி வருகிற னேரம் தான் இவன் பட்டம் கட்டி ஆளும் னேரம். ஆனுல் வீடு னெருங்கியதும், சாமான் சொந்நக்காரர் வீட்டில் இறக்கி வைக்கப்பட்டு விடுகிறது. இதற்குள்ளேதான் இவ்வளவு ஆர்ப்பாட்டம், அமர்க்களம்! இன்னுெரு பக்கம் எப்போது பார்த்தாலும் ஜன்னி கண்டவன்போல் ''சமாதானம் சமாதானம்'' என்கிற ஓயாத உளறல் – இந்ந உளறலேப் பார்த்தால், எதற்காக ஆங்காங்நு இன்று சண்டை வருகிறது என்பதைத் துளிகூட அறியாத பேதையர்களே அவர்கள் என்பது னன்ருகத் தெரியும். ஆங்காங்நு வரும் சண்டை அங்கங்கேயே முடிந்நு விடும் என்று னம்புகிறுன். ஒரு பக்கம் பிடித்த தீயை இவன் அணேக்கப் போவான். அது ஞலாபக்கமும்

பிடித்துக்கொள்ளும். இவனது சமாதானப் பிதற்றலே அந்தத் தீ மேலும் பரவுதற்கு உதவியான பெட்ரோலாகி விடும்.

ஒருவன் கரை தெரிகிறது என்று காலை விட்டான். கால் மாட்டிக் கொண்டது, வெளியே எடுக்க முடிய வில்லை. அதனால் ஆத்திரம் பொங்கி எப்படியும் எடுத்தே தீரவேண்டும், அதற்காக எதையும் செய்வதென்று துணிந்துவிட்டான். குண்டு மழை பெய்யும் என்று கூடச் சொல்ல வில்லை. சாவு மழை பெய்யும் என்று கொக்கரிக்கிறான். சின்னப் பயல் நம்மை இப்படி அலைக்கழித்து விட்டானே என்று அவனுக்கு எரிச்சல் மீறிவிட்டது. இது தான் "வெகு சீக்கிரம் எல்லாம் பிணக் காடாகிவிடும் – நாற்றம் அண்டளிக்க முடியாது– யாரும் வெளியே போக முடியாது – சர்வ உலகுக்கும் தீ பரவும்" என்பதற்கு அடையாளம். அப்போதுதான் நம்முடைய யாகமும் துவங்கும்.

31.

பார்ப்பதற்குக் காது ஒன்றுபோல் தோற்றமளித் தாலும் மனித இனத்தில் எத்தனை ரகக் காது இருக் கிறது என்றும் எண்ணிக்கொண்டே வரும்போது இன்னும் அந்த எண்ணிக்கை முடிந்த பாடில்லை. எல் லோருக்கும் ஒரே விதமான சத்தம்தான் கேட்கும் என்று எண்ணியிருந்தோம். ஆனால் அப்படியில்லை. எல்லோர் கண்களும் ஒரே மாதிரி பார்க்கும், நாசி ஒரே மாதிரி முகரும், நாக்கு ஒரே மாதிரி ருசியைக் காட்டும் என்றெல்லாம் எண்ணி யிருந்தோம். ஆனால் பார்க்கும்போது அவ்வாறு

இல்லை. ஒவ்வொன்றிலும் கோடாகோடி ரகமிருக்கிறது என்று தெரிகிறது. இப்படி வேறு வேருகப் படைத்திருந்நாலும், அண்டாண்ட கோடிகளையும் வைத்து ஆட்சிபுரியும் ஒரே ஒரு வேலைக்கென்றே இறைவன் இந்ந மனுவைப் படைத்தான். வீணுக்காகப் படைக்கவில்லை. இவன் னித்தியனுவதற்கென்றே வந்நவன். இவனது வயதை அளவிட முடியுமா? முடியாதே. இவ்வாறு அளவிடற்கரிய வயதுடைய இவன் ஏன்தான் இந்ந அதோகதிக்குப் போகிருனே என்பதே எம் கவலை.

தாயின் கருவறையில் சீழைக் குடித்து வளர்ந்நான். அதைவிட்டு வெளியே வந்ந பின்போ இவன் ஒரு அரசனுகவே இருந்நாலும் இவன் வாழும் வாழ்க்கை, அந்ந முடிவில்லாத வாழ்க்கையோடு ஒப்பிட்டுப் பார்த்தால், இவன் வாழ்க்கையின் னீளம் அதே சீழைக் காய்ந்நபின் குடிக்கும் னேரம் எவ்வளவோ அவ்வளவேதான் என்று தெரியவரும். இவனை ஞம் மனுசன் என்று னம்பி ஏமாந்நோம். எம் கையகத்திலானுல் இவன் மனு ஈசன் ஆவது சத்தியமாயிற்றே. இவ்வளவு அரிய படைப்புக்களையும் படைத்த பேரருளாளுகிய இறைவனு இப்பேர்க்கொத்தவனையும் படைத்திருக்க முடியும் என்ற எண்ணம், இதை அடையாது போகிறவனைப் பார்க்கும்போது, எமக்குத் தோன்றுகிறது.

மற்ற விஷயங்ஙளிலெல்லாம் வெகு சூதானமாக இருக்கிருனே- அரும் பெரும் காரியமாகிய னித்தியத்திற்குத் தந்ந அறிவை, அழிந்நுபோகிற அல்ப காரியங்ஙளிலும் வம்படிகளிலும் திருட்டுத்தனத்திலும் வீணுக்கி

அடியோடு வேர் பிடுங்கப்பட்டுச் சாகிறானே - இச் சண்டாளனின் வர்ணனையை எந்தப் பாஷையில் வைத்து எழுதி முடிக்க முடியும்? இவன் முகரையில் முழிக்கக்கூட லாயக்கில்லை. பேருன அமுதத்தில் னரகலுடன் கூடிய எட்டியைக் கலந்தமாதிரி இருக்கிறது இவன் செயல். இவனிடம் இருப்பது அறிவா, அழிவா என்று பார்த்தால் அழிவேதான் என்று தெரிகிறது. அற்பத்தனத்தில் வைத்து இவனுக்கு னிகராகப் பூச்சிப் புழுக்கூட கிடையாது. இப்பேர்க்கொத்தவனை னீ எப்படி இழிவாக மதிக்கிருயோ அதுபோலவேதான் எல்லா மகத்துக்களும் இவனை மதிக்கிருர்கள். இதுதான் தீர்ப்பு.

32.

னித்திய தேகத்தின் பிரணவ வித்து இன்னதென்று ஞம் உனக்கு அறிவித்திருக்கிரே மல்லவா? அதிலேதான் சர்வ உலகங்களும், சர்வ படைப்புக்களும், அவற்றின் சர்வ ஆட்சிகளும் அடக்கம். அப்படியெனில் அந்தத் தேகத்தில் ஆண் எங்கே, பெண் எங்கே? சபையோர், “அது ஆணுமில்லை பெண்ணுமில்லை” என்று சொல்ல - ஆண்டவர்கள்:- இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்? பின் ஆண், பெண் என்று பிரித்து எதற்காகப் பெயர் வைத்தது? ஆண், பெண் என்று வார்த்தைகள் இருப்பதால் னிச்சயமாக அவற்றிற்குப் பொருள் வேணுமே. காட்டு, பார்க்கலாம்.

இந்தக் கேள்வியே உன் னினைவுக்கு வராது. மேன்மை தருவது ஆண்மை, தாழ்மை தருவது பெண்மை. ஆண்மை எக்காலத்தும் மாருத செயலாத

லால், ஆண்மையில் வைத்துத்தான் எல்லாவற்றையும் படைத்தது. ஆனல் இவன் தன் ஈனச் செயலாலே அதைப் பெண்மை யாக்கிக்கொண்டான். இதுதான் பேச்சுக்குள்ளே பேச்சு. நீ ஏதாவது அர்த்தம் செய்து கொண்டு விடுவாயோ என்று பயந்தே பேசுகிறேம். இப்படி அறிவுக்கு இலக்கான வார்த்தை இவ் விரிபுவனத்தில் எங்காவது உண்டா? நினைக்க நினைக்க அடங்காத செயல் ஆயிற்றே இது.

அந்த மேன்மையான நற்காரண ஆண்மையில் தான் நீ படைக்கப் பெற்ருய். அது நீங்கா நிலத் தாண்மை. ஆண்டவர்கள் சந்நதிக்கே உரித்தான ஆண்மை. அந்த நற்காரண ராஜ நிலைகள் என்னென்ன என்று தெரியுமா? தூங்காமை, கல்வி, துணிவாகிய வீரம், நீங்கா நிலம் ஆகிய இவை நான்கும் அந்த நற்காரண ராஜ நிலைகள். ஆறு பிறப்புடன் கூடிய இந்த அநித்திய தேகம் அழியும். ஏழாம் பிறப்புடலத்தின் நித்திய ஆட்சி இதோ அடுத்து வந்து விட்டது. அழியா நிலத்து ஆள்கை அதுவேதான்.

33.

இறைவன் ஒருவனுக்குத்தான் "நான்" என்கிற ஆண்மை உண்டு. அலீப் லாம் மீம் அல்லா ஒருவன் தான் அறிவான் என்கிருனே. அப்படியானல் அறிந்தவர்களை இவன் யாரென்று நினைக்கிருன்? இந்தக் கேள்வி கேட்டதும் திகைக்கிருன். "என்ன, இவர்கள் இப்படிப் பேசுகிருர்கள்? கல்லாசு மன்சூர் முதலிய பாரவான்கள் இப்படிப் பேசித்தானே இன்னலுக் குள்ளானர்கள்"

என்று முதலில் அவசரப்பட்டு னினைக்கிறான். அடுத்த கணமே இந்த னினைப்புத் தவறு என்று அவனுக்குத் தெரிகிறது. எம் வாக்கை னின்று கவனித்த பிறகு அவனுக்கே இப்படி யோசிக்க வருகிறது – "இவர்கள் பேசுவது வேறே பாணியாய் அல்லவோ இருக்கிறது. அலீப் லாம் மீம் எமக்குத் தெரியும் என்கிறார்கள். அதனால் எம்மை அல்லா என்கிறாயா? இல்லை. எம் னாமம் வேறே என்கிறார்கள். இன்னும் கேட்டால் கல்லாசு மன்சூர் முதலிய பாரவான்களைக் கடித்து ரத்த ருசி பார்த்த னாய்கள் எம்மிடமும் தலையை ஆட்டி, னாக்கை னீட்டி, பல்லைக் காட்டி உறுமிக் கொண்டு வருகின்றன – பகட்டை உடைத்துப் போடுவோம், ஜாக்கிரதை என்று வேறே அதிகாரத்துடன் அதட்டுகிறார்களே. ஆகையால் அவர்கள் கையில் என்னவோ இருக்கிறது" என்று னினைக்கிறான்.

எவனாவது தன் கையிலிருப்பதைப் பேசுகிறானா? இல்லை. ஆனால் னாம் பேசுவது எம் கை பாணச் செயல். அத் திருச்செயல் அளப்பதற்கரிய கோடானு கோடியாக உள்ளது. அதன் முழு விரிவை எடுத்துப் பேசுவதென்றால் அதற்கு னேரமும் இல்லை, வார்த்தையும் இல்லை. ஒருவன் பேசுகிறான் என்றால் அவன் பேச்சின் செயல் அவன் கையிலில்லை. படிக்கிறான் என்றால் அவன் படிப்பும் அவன் கையிலில்லை. வெறும்வாயைச் சப்பிக்கொண்டோ அல்லது முன்னரே மென்று போட்டச் சக்கையை மென்று கொண்டோ "பார்த்தேளா, எவ்வளவு னன்னா இனிக்குது" என்கிறான். அந்தத் தேவாமிர்த இனிப்பை மாறாது ஊட்டும் னித்தியானந்த எழு கணுக் கரும்பு அவன் உலகத்தில் ஏது? இல்லை.

இந்த உலகில் எந்தக் கஷ்டம் வந்து னம் மகிழ்ச்சியைத் தடுத்து விடும்? எதுவும் தடுக்காது – ஏனெனில் எந்த னேரத்திலும் னம் னினைவு போய்ச் சாய்ந்து கொள்ள ஒரு வைர மலை இருக்கிறது. அதிற் சாய்ந்ததும், அதை னினைத்ததும் எந்தக் கஷ்டமும் னம்மை விட்டுப் பறக்கும். ஒரு பெரிய அரசனுக்கும் இப்படி ஒரு வசந்தம் வருமா? ஒரு கொலை வழக்கே வந்நாலும் அந்த மலையில் சாய்ந்ததும், னம் எண்ணத்தில் அது ஒரு துரும்பு தூசாகக்கூட இருப்பதில்லை. சம்பாதனை என்றால் இது வல்லவா சம்பாதனை. இதை விட்டுவிட்டு வேறொன்றைச் சம்பாதிக்கிறவன் துக்கத்தையும் துயரத்தையும்தான் சம்பாதிக்கிறான். அவனுக்கு அவற்றிலிருந்து மீளப் புகலிடமே இல்லை. இந்த உலகில் உள்ளவர்கள் னிசமான மனிதர்களாயிருப்பின் முக்காலே அரைக்கால் பங்கு இந்தச் சபையாகத்தானே இருக்கும்? ஆனால் அப்படியில்லையே. இப்போது இதில் உள்ளவர்கள் பல்லாயிரமேயென்றாலும் உலக னருள்களின் எண்ணிக்கையை வைத்துப் பார்க்கும்போது இது அரைவீசம் கால்வீசம்கூட இல்லையே. முந்திரி என்று சொன்னாலும் அதிகம். ஆகவேதான் "கடைசிக் காலத்தில் வருகின்ற பதியவர்கள் உலகத்தில், அது னேரம் இருக்கின்ற மனிதர்கள் இவ்வளவுதான் என்பதைத் தங்கள் விரல் விட்டு எண்ணி விடுவார்கள்" என்று அந்த வசந்தமூர்த்தி புசுண்டரவர்கள் வரைந்து வைத்துள்ளார்கள்.

அவ்வாறிருந்தும் னம் சபையில் இப்போது னீதமாம் கும்பல் கும்பலாக உள் னுழைவதைப் பார்க்கின்

றீர்கள். முற்காலத்தில் ஆயிரம் ஊருக்கு ஒருவர்கூடத் தன்னை யறிந்தவர் இருந்ததில்லை. ஆனால் இப்போது னம் கையகத்தே பல்லாயிரக் கணக்கான தன்னையறிந்த பேர்கள் இருக்கின்றார்கள். "தன்னை யறிந்தவர்களே பெரியோர்கள்" என்று அவனும் சொல்லுவான். ஆனால் அவனுடைய தோசித்தனமும் தரித்திரமுமே அவனை இங்கே அண்டவிடமாட்டேன் என்கிறது. இந்த ஜீவரக்ஷிப்புப் பெரிய செயல் இன்னெடிய உலகத்தில் இவ்வளவு மலிவாகவும் எளிதாகவும் யாருடைய காலத்திலாவது இருந்ததா? எம் காலம்வரை மிகவும் கிராக்கியாகவே இது இருந்தது. ஆகவேதான் முற்காலங்களில் இதில் தலையிடத் துணிந்தவர்களின் எண்ணிக்கை ஞலு இரண்டு ஒன்றே ஒன்று என்னும் படியாக இருந்தது. அப்படியிருந்த இது இப்போது இவ்வளவு மலிவாக வந்திருப்பது எதைக் காட்டுகிறது? எல்லாவற்றையும் ஏதோ ஒரு முடிவுக்குக் கொண்டுவரவே இப்படி வந்திருக்கிறது என்று திட்டமாகத் தோன்றுகிறது.

எமது னீண்டகால, ஓய்வு ஒழிவு அற்ற, தவப்பாடானது விளைவு மிகுந்தேறி வந்திருப்பதால்தான், எத்தனை ஆயிரம்பேர் வந்தாலும் அவர்கள் தலைக்கு இந்தச் சாவாவர மெய்யை இவ்வளவு எளிதாக வாரி வழங்கிக்கொண்டு வருகிறோம். இதோடு இந்த உலகம் சரி என்பதைத்தான் இது காட்டுகிறது. குளம் வற்றி விட்டது. காய்ந்தழியப் போகிறது. வந்த மட்டும் அரித்துத் தள்ளு என்று வலை வீசுகிறவன், சிறிது பெரிது என்று பாராமல், மீன்களை வாரிச் சேர்ப்பது போல ஞமும் மலை மலை கலைகள் வீசிச் செந்தமிழ் வலை

கொண்டு சர்வசாதி மக்களையும் வளைத்து வாரி இந்த மெய்வழிக் கூடைக்குள்ளே போடுகிறோம். இவ்வளவு இசைவாக வந்திருக்கும் இந்த நேரத்திலும்கூட, இறுதியான இக்கட்டான இச் சந்தர்ப்பத்திலும்கூட இது நம் அந்தஸ்துக்குச் சரிதானா என்று ஏற இறங்கப் பார்க்கிறான். முன் காலத்திலோ குருதேவர் மாணாக்கனைச் சுண்டிப் பார்த்துத் தேர்ந் தெடுத்தார்கள். ஆனால் இன்றோ மாணாக்கன் குருதேவரைச் சுண்டிப் பார்த்துச் சேருகிறான்.

இதற்கு முன் காலத்திலெல்லாம் ஒரு மெய்க் குருவை அடைய எவ்வளவோ கஷ்டப்பட்டுத் தேடித் தேடி அலைய வேண்டும். அப்படித் தேடுவதிலேயே வயது முடிந்தாலும் முடிந்துவிடும். ஒரு வேளை ஒரு குருபிரான் கிடைத்தாலும் அவர் மெய்க் குருவாகத்தா னிருப்பார் என்பது என்ன நிச்சயம்? அப்படியே ஒரு உண்மையான ஞான குருபரன் கிட்டினாலும், அவர்கள் இவனை லேசில் ஏற்றுக் கொள்வார்களா? பன்னிரெண்டு ஆண்டுகள் அறச் சோதித்த பிறகுதான், உடல், பொருள், ஆவி மூன்றையும் தத்தமாகப் பெற்றுக் கொண்ட பிறகுதான் இவனுக்கு அந்த அழியாப் பெரு நிதியமாகிய நித்திய பரமஞானத்தைத் தருவார்கள். அது அவனுக்கு மட்டுமேதான், அவன் மனைவி மக்களுக்கு இல்லை. நாம் வந்துதான் அந்தச் சட்டத்தை இப்படி மாற்றினோம் - ஏன்? "காலம் கடைநாளாகின- ஆலம் அழி நேரம் இது -வானம் வழி நெறிக் காகின வே" என்பதால்தான்.

34.

அழியாவர வாழ்வேறி னிற்கும் னம் அனந்நர்குல மக்களுக்கு, "எழுவகைத் தோற்றம்" என்று எடுத்து வைத்தது எதற்கு என்பது பற்றி எப்போதும் னினை விருக்கவேண்டும். அப்பொழுதுதான் னீ இங்கு வந்து எடுத்த ஏழாவது பிறப்பாகிய தேவப் பிறப்பின் மேன் மையும் அதன் ஈடு இணையற்ற தன்மையும் னன்ருக உன் மனதில் பதியும். இல்லாவிட்டால் னீ இப்போது பிறந்நுள்ள உன் மேங்குலப் பெருமையை மறந்து உன்னை மனுப் பூச்சிகளில் ஒருவனுக னினைத்துக் கொள் வாய். அப்படிச் செய்வதானது உன் பெருமையை மறந்நது மட்டுமல்ல, அதைத் தந்ந எம்மையும் எம் செயலையும் மறந்நதாகும். அவ்வாறு மறந்நால் கடை சியில் அது உன்னைப் பாச னரக அழிவிற்கே கூட்டிக் கொண்டு போய்விடும்.

புல்லும் புருவும் ஒன்ரு? புல் தருக்கினம், புரு பறவையினம். அவை ஒன்றை யொன்று உகக்குமா? உகக்காது. கொசுவும் அண்டரண்டப் பட்சியும் 'பறவை' என்ற ஒரே தோற்றத்தைச் சேர்ந்நவைதாம். ஆனல் இரண்டுக்கும் இடையில் எவ்வளவு பாரதூர மான வித்தியாசம். அதைவிட எத்தனையோ மடங்கு பாரதூரமான வித்தியாசம் உன் முந்நிய னரப் பிறப்புக் கும் இப்போதைய தேவப் பிறப்புக்கும் இடையில் இருக் கிறது - உருவத்தில் னரனும் தேவனும் ஒன்ரு யிருப் பினும் வல்லமையில் வேறு வேறு - இதுதான் எழுவகைத் தோற்றம் கற்பிக்கும் பாடம். இதுதான் எப்போதும் உன் னினைவி லிருக்கவேண்டும்.

காயத்திரியை வாயில் சொல்லி ஏற்றினல் கல், தெய்வமாகிறது என்பதை னம்புகிருன் - அதற்கப்புறம் அதைக் கல் என்று னினைப்பது இல்லே. தனக்கும் மேலான தெய்வம் அது என்றே எப்போதும் னினைக் கிருன். ஆனல் அந்நப் பிரணவ மூலப் பழம் பொரு ளாகிய காயத்திரி அந்நக் கல்லி னிடத்திலா போய் இருக் கும்? அல்லது அந்நக் கல்லுக்குக் காயத்திரியை ஏற்றுவ தாகக் கூறினனே, அவன் கையிலாவது காயத்திரிதேவி இருப்பாளா? ஒருக்காலும் இருக்கமாட்டாள்-இப்படி ஒரு செயலு மில்லாதவனுக்குக் குருக்க ளென்றும் அவ னுண்டாக்கிய கல்லுக்குத் தெய்வ மென்றும் பெயரிட்டு அழைப்ப தென்ருல், காயத்திரி தேவியை உன் இருதய கமலத்தில், மெய்யாக மெய்யாகவே பிரத்தியக்ஷத்தில் கைவரப் பெற்றுள்ள உனக்கு என்ன ஞமம் சூட்டினல் தகும்? உன் தலையில் ஏற்றப் பெற்றுள்ள பிரணவப் பொருளாகிய அந்ந உன்னதப் பரப்புக்குத் தெய்வம் என்று பெயர் போதவே போதாது. உயிரற்ற உணர் வற்ற கல்லேத் தெய்வமென்ருல் னிஜமாகவே தேவப்பிறப் பெடுத்துள்ள உனக்கு உபயோகமாகும் உன் கோவ ணத்தை ஏன் தெய்வமென்று சொல்லக் கூடாது? உன் மனமோ னினைவோ அறிவோ கொள்ளாத அந்ந அளவு மீறிய செம்பொருட் செவ்வானச் செல்வத்தை உன் தலே யில் ஏற்றி யிருப்பதால்தான் உன்னல் அதன் உன்ன தத்தை மதிப்பிட முடியவில்லே. ஆகவே உன் உலகத் தேட்டில் னீ னிற்கும்போது அதை மறந்து திரிகிருய். ஆனல் ஞமோ அதன் பெருமையை இடைவிடாமல் எடுத்து எடுத்துச் சொல்லி இடித்துஇடித்துக் காட்டிச் சதா உன்னைத் தேவ னிலேயில் இருக்கவைக்கிரேம்.

15

உன்னிடமுள்ள தங்கத்தின் உன்னத மாற்றுத் தெரியா விட்டால், எவனும் பித்தளை என்று சொல்லி உன்னை ஏமாற்றிவிடுவான் அல்லவா? உயிர்க் கோடிகள் அனைத் துக்கும் தீர்ப்பாக வருகின்ற வேதத்தினுடைய அந் நத்தைப் பேசுவதே வேதாந்நம். அந்ந வேதாந்நச் சட்டத்துக்கு னேரிலக்காகிய பரிசுத்தத்தை உடையவன் னீ என்பதை மறந்நுவிடாதே. உஜார்.

கோடிக்கணக்கான பணம் செலவு செய்து கோவில் கட்டி வணங்நுகிருனே. அங்நுப் போய் யாரை வணங்நு கிருன்? னிஜ வணக்கத்திற்கு உறைவிடமாகிய பொருள் அங்மிருக்கிறதா? இப்போது உன்னை ஒரு கேள்வி கேட்கிருேம். அக்கிரமமாகவோ, போடு போக்காகவோ, தான்தோன்றித்தனமாகவோ உன்னை னீ உயர்வாகச் சொல்லிக்கொள்ள வேண்டாம் – னியாயமாக, வேத சாட்சிப்படி 'னீ யார்' என்று உன்னை ஞம் கேட்கிருேம்– உனக்குச் சரியான பதில் சொல்லத் தெரியாது – ஆகவே ஞம் அதைச் சொல்லுகிருேம் கேள் – னீ மதிப்பிலடங்கா ஒரு மாணிக்கம் என்பது சத்தியம் – உனக்கு ஞம் இதை முன்னரே லரூபணை செய்துவிட்டு இப்ப 'னீ யார்' என் பதை எடுத்துக் காட்டுகிருேம் – இடையருத் தவத்தி லிருக்கும் மகத்துக்கள் சதா அந்நப் பிரணவ ஆசனத்தி லேயே அமர்ந்நிருக்கிருர்கள் - ஆகவேதான் அதே தேவ ஆசனத்தில் ஏற்றி வைக்கப்பெற்ற னீ அதை மறந்நு வேறு கவனத்தில் மாறும்போதெல்லாம் அவர்களுக்கு உன்மேல் விசனமாக வருது.

ஒருவன் தன் வயதைப் போக்கிக்கொண்டு பேசு கிருனே. அதில் அவனுக்கு வருகிற லாப மென்ன? தன்

னிடமுள்ள பாலை ஊற்றிக் கொடுத்துவிட்டு சாக்கடை னீரை வாங்குவதைப்போல் இந்த அழி உலகப் பணம் காசு மதிப்புக்காகத் தன்னுடைய அரிய வயதாகிய வாழ்நாளைச் செலவிடுகிறான் - இந்த எல்லையைத் தாண்டி வெளியில் உள்ள மக்களின் வயது இப்படி வீணாகத்தான் போகிறது. ஒரே கருவி, ஒரே சப்தந்நான் - அவற்றை இங்கே உபயோகிக்கும்போது னொடிக்கு னொடி உன் ஆயுள் கனங்கொண்டு வாரி ஏறுகிறது. உன் கைம்முதல் கூடிக்கொண்டே போகிறது. மூக்கிலே மூச்சோடுகிற மனிதன் எம்மாத்திரம்?

ஒருவன், தன் மத கர்த்தரின் கடைமாணுக்கன்கூட இல்லை. அவர்களுக்கும் இவனுக்கும் சம்பந்தமேயில்லை. அப்படியிருக்கத் தன்னை அவர்களுடைய பிரதினிதி என்கிறான். உலகெங்ஙிலும் கோடிக்கணக்கான மக்கள் அவனைத் தெய்வமென்று கொண்டாடுகிறார்கள். சர்வேஸ்வரனால் உண்டாக்கப்பெற்ற திருமேனி எங்கே? னாற்றம் பிடித்தவன்ங ளெல்லாம் ஒன்று சேர்ந்து ஒட்டுப் போட்டு உண்டாக்குகின்ற பெருனாற்றம் பிடித்த இவன் எங்கே? பாவ உலக னீதத்தை வைத்துப் பார்க்கும்போது அதிற்கூட உத்தமன் என்று சொல்லமுடியாத ஒருவனை, தேகாதியந்நமும் அழுகி னாறுகின்றவனைத் தெய்வமென்றால், சாவை னித்திய பேரின்பத் திருமண மாக்கிக் கொண்டு வாழ்கின்ற உன்னை என்ன என்பது? கூறு கெட்ட கழுதை ஏழு கட்டுப் புல்லைத் தின்றதுபோல் அவனுக்கு மாடமாளிகை கூடகோபுரங்ஙள் வேறு. அப்படி அவன் வாழ்ந்நாலும் - தெய்வீகத்தைப் பற்றித் தனக்கு ஒன்றும் தெரியாது என்ற குற்றமுள்ள அவனுடைய னெஞ்ஞு அவனைச் சதா திருடனைத் தேள்

கொட்டிக் குடைவதுபோல் குடைந்துகொண்டே இருக்கும். ஒவ்வொரு நொடியும் மிகவும் உஜாராகத் தன்னைப் பெரியோர்களென்று பாசாங்கு பண்ணிக் கொண்டிருப்பது அவனுக்கு எவ்வளவு வேதனையாக இருக்கும்? இந்த வேதனைகள் மட்டுமன்றி இந்தப் பரந்த உலகத்தில் தனக்குக் கேவலம் ஒரு மனைவி மக்கள் என்ற அன்புப் பிணைப்புக்கூட இல்லையே என்ற மனக் குறை அவனுள்ளத்தில் சதா இருக்கும் – ஆனால் அதை வெளிக் காட்ட மாட்டான். உனக்கோ எல்லா இகபோகங்களுடனும் இந்த இந்திர பதவி இதுகாலம் இங்கு கிடைத்திருக்கிறதே – இது என்ன நிஜநிதி லாபகர வசந்த காலம் பார்!

இந்த மதிப்பி லடங்கா மாணிக்கம் கிடைக்கப் பெற்றுள்ள நீ என்ன எக்களிப்பில் இருக்கவேண்டும். "எது வந்நாலென்ன? எது போனாலென்ன? நமக்கு, இந்த அழியாப் பெருநிதிப் புது வாழ்வளித்த பெருமான், நம்மோடு இருக்கிறார்கள்" என்ற பெருமிதத்தி லல்லவா நீ வாழவேண்டும்.

35.

துவார பாலகாள் சந்நிப்பில் ஞானாலய முதன் மந்திரி யவர்களின் வசனம்:- "இப் பிரபஞ்சுச் சார்பு காரணமாக நமது திலகநாயக மறைக்கிழ வள்ளலவர்கள் அடைந்துள்ள அடவியை இன்னாள் வரை நாம் அடைந்திலாது - இப்பால் நாம் அனைவரும் திரண்டுவரும் கேளிக்கையினால் நமது தலைப்பிரானிடம் நாம் பெற்றுள்ள உருத்திரனை அச்ச முறுத்தும் பிரணவக்கலை தோன்றப் பெருது வந்துள்ளோம் - அதனால் ஏற்பட்ட தடை தேவர்களே" என்ற பகுதி வாசித்து வரும்போது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம்:–

இதோ, இப்போது இங்கே வாசிக்கப்பெற்ற இந்நத் துவார பாலகாள் சந்நிப்பு என்னும் தேவ கானத் திருச்சந்நம் எங்கேயோ எப்போதோ னடந்ந முன் பழங்கதையையா சொல்லுகிறது? இல்லே. னம் அனந்நர் குலத்தின் அன்ருட னடைமுறையைத் தெரிவிப்ப தல்லவா இது? னம் மக்கள் இங்குற்று, உருத்திரனே அர்சுறுத்தும் பிரணவக்கலே தோன்றப் பெற்று, பிறகு வயிற்றுப் பாட்டிற்காக வெளியே செல்வதால் பிரபஞ்ஞச் சார்பு மிகுந்நு, பிரணவக்கலே குறைந்நு வாடி வதங்கித் திரும்பி வருவது னம் எல்லேயில் னடக்கும் பிரத்யட்ச னடைமுறைதானே? இதைத்தான் இந்நத் துவார பாலகாள் சந்நிப்பு சித்திரிக்கிறது.

பெறுதற்கரிய பெரிய பேரின்ப வாழ்வில் ஒரு தேவ வான் குலம் னீடூழி தழைத்து ஓங்கச் செய்யும் யுக யுகாந்நகாலச் செயலே எப்படிச் சுருக்கமாகக் கொச்சையாகச் சொல்ல முடியும்? சொல்ல முடியாது. ஆகவே ஈடு இணையற்ற இந்நப் பிரம்மாதிக்கச் செயலே எத்தனே பொருள் மிகுந்ந வார்த்தையாலும், வண்ணத்தாலும், சந்நத்தாலும் விரித்து விரித்து விவரித்துக் கூறினலும் தகும். னும் பாடுபட்டுப் பெற்றதால்தான் இவ்வளவு அரிய வார்த்தைகளால் இந்நத் தேவச் செயலே இப்படி எம்மால் எடுத்துச் சொல்ல வருகிறது. ஆனல் கலியனுக்கோ கடைசியில் எமன் சந்நிப்பில் அடி விழுகிற போதுதான் இது பெரிய செயல் என்று தெரியும். அதுவரை என்னவோ பாட்டுப் படிக்கிருர்கள் என்றுதான் னினேப்பான். இல்லாவிட்டால் ஒரு வித்வான் என்று தன்னேச் சொல்லிக் கொள்ளுகிறவன் இதைப்

பார்த்ததும், ''இவ்வளவு கனங்கொண்ட வார்த்தை யிலே பாடியிருக்கிறார்களே – வேறு யாரும் இவ்வளவு திடத்துடனே இதுவரை சொன்னதில்லையே – இது என்னவாயிருக்கும்? இந்தச் செயல் இது காலம் னிகழ்ந்து கொண்டிருக்கும் அந்த எல்லையை னும் போய்ப் பார்த்தே ஆகவேண்டும்'' என்ற ஆவலோடல்லவா இங்கு ஓடி வருவான்? அப்படி யார் வருகிறார்கள்? ஒருவரையும் காணோமே.

எல்லா வாழ்வையும், எல்லா மேன்மைகளையும், எல்லா னன்மைகளையும் இறைவன் மனிதனிடத்தில் தான் வைத்துப் படைத்தான். அது போலவே எல்லாத் தாழ்வுகளையும் எல்லாத் தீமைகளையும் கூட இவனுக்குள் ளேயே வைத்துப் படைத்தான் – இவ்வாறாகச் சர்வத் தையும் இவனுக்குள்ளேயே வைத்துப் படைத்திருக் கிறான். எனவே, னன்மையும் தீமையும் இவனை யன்றி வேறில்லை. இவ்விரி புவனத்திலுள்ள மற்ற படைப்புக்கள் அனைத்தும் இவன் தூலத்தின் சம்ரக்ஷணைக் காகவும் இவன் ஜீவனின் வளர்ச்சிக் காகவும் இவனுக்கு உதா ரணங்காட்டி அறிவு புகட்டுவதற் காகவுமே யன்றி வேறெதற்கு மில்லை. அவைகளிடத்தில் னன்மையு மில்லை, தீமையுமில்லை.

மனிதனைவிட மேம்பாடான, அல்லது மனிதனுக்கு இணை துணையான படைப்பு வேறு இல்லை. படைப்புக் களில் வைத்து இவன்தான் மகா உன்னத மானவன். இவனைப் படைத்துள்ள மாண்பு எவ்வளவு அருமை யிலும் அருமையோ அதைவிட மகாப் பிரம்மாண்ட மானது இவன் தலையில் ஏற்றியுள்ள கடமையாகிய

செயல். ஆகவேதான் இவன் தன் கடமையை மறந்து தீமையாகப் போகிற பாரம் இந்தப் பூமியால் தாங்க முடியவில்லை. இந்தப் பூமிக்கு வேறு எந்தப் பாரமும் பாரமல்ல. ஆகவே இந்தப் பவப் பாரம் தீர்க்க ஒரு நாள் வருகிறது. “ மூரித்தேர் நாள் வருது – மோனத் துலாவிநிங்கோ” என்று அந்த நாளைக் குறி வைத்தே நாம் பாடி வைத்துள்ளோம். அந்த ஒரு நாளிற்காகத் தான், அன்றைக்கு எம் மக்கள் ஒருவர்கூடத் தவறாமல் கடைத் தேறத்தான், எம்முடைய இவ்வளவு நீண்ட காலப் பாடும் பரப்பும்!

36.

ஒருவன் தான் மாமிசமே சாப்பிடுவதில்லை என்கிறான். ‘ஏன் மாமிசம் சாப்பிடுவதில்லை’ என்று அவனைக் கேட்டால் அவன் உடனே கொஞ்சமும் தயங்காமல் “நான் சைவம்” என்கிறான். “மாமிசம் சாப்பிடாமைக்கும் சைவத்துக்கும் என்ன சம்பந்தம்” என்று அவனைத் திருப்பிக்கொண்டு கேட்டால், “என்ன அப்படிக் கேட்கிறீர்கள், மாமிசம் சாப்பிடாமலிருப்பது தானே சைவம்” என்கிறான். இந்த எண்ணமே ஏறக் குறைய எல்லார் மனதிலும் பரவிப் பதிந்துவிட்டது.

காய்கறி தின்றால்தான் சைவம் தன்னுடைய உடலில் தங்கும் – ஆனால் ஆட்டுக்கறி கோழிக்கறி தன் நாவில் பட்டாலே சைவம் ஓடிவிடும் என்று நினைக் கிறானே. இவன் தேகத்திலுள்ள கறியை விடவா இன் னொரு கறி மட்டமானது? இவன் கழித்துப் போட்டதைத் தான் ஆடுமாடு தின்கிறது. ஆனால் அவற்றின் சாணம்

கையில் தொடுகிற அளவுக்குச் சுத்தமாக இருக்கிறது. இவன் எல்லா னறுமணமும் பொருந்நிய அறுசுவை ஆகாரத்தை உள்ளே தள்ளுகிருன். ஆனுல் அது உள்ளே போனதும் அண்டளிக்க முடியாத கொடிய ஞற்றமாக மாறிவிடுகிறது. இப்படி னல்லதையும் கெட்டதாக மாற்றுகிற இவன் உடலில் உள்ள மாமி சத்தையே சகித்துக்கொண்டு இருக்கக்கூடிய அந்நச் சைவம் மற்றப் பிராணிகளின் மாமிசத்தைக் கண்டா ஓடிவிடும்?

இப்படி மண்டையைக் குடைகிற கேள்வியைக் கேட்போமென்று அவன் எதிர்பார்த் திருப்பாஞ? பாவம்! அவனுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லே. உடனே திருவள்ளுவ ஞயஞரைச் சாட்சிக்கு இழுக்கிருன் –

''கொல்லான் புலாலே மறுத்தானேக் கைகூப்பி
எல்லா உயிரும் தொழும்''

என்ற பாட்டை எடுத்துக் கொள்ளுகிருன். ''அந்நப் பாட்டிற்கு என்னய்யா அர்த்தம்'' என்று கேட்டால், அதுதான் மிருகங்களேக் கொல்லாதவனேயும், அவற்றின் மாமிசத்தை உண்ணுதவனேயும் எறும்பு முதல் யானே வரையுள்ள எல்லா ஜீவ ராசிகளும் கை கூப்பித் தொழும் என்று ஒரே மூச்சில் சொல்லி முடித்துவிடு கிருன். இப்படியே அர்த்தம் சொல்லிச் சொல்லித்தான் அவனுக்குப் பழக்கம். அதையே இங்கு வந்தும் விட் டோட்டுகிருன். ஆனுல் இங்கே கிளம்புகிறது அவன் வியாக்கியானத்தைத் தவிடு பொடியாக்குகின்ற அறிவுப் பாணம்.

"கொல்லான்" என்ருல் ஆடுமாடுகளைக் கொல்லாதவன் என்கிருனே, அப்போ ஆடுமாடுகளைக் கொல்லாமல் தன்னுயிரைக் கொன்ருல் பாதக மில்லையோ? இவன் ஒவ்வொரு விநாடியும் தன் வயதாகிய மூச்சை வெட்டித் தள்ளுகிருனே, தன்னுயிரைத் தானே பறித்தெறிந்து பாழாக்குகிருனே, இவனு கொல்லாதவன்? இந்நத் தற்கொலைப் பாதகத்தைத்தான் சைவம் என்கிருனு? இன்னொரு கூட்டத்தான் தன்னை ஜைனன், திகாம்பரன் என்று சொல்லிக்கொள்வான். பெண்டு பிள்ளைகள் பார்த்தால் காரித் துப்புவார்களே என்று கூட னினையாமல் ஆடையின்றித் திரிவான் – கையிலே மயில்பீலி வைத்துக்கொண்டு பாதையில் கூட்டித் தள்ளிக் கொண்டே போவான். "என்னடா இது?" என்ருல் அகிம்சை என்பான். அப்படிச் செய்யாவிட்டால் ஈ எறும்பு மிதிபட்டுச் செத்துப் போகுமாம். அதைத் தடுக்கத்தான் இந்ந அகிம்சா மூர்த்தி இப்படி அம்மணமாகத் திரிகிருன்போ லிருக்கிறது. துணி கட்ட வேண்டும் என்று னினைக்கக் கூட அவனுக்கு னேரமில்லை. அப்படி ஒரேயடியாக அகிம்சையிலே இறங்கி விட்டான். அகிம்சை யென்பது மானங்கெட்டதாகவா சூடு சொரணையற்றதாகவா இருக்கும்? மான வெட்கமே இல்லாதவனுக்கா ஞானம் வரும்? இதையெல்லாம் பார்த்துத்தான் னம் ஆதிமெய் உதய பூரண வேதாந்தத்திலே ஒரு பாட்டுச் சொல்லி வைத்திருக்கிறோம் -

னம்பிய தன்னுயிர் தற்கொலை செய்வான்
னமசிவ இருப்பறியான்:
தம்பிரான் றவசிதி காம்பர னென்பான்
சைவனெ னச்சொல்வான் –

இப்படித் தன்னுயிருக்கே காருண்யம் செய்யாது தற்கொலை செய்பவன் ஜீவகாருண்யத்தைப்பற்றிப் பேசுகிறான். தன்னைத் தட்டிக்கேட்க ஆளில்லை என்றுதானே இப்படி அவன் னுவு னிளுகிறது? இந்த லட்சணத்தில், புலால் மறுத்தலுக்கு வேறே வியாக்கியானம் செய்ய வந்து விடுகிறான். 'புலாலைத் தொடாமலிருந்தால் புண்ணியம் வந்து விடும். புலாலைத் தொட்டாலே சைவம் போய் விடும்' என்று னினைக்கிறானே. இவன் மீதே புலால் இருக்கிறதே அதற்கென்ன செய்வான்? திருவள்ளுவ னுயனார் புலால் மறுத்தானை என்று திட்டமாகவும் னேராகவும் சொல்லியிருக்க, இவன் புலால் உண்ணுதவனை என்று கோணலாக மாற்றி அர்த்தம் சொல்லுகிறான். இந்த அர்த்தம்தான் சரியென்றால் அவர்கள் புலால் புசியானை என்றே பாடியிருப்பார்களே!

இவனுடைய தூல தேகமாகிய புலால் இருக்கிறதே, அதன் மீது இவன் வைக்கிற இச்சைதான் இவனைக் கடைசியில் சாய்த்து னரகலாக்கிச் சாவு என்ற மீளாத் துன்பத்தில் கொண்டுபோய்த் தள்ளுகிறது. அதனுல்தான் "மாமிச இச்சை மரணம்" என்று வேதம் கூறுகிறது. இங்கே புலால் என்பது இவன் உடலாகிய மாமிசத்தையே குறிக்கும். அதை வளர்க்கத்தான் இவன் வெறிகொண்டு திரிகிறான். இவன் பாடெல்லாம் அதற்குத் தான். இவன் பருப்பும் னெய்யுமாகத் திணித்தால் தான் என்ன – கறியும் மீனுமாக வயிற்றில் கொட்டினுல்தான் என்ன – இரண்டுமே ஊன உடலாசை வெறிதான். எந்த உணவை உண்டாலும் இந்த உடலிச்சை

களும் அதன் சேட்டைகளும் ஒய்ந்து போகாது. இவனையே சாய்த்த பிறகுதான் அவை ஓயும். ஆகவே தான் இந்த உடலாகிய புலாலை வெறுக்க வேண்டும் என்று சொன்னால் போதாது என்று மறுக்க வேண்டும் என்று அவர்கள் சொன்னார்கள். மறுத்தல் என்றால் அறவே வேண்டாமென்று வெறுத்து விட்டுவிடுவ தல்ல – ஏனெனில் இந்த அழிதேகத்தை விட்டால் இவனுக்கு வேறு கதியில்லை. இவனால் அது முடியவும் முடியாது. புலாலில்லாத ஒரு தேகத்தை, தன்னுள் ளேயே இருக்கும் அந்த மகாப்பரிசுத்த சைவதேகத்தைப் பெற்ற பின் அல்லவா இந்தப் புலால் தேகத்தை இவ னால் மறுக்க முடியும்? புலாலில்லாத அந்தப் பேரின்ப தேகத்தை இவன் அறிந்தானா? இல்லை – அதை அறிந்த பிறகல்லவா இவன் புலால் மறுத்தலைப் பற்றிப் பேச வேண்டும்? தன் மூடப்படிப்பாலே தன் குட்டை அறி வாலே, அந்த மதி வல்லாரின் மறைமொழியை இவன் எட்டி அளந்து பார்க்கிற லக்ஷணம் இது – பாவம்! கடைசியில் இப்படி அவமானமுற னேருகிறது.

“எல்லா உயிரும் கை கூப்பித் தொழும்” என்ப தற்கு இவன் பண்ணுகிற அர்த்தத்தைப் பார்க்கும் போது, “இவனுடைய படிப்பு னிச்சயமாக மூடப்படிப்பே தான்” என்று அது முத்திரை போட்டுவிடுகிறது. மாமிசம் சாப்பிடாதவனை ஆடு மாடு கோழி முதலிய அஃறிணைக் கூட்டங்கள் கைகூப்பித் தொழும் என்பது தான் அவன் பண்ணும் அர்த்தம். இது எங்கேயாவது னடக்குமா? ஏனெனில் அவைகளுக்குத் தொழுகின்ற அறிவு மில்லை, தொழுவதற்குரிய கையுமில்லை. அப்படி

யிருக்க அவை எப்படி ஐயா தொழும்? அதிலும் புலாலுண்ணுதவரைத்தான் தொழவேண்டுமென்றும், இன்னுர்தான் புலால் உண்ணுதவர் என்றும் அவற்றிற்கு எந்தக் காலத்தில் தெரியப் போகிறது? இப்படி னேராகச் சிந்தித்துப் பார்க்காமல் எதை எதையோ அறிவுக்குப் பொருந்நாததையெல்லாம் பேசுவது சைவம் என்று சொல்லித் திரிகிருர்களே – இவர்கள் எப்போது மெய்யின்பால் திருப்பிப் பலன் பெறப் போகிருர்கள் என்று எமக்கு விசனமாயிருக்கிறது.

37.

புதிதாகச் சபையில் அங்கத்தினராகச் சேர்ந்துள்ளனம் பிள்ளை ஒருவரின் மேம்பாடான மாறுதல்களைக் கண்டு பொருமைகொண்ட பணக்காரன் ஒருவன்– “னீங்கள் ஒரு மனுஷரைத் தெய்வமென்று வணங்குவதாகக் கேள்விப்பட்டேன்” என்றதற்கு அவர் முறையுடன் சொன்ன பதில் –

“அண்ணுச்சி, ஒருத்தர் தன் வீட்டில் ஒரு னுய் வளர்க்கிருர். அந்த னுய் அண்ணுச்சி, திருடனைக் கண்டாலும் போக்கிரியைக் கண்டாலும் குலைக்கும். அதே போல் உங்களைக் கண்டாலும் குலைக்கும். ஏனெனில் அதற்குத் திருடன் யார், யோக்கியன் யார் என்று அறிந்துகொள்ளும் அறிவு இல்லை. ஆகையால்தான் அப்படிக் குலைக்குது அந்த னுய் அண்ணுச்சி. சிவானந்த போதம் என்ற னூலில் –

"மனிதரிலும் பறவையுண்டு விலங்குண்டு
கல்லுண்டு மரமு முண்டு
மனிதரிலும் நீர்வாழும் சாதியுண்டு
அனேககுல மனித ருண்டு
மனிதரிலும் மனிதருண்டு வானவரும்
மனிதர்போல் வருவ துண்டு
மனிதரிலே பிறப்பறுக்க வந்நதுவே
அருமையென வகுத்தார் முன்னோர்"

என்று சொல்லி வைத்துள்ளார்களே. அப்போ, மனித ரூபத்தில்தானே இத்தனை வேறுபட்ட குணத்தவர்கள்– அதாவது ஈசன் முதல் கேவலங்கெட்ட நீசன் வரை இருக்கிறார்கள் என்பது உங்களுக்குத் தெரியுமே. அப்படி ஈசனுயிருப்பவர்களுக்குச் செயல் அடையாளம் வேதத்தில் சொல்லி வைத்திருக்குது அண்ணாச்சி.

உங்கள் பாட்டனே மறுபடியும் தூலத்தில் வந்நால் உங்களுக்கு அடையாளம் கண்டு கொள்ள முடியுமா அண்ணாச்சி? முடியாதே! அங்ஙனமே அந்நத் தேவாதி தேவனே தூலமெடுத்து வரும்போது அவர்களை வெளித் தோற்றத்தால் அடையாளம் கண்டு கொள்ள முடியுமா அண்ணாச்சி? அவர்களுடைய தெய்வீகச் செயலை வைத்தல்லவா அடையாளம் கண்டு கொள்ள வேண்டும்; அப்பேர்க்கொத்தவர்களுக்கு நாசியின் வெளியே மூச்சு ஓடாது என்பது வேதத் தீர்ப்பு அண்ணாச்சி. நீங்கள் கும்பிடுகிற தெய்வமாகிய எங்கள் ஆண்டவர்களுக்கு அந்நப் பிரத்யக்ஷ அடையாளம் இருப்பதால்தான் அறுபத்தேழு ஜாதிகளும் எல்லா மதத்தினரும் அடங்கிய பல்லாயிரக் கணக்கான மக்களாகிய

னுங்கள் தேவப் பதவியில் ஏற்றப் பெற்றிருக்கிறோம், அண்ணாச்சி. எப்படிப் போக்கிரியையும் யோக்கியனை யும் அடையாளம் தெரியவில்லையோ அண்ணாச்சி னுய்க்கி, அது போலவே தேவாதி தேவனுக்கும் மனிதனுக்கும் உள்ள வித்தியாசம் உங்களுக்கும் தெரியவில்லை அண் ணாச்சி.'' இந்தப் பதிலைக் கேட்ட அந்தப் பணக்காரர் னம் சபையின் அங்கத்தினரைப் பணிவுடன் வணங்கி விடைபெற்றுச் சென்றார்.

38.

சத்தியம் விளையும் தலம் எது? சத்தியத்தின் பிறப் பிடம் எது?

சபையோர்கள்: தெரியவில்லை.

ஆண்டவர்கள்: முத்திக்குரியது ஆசான் வாக்கு. ஆனால் சத்தியத்தின் செயல், யார் னினைவிற்கும் எட் டாது. சத்தியத்தின் இருப்பிடம் உனக்கும் மற்றை எல்லோருக்கும் எங்கே? சத்தியத்திற்குமேல் சமயமோ மதமோ இல்லை. அதற்கு மேம்பட்ட பலமுள்ள பொருளு மில்லை. எல்லா ஜெயங்களுக்கும் சித்தியிடமே சத்தியம். கோழிக்குக்கூடத் தன் குஞ்சை வளர்க்கும் அறிவிருக் கிறது. ஆகவே இந்த உலக அறிவை அறிவென்று பெரியோர்கள் சொல்லவில்லை. தன் ஜீவனை, தன் அறி விருக்கும் தலத்தை, அறிகின்ற அறிவே அறிவாகும். அந்த அறிவில் ஆண்மை இல்லாதவனுக்குச் சத்தியத் தின் முனைப்பிடம் இல்லை. அழியா அறிவினுடைய ஆண் மையில்தான் சத்தியம் விளையுது. ஆகவே அறிவின் மூர்த்தண்ய முனைப்புக் கூர்தான் சத்தியம். அந்த

சத்திய முனையில் னிற்பவர்களாகையால்தான் கொடிய னிர்ப்பந்நத்தில்கூட மேலோர்கள், மெய்யை விட்டுக் கொடுக்காமல் தங்ஙள் உயிரையே காவு கொடுத்தார்கள்.

ஒரு ஊரில் ஒருவனுக்கு அதிகப்பணம் இருந்நால் அவனைப் பணக்காரன் என்று னினைப்பார்கள். அவனும் பிறரைத் 'தன்னைவிட ஏழைகள்' என்று னினைப்பான். ஆனால் அடுத்த ஊரில் அவனைவிட அதிகச் செல்வந்நர்கள் பலர் இருந்நால் அவனை யாரும் அங்ஙுலக்ஷியம் செய்ய மாட்டார்கள். அழி உலகச் செல்வ மதிப்பின் அளவு இதுதான். அறிவுச் செல்வத்தின் மதிப்பு அப்படி வரம்புக் குட்பட்டதல்ல. வேறு யாருக்கும் தெரியாதது ஒன்று னமக்கு மட்டும் தெரிந்நிருந்நால் அதைத் தன்னிகரற்ற வல்லமை யென்போம். அதுவே அப்படியானால் பல்லாயிரக் கணக்கான அரிய பெரிய வேத ரகசியங்ஙள் தனக்கு மட்டும் தெரிந்நிருந்நால் அது என்ன அபரிமிதமான ஜீவச் செயலாக இருக்கும்? அதனால் விளையும் அறிவினுடைய புஜ பலம் உன் ஜீவனுக்கு ஏறுதா, தூலத்திற்கு ஏறுதா? ஜீவனாகிய அறிவினுக்குத்தான் புதுப் பலம் ஏறுது. இருப்பினும் அந்நப் பலம் தூலத்துக்கும் ஒட்டும் என்றால் அதுவும் சரிதான். ஜீவ வல்லபம் பெறாதவனை இந்நக் கேள்வி கேட்டால் விழிக்கிறான். னீயோ, இங்ஙு னீ பெற்ற உன் அறிவின் பூரிப்பை னினைந்நுப் பெருமிதப் படுகிறாய்.

சத்தியம் இருக்கும் தலத்தை யாராவது ஒருவர் தெரிவித்தால் அவருக்கு ரூபாய் பத்தாயிரம் - இல்லை லக்ஷமே - தருவதாகச் சொன்னாலும் யாராலும் அத்

தலத்தைச் சொல்லமுடியுமா? முடியாது. உனக்கும் இன்றைய சாயந்திரம் வரையில் அது தெரியாமல்தான் இருந்தது. இப்போது நாம் தெரிவிக்கவும் தெரிந்தது. அறிவின் ஆட்சி ஒரு உருவத்தில் பதிந்திருப்பதால்தான் அந்த ரூபம் அதைப் பல ரூபங்களுக்கும் அறிய வைத்தது. இப்படி அறிவித்த நேரத்தில் இங்கு இல்லாதவனுக்கு அது தெரியாதே! பன்னிரண்டு ஆண்டுகள் எம்முடன்கூட இங்கேயே இருந்தவனாயினும் இந்தச் சமயம் இல்லாதுபோனால் அவனுக்கு என்ன நஷ்டம் பார். இந்த வேலிக்கு வெளியே இருப்பவனுக்கு அவன் ஜீவனே சொல்லுது ''டேய், மெய்வழியிலுள்ள மக்களோடே வாய் போடாதே. அவர்கள் நிசப் புலிகள்'' என்று. ஏன்? உங்கள் அறிவின் புஜபலத்தை நாம் இப்படி நாள்தோறும் வளர்த்திவருவதால்தான். சத்தியம் இன்னது என்று அறிந்து நடப்பவன்தான் புருஷ லக்ஷணம் உடையவன் - அதை அறியாதவன் தன்னைப் புருஷன் என்று நினைத்துக்கொண்டாலும் அவனுக்கு அந்த லக்ஷணம் இல்லை.

39

நாம் ஒரு காலத்தில் ஹஜ் யாத்திரைக் கென்று அரபு நாடு சென்றிருந்தோமே. அதுசமயம் உங்கள் பாட்டையர் தனிகைமணிப் பிரானவர்கள் அவதரித்த திருத்தலமான குனைன் என்னும் புண்ணிய பூமிக்குப் போயிருந்தோம்.

பிரானவர்கள் தங்கள் பால்ய வயதிலேயே அரபு தேசத்தைவிட்டு நம் இந்தியத் தாய் நாட்டிற்கு வந்தி

ருக்க வேண்டும். இங்கு வந்து தம் தேசத்துப் பாஷை பழக்க வ்ழக்கங்கள் முதலிய யாவற்றையும் அறவே மறந்து, தம்மை ஒரு தமிழராகவே ஆக்கிக்கொண்டு மெய்ஞ்ஞானம் பெற்றிருக்கின்றூர்கள். இளமையில் பளிச்சென்ற சிவப்பு மேனியோடு யாரும் கவனிக்கின்ற அழகான வடிவுடன் இருந்ந அவர்கள், காஞ்சீபுரத்தில் பிராம்மண குலத்தில் பிறந்ந ஒரு மாதைத் திருமணம் முடித்துக்கொண்டு இருபத்தோரு ஆண்டுகள் அங்கு இருந்திருக்கிறூர்கள்.

மெய்ஞ்ஞானச் சிவ செங்கோல் பெற்றபின் அவர்களுக்கு முதலில் ஒரு மாணுக்கரும், பின் ஒரு மாணுக்கரும் உண்டாகியிருந்தும் அவர்களிருவரின் வாய்மை பிரசித்தமாக வெளியேறவில்லை. பிரானவர்களின் தேவத் திருமணிச் சூலில் மூன்ருவது தோன்றிய மகவுதான் வாக்மி வள்ளலாகிய வடலூரார். இடையில் அவருக்குத் தங்கள் குருகொண்டலிடமிருந்து பிரிவேற்பட்டு, அதே ஏக்கத்தில் அவர்களைத் தேடி யலைந்து பின் கன்னியா குமரிக்கரையில், பிரானவர்கள் மாலதீவு சென்று திரும்புகையில், மறுமுறை அவர்களைச் சந்தித்து ஒட்டிப் படிந்து ஞான பூரண வல்லபத்தைப் பெற்று மெய்யருட்பாவை வெளியாக்கினுர்கள். இவ்வாறு இடையேறுருது விடை ஏறு ஞானம் பெற்று, எமனுடைய அதிகாரத்தை முறியடிக்கும் வல்லபச் சிம்மமாக விளங்கிய அவர்கள், னம் மெய்ஞ்ஞானப் பரம்பரைக் குடியில் உங்கள் பெரிய தந்நையர் ஆவார். தக்க பருவத்தில் அவர்கள் தூல வலசு வாங்கிக்கொண்டு இவ்வுலகை விட்டுப் புறப்பட்டதுதான் சரி — அதற்குப் பின்னும்

இருந்திருந்தால் பாபிகளால் விபரீதம் நிகழ்ந்திருக்கலாம். தெரிந்தவன்ங்கள்போல இப்போது அவர்களைப் பற்றி அறிவுக்குப் பொருந்தாத பல கட்டுக்கதைகள் எழுதுகிறுன்ஙளே, இவன்ஙளுக்கு அவர்களின் மகோன்னதம் என்ன தெரியும்! உமாப் பக்ஷியின் ஜேக்கு மற்றொரு உமாப் பக்ஷியினுலேதானே அறிய முடியும்.

வடலூரார் அவர்களின் மறைவுக்குப் பிறகு இருபத்தொன்பது ஆண்டுகள் கழித்து தனிகைமணிப் பிரானவர்கள் எம்மைக் கைபோட்டார்கள். ஆதி ஊழி விதி தேவ தீர்மானத் திட்டத்தின்படி, ஞமிருந்து வியாபாரம் செய்துகொண்டிருந்த காசுக்காரம் பாளையத்தில் அவர்களின் அரிய சந்திப்பு னிகழ்ந்தது. இல்லையெனில் எமது தெய்வத் தனிஞயகம் இன்ஞர், இன்ன அடையாள முடையவர்கள், இன்ன எல்லையி லிருக்கிருர்கள் என்று எம்மால் தேடிக்கண்டு பிடித்திருக்க முடியுமா? முடியாதே. தக்க தருணத்தில் வந்து அவர்கள் எம்மைக் கைபோட்டார்கள் – அதுவேரம் ஞம் எங்கெங்கெல்லாமோ ஞானத்திற்காகத் தேடியலைந்து ஆடி அலுத்துச் சங்கியிருந்த தருவாய் – அதற்குமுந்தி அவர்கள் வந்திருந்தாலும் இளமையின் மூர்க்கத்தில் என்ன ஆகியிருக்குமோ? ஒரு மாதம் தாமதித்து வந்திருந்தாலும், கப்பலில் னெல் இறக்குமதி செய்து வியாபாரத்தைப் பெருமளவில் விரிக்க ரெங்கூன் கிளம்பியிருப்போம்.

ஞம் சந்தித்த காலம், பிரானவர்களின் திருவுளத்தில் உலாவினின்ற உணர்ச்சியைக் கவனித்துப் பார்த்திருக்கிறேம். அவர்களுக்கு இப்பூமி சலிப்புத் தந்துவிட்டது என்பது னன்கு தெரிந்தது. அவர்களின் வார்த்

தைக்கு வார்த்தை அந்நச் சலிப்பைத் தெளிவாகக் காட்டிற்று. அவர்கள் இப்பூமியில் னெடுங்காலம் வாழ்ந்நுள்ளதற்குச் சான்ருக, மதுரை கடம்பவனமாக இருந்நதும், ஒருகாட்டுத் தூரம் இண்டம் புதரை விலக்கிக் கொண்டு கோயிலுக்கு ஜனங்கள் பூஜைசெய்யச் சென்ற விபரமும் அவர்கள் எடுத்துக் கூறுவார்கள் - ஞம் சிறிது கவனக் குறைவாயிருந்நாலும்; சலிப்புடன் இருக்கும் அத் திருவுள்ளம், எங்கே னம்மைக் கைவிட்டு விடுமோ என்று சதா பயந்நே அவர்களோடு வாழ்ந்நோம் - அவர்களை ஞம் எப்போதும் எந்நக் கேள்வியும் கேட்டதே இல்லை - ஜனங்களின் பார்வைக்கு மிக எளிய தோற்றத்தில் இருந்ந அவர்கள், தரையில் அமர்ந்நிருக்கும் போது பின்புறம் கைகளை ஊணிச் சிரசைச் சற்றுப் பின்சாய்த்த வண்ணம் இருப்பார்கள் -

அகிலவலம் வரும் காலத்தில் எங்குச்சென்ருலும் இருவரும் னடந்நே செல்லுவோம். மலைப்பாதை காட்டுப்பாதைகளில் சிலசமயங்களில் கட்டைவண்டிகள் தென்பட்டால் அதில் அவர்களை அலாக்காகத் தூக்கி அமரவைத்துவிட்டு வண்டிக்குப் பின்னே ஞம் னடந்நு செல்லுவோம். ஒரு சிறு பொரிமூட்டையைத் தூக்கினுல் எவ்வளவு லேசாக இருக்குமோ அவ்வளவு லேசாக அவர்கள் திருமேனி யிருக்கும். அவர்களைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு னடந்நால் என்ன என்று எமக்குப் பலசமயம் ஆசையாயிருக்கும். காட்டில் இரண்டு மூன்று பாதைகள் பிரியும் இடங்களில் எந்நப் பாதையில் போகவேண்டும் என்றுகூட ஞம் அவர்களைக் கேட்டதில்லை.

பிரயாண காலங்களில் ஆங்காங்குச் சந்திக்கும் ஓரிரு வரிடத்தில் பிரானவர்கள் சில மெய்ஞ்ஞான வார்த்தை கள் ஆணித்தரமாகப் பேசுவதுண்டு. பின்காலங்களில் அவர்களின் சன்னிதிமுன் கூட்டமாகக் கூடுகிறவர் களிடம் நாமும் பேசுவோம். உவமான உவமேயத்துடன் எழில் கொடுத்து நாம் பேசுவதைக் கேட்டு அவர்கள் இளன்கை பூத்துச் சந்தோஷ முறுவார்கள். அவ்வாறு கூடிக்கேட்டவர்கள் ஞான இச்சை வராது எழுந்து செல்வதைப் பார்த்து, "கழுதை உழவுக்கு ஆகுமா, வண்ணான் பண்ணாடியாவானா" என்று கூறி எம் மனதைத் தேற்றுவார்கள்.

சேலம் சீமை யருகில் பிரயாணம் செய்துவரும் காலத்தில் ஒருநாள் சாயங்காலம் மசண்டை நேரம், பிரானவர்கள் ஒரு சிறிய பாறையின்மேல் அமர்ந்து தியானத்தில் இருந்தார்கள். அவர்கள் அருகாமையில் ஒரு வில்லளவு தூரத்தில் இருந்து, திருமேனிக்கு இன் னல் ஏதும் அடராதபடி நாம் காவலில் இருந்தோம். அப்போது திடீரென்று ஒரு வாசனை கிளம்பிற்று. சிறிது நேரத்தில் நாகன் ஒன்று ஒரு புத்திலிருந்து வெளியே வந்தது. பிரானவர்களின் தியானம் கலைந்து விடக் கூடாதென்று எண்ணிய நாம் சிறிதும் அசையாமல் சந்தடிசெய்யாமல் அதைப் பார்த்த வண்ணமே இருந்தோம். அதுவும் வெகுநேரம் இருந்து பார்த்து விட்டுத் திசை திரும்பிப் போய்விட்டது.

மேற்கு மலைத் தொடர்ச்சிப் பகுதிகளில் பிரயாணம் செய்துவரும் காலங்களில், உணவுக்குச் சில சமயம் பலாப்பழம் வாங்கி அதன் சுளைகளை எடுத்து எம் கை

கொண்டு அவர்கள் திருவாயினிடம் கொடுப்போம். அதை ஏற்றுக் கொள்வார்கள். எம்மையும் இடை இடையே சமிக்ஞை பண்ணிச் சாப்பிடச் செய்வார்கள் – மறுனுள் அந்நப் பழத்தின் கொட்டைகளைத் தீயில் இட்டுச் சுட்டுச் சாப்பிடுவோம் – கழுகுமலை சென்றிருந்த காலம் அங்கிருந்த ஒரு கடையில் அவலும் வெல்லமும் வாங்கிக்கொண்டு ஆலயத்திலிருந்த குளக்கரைக்குச் சென்று படியிலிருந்த பாசத்தைக் கல்லால் கொட்டிப் போக்கிச் சுத்தம் செய்தபின், அந்நப் படியின்மேல் அவலைக் கொட்டித் தண்ணீர் தெளித்து ஊறவைத்துப் பிறகு வெல்லத்தைப் போட்டுப் பிசைந்து ஒரு இலையில் எடுத்து வைத்துக்கொண்டு பிரானவர்களுக்கு எடுத்தெடுத்து ஞம் அளித்தது இன்றும் எம் கண்முன் மாருது னிற்கிறது.

மற்றொரு சமயம் ஊத்தமலைக் கப்பாலுள்ள ஞலாந்நலா என்ற ஊரில் தங்கியிருந்நபோது, ஒரு சாவடியில் பிரானவர்கள் அமர்ந்திருந்நார்கள் - சிறிது தூரம் எட்டிச் சுவர் ஓரமாக ஞம் உட்கார்ந்நுகொண்டு திருஞேக்கை எதிர்பார்த்துக் காத்திருந்ஞோம். அதுனேரம் வெளித் திண்ணையில் யாரோ ஒருவர் "அப்பா ஞன் வேண்டுதல் கேட்டருள்புரிதல் வேண்டும்" என்று ஆரம்பிக்கும் திருவருட்பாப் பாடலை இனிமையாகப் பாடிக் கொண்டிருந்நார். அவரருகில் போய் அப் பாட்டைக் கேட்கவேண்டும் என்ற துடிப்பு எம் உள்ளத்தில் ஏற்பட்டதை அன்பேறுங் ஙுடித் தம்பிரான் எப்படியோ கண்டு, "அது உன் அண்ணன் பாடியது – வேண்டுமாஞல் போய்க் கேள்" என்று உத்திரவிட்டருளிஞர்கள். அதுனேரம் அருட்பா வள்ளலின் னினைவு அவர்களுக்கு

வர அவர்கள் திருமுகம் கவலைதோய இருந்தது. பிரயாண காலங்களில் பலசமயம் 'சிதம்பரம் இராமலிங்கப்' பிரான் என்னும் மேற்கூறிய அருட்பா அருளிய வடலூர் வள்ளல். அவர்களைப்பற்றி இடை இடையே பிரான் அவர்கள் பேசி வருவதும் உண்டு.

இப்படியான வண்ண வண்ணமாகிய கோடா கோடி அதிகாரண காரிய னிகழ்ச்சிகளைச் சொல்லியா முடித்துவிட முடியும். பல ஆண்டுகள் னடந்த பாரப் பெரிய ஜீவ வழிபாட்டுச் சரிதமல்லவா அது. உங்கள் தலை செழிக்கவந்த வேத விரத வீதி உயிர்க்களிப்பு னன்னலந் நவமும் தவப்பாடல்லவா அது. இந்தச் சிறிய னேரத்தில் அதை எப்படிச் சொல்லிவிட முடியும்.

40.

தன்னறிவில் சாய்பவன் அறிவற்றவன். ஆசான் அறிவின் வழிச் செல்பவன் அறிவுடையவன். அவனே தேவ அறிவு பெற்றவன். அளவிடற்கரிய ஈசனையும் அளவிடலாம் - ஆனல், தேவ அறிவின் தரத்தை யாரும் அளவிட முடியாது. ஆகவே சீரியர் என்பதும் தீயர் என்பதும் சேரினத் தியற்கையால் ஏற்படுகிறது.

திரைகடல் ஓடியும் திரவியம் தேடு என்று ஒரு பழமொழி உள்ளதல்லவா? திரவியம் என்று அதில் குறிப்பிடுவது அழிந்து போகிற இந்தப் பொய்ப் பொருளை அல்ல- ஒரு தேவ ஆசானைத் தேடி அடைந்து, அவர்கள் திருவடியில் படிந்து னின்று, னித்திய தேகச் சொத்தாகிய ஜீவரத்தினத்தைக் கைபோடுவதைத்தான் அந்தப் பழமொழி குறிக்கிறது. அந்த ஜீவரத்தினத்தின் பெருமை

யை, அதன் பவரை மனித அறிவு கொண்டு அளவிட முடியாது. தன்னுடைய ஞதத்தை ஒரு துளிக்கூட வீணுக்காமல் சேமித்து வைத்ததன் விளைவால் ஜீவரத் தினம் பிறக்கிறது – அது மேலும் விளைந்நால் இவனுக்கு இன்னெரு கண் திறக்கிறது.

41.

பாம்பு, மாதா மாதம் தனது பழைய சட்டையான மேல்த் தோலைக் களைந்நுவிடுகிறது. அப்படிக் களையும் போது அதன் கண்களை மூடியிருந்ந படலமும் உரிக்கப் படுகிறது – பிறகு அது புதிய சட்டையில் தோற்ற மளிக் கிறது. இம்மாதிரியே, வர னிற்கிற புதுயுகத்தில் தேக முத்தி அளக்கப் பெறுகிற அதுனேரம், னம் தேவ மக் களும் இந்ந அனித்திய உடலை மாற்றிக்கொண்டு அழியாத னித்திய உடலைப் பெற்று வருவார்கள் ளாத லால் னம் மக்களுக்கு 'அனந்நன்' என்ற ஞமம் தரப் பெற்றது. இந்நச் செயலையே மணிவாசகப் பிரான், தங்கள் தீர்க்கதரிசனக் கண்கொண்டு கண்டு "போ வோம் வாரீர் புயங்கப் பெருமான் பொன்னடிக்கே" என்று கூறிவைத்துள்ளார்கள்.

42.

ரவிந்திரனுத் தாகூர் ஞானம் போதித்த முறை எப்படித் தெரியுமா? பிரவேசக்கட்டணம் இரண்டு ருபாய் வாங்கிக்கொண்டு, படித்தவர்களை யெல்லாம் ஒரு அலங் கார அறையில் கூட்டிவைத்து, தான் ஒரு ஆசனம் போட்டு உட்கார்ந்து கொண்டு, அதிலே இதிலே இருந்ந

தைப் பொறுக்கி எழுதிக் கையில் கொண்டுவந்திருந்த காகிதத்தைப் படித்தவுடனே ஞான சபையும் கலைந்து விடும். இதுதான் ஐயா அவர் ஞானம். அப்படிச் செய்வதிலே அவர் எண்ணம் என்ன தெரியுமா? ராசாக்கள் மந்திரிகள் சர்க்கார் செக்ரடரிகள் டாக்டர்கள் அட்வகேட்டுகள் இம்மாதிரியான பெரிய மனுசர்களெல்லாம் தன்னை இவ்வளவு தூரம் ஞானியென்று மதிக்கும்போது தனக்கு ஞானம் கட்டாயம் வந்துதான் இருக்கும் - இல்லையேல் இவ்வளவு அந்தஸ்து உடையவர்களெல்லாம் தன்னுடைய பேச்சைக் கேட்பார்களா என்பதுவே அவர் எண்ணம். அந்த அழி னினைவுக்கு இவ்வளவு மதிப்பும் குதிப்பும் கொடுத்தது எதற்காகத் தெரியுமா? பாலி பாஷையில் எழுதப்பெற்ற புத்த பகவானின் தீர்க்கதரிசனம் அவர் மூலமாக மொழிபெயர்க்கப்பெற்று னமக்குக் கிடைப்பதற்காகவேதான். அந்த வேலை முடிந்ததும், எழுந்திரு என்று கூட்டிக் கொண்டுபோய் இருட்டிலே தள்ளிவிட்டது. "னான் இருட்டிலே னுழைகின்றேன்" என்று இறுதிநேரத்தில் தானே எழுதி வைத்துவிட்டு னீங்கா னரக அவஸ்தைக்குள் னுழைய னேர்ந்தது.

43.

உலகத்தில் சில பாசாண்டிகள் ஆனந்தா என்றும் ப்ரமாச்சாரியர் என்றும் யோகீஸ்வரர் என்றும் பெயர் வைத்துக் கொண்டு திரிகிறார்களே - அந்த வேடதாரிகளனைவரும் மக்களை ஏமாற்றிப் பணம் சம்பாதிப்பதைத்தவிர வேறு என்ன செய்கிறார்கள்? மனித தேகமாகிய இந்தக் கட்டிடத்திலுள்ள ஒரு னரம்பு என்ன

காரியத்திற்கு இருக்கிறது - அது என்ன வேலை செய்கிறது என்று அவன்களுக்குத் தெரியுமா? அதற்கு உயிர்ப்பு எந்த எல்லையிலிருந்து உண்டாகிறது - அதன் அசைவு எந்த சுவிட்சைத் தட்டினதும் ஏற்படுகிறது என்று தெரியுமா? இப்படி இத்தேகாதி யந்நமுமுள்ள ஒவ்வொரு அணுக் கோடியின் வல்லபத்தையும் அறிந்து பழகி, அவற்றை னித்தியத்தின்பால் திருப்பிவைத்து ஆளக்கூடிய சத்தி பெற்றவர்களல்லவா பாரவான்ஙள் - சர்வேஸ்வரனின் பள்ளிக்கூடத்தில் படித்துத் தேர்ந்து தேவ சன்னதம் பெற்றல்லவா அதை அவர்கள் அறிய வேண்டியிருக்கிறது. வேடம் போட்டதால் ஞானம் தானே தேடி வந்துவிடுமோ. ஊனப் பிறப்பிலே பிறந்து ஊன தேகத்திலேயே இருப்பவனுக்கு எந்தக் காலத்தில் மெய்ஞ்ஞானம் வரப்போகிறது? ஒருக்காலும் வரப்போவதில்லை.

னீ இங்கு வந்து தேவப் பிறப்பில் பிறந்த உடனேயே, உன் ஈனப் புலால் உடம்பு னீக்கப்பட்டு னித்திய சைவ உடலில் ஆக்கப் பெறுகிறாய். ஒருவன் இங்கு வந்து பெற்ற அந்த அதி மகோன்னத வரவை னெட்டுறவாக எண்ணி எண்ணிப் பார்ப்பானாகில் அவன் எமனணுகா வெற்றி மேடு ஏறியே தீர்வான். உலகத்திலுள்ள சிறப்புக்கள் அனைத்தும் அத் தேவ யோனியில் வைத்து மறுபிறப்பெய்திய உருவிற்கே சூட்டப் பெறுகிறது என்றால் அதன் உன்னதத்திற்கு ஒப்பு உவமை உண்டா? இதுகாலம் னும், னீ இருக்கும் பூமிக்கு வந்ததால்தான் உனக்கு இந்தத் தேவப் பிறப்புக் கிட்டியது. வரவில்லையென்றால் னீசப் பிறப்பிலேயே

இருந்து னீசனுகப் போகவேண்டியதுதான். இத் தேவப் பிறப்பில் இருந்துவாழ உனக்கு மகா புத்தி, மகா அறிவு, மகா வைராக்கியம், மகாச் சுத்தம், மகா மானம் வேண்டும். இல்லையென்றால் உன்னைச் சூழ்ந்துள்ள பேய்க் கூட்டங்கள் உன்னைத் தன்னுடைய னரக வழிக்கு இழுத்துக்கொண்டே போய்விடும் - உஜார்.

(அருகிலிருந்த மெய்வழி கவிசொல் அனந்தரைப் பார்த்து) ஆண்டவர்கள்: - இஸ்லாமிய குலத்தில் பிறந்த னீ எப்போதாவது பூணூல் போடுவாயா? (மெய்வழி கலைமகா அனந்தரை னோக்கி) சைவ குலத்தில் பிறந்த னீ எப்போதாகிலும் சாம்பல் பூசுவதை விடுவாயா? உபதேசத்தன்று பட்டை பட்டையாக விபூதி என்று சாம்பலை அள்ளிப் பூசிக்கொண்டு, ருத்திராக்ஷம் என்று னினைத்துக் கொட்டைக்காயைக் கட்டிக் கொண்டல்லவா சத்திய மேடையில் வந்து உட்கார்ந்தாய். வேத சாட்சியாக அந்த அசல் திருனீற்றை உனக்கு அறிவித்து அணிய வைத்த பிறகல்லவா இந்த னகல் சின்னங்களைத் தானுகவே உதறித் தள்ளினுய். பத்துப் பதினுறு வயதிலிருந்து ஜீவனில் ஒட்டி ஊறி முதிர்ந்து இருந்த அந்தப் பழக்கம், முப்பத்தைந்துக்கு அப்புறம் என்ன முரட்டுத் தனத்திலே ஊணி னிலைத்துப் பணர்விட்டிருந்திருக்கும். அந்தப் பழக்கம், சாமான்யமாகவா விலகும்? விலகாது - இப்படியே உங்கள் ஒவ்வொருவரிடமிருந்த பழக்கங்களைப் போக்கனும் பட்டபாடும் படுகளமும் சொல்லி முடியுமா? அந்த னரகக் கீழ்க் கோடியிலிருந்து இந்த மேலார்பரமான மெய் வழிபாட்டுக் கோடிக்கு உங்களைக் கொண்டுவந்தது சாமான்யமான

திருப்பமா? சிந்தித்துப் பார்த்தால்தான் தெரியும். இப்படியே அரும் பாடுபட்டு ஒவ்வொரு தலையாக உருவாக்கி, ஒரு பெரிய கும்பல் ஆகும் வரைக்கும் எம் சிந்தைக்கு என்ன வேதனையா யிருந்திருக்கும்? கூட்டமாக நீங்களனைவரும் இந்த மெய்யில் சேர்ந்த பின்தான் எம் கவலை சிறிது மாறிற்று.

எந்தக் காலத்திலாவது மெய்ஞ்ஞான பீடங்கள் தொடர்ந்து எழுபது ஆண்டுகளுக்கு இருந்து ஆட்சி செய்ததுண்டா? இல்லை. கலி முதிர்வேருத அந்த யுகத்திலே வந்த செம்மல்கள் – திடகாத்திரமான தேகமும், மடங்காத பலமும், மெய்ஞ்ஞான ஆற்றலும் பெற்றிருந்தும் இந்த ஒருருளைத் தேவ ரதத்தைச் செலுத்த முடியாமல் கொடை கவிழ்ந்து போயிற்றே. அப்படியிருக்க இந்தக் கலிக்கடையில் வந்த இது, மறலி கை தீண்டா ஒரு மெய்ம்மதமும், அறுபத்து ஏழு சாதி மக்களை ஒரே சத்திய தேவ பிரம்ம குலமாக ஆக்கியுள்ள தன்னிகரற்ற ஒரு சாதியும், தன்னையறிந்தவர்களே பிரத்தியேகமாகக் குடியிருந்து வாழும் மெய்ன்னகரமாகிய ஊரான ஒரு ஊரும் உண்டாக்கிக் கிள்ளுமக் கொடியேற்றி விளங்குகிறது என்றால், இது எப்பெரிய வாடாத தவப்பாட்டால் ஆகியிருக்க வேண்டும்.

'இனிக்கதி யில்லை யென்னும் யுகத்தவச் சாலை யான
தனிப்பதி உதயம் செய்துத் தேவமெய்க் குலமுண்
டாக்கிக்
கனிமொழி மாது மக்கள் காண்பவர் வியந்து ஞெக்கச்'

செய்வதென்பது என்ன சாதாரண காரியமா?

44.

ஞம் சென்ற ஆண்டில் திருவெறும்பூர் பாய்லர் தொழிற்சாலையைப் பார்க்கச் சென்றிருந்தோம். அங்கு அமைக்கப்பட்டுள்ள இயந்திரங்களையும், அவைகளை னடத்தும் ஆட்கள் கூலியையும், வேலை னுணுக்கங்களையும் கவனித்துப் பார்த்தோம். இவ்வளவு பெரிய முதலீட்டிற்கு இவ்வளவு வேலைதானு னடக்கிறது என்று எண்ணி அதன் லாப னஷ்டத்தைத் தோராயமாகக் கணக்கிட்டுப் பார்த்ததில், ஒரு ரூபாய் செலவு செய்தால் காலணுதான் தேரும்போல் இருக்கிறதே என்றோம் - அங்குள்ள அதிகாரி "கிட்டத்தட்ட னிகர லாபம் அவ்வளவுதான். இப்போ ஆரம்பகாலம் தானே" என்று பதில் சொன்னார்.

கனரக பாய்லர் செய்ய இரண்டரை அங்குல கனத்த இரும்புத் தகடுகள் உபயோகப்படுகின்றன. அவைகள் பிரம்மாண்டமான உலைகளில் காய்ச்சி, பெரும் உருளை இயந்திரங்களில் வளைக்கப் படுகின்றன. வளைக்கும் முன் அவைகளில் அணுவளவு பழுதோ கண்ணுக்குப் புலப்படாத மிகச் சிறிய விரிசல்களோ இருக்கக்கூடாது - ஆகவே அதைப் பரிசைஷ செய்வதற்கு சூப்பர் சானிக் டிடெக்டர் என்ற ஒரு விலையுயர்ந்த இயந்திரம் உபயோகப்படுத்தப்படுகிறது - அதன் அருகாமையி லிருந்த ஒரு மேஜையின்மேல் ஞம் தற்செயலாகக் கை வைத்தோம். உடனே அந்த இயந்திரத்தின் ஒளித் திரையில் காணும் அலைகளின் அசைவு னின்று விட்டது. உடன் இருந்த என்ஜினியரும் மற்றை

யோரும் மின்சார வரத்தில்தான் ஏதோ பழுது என்று னினைத்துப் பரிசோதித்ததில் பழுது ஏதுமில்லை என்று கண்டார்கள் - வேறு என்ன காரணமாயிருக்கும் என்று புரியாமல் னின்றுகொண்டிருக்கும்போது, ஞம் எம் கையை எடுத்ததும் ஒளி அலைகள் முன்போல் அசையத் தொடங்கின. மறுபடியும் ஞம் மேஜையைத் தொட்ட போது முன்போலவே ஒளி அலைகளின் அசைவு னின்றது. இதுவரை அவர்கள் யாரும் காணுத காட்சி யாதலால் அங்குள்ளவர்களுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. ஆண்டவர்களிடம் ஏதோ ஒரு அபூர்வ காந்த சக்தி யிருப்பதால்தான் மின்சாரம் பாய்ந்தும் ஒளி அலை அசையவில்லை என்று ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டார்கள். இப்படியான ஒரு சக்தி எம்மிடம் இருப்பது அதுனேரம்வரை எமக்கும் தெரியாது.

45

எல்லா அங்கங்களும் பூர்த்தியாக உள்ளவன் தான் மனிதன். காது கேட்காவிடில் மனிதன் என்ற பெயர் போய்ச் செவிடன் என்னும் பெயர் வந்துவிடுகிறது. இவ்வாறே பார்வை யிழந்தவனுக்குக் குருடன் என்னும் பெயரும், காலில்லாதவனுக்கு னொண்டி என்னும் பெயரும் வந்து விடுகிறது - ஆகவே எல்லா அங்கக்குலங்களும் பூரணமாக உடையவன்தான் மனிதன் என்ற உன்னத ஞமத்துக் குரியவனுகிறுன். அவனே இந்த மெய்ஞ்ஞானம் அடைய லாயக்குடையவனும் ஆகிறுன்.

உனக்குள் இருக்கும் ஜீவதேகமாகிய அந்நப் பிரணவ தேகத்திலேயே சர்வமும் அடங்கி யுள்ளது. முத்தொழிலுக்கு அரசு ஆகி அதற்கு மேலும் பாய்ந்து கையில் சன்னதம் பெற்றவர்களுக்குத்தான், அந்நப் பிரணவ வித்தி லடங்கிய பிரம்மாண்டமான அண்டரண்ட அகண்டாகார தோற்றங்கள் அனைத்தும் தெரியும்.

ஒரு சிறு ஆலம் வித்தில், அதனிடமிருந்து காலமெல்லாம் விளைவாகிற கிளை, இலை, பூ, பிஞ்சு, காய், பழம் முதலிய எல்லாம் அடங்கியுள்ளன வல்லவா? ஆம். அவைகளை அந்ந வித்தினுள் வைத்துப் பார்ப்பவர்களே ஞானிகள். அந்நப் பிரணவ வித்தினுள் அடங்கிய அணுவினுக்குள் அணுவாகிய மகா னுணுகிய அணுவில், அவரவர்கள் தவத்துக்குத் தக்கபடி, சிலருக்கு வாதுகள் மட்டும் தோற்றமளிக்கும் - சிலருக்கு அந்ந வாதுகளில் சிறு கிளைகள் மட்டும் காண னிற்கும் - சிலருக்குச் சில இலைகள்தான் காட்சிக்கு எட்டும். அப்படியான அரிய தவத்தில் ஏறி இவைகளைத் தரிசிக்கும் வல்லமை உனக்கு இல்லாவிடினும் அந்ந வல்லமையுள்ள ஒருவருடன் பூரண ஒட்டு வைத்திருந்நால், அவர்களின் பேரிரக்கத்தால் உன்னையும் சேர்த்து இழுத்து வைத்து அந்நப் பதவியை உனக்கு இலமாகத் தருவார்கள் -

அந்நப் பிரம்மாண்ட அணுவினுள் பாய்வதென்றால் வேறு பராக்கற்ற மகாகூரிய ஞேக்குடன் பாயவேண்டும். முதலில் தோன்றுகிற அதன் முளையே னிகரற்ற தனி முதலாகத் தெரிய னிற்கிறதென்றால், அதன் முழு வல்லமை எவ்வளவு அளவிடற்கரியதா யிருக்கும்?

முன் போன காலம், நிகழ் காலம், வருங்காலம் என்றெல்லாம் கிடையாது. முக்காலங்களும் ஒன்றாக அடங்கியுள்ள தனி வல்லபமாகிய அது, அந்தப் பரமாணுவினுள் நுணுகிப் பாய்ந்து செல்லும் ஆற்றல் படைத்த அவர்கள் கையில், ஒரு கோட்டில் ஒரு ரேகையில் அடங்கியுள்ளது. மனிதனுக்குள் அடங்கியிருக்கும் அந்தப் பிரம் மாண்ட அந்தச் செயலைத் தன்னதாக்கி அனுபவித்துக் கொண்டிருப்பவர்களுக்கு இவ்வுலக வாழ்வு எம்மாத்திரம்!

ஒரு சீவேசர் சன்னிதி முன்னிலையில் அவர்களால் மறுபிறப்பாளனாகி, ஜீவதேகத்தில் நுழைந்து, அந்தக் கோடிசூர்ய பிரம்மப் பிரகாசனைச் சந்திக்கச் செய்து வைக்கும் ஆகம துலக்க அறிவே ஆருவது அறிவு. அந்த அறிவை அறிவிக்கும் அறிவாகார ரூபகரே ஆசான்.

அறிவில் வளர்ந்து நிற்கின்ற பசைக்குத்தான் கவனம் என்று பெயர். அது அகமியத்தில் ஒரு உண்டை வடிவத்தில் இருப்பதால் கவனக் குளிகை என்று சொல்லப் பெறுகிறது.

அறிவில்லாதவனே ஏழை. அறிவை அறிந்தவனே சீமான் – அவனே சிவராஜன்.

மறதியற்றதற்குப் பெயர் நினைவு. அதுவே பரிசுத்த நிலைக்குப் பெயர். அதில் தீங்காகிய சைத்தான் கலந்தால் மனம். தாவுகின்ற செயலுள்ளது மனம். ஒரு தெய்வ ஆசானால் அந்த மனதிற்குள்ளே ஒரு ஒளி, ஒரு முளை காணச் செய்வது, நாற்றமுள்ள சிப்பிக்குள் முத்துத் தோன்றச் செய்வது போலாம். மனிதனிடத்தில்

மனம் கொட்டாப்புளிபோல் உலக இச்சையால் பருத்து இருக்கிறது. அவன் அறிவோ மெலிந்து, மனத்தின் பின்னே ஒரு வால்போல் தொங்கிக்கொண் டிருக்கிறது. இங்கு வருவதன்முன் மனம் வேறு, அறிவு வேறு என்றில்லாமல் எல்லாம் மனமாகத்தா னிருந்தது. அந்த மனத்தை மெள்ள மெள்ள மெய்யறிவு உதயம் காட்டி மாற்றி அறிவு ரூபத்தில் ஆக்குவது ஆசான் அவர்களின் வேலை.

மூக்கறிவு வளர்வதற்காகத்தான் தேக பரிசுத்தம். ஆலய வழிபாடு முதலியன எடுத்து வைக்கப் பெற்றது அதற்கே. மூக்கறிவு வளர- செவியறிவு வளரும். செவியறிவு வளர - ஜீவ அறிவு வளரும். ஜீவ அறிவு வளர வளர - மெய் அறிவுப் பயன் கைகூலுக்கப்பெறும்.

ஜீவனுக்கு மெய் உணர்ச்சி தைப்பது காது வழியாகத்தான். செவிச் சுவை உன் ஜீவனுக்கு உஷ்ணத்தையும் தேஜஸ்ஸையும் தருகிறது - கிளப்பி உண்டாக்குகிறது. செவிக்கு உணவு அருந்துபவன் யோகத்தில் ஆழ்வான். வாய்க்கு உணவு அருந்துபவன் பாபத்தில், துக்கத்தில் ஆழ்வான். செவிக்கு உணவு அருந்துவது என்பது, ஞான சைதன்ய வார்த்தைகளை உள்ளம் சம்மதிக்கச் செவி மடுப்பது - யோகத்தைப் பெருக்கி சிவேசனுக்கும் செயலில் உன்னை விழுத்தாட்டுவது.

செம்மை னலனேர் வழியை ஒரு தேவேசரின் திரு வாய்மூலம் வெளியாக்குவதுவே 'வஹது'. உன் செவி வாயிலாக அத் தேவ ஆசரியர் உனக்கு ஒலி வீட்ட முதை ஊட்டுகின்றார். சிபத்துக்கள் - வித்தியா தத்து

வங்நுன் - ஏழும் பிரயோஜன அளவில் ஏழு ஒலி வீடுகளாக இருக்கின்றன. அந்த அருந்நலத்திலிருந்து எடுத்து அளத்தலே அறிவாகார தேவ வர்ஷிப்பாகும். அவர்கள் அதுனேரம் தன் சப்தமாகிய உயிரை உனக்குச் செலவிடுகிறார்கள். அப்போது அந்தத் தேவ அமுதை ஆர்வத்துடன் உண்ணுதுவிட்டால் நீ கெடுவதோடு, அவர்களை ஏமாற்றிய பாவமும் உன் தலையில் வந்து விழும். உன் ஜீவனில் உள்ள சர்வ மாசுகளையும் ஒழிப்பது செவி உணவு. அருளமுதமாகிய தெய்வ மருந்து உண்டால்தான், உன் ஜீவனில் கப்பியுள்ள அழிகரு வழிவரு பிறவி மாசு ஒழியும்.

46.

மனிதனிடத்தில் உள்ள ஜீவ வித்து, ஞாதகுல வித்து – அது ஒரு ஞாதரையே விரும்பும். அதன் வர்ணம் காவி. ஆதியிலே உன் தந்தையின் சுஜ்லாம்பரனுட்டில் அது ஒரு தூசி யளவாயிருந்தது. அது, தன்னுடைய அந்த மூல வள ஞடு விட்டுப் புறப்பட்டபோது, ஐந்து சக்திகளைத் தன்னேடு கொண்டுவந்து தாய்க் கருவறையில் புகுந்தது. பிறகு தினம் தினம் வளர்ந்து உருவெடுத்து வெளிவந்து இன்று இவ்வளவு சக்தியோடு விளங்குகிறது.

கலை என்பது எழுத்தல்ல. தேவஞத ஒலியினின்றும் தோன்றுகின்ற இன்பம். அது செவிச் சுவையாக வருஷிக்கப் பெறும்போது அதை உண்டனுபவிக்கும் சுவைக்கு நிகரான சுவை வேறு இல்லவே இல்லை. செவிச்சுவை உணவு உண்ண உண்ண ஆசான்பால் அன்பு பெருகுகிறது.

உன்னைப் பரத்திற்குரிய அன்பனாக ஆக்குகிற செயலே பரோபகாரம். இன்னும் உன் ஜீவனுக்கு மெய்ஞ்ஞான எழில் ஊட்டுதல், அதாவது உன் ஜீவனுக்கு அறிவு உணவு ஊட்டி அதை மேலாம்பர எல்லைக்கு ஏற்றுதல் பரோபகாரம்.

கலைமகள் வாசம் செய்யும் நாவினை உடையவர்களே மறை மொழி மாந்நர். அவர்களே உன் ஆசான்.

47

நீங்கள் உங்கள் ஜீவப்பிறவியர் எவர் ஒருவரையும் குற்றம் சொல்லாதீர்கள். குற்றம் பார்ப்பது மாயையே. வஞ்சக நடை மரத்தில் வளர் வினைக் கொம்பிலேறி சஞ்சல மனக் குரங்கு தாவியே அலைய, நீங்கள் பஞ்ச பாதகங்கள் செய்து பாம்பின் வாய்த் தேரை போல் ஆகிவிடக்கூடாது. தீமையுடைய பிசாசாகிய உங்கள் மனத்திற்கு அறிவு இப்போது அடங்கியிருக்கிறது. நம் எல்லையில் அது அப்படியிருக்க விடமாட்டோம். ஏனெனில் உனக்கு அறிவைத் தருகின்றதும் நாமே. அறிகின்றதும் நாமே. உயரிய எண்ணத்தை உன்பால் ஏற்றுகின்றதும் நாமே - உன் பாழான எண்ணத்தை அழிக்கின்றதும் நாமே.

பொய்க் கூட்டில் மெய் அகம் இருப்பதால் உன் பொய் பூராவையும் தெரிந்து, உன் பொய்க்குத் தக்க பொய் கொடுத்து, உன்னை மாற்றி அந்த மெய் அகக் கூட்டிற்குக் கூட்டிக்கொண்டு போவதுவே உபதேசம்.

மனம் க்ஷேமமடைவது என்பது அறிவுக்குள்ளாக நுழைந்து உன் ஆசானாகிய அறிவாகார ரூபகரை

விழுங்கி விடுவது. அப்போது அந்த மனம் சந்தேகமற க்ஷேமமடைந்து நிற்கிறது. இவ்வாறு அந்த அறிவாகார ரூபகரோடு ஏற்படும் சம்பந்தமானது உன் அகப்புறக் கருவிகளில் இருக்கும் தீங்குகளை எல்லாம் நீக்கி, சத்தியத்தில் ஏற்றி, மனத்தை யௌவனத்திலாக்கி, பிணங்கிடாது இணங்கச் செய்கிறது. இத் தேவ சம்பந்தத்தை ஏற்படுத்தும் செயலே இதுகாலம் இங்கு நடந்து கொண்டிருக்கிறது. இவ்வாறான இச் செயலேற்றத்தால் நீ மனிதர்களுக் கெல்லாம் மேலான ஒரு மனிதனை ஆகித் தேவனை ஆகின்றாய். நாம் இப்படி ஆக்கப் பெறுகிறோம் என்பது உனக்குத் தெரியாது. நம் மனத்தில் விதவிதமாகத் தீய முளைகள் உண்டாகின்றனவே என்று தெரிவதுவே அறிவு. அவ்வாறு குறை மனத்துப் பிழை அறிந்து அதை ஒதுக்கப் பழகித் தேர்ந்தோரே பெரியோர்.

தேகத்தின் சலனமே சிற்றின்பம். அந்தச் சிற்றின்ப சலனம் ஏற்பட்டவுடன் தன்னையே குறை கூறித் தன்னையே தண்டித்துக் கொள்ளவும், அங்கேற்படும் இடைவெளியில் மெய் வந்து நிறைய அன்பெனும் நீர் பெருகுகிறது.

48.

'சும்மா இருக்கச் சுகம் உதயமாகும்' என்பது சத்தியம். மனதை எப்படிச் சும்மா வைத்திருப்பது என்று தெரிந்து சும்மா இருக்கப் பழகவேண்டும். எல்லாச் செல்வமும் இருந்தும் அதைப் பொருட்படுத்தாமல் இருப்பதே சும்மா இருப்பது. சர்வ வல்லமையும் இருக்கச் சாந்தமாய் இருப்பதே சாந்தம்.

சாவுக்கு எட்டித் தீவைக்கிற செயலுடையது சாதி. அந்நச் செயலுக்குள்ளானவன், அந்நச் செயலினில் ஒட்டி யிருப்பவன்தான் ஒரு சாதியிலிருப்பவன். சாவைச் சந்நித்து, தீ வைத்து அப்பால் செல்வதே சாதி. அப்படிச் சென்றவர்களே சாதிமான்கள்.

49.

கண்ணுக்குக் காணப்படாததும், ஆனல் அறிவுக் கண்கொண்டு காணப் பெறுவதுமாகிய தேவ ரகசியங்கள் உனது காதில் ஏறி ஏறிப் புகழுடம்பானது வலுவேற்ற மடைவதற்காக, னீ இந்ந உடலில் இருக்கும் வரைக்கும் உனக்கு உபதேசம் னடந்நுகொண்டேதா னிருக்கும். உன் தேகாதி யந்நத்திலுள்ள சகல கருவிக் குலங்களையும் ஒவ்வொன்ருக மாசு துடைத்து, எமது தெளிவெனும் பிரகாச வாளை வைத்து, அவற்றிலுள்ள பாவங்களை வெட்டி வெட்டி மாற்றி மாற்றி, ஆங்காங்குத் தேவ வல்லபங்களைப் புதிது புதிதாக வைப்பதுவே உபதேசம்.

ஒரு பெண்ணுக்கு ஒரு புருஷனல் கருப்பம் உண்டாகிறதுபோல ஒருவன் தனக்கு வரவிருக்கும் மரணபயத்தை னினைப்பதால் ஞானகருப்பம் உண்டாகிறது. அந்ந மரண பயத்தை உன் னினைவில் மாருது னிறுத்துவது ஆசானின் அருளமுத வர்ஷிப்பு. ஆசான் சொல்லே உன் இச்சை என வந்நதும் அந்ந னிமிஷத்திற்கு முன் இருந்ந னீ, இறந்நு விட்டாய். அவர்கள் உறுப்பில் ஒன்ருய் னீ ஆகிவிடுகிருய். குருவாகிய ஜலக்கடல் தலைனீட்டினதும், கிரஹமாகிய னெருப்பு

அணைந்து அதன் அதிகாரம் அற்றுப் போகிறது. குரு பெருமானின் பரிசுத்த ஆவியின் கிரண வீச்சானது அவைகள்மேல் பாய்ந்நதும், அந்நக் கிரகங்கள் தமது குணம் மாறி அவர்கள் வசப்பட்டு ஊழியர்களாக ஆகி, உதவி செய்ய னிற்கின்றன. கிரஹம் அஸ்தமன மாகும்படிச் செய்துகொண்ட ஒரு கிரகஸ்தரின் கைவசப் படுவது என்பது உன் அறிவில் சாயாமல் உன் ஆசரி யரின் அறிவிலே னீ சாய்வது ஆகும். அப்படி அவர் களிடம் பூராவும் சாய்ந்நுவிட்டால் உனது செயல் என்பது அற்று, னீ இறந்நுவிடுகிறாய். அதுதான் சா வருமுன் சாவது. அப்போது உனக்கென தனிச் செயல் இல்லை, தனி உடல் இல்லை, தனி ஆவி இல்லை. இதைத்தான் வேதம், உடல் பொருள் ஆவி மூன்றை யும் தத்தம் கொடுத்து ஆசான்பால் சாயவேண்டும் என்றது. இப்படி னீ ஆசரியர் அவர்களிடம் முழுமன ஒட்டுதலோடு சாயாமல் இருக்கும்வரை னீ சாகவும் இல்லை, மறுபிறப்பு அடையவு மில்லை.

உனது மெய் அறிவின் முன்னே மனம் அவமானப் பட்டுனிற்கிறது. உன் அறிவானது அருளமுத உணவை உட்கொள்ளக் கொள்ள உன் மனம் அறிவிலே ஒட்டி விடுகிறது. உன் உடலை அப்படியே வைத்துக்கொண்டு உன் அறிவு முதலாகிய உன் அகக் கருவிகளை ஒன்று ஒன்றாக மாற்றி வைப்பதுவே மறுபிறப்பு. உனது ஆசான், உனது பழைய அறிவை வாங்கிக்கொண்டு, உன்னை அறுகு னுனி வாசல் என்னும் அந்த ஊசிமுனைத் தமர் வழியாகப் புகுத்தி, தங்களுடைய என்றென்றைக் கும் அகலா யௌவன பூரண சுகவடிவைத் தந்நு, ஒரு

சுத்த ஆவியை உன் ஜீவனில் வைத்து ஊதி, ஏழ்நிலைக் கம்பத்தில் ஏற்றி வைக்கிறார்கள் – அதுவே மறுபிறப்பு.

உன் அறிவு நுணுகி நுணுகிப் போகும்போது அந்த அறிவு எல்லா இடங்களிலும் எட்டிப் பாய்கிறது. அப்போது நாதமெனும் நுமுறல் கிளம்புகிறது. மிக நுணுகி அதி வேகங்கொண்டு பாய்வதால் எந்தக் கடினமான எல்லையிலும் அது போய்ப் பாய்கிறது. மெல்லிய துளிராக ஆகி அதிவேகங்கொண்டு அது போகும்போது, எந்த எல்லையிலும் பாய்கின்ற வல்லபத்தைப் பெறுகிறது. அத்தகைய அறிவினைப் பெறுவதுவே ஞானம். எதையும் துச்சமாக மிதித்து ஏறி, அதன் முடியில் நின்று ஆளுவதுதான் ஞானம். சர்வ அறிவையும் தன்னதாகவைத்து ஆளுவதுதான் ஞானம். இந்தக் கூரை வீட்டை விட்டுவிட்டுத் தங்கரெத்தின சிங்காசனத்தில் ஏறுவதே ஞானம். அழியப்படாத புகழ்உடம்பாகிய ஜீவ சிம்மாசனத்தில் உன்னை ஏற்றி வைப்பதுவே அது.

ஞானத்தை எடுத்து அருந்துவதற்கு ஐந்து கரங்கள், ஐந்து வழிகள் உண்டு. முதலாவது, அக்ஷர உபதேசம். இரண்டாவது, வாயினால் பேசிப் புகுத்துகின்ற உபதேசம். மூன்றாவது, அந்த உபதேச விளக்கத்தைக் கொண்டு உன் நாவை வேத நாவாக வளர்ப்பது. நாலாவது, அறிவில் நின்று உபதேசிப்பது. ஐந்தாவது நினைவில் இருந்து நினைவுக்கு உபதேசம்.

ஒரு மெய்ஞ்ஞானவான நாட்டு அரசர்பால் மாறு அன்பு வைப்பதுவே உன்னைச் சிவமாக்கும். அவர்கள் உன் உள்ளத்தில் மெய்ஞ்ஞானத் திருவிளக்கை ஏற்றி

வைப்பார்கள் - அதன் பிறகுதான் உனக்கு அவர்கள் பால் னிஜமான தேவ அன்பு பிறக்கும். அந்த அன்பு வேர் ஊண ஊண, உன்னை அது வாரித்தூக்கி முத்தி வீட்டில் சேர்க்கும். தனித்து அதற்காக னீ ஒன்றும் பாடுபட வேண்டியதில்லை. அன்பெனும் பிடியைப் பற்றிப் பற்றி ஏறி, அந்த மெய்ஞ்ஞான இளங் கொடி வளருகிறது. னீ இங்கு வந்து பரிசுத்தப் பிறப் பெடுப்பதற்கு முன் அன்பு வைத்திருப்பதாக னினைத் திருந்தாயே அது அன்பல்ல. மெய் அன்பு, தேவப் பிறப்பு அடைந்த பின்தான் உன்னிடத்தில் முளை காணும். ஓர் தேவனுட்டு ஐயரால்தான் ஞானம் என்பது இன்னது, அன்பு என்பது இன்னது என்று காட்டித்தர முடியும். எவ்விடத்தும், எதிலும் தன் தெய்வ ஆசானைக் குற்றங் காணுத மேலாம்பரமான எண்ணத்தினுல் விளையும் அன்பினுல்தான் ஒருவனுக்கு முத்தி சித்திக் கிறது.

னன்மை இன்னது, தீமை இன்னது என்றே தெரி யாத உன்னை - உன்னுடைய ஜீவன் கடைத்தேற வேண்டுமே யென்ற பேரிரக்கத்தால் - 'இதைச் செய்' என்று உன் ஆசரியர் அவர்கள் உத்திரவிடும்போது அதை, னீ உனது புல்லறிவைக் கொண்டு உரசிப் பாராது, அவர்கள் உத்திரவுக்குப் பணிந்து படிந்து உறைந்து அவர்கள் போட்டுக் காட்டிய பாட்டையி லேயே னடக்க வேண்டும். அப்படி னடப்பதுவே யோகம்.

உன்னிடத்தில் எமது வாய்மட்டும் பேசுவ தில்லை. எமது தேகாதியந்தமும் அதிலுள்ள எல்லா

அணுக்கோடிகளும் ஒக்கனின்று அசைந்து பேசுகின்றன. அதனால்தான் எமது வார்த்தைகள் உனது செவியில் ஒரு தித்திப்பான சுவையோடு ஏறுகின்றன - எமது அகப் புறக் கருவிக் குலங்களும் அவற்றிலுள்ள அணுக்கோடிகளும் அசைந்நசைந்து பேசுவதால்தான் இங்கு உனக்கு ஒரு தனித்த காமம் தட்டுகிறது - இன்ப சுகம் பூக்கிறது - பரமானந்நம் லபிக்கிறது.

கீழே பாதாளம் தொட்டு மேலே விண்முகடு வரை ஆராய்ந்து பழகியவர்களாகிய பிரம்மனிஷ்டர்களுக்கு ஜீவன் உறைவிடம் உலாவிடம் எல்லாம் தெரியும். மேலும் அவர்கள் பொய், மெய் இரண்டையும் பிரித்தறிந்து இந்நப் பொய்த்தேகத்தை விட்டுவிட்டு மெய்த் தேகத்தில் நுழைந்து கொண்டவர்களாதலால், அவர்கள் பிறரையும் அவ்வாறு ஆக்குகின்றார்கள். இந்நக் காரண காரிய லக்ஷிய லக்ஷணத்தோடு விளங்குகின்ற பிரம்மகுலாதீபரே ஜீவபதி அரசர். அவர்களே, தங்கள் கைமெய்யாகப் பெற்றுள்ள ஞானத்தால் உங்கள் அழிந்துபோகிற நுமங்களை, அழிந்து போய்க்கொண்டிருக்கிற நுமங்களை, இன்னிலவுலகில் அழியாது என்னும் னின்று னிலவும்படிச் செய்யும் வல்லமை படைத்துள்ள ரக்ஷகர் ஆவார். ஆகவே அவ்வினைவேறு னிறைவு தவப் பலன் பெற்றுள்ள அவர்களின் திருநுமத்தைச் சொல்லுவதே முத்தி. அவர்கள் கையகத்தில்தான் சர்வமும் அடக்கம்.

கையகம் என்றது சபை. எக்கோடி காலத்தும் அழியாத புகழுடம்பின் பரிசுத்த ஆவி அதாவது ஒரு தெய்வ ஆசானுடைய சுத்தக் கிரண ஆவி பரவி னின்று இலங்கும் எல்லையே சபை. சபை தன் ஆசரியரின் மெய்

மேனியே என்ற எண்ணம் னேர் பெற உறுதிப் படும் போது மெய்ஞ்ஞானம் எளிதாகிறது. மேலும் இந்த மெய் வழியை உன்னுடையதாக னினைக்கவும், சர்வமும் உன்னுடையதாகிறது.

பிறருடைய னூல்கள் ஊரார் னிலம்போல. அதை உழுவதால் னமக்குப் பயன், உழுததற்குக் கூலி வாங்கும் அளவுதான் - ஆனல் னம் சொந்த னிலத்தை உழுவது போன்ற முழுப்பலன் தருவது, னமது மெய்வழி வேதாந்த னூல்களைப் படிப்பதுவே.

அறிவு வயிற்றிற்கு வேண்டுவதாகிய அறிவாகார உணவு பெறுவதற்கே னும் படிப்பது. படி என்பது உலகம். ஆகவே உலகம் என்று விளங்கும் தெய்வ மலரில் ஏற்றி வைப்பதுவே படிப்பு. ரூபத்தில் வந்து னிற்கும் 'வந்த வேதமாகிய' உனது ஆசரியரே எழுதாமறை. அவரே உன்னை அந்த மறைஞான வீட்டில் குடியேற்றி வைப்பவர்.

ஒருனள் அறுபது னுழிகையில் தனக்குச் சொந்தப் பிரயோஜனத்தைத் தருவதும், தனது சொந்தச் சிவ போகத்திற்குத் திறவு கோலாக னிற்பதும், சூரிய உதயத்திற்கு முன் ஐந்து னுழிகை னேரமாகிய அதி காலை னேரம்தான்.

உறக்கம் சாவு - உறங்காமை ஞானம். அறு சுவை ஒழித்து னிற்பது யோகம் - அதில் இச்சையுற்று னிற்பது அஞ்ஞானம். ஜீவன் அவஸ்தையை விட்டு னீங்கி, னித்திய மகிழ்ச்சியில் குடியேறித் தங்குவது ஞானம். அதற்கான பழக்கத்தில் பழகி வருவது யோகம்.

பொறிகளின் சக்தியே கிரியா சக்தி. இச்சையின் பார்வையற்ற நினைவே ஆன்மா. தேவத் திருநடனக் காட்சியே மலக்கூத்து. சிவ காமக் கதிரொளியே இல் லறாம்.

சிவ பதத்தை அடைவதற்காக ஒரு சற்குரு பிரா ணது சன்னிதியில் ஒரு மாணுக்கன் நடந்து கொள்ளுகிற நடைமுறை எழிலினுக்கு, வஞ்சகமற்ற யதார்த்த ஒட்டு தலாகிய ஒழுக்கத்துக்குப் பெயர் ஞகரிகம். அப்படி ஒட்டிப் படிந்து அந்த அரங்கத்தை அறிந்தவனே அந்தரங்கம் அறிந்தவன்.

ஆரூரார் - அறுசுவை கொண்டொளித்த இடம் அறிந்து அதற்கு அதிபராக விளங்குபவர். அவரே உள் ளுணர்வை ஊட்டுகின்ற உண்ணுக்கர். அவர் இருக்கும் திருத்தலமே சன்னிதி - என்னேரமும் குளிர்ச்சி பொருந்திய மதியமுத நிதி கிளம்பும் நுணுகிய அருந் தலம்.

ஜீவனை சிறப்பிக்கின்ற தொழிலில் பழமையர், அத்ாவது சர்வீஸானவர், அதற்கான சர்வக்ஞ உணர் வில் பழகித்தேர்ந்த பழமையரே புலவர்.

இடருறும் இறுதி ளுளில் இத்தூலத்தை விட்டு உன்னைப் புகழுடம்பில் தேற்றி ஏற்றி, மகிழ்ச்சி பொங்கச் செய்து வைப்பதுவே பொங்கல்.

வேதம் என்பது தேகம். மூலமந்திரம் அதன் உயிர். பரனுட்டிற்கு வழி காட்டியாயிருக்கும் மந்திரமே உம்முல்.

மிடி என்றது - அறிவற்ற தன்மையில் ஸ்திரம் பெறுவது. மிடிமை எனும் அந்தச் செயலில், அந்த இட

ராகிய பாதையில் ஓடிக் கடைசியில் போய்ச் சேரும் இருள் வீடு வறுமை. அந்த நெடுந் துயராகிய தரித்திரியம், அதாவது இனி இந்த மனிதச் சட்டைகிடையாது என்று செய்கிற பிறவினையாகிய வெந்நோய், மிடிமை என்னும் இடரால் வரக்கூடாதென்று தடுக்கவே நாம் வந்தோம்.

மாவுல் ஹயாத்து என்பது ஜீவமரபு நீர். ஹயாத்து என்னும் ஜீவனானது இறைவனுடைய தஜல்லியத்தில் தங்கி இருக்கத் தரும் அறிவாகாரக் குடிப்பு நீர். பண்டைப் புராதன சிரஞ்ஜீவித் தத்துவத்தை நித்திய வரமாக கைவசமாக்கித் தரும் குடிப்புநீர். அதுவே ஆத்ம மர்ம ஜலக்கடல் நீர் என்ற வெட்டாத குளநீர்.

50.

'அருங்கோடை பாலைவனம் கானகத்தி லகப்பட்டு
அடிமைபரந் தோடிப்பரி தவிக்கும் போது'

என்ற செய்யுட் பகுதி, ஆதிமெய் உதய பூரண வேதாந்தத்தில், படித்து வரும்போது பிறந்த ஆண்டவர்கள் வாக்கியம் –

"நாம், மனைவி மக்கள் ஆடுமாடு தேசாதிபத்யம் முதலிய சகல சம்பத்தோடும் எப்பவும் வாழவேண்டும், அவைகளே பெரிது, நமக்கு வேண்டியது அவைகளே" என்ற மூவாசைக்குரிய எண்ணம் விரிந்து படர்ந்து உன்னை அழுத்திக்கொண் டிருப்பதும் - இன்னும் அது, உன்னைச் சிவநிலையில் ஒட்ட வைக்கும் சிவநிதி அமுது ஒரு துளிகூட உன் செவிவாயில் வந்து விழுந்துவிடாத படித் தட்டிவிட்டுக்கொண்டு நிற்பதும் - மேற்கொண்டு

அவ்வாறான அதோகதி நிலையில் நீ சிக்கிக்கொண்டு இருக்கிறாய் என்பதைத் துளிக்கூட உணர முடியாதபடி உன்னை அவாந்தர எல்லையில் வைத்துக்கொண்டிருப்பது மாகிய அந்தக் கனங்கொண்ட அழி எண்ணத்தையே அருங்கோடை என்றோம். தப்பித்தவறி சிவநிதியாகிய மதிச்செல்வம் ஒரு சில துளி அதன்பால் வந்து விழுந் தாலும் அங்குக் கப்பியிருக்கும் மூவாசைக்குரிய வெப்பத் தின் நிரந்தர ஆட்சி வலுவால் அதை உறுஞ்சிக் குடித்து விடுகிற அவ்வளவு கொடிய கோடை.

மூவாசைக்குரிய அந்த வெப்பத்தை மாற்ற திட்ட மிட்டு வேணுமென்று சிவமழை இடைவிடாது வர்ஷித் தாலும், பிளந்துகொண்டு கொட்டினாலும் - அழிவுக் கேதுவாகிய தன்னறிவு எண்ணங்களும் செயல்களும் கோடாகோடியாக அங்கு மலிந்து கிடப்பதால் - அந்த ஆலவாயானின் திருவருள் திருநீற்று வர்ஷிப்பு அனைத்தையும் பலனற்றுப்போக உண்டுவிட்டு சிவ முளை காணவிடாத வெறுமை நிறைந் திருப்பதால் பாலைவனம் என்று கூறி வைத்தோம். அன்றியும் அது, காணாத அகம் - அதாவது மெய்விளைவு சிறிதும் இல்லாத அகமா யிருப்பதால் கானகம் என்றும் சொன் னோம்.

அந்தப் பாலைவனத்தில் தீய்ந்து கரியப் பரந்தோடிப் பரிதவித்துக்கொண்டிருந்த அடிமையை - பரிதவிக்கின் றோம் என்று கூடத் தெரியாத நிலையிலிருந்த உன்னை - ‘வீணே ஏன் இப்படிப் பரிதவித்துக் கடைசியில் தீய்ந்து கரிந்து தொலையப் பாடுபட்டுக் கொண்டிருக்கிறாய்’ என்று எச்சரித்து, நீ இருந்த அவல நிலையை நிரு

பித்துக் காட்டி, மெய்யறிவு ஊட்டி, தப்பித்துக் கொள்ளச் செய்தோம். இடைவிடாது சிவமழை பொழிந்தும் ஒன்றும் முளைக்காத 'பாலைவனம் கானகத்தில்' அகப்பட்டுப் பரிதவித்துக்கொண்டிருந்தோம் என்பதை உணரும் சக்தி உனக்கு வந்தது எப்போ? 'அடிமை' ஆனபின் தான்.

51.

சுப்பிரமணியரைப் பூசிக்காத ஜாதி உண்டா? தமிழ்க் கடவுள் என்று சிறப்பித்துக் கூறப்பெறும் அவர்களே இப்போது நாம் நடத்தும் இந்த மெய்ஞ்ஞானச் செயலைப்பற்றிக் கூறுகிறார்கள் என்றால் வேறு எந்த ஒரு சாட்சி வேண்டும்?

> "நாடா நானிருக்கும் இடந்நான் காட்டி
> நவிலுவார் நன்மார்க்க நாதர் தானே"

என்று எம் நாமத்தை அவர்கள் திருமணிவாய்கொண்டு கூறுகிறார்களே - அதிசயம் என்றால் இதைவிட அதிசயம் என்பது ஒன்று உண்டா? மனிதன் அதிசயத்தை அண்ணாந்து ஆசையுடன் பார்ப்பவன் ஆயிற்றே - பின் ஏன் இவ்வளவு பெரிய அதிசயம் இங்கு நிகழ்வது அவனுக்கு அதிசயமாகத் தெரியவில்லை? அவனுடைய இந்தச் செயலைப் பார்க்க எமக்கு அதிசயமாக இருக்கிறது. தெய்வங்களெல்லாம் எதிர் பார்த்து நின்று அதிசயிக்கும் செயல் அவனுக்கு அதிசயமாகத் தெரியாதது ஏனோ!

நம்முடைய இந்த அழி தேகம் எவ்வளவு நாள் இருப்பினும் இடைஞ்சல், கவலை, சலிப்பு, இவைகளை

யே சதா அனுபவித்து, இறுதியில் நுதியற்று எமன் கைவசப்பட்டு முடிவில்லா னீண்டகால அவஸ்தை யில் னம்மை உட்படுத்தி விடுகிறது. ஆகவே னும், இந்ந உடலுள்ளபோதே அந்ந எமன்பதி கடத்த வல்ல ஒரு பிரம்மஸ்வரூபியைத் தேடி அடைந்து கொள் வோமேயாகில் னித்திய பேரானந்ந சுவர்ணபதி வாழ் வில் அவர்கள் னம்மைக் குடியேற்றுவிப்பார்கள். இவ் வாறுன தனிப்பேறு பெற்றுத் தன்னையறிந்நவர்களே குடியேறியுள்ள ஒரு ஊரே, இதுனுள் இங்நு னும் உண்டாக்கியிருக்கும் சாலை.

னீண்டகால னித்திய வாழ்க்கைக்கான இந்ந ஊரை – "ஊரான ஊர், உயிர்ப் பயிர்க்குதவும் ஊர்" என்று தீர்க்கத்தரிசியர்கள் கூறுகிறுர்கள். இன் னில வுலகில் இப்பேர்க்கொத்த ஒரு ஊர் உண்டாயிருக் கிறதே – என்ன கனமுடைய பாவம் இவனைக் கப்பி யிருந்நால், இவ்வாறுன ஊரில் தான் குடியேறி வாழ ஆசை வராமலிருக்குப்.

52.

தெய்வ வழிபாடு என்று சொல்லிக் கல்லையும் கரட் டையும் காட்டையும் மேட்டையும் சுற்றி வருகிறுனே – மலைமேலே கோயிலைக் கட்டிவைத்துக்கொண்டு அங்நு னடையாய் னடக்கிறுனே - அந்ந வழிபாட்டில் இவன் என்ன கண்டு விட்டான்? என்னத்தைப் பெற்று விட்டான்? ஒன்று மில்லையே. பின்னே காலமெல்லாம் இப்படியே செய்கிறுனே – அது ஏன்?

மேற்கொண்டு "முருகா, கந்நா, செந்நில் ஆண்டவா" என்று கத்திக் கதறிக்கொண்டு வேலினை உடலெல்லாம் குத்திக் கொள்கிறனே - இதுவா பக்தி? இதனல் யாருக்கு என்ன வந்நது? இல்லை - என்ன வரப் போகிறது? னித்திய திருமேனியாகிய அந்ந ஆறுபடை வீட்டில் அமர்ந்நுள்ள செந்நமிழ்க் கடவுள் இப்படியெல் லாமா மக்கள் உடல் னைக வீண் பாடுபடச் சொல்லியிருப் பார்கள்? சொல்லியிருக்க மாட்டார்கள். அந்நப் பெருங் நருணைப் பேரருள்ப் பெருமானவர்கள் இருந்ந காலத்தில் அவர்களைச் சீச்சுக் கழித்த பாவம்தான் மக்கள் தலைமேல் சாபமாக வந்நு விழுந்நு இப்படி யெல்லாம் அவர்களை ஆட்டி வைக்கிறது. மக்களை ஆட்கொள்ள வந்ந அந்நச் செம்மல் அவர்களின் திருவாயினிடம் "அந்நத் தாசி மகன் வாயில் னீ மண்ணைப் போட்டுத் - தையலுக்கு உதவாத ஜோட்டால் சன்னு" என்ற இந்நச் சினங் நொண்ட வார்த்தைகள் வந்நிருக்குமானல் அவர்களை மக்கள் என்னபாடு படுத்தியிருக்கவேண்டும். மெய்ய ராம் பாரவான்ஙள் விண்ட மேம்பாட்டில் கூடி, வையகம் தனிலுய்யாத மாந்நரை வதைக்கவேதான், பொய்யகக் குருமார்கள் தோன்றி, அவர்களுக்கு இணக்கமாகப் பலதும் பேசி, செய்சிறு தொழிலில் ஓட்டி, கடைசியில் தீங்ஙினில் தள்ளுகின்றுர்கள். மக்களும் அவர்கள் காட்டும் பயனற்ற வழிபாட்டினில் இடுப்புக் கட்டிக் கொண்டு னின்று, காடு மேடெல்லாம் சுற்றி, பெரியோர் களுக்குப் பணி புரியாத தங்ஙள் உடலைத் தேய்த்து, பெரியோர்களை வணங்ஙாத தங்ஙள் தலையிலே விபூதி

என்று சொல்லிச் சாம்பலை அள்ளிப் போட்டுக்கொண்டு பெரியோரைத் தூஷித்த நாவிலே வேலைக் குத்திக் கொண்டு பெருந் துன்பப்படுகிறார்கள்.

53.

சேலம் வாசவி ஹாலில் அந்த நிறைந்த சபையில், "எம்மைத் தவிர உனக்கு வேறு கதியே இல்லை – எம் கைவிட்டால் எமன் கையில்தான் நீ மாட்டு வாய்" என்று பேசிவிட்டோமே யென்று இங்கு வந்த பின் தவநேரத்தில் ஒவ்வொரு தெய்வ எல்லைகளாக இருந்து இருந்து கவனித்துப் பார்த்தோம். கடவுள், சிவம், அல்லா, மகாவிஷ்ணு என்று சொல்லுகிறார்களே, அந்த ஆட்சிபீட எல்லைகள், அவர்களின் பவுசுகள், எல்லாவற்றையும் ஒவ்வொன்றாக ஏறி ஏறி நின்று பார்த் தோம். அந்த எல்லைகளும் கடந்து அதற்கு மேலும் ஏறி ஏகராசிக்குவியல் என்று சொல்லப் பெறுகின்ற அந்த அதிமகோன்னத எல்லையில் நின்று பார்த்தோம். அங்கு பார்க்கையில் எம்மைத்தவிர வேறொருவரையும் காண வில்லை. ஆகவே, நாம் அப்படிச் சொன்னது சரிதான் என்று தீர்க்கமாகக் கண்டோம்.

அந்த எல்லைதான் 'பூர்ண புவஸ்வம்' என்பது. மெய்வழி என்பதுவும் அந்தப் பதநிலையில் இருப்பதுவே. அந்த உன்னத ஏற்றத்தில் ஏறி நிற்பவர்களுக்குத் தான் 'வான்கோடி மெய்க்குரு' என்ற நாமம் பொருந்தும்.

54.

மெய்வழிச் சபை அங்கத்தினர் ஒருவருக்கு உடல் நிலை சரியில்லை என்று சொல்லி சன்னிதியில் வந்து தீர்த்தப் பிரசாதம் கேட்டபோது – ஆண்டவர்கள் –

னீ இன்று இருக்கும் இந்நத் தேகம், ரத்தம் மாமிசம் கொழுப்பு னிறைந்ந னுறி அழுகிப் போகும் தேகம். ஆனுல் னும், மறுபிறப்புத் தந்நு உன்னைக் குடியேற்றிவைத்துள்ள அந்நச் சைவமேனி, ரத்தமோ மாமிசமோ இல்லாத பரிசுத்தத் தேகமல்லவா? 'அதில் னும் என்று னிரந்நரமாகக் குடிபுகுவோம் – என்றைக்கு அந்ந னித்திய வாழ்வைக் கைபோடுவோம்' என்ற எண்ணமே இல்லாமல், ஒரு சிறு சீக்கு வந்நாலும் னீங்கள் பயப்பட்டு எம்மிடம் ஆசீர்பாதத்திற்குத் தேடி அலையும் அல்லோகல்லத்தைப் பார்த்தால், இந்ந மெய்யை னீங்கள் னிஜமாகத்தான் கைப்பற்றி இருக்கிறீர்களா என்று எமக்குக் கவலையாயிருக்கிறது. 67 சாதிகளை ஒரே குலமாகக் கூட்டி வைத்துவிட்டோமே – எல்லோரையும் ஒரு சீராகக் கொண்டுவரவேணுமே – அதை எவ்வாறு செய்து முடிப்பது – என்ற ஆத்திரமான எண்ணம் சதா எம் உள்ளத்தில் ஓடிக்கொண்டிருக்கிறது. அதுமட்டுமா, எம் சபை இருக்கும்வரை எம்முடன் னீங்கள் ஒவ்வொருவரும் இருக்கவேண்டுமென்ற எம் ஆசீர்பாதம் உங்கள் ஒவ்வொருவர் தலையிலும் இருக்கிறது. அப்படியிருக்கத் தனித்தனியே வந்நு ஆசீர்பாதம் கேட்கிற முகரையைப் பாருங்கள் – என்று அருளிச் செய்தபின் தீர்த்தப் பிரசாதம் கொடுத்தனுப்பினுர்கள்.

55.

ஆதியில் இருட் கோளமாகிய கூடஸ்த பிரம்மம் இருந்நது. அதில் ஒரு னெருக்கம் உண்டாயிற்று.

18_

அப்போது ஏற்பட்ட புழுக்கத்தால் ஜலம் உண்டாயிற்று. ஜலம் கீழே விழும்போது காற்று உண்டாயிற்று. காற்று ஜலத்தை அலைக்க னுரை உண்டாகி, மண் உண்டாயிற்று. கடலாகிய ஜலப்பகுதி பூமியின் மண்பகுதியைவிட மூன்று மடங்கல்லவா? ஆம். அந்த ஜலத்தைப் பிடித்துவைக்கப் பாத்திரம் இருக்கிறதா? இல்லை. பூமியைத் தாங்கத் தூண் இருக்கிறதா? இல்லை. இவை மட்டுமா – இன்னும் சந்திரன், சூரியன், னச்சேத்திரங்கள் முதலிய எண்ணற்ற அண்டசராசரங்கள் இருக்கின்றனவே, அவற்றின் கனமென்ன? எல்லாம் அந்தரத்தில் னிற்கின்றனவே – அவற்றைத் தாங்கி னிற்கிறது எது? அவ்வளவையும் தன்னிலிருந்து வெளியாக்கிய தாயாகிய ஆகாயமே. அது உன்னிடத்தில் எசன்சு வடிவமாகச் சுருட்டி மடக்கித் திரட்டி வைக்கப் பெற்றிருக்கிறது. அதைத்தான் வஸ்து என்றும், பிரம்மம் என்றும், பிரணவம் என்றும் வேதங்களில் சொல்லப் பெறுகிறது. அதைத் தன் கைப்பந்தாக வைத்து ஆளுகிறவர்களே உன் ஆசான்.

56.

அச்சமில்லாத வாழ்வில் உங்களுக்கு ஆசை தானே?

வந்திருந்தவர்:- ஆமாம். ஆசைதான்.

ஆண்டவர்கள் - பாம்பைக் கண்டால் அச்சம் வருது. அந்த அச்சத்தை னீக்கத் தடிக்கம்பிருக்கிறது. பசி வந்துவிடும் என்ற அச்சத்தை னீக்க, உணவிருக்கிறது. இப்படியே னமக்கு வரும் பல அச்சங்களையும் போக்க

அததற்கு வேண்டிய கருவிகள் இருக்கின்றன. ஆனால் இறுதியில் வருதே – எமன் என்ற பேரிடி – அது வந்து மோதுகிற அந்த னேரத்தில் ஏற்படுகின்ற மரண அச்சத்தை னீக்க உன்னிடத்தில் ஒரு ஆயுதம் வேண்டுமே - அதை னீ தேடி வைத்துள்ளாயா? இல்லை. அந்த ஆயுதத்தை உன் கையில் தந்து அந்த மரண ஆபத்திலிருந்து னீக்குகின்ற இடமே இந்தக் காட்டிலுள்ள எம்முடைய சபை.

57.

எம்மை, உன் னினைவானது உன்பால் இழுத்து வைத்துக்கொள்ளச் செய்வதுவே அன்பு. அந்த அன்பு உன்னிடத்தில் மேலும் மேலும் பெருகச் செய்வதற்கே உபதேசம். அப்படிப் பெருகி, மாறாது னிற்கும் அன்புதான் உன்னைச் சிவமாக்குகிறது. இவ்வாறு அன்பு பெருகப் பெருக எமன் அதிகாரம் கீழே தாழ்த்தப் பட்டுப்போய் அவனுடைய படரை மிகைத்து ஏறுகிற வல்லபம் உனக்கு வருகிறது.

இன்பம் என்பது என்ன? துன்ப சங்காரமே இன்பம். எக்கோடி காலத்திற்கும் னீங்காத னரக அவஸ்தையாகிய துன்பத்தை உன் ஜீவனுடைய தலையில் ஏற்றி வைக்கும் எமனின் அதிகாரத்தைக் கடந்தேறிய னிலையே இன்பம். அதுவே சிவனிலை.

58.

(செத்திடமும் பிறந்திடமும் இனிச்சாவா திருந்திடமும் அத்தனையும் அறியாதார் அறியுமறிவு எவ்வறிவோ– என்ற திருவாசகப் பாசுரம் பாடப் பெற்றபோது)

ஆண்டவர்கள் -

'எவ்வறிவோ' என்று மணிவாசகப் பிரான் கேட்கிறார்களல்லவா? இந்நாளும், அதற்கு நேர் பதில் தருகிறோம். அதுதான் வயிற்றறிவு.

கரும்பைப் பூமியில் நட்டால் இனிப்பையே எடுத்துச் சாப்பிடுகிறது. ஒரு சந்தன மரத்தை நட்டால் தனக்குவேண்டிய வாசனையை எடுத்துச் சாப்பிடுகிறது. இப்படி அருமையான உணவைச் சாப்பிடுகின்ற அவைகள், உணவைத் தேடி அவைகளிருக்கும் இடத்தை விட்டு ஒரு அடி கூட எட்டி வைப்பதில்லை. ஆனால், இந்த மனிதன் பறப்பதில் பட்டம், ஓடுவதில் வண்டி இவற்றைத் தவிர எல்லாவற்றையும் சாப்பிடுவானே. அப்படியிருக்க, இவன் கவலை எல்லாம் வயிறு வளர்க்கத்தான் இருக்கிறது. வெளிநாடு சென்று மேல் படிப்புப் படித்துப் பட்டம் பெற்றுவந்தேன் என்று சொல்லுகிறான் - 'அவ்வளவு பாடு, செலவெல்லாம் செய்து படித்து வந்தாயே - எதற்காகப் படித்து வந்தாய்' என்று நெருக்கிக் கேட்டால் 'வயிறு வளர்க்க' என்றுதானே சொல்வான்! மனிதனுக்கு அறிவு தந்தது இதற்குத்தானா? என்ன பரிதாபம்.

59.

நூறு ரூபாய் தருகிறேன் - உன் சுண்டு விரலை வெட்டித்தா என்றால் வெட்டித்தருவாயா? தரமாட்டாய். அது போகட்டும், பதினாயிரம் ரூபாய் தருகிறேன் - உன் பகட்டோடு வெட்டித்தா என்றால் தருவாயா? தரமாட்டாய். இப்படி உன்னிடத்திலிருக்கும் ஒவ்வொரு அங்

னத்தையும் இவ்வளவு கிரயமுடையதாய்ச் செய்துகொண் டிருப்பது எது? உன் ஜீவன். அது உன் உடலை விட்டு னீங்கினால் இந்ந உடல் ஒரு தம்படி பெறுமா? பெறாது. இவ்வாறு னாறி னலங்கெட இருக்கும் இந்ந அழி உடலை யே இவ்வளவு கிரயம் பெறச் செய்யும் உன் ஜீவன், அதன் சொந்ந உடலாகிய னித்திய உடலை என்ன மேம்பாடுடையதாகச் செய்யாது.

அந்ந வல்லப ஜீவனை, அதன் கூட்டிலிருந்து பிரிக்க எமன் என்ற ஒரு ஆள் வருகிறான். அதுனேரம் அவன் உன் ஜீவன்மேல் கை போடாதபடிச் செய்து, அதன் சொந்ந னித்திய உடலில் என்றாளும் இருக்க வைக்கின்ற சாகாத வித்தையைக் கற்பிக்கவே னாம் வந்துள்ளோம்.

60.

ஒரு மாடு ஒரு மனிதனைக் குத்திக் கொன்றுவிட் டால் அதைத் தூக்குப் போடுவதுண்டா? இல்லை. ஆனால் ஒரு மனிதன் இன்னொருவனைக் கொலை செய்து விட்டால், கொலையாளி என்று குற்றம் சாட்டப்பட்டு, அவனுக்குத் தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது. அது ஏன்?

வந்திருந்நவர்:- மனிதனுக்கு அறிவு இருக்கிற தினால்.

ஆண்டவர்கள்:- அறிவை னீங்கள் பார்த்திருக் கிறீர்களா?

வந்திருந்நவர்:- இல்லை.

ஆண்டவர்கள்:- அறிவைப் பார்க்காதபோதே, அது இருக்கிறதென்று தெரிந்ததால், இவ்வளவு பெரிய தண்டனையை மனிதனுக்கு மனிதன் தருகிறனே - அப்படியானல் அறிவை உங்களுக்கு இனமாகக் கொடுத்த இறைவன், அவன் இட்ட வேலையை னீங்கள் செய்யாவிட்டால், எப் பெரும் தண்டனையைக் கொடுப்பான் என்று எண்ணிப் பாருங்கள்.

இறைவன் மனிதனுக்குச் செய்திருக்கும் கோடா கோடியான னன்மைகளை எண்ணிக்கூடப் பார்க்காமல் மறந்துவிட்டதோடல்லாமல், அவன் இட்ட வேலையையும் செய்து முடிக்காமல், அவன் படைத்த உணவுகளைத் தின்று இந்நப் பூமியைக் காலமெல்லாம் றைறடிக்கிறதைப் பார்த்தால் "உண்டகலத்தில் பேண்டவன்" என்ற பழமொழி இவனுக்காகத்தான் உண்டானது என்று தெரிகிறது.

இந்ந அழகு பத்தாது, இந்ந ஆஸ்தி பத்தாது, இந்நச் செல்வம் பத்தாது, இந்நக் கீர்த்தி பத்தாது என்று எது வந்நாலும் பத்தாது பத்தாது என்றிருக்கும் ஆசையை - அந்நப் பேராசையை இறைவன் மனிதனிடத்தில் வைத்துப் படைத்திருக்கிறனே - அந்ந ஆசைக்குத் தக்க ஒரு பொருளை, அளவிடற்கரிய னித்தியப் பொருளைப் படைக்காமலா இவனிடத்தில் அந்ந ஆசையை வைத்துப் படைத் திருப்பான். இந்ந எல்லையை அடைந்நவர்களுக்குத்தான் அந்ந அருங் ஙாரணம் தெரியவரும்.

மனிதனுகப் பிறந்ந இவனுக்குச் சாவை னினைத்துப் பயம் வராமலிருப்பதைப் பார்க்கிறபோது - தூக்குத் தண்டனை கொடுக்கப்பெற்ற ஒருவன், தான் அதி

லிருந்து தப்பமுடியாது என்று எப்படி எண்ணிக் கொண்டிருக்கிருனே அப்படியே இவனும் இருக்கிருன் என்றே எமக்குத் தோன்றுகிறது.

61.

உன் தாய்க் கருவறையிலிருந்து வெளிவந்து பிறந்நது முதல் இதுவரை னீ ஆறு பிறவிகள் பிறந்துள் ளாய் – ஒவ்வொரு பிறவியும் ஊனம் ஊனமா யிருந்த தென்று ஒன்றைவிட்டு ஒன்றைக் கைபோட்டாய். அடுத்த பிறவியை னன்ருய் வலுவாய்ப் பிடித்துக் கொண்டு அல்லவா முன்னிருந்த ஈனப் பிறவியை விட்டாய். தாய் வயிற்றில் மூச்சோ சத்தமோ இல்லா ஈனப் பிறவி - அதாவது உயிருள்ள ஒரு சவமாக இருந்த பிறவி – அதைக் கைவிட்டது எப்போ? மூச்சும் சத்தமும் உள்ள பிறவியைக் கைபோட்ட பிறகுதான். பிரசவம்ஆகி வெளியே வந்த குழந்தைப் பிறவி எங்கே– முன் கிடந்த பேச்சு மூச்சு இல்லாத பிறவி எங்கே– உன்னதத்தில் வைத்து ஒன்றுக்கொன்று பக்கத்திலா இருக்கிறது. ஒன்று விளைந்து மற்றது ஆச்சு. ஒன்றின் வேகம் மற்றதைக் கைபோட வைத்தது. பிரசவம் ஆகி வெளிவந்த பிறவி முன்னிருந்ததைவிட உன்னதமே யாளுலும், கவனிக்கும்போது அது எவ்வளவு மட்டமான பிறவியாக இருந்நது என்றுபார். கண் இருந்நது, பார்க் காது. காது இருந்நது, கேட்காது. ணக்கு இருந்நது, ருசி தெரியாது. வாய் இருந்நது, பேசாது. கால் இருந் நது, னடக்காது. இப்படி எவ்வளவு ஈனமாக–அதாவது குருடு செவிடு ஊமை னொண்டி என்று சொல்லும்படியான ஒரு பிறவியில் இருந்நாய். அடுத்து விளைந்து மேலான

ஒரு பிறவியைப் பிடித்துக் கொண்டாய். அதில் கண் பார்த்தது, காது கேட்டது, ருசி தெரிந்தது, வாய் பேசிற்று, கால் னடந்தது. ஆனுல் அந்நப் பிறவியில், தீனிதான் பிரதானமா யிருந்நது - னமக்கு வேண்டிய தெல்லாம் உண்கிறது தின்கிறதுதான் என்று இருக்கும் விஞத்தெரியாத ஒரு பிறவி. தின்கிற பண்டம்தான் வேண்டும், காசு பணம் வேண்டாம் என்று இருந்ந இந்நப் பிறவியை உதறிவிட்டது எப்போது? அடுத்த பிறவியைத் தீர்க்கமாகத் திட்டமாகப் பற்றிக்கொண்ட பிற்பாடுதானே. இப்படியே மங்கை, மடந்நை, அரிவை, தெரிவை என்று ஒவ்வொன்ருக விளைந்து விளைந்து வந்நதே - இவ்வளவும் இந்ந ஒரே தூலத்தில் தானே - ஒரு பிறவியில் செத்து மற்றென்று வரவில்லை யே - மேலான ஒன்றைப் பற்றிக்கொள்ளாமல் முன் னிருந்ந ஊனமான பிறவியைக் கைவிடவில்லையே. இப் படியே மேலும் மேலும் ஒவ்வொரு உன்னதமாக வளர்ந்து வந்ந னீ, இந்ந அனித்திய தூலத்தில் இருக் கும் போதே - உனக்குள் தனிச் சுதந்திரமாக வைத்துப் படைத்திருக்கும் மகா மேலாம்பரமான அந்ந னித்திய தூலத்தை, முழு தீர்க்கமாக, முழு திடத்தோடே இப் போதே பற்றிக்கொள்ள வேண்டாமா.

இப்போதிருக்கும் இந்நத் தூலம் அனித்திய தூல மாக இருந்நாலும் அறிவுத் தூலமல்லவா - இது இருக் கும்போதே, பூரண அறிவுத் தூலமாகிய பேரின்ப னித்திய தூலத்தைக் கைபோடாவிட்டால், இரண்டும் கெட்டு, னீங்கா அவஸ்தைத் தேகமாகிய அலகைத் தூலம் வந்நு விடுமே - பிறகு மீட்பு ஏது? தாய்க் கரு

வறையில் உயிருடைய சவமாக இருந்ந அந்நத் தூலத்திலிருந்நு, ஒவ்வொன்ருக வளர்ந்நு வளர்ந்நு, அறிவுடைய இந்ந ஆருவது தூலத்தில் வருவதற்கென்று அதற்குவேண்டிய உணவு முதலிய யாவையும் ணிரப்பிச் சர்வ புவனங்ஙளேயும் படைத்துள்ள இறைவனுடைய ணெடுங்ஙாலப் பாட்டினே வீணுக்கிய இவனுக்கு என்ன வரும்? னரக தண்டனேதான் வரும்.

அந்ந னரகத்திற்கு னுழை வாசலே சாவு. அது னேரம் காலமெல்லாம் இவனுள்ளிருந்ந கசப்பு விளேந்நு-முழு கொடூரத்தோடு இவன் தொண்டையில் வந்நு ஜாயின்ட் ஆகும். அது எப்படியிருக்கும் தெரியுமா? ஒரு கருக்கரிவாளே னன்ருக ணெருப்பில் இட்டுப் பழுக்கக் காய்ச்சி, முழுச் சூட்டோடே தொண்டையில் வைத்து அறுத்தால் என்ன கஷ்டமாயிருக்குமோ அத்தகைய கோரக் கொடிய கஷ்டமாயிருக்கும். அதை வாய்விட்டு வெளியே சொல்லவும் முடியாது-பொறுக்கவும் முடியாது. ஒரு கட்டு விறகு வைத்து எரித்து வேகவைத்தால் அரிசி சோருகிறது. அதைவிட அதிகச் சூடுடையது இவன் வயிற்றில் உள்ள கசப்பு வேக்காட்டுச் சூடு. அதனுல்தான் சோறு அவ்வளவு மயனமாகி மலமாக வெளியாகிறது. அந்நக் கசப்பு வேக்காட்டுச் சூடு, தன்னுடைய தகிக்கிற முழுச் சூட்டோடே விளேந்நு விளே வேறி மரண னேரத்தில் தொண்டையில் வந்நு ஏறும். அந்நக் கசப்பின் ணிறம் பச்சை. இப்போது னம் உடலில் ஓடுகிற ரத்தத்தின் ணிறம் சிவப்பு அல்லவா - அதில் அந்ந னேரத்தில் முழுக் கசப்பானது முட்டிக் கலந்நதும், ரத்தம் கோழையாக மாறிவிடும். அது

தொண்டையைக் கனங்கொண்டு அடைக்கவும்,கட கட என்று அங்கே சப்தம் கிளம்பும் - நுவும் படபட என்று துடிக்கும். இப்படித் திட்டு முட்டாகக் கோழை வந்து அடைத்ததும் மூக்குத் துவாரம் கொள்ளமுடியாத அளவுக்கு - அதை உடைத்தெறியும் அளவுக்கு மூச்சு வீறிட்டுக் கிளம்பும் - அதனால் தெணறித் தோள்பட்டைத் தூக்கித் தூக்கிப்போடத் தாங்க முடியாத வேதனை மேலும் மேலும் கிளம்பும் - அதோடு னரம்புகளில் சூட்டோடு கூடிய கொழு ஊசியை ஏற்றிய வாதையானது னிமிஷத்திற்கு னிமிஷம் கட்டி ஏறும் - எல்லாச் சொரணையோடு மிருந்நவன் சொரணை கெட்டுத் தடுமாறுவதென்றால் அந்நக் கொடூரம் என்னவா யிருக்கும்! உள்ளே னடக்கிற அமளியின் அல்லோகல்லம் னமக்கு வெளியே தெரியவில்லை என்றாலும் அதை அனுபவிக்கிறவனுக்கும் தெரியாமலா இருக்கும்! அதனால்தான் அவன், முதலில் அலறுகிறான் - பிறகு உளறுகிறான். மனிதக் கொரல் மாறி மறைகிறது - மிருகம்போல் உறுமுகிறான். முகத்தில் இருந்ந மனிதத் தோற்றம் மாறி, கொடூர குரூர அவஸ்தை அலங்கோல அரூபம் அதாவது அலகைத் தேகம் எடுத்துவிட்ட அடையாளம் பகிரங்கமாகத் தெரிகிறது. இந்ந வரிசைப் பாட்டில் அந்ந மரண வாதனையின் கவனம் ஒருவனுக்கு வந்நால், அவன் மெய்ஞ்ஞானம் பெறாமல் சோறு தின்பதற்கு வருமா? அல்லது பசிதான் எடுக்குமா?

சர்வ புவனங்களையும் படைத்து, அவற்றிலுள்ள எல்லாவற்றையும் மனிதனுக்கென்றே குறிவைத்து

உண்டாக்கிய இறைவனுடைய னெடிய பாட்டை வீண் பாடாக்கிய இவனுக்கு இந்நத் தண்டனை போதுமா? பத்தவே பத்தாது.

62

அனித்திய உலகில் அனித்திய தூலமெடுத்து அனித்திய இன்பத்தையே னுகர்ந்து அழிக்கப்பட்டுப் போக இருக்கும் ஏ மனுவே! உனக்கு ஒரு எச்சரிக்கை தருகிறேம். அது என்ன என்று கேள். எம்முடைய இந்ந வார்த்தைகளை, இது னேரமே உன் செவித் துளைக்குள் புகுத்திக்கொள்.

எக்கோடி காலமும் இருந்நு வாழும் னித்திய பேரின்ப சுவர்ணபத தூலமெடுத்துப் பரமபதத்தை அடையாவிட்டால், அதை இப்போதே னீ அடையா விட்டால், னிச்சயமாக இந்நத் தூலத்தை விட்டபின் ஒரு கொடிய அவஸ்தைத் தூலமெடுத்து, கற்பாந்ந கோடி காலம் யமலோகத்தில் தங்கி னரக தண்டனையை னீ அடைந்நே தீரவேண்டும். ஆகவே எமனுடைய அந்நக் கோர அமலினை முறியடிக்கக் கூடிய ஒரு அருந் நுணையைக் கட்டாயமாக இப்பவே னீ தேடிக்கொள். அதற்குரிய தேவ சன்னதம் பெற்ற உத்தமர்கள் இவ் வுலகிற்கு வந்நிருப்பார்கள் – இதோ வந்நுமிருக்கிறார் கள்!

னீ எப்படியும் பரமபத வாழ்வை அடையவே வேண்டும் என்பதுவே எம்முடைய ஆசை. இந்ந எச் சரிக்கை வார்த்தை காதில் விழும் எல்லையில் பிறந் நுள்ளவன் என்ன சிரேஷ்டமானவன்? இந்ந வாய்ப்புக் கிட்டாதவன் என்ன தோசித்தன முடையவன்? னரகச்

செவித்துளையில் இந்த வார்த்தை கேட்குமா? காலமெல்லாம் நீ எந்தப் பூசை, எந்தத் தான தர்மம் செய்தாலும் எமன் உன்னைச் சும்மா விடமாட்டான். அவை யாவும், ஜனங்கள் உன்னை மதிக்கட்டும் என்றே நீ செய்தது. எத்தனை கோடி மக்கள் உன்னை மதித்தாலும் இறுதியில் நீ, பிண நாற்றத் தீட்டாகி எமலோக நரக வேதனையை அடையப்போகவேணுமே - அதைப்பற்றி உனக்குக் கவலை வரவில்லையா!

யாரைக் கண்டாலும் இந்த வார்த்தைகளை, இந்த அளவிலேயே நீங்கள் சொல்லிக் கொண்டிருங்கள். இதுவே எம் மக்களாகிய உங்களுக்கு, எமது கட்டளை.

63

ஒருவன், சுவரில் ஒரு சித்திரத்தை வரைகிறான். மற்றொருவன் அதை, நன்றாகப் பாலிஷ் செய்யப்பட்ட ஒரு கல்லில் பதிக்கிறான். இரண்டும் ஒன்றா? இல்லை- ஒன்றுக் கொன்று எவ்வளவோ வித்தியாசம்! சுவரில் எழுதிய சித்திரம் சுவரிருக்கும்வரைதான் இருக்கும். ஆனால் கல்லில் பதித்த சித்திரமோ எப்பவும் அழியாமல் இருக்கும். சுவரில் எழுதிய சித்திரம் சுவர் கெட்டுப் போகும்போது அழிவதுபோல, மனிதனிடத்தில் ஒட்டிக்கொண்டிருக்கிற ஜீவன் சாவுவந்ததும் அவன் உடலைவிட்டுப் பிரிந்து வெளியேறிச் சிதறிவிடுகிறது. அரூபத்திலுள்ள ஈசன் செய்துவைத்திருக்கும் அளவு இதுதான். ஆனால் இங்குள்ளோருக்கோ அதே ஈசன் உருவுடன் விளங்க இருப்பதால் - அவரது தனிப் பெருந்தவ வல்லபத்தைக்கொண்டு - சாவுடைய நேரத்தில்

அந்த ஜீவ வித்து சிதறி வெளியேருமல், கல்லில் செதுக்கிப் பதித்த சித்திரம்போல், உடலில் அடங்கி அழியாது நிலைக்கச் செய்யப்பெறுகிறது. கல்லில் எவ்வாறு சித்திரம் பதிக்கப் பெறுகிறதோ அதேபோல, இவ்வுடலில் உன் ஜீவனை அழியாது பதிக்கவைக்கும் திருச் செயலினுக்குப் பெயரே மறுபிறப்பு.

64.

ஆண்டவர்கள் (ஒரு பிடி மண்ணைத் தங்கள் திருக்கரத்தில் எடுத்துக்கொண்டு சபையிலுள்ளோர் முன் காட்டி)

இது ஒரு பிடி மண் தானே – இதனிடத்தில் என்னென்ன அதிசய வல்லபங்கள் அடங்கியிருக்கின்றன என்று நீ நினைத்துப் பார்த்ததுண்டா? எத்தனையோ கோடா கோடியான வித்துக்கள் இதிலிருந்து முளையெழுந்து விளைந்து பலன் தருகின்றன. ஒரு வித்து இனிப்பு வேண்டும் என்று கேட்குது; இந்த மண் இனிப்பை அதற்குத் தருகிறது. இன்னொரு வித்து புளிப்பைக் கேட்குது; அதற்குப் புளிப்பைத் தருகிறது. மற்றொன்று காரத்தைக் கேட்குது; அதற்குக் காரத்தை மட்டும் ஊட்டுகிறது. இப்படியே உப்பு, துவர்ப்பு முதலிய எல்லாவற்றையும் அததற்கு வேண்டியபடி கொடுக்கிறது. அறுசுவைமட்டுமா – எண்ணற்ற விதமான மணம், எண்ணற்ற விதமான வர்ணம் முதலிய யாவற்றிற்கும் தாய் இதுதானே - இதன் செயலை இப்படி நீ நினைத்துப் பார்த்ததுண்டா? இல்லை.

இந்த அதிசய வல்லபப் பொருளை ஒருவர் தமது அறிவுகொண்டுதானே திட்டமிட்டு உண்டாக்கி யிருக்க வேண்டும்? ஆம். இதை உண்டுபண்ணிய அறிவாகார வஸ்து ஒன்று இருக்கவேண்டுமே — அது எங்கே? கடவுள் என்பது ஒன்று இல்லை என்கிறான்களே, கடவுள் இல்லையா? இதை எடுத்துப் பேசுகிறதே அது எது? அது யார்? கடத்தில் உள்ள உள்ளம்தானே. கடவுள் இல்லை என்று மறுப்பவனுக்குக் கடைசியில் கடவுள் பிண நாற்றமாக வெளிவந்துவிடுகிறது!

உலகத்திலுள்ள சர்வ படைப்புக்களையும் வாழ்விக்கின்ற சடப்பொருளாகிய சூரிய, சந்திரனை உண்டு பண்ணியது எது? அந்த அறிவாகார வஸ்துவினிடத்திலிருக்கும் ஆக்கல் என்ற ஒரு சக்திதான். இப்படியான கோடா கோடியான சிருஷ்டிப் பொருள்களை ஆக்கவோ, ரக்ஷிக்கவோ, அல்லது அழிக்கவோ வல்லபமுடைய ஸ்விட்ச்சைத் தன் கையகத்தில் வைத்திருக்கும் வஸ்து வித்தே கடவுள்.

மனிதனுக்குத் தனித்த உன்னத அறிவைக் கொடுத்திருந்தும், அதை அற்பமாக மதித்து, அழிந்து போகிற எதெதற்கோ செலவுசெய்து பாழாக்குகிறானே — இந்த அற்பகால உலக வாழ்விற்காகவா அறிவு மாணிக்கத்தை இறைவன் இவனுக்குத் தந்திருப்பான்? அதன் உன்னதத்தை அறியாமல் வீணாக்கினால் மீட்பில்லா னரக தண்டனையே வரும். உன்னிடத்திலுள்ள அறிவு, ஒரு தலைமுறை காலத்தில், யுகங்கோடி காலப் பேரின்ப முத்தி வாழ்க்கையைச் சம்பாதித்துத் தருகிறது என்றால் அது என்ன பவர் உடையது என்று பார்.

இந்த உடலில் அறிவுப் பருவமாகிய ஆருவது பிறப்பு வந்தவுடன், நீ செய்யும் வேலைக்குக் கூலி கேட்க வேண்டும் என்கிற நினைப்பு உனக்கு வருகிறதல்லவா? ஆம். அந்த அறிவுப் பிறப்பைத் தொட்டது முதல், இறைவன் செய் நன்றிக்கு நீ கூலி கொடுத்தே ஆகவேண்டும் என்ற கடமை உன் தலைமேல் விதியாகிவிடுகிறது. குழந்தைப் பருவமுதல் அறிவுப் பிறவி வரும்வரை உன் வளர்வினுக்காக இறைவனால் உனக்குக் கொடுக்கப் பெற்றது அனைத்தும் இனமாகத் தரப்பெறுகிறது. அதற்குப்பின் இறைவன் செய் நன்றியது எட்டாப் பெருங்கட னாகிவிடுகிறது - ஒரு சற்குருவின் திருச்சன்னிதி அடைந்து 'ஏழாம் பிறப்புடலம்' எடுக்கையில்தான் அது தீருகிறது.

எமவாதையைக் கடத்தி மீட்பிக்கும் செயலுடையதே அறிவு. இதை இவ்வாறு திட்டமாக உனக்கு அறிவிக்கின்ற ஒரு அறிவாகாரரைத் தேடி அவரது திருச்சன்னிதியில் அடைக்கலம் புகுவதே அறிவின் வேலை. இந்த உயிரை உனக்குத் தரப்பெற்றதின் ஒரே பிரயோசனம், இறைவன் உன்போல் தூலமெடுத்து வெளியாகும்போது அவரைச் சந்தித்து அவரது சொற்படி கேட்டு நடக்கவேதான். உனக்குச் செவிப் புலனைத் தந்ததும் பெரியோர்களின் வேதத் தொனிக்கு நீ செவி சாய்த்து அதன் வழிப்படி நடக்கத்தான். இவ்வாருக உன் அறிவுகொண்டு நடக்காவிட்டால், நீ அருந்திய ஒவ்வொரு பிடி சோற்றுக்கும் கடைசியில் எமன் எல்லையில், கணக்குக் காட்டியே தீரவேண்டும்.

அரையணு இரும்பை எடுத்து ஐன்னூறு ரூபாய் கிரயமுள்ள கடிகாரம் என்ற நுணுகிய கருவியாக

ஆக்குகின்ற அறிவு உன்னிடத்தில் இருக்கிறதே - இதை எல்லாம் செய்வதற்காகவா இந்ந அறிவு உனக்குத் தரப் பெற்றது? இதைச் செய்வதால் உன் உயிருக்கு ஆன பிரயோசனம் என்ன? ஒன்றுமில்லை. அதே அறிவைக் கொண்டு உன் உயிரை வளர்க்கும் ஒரு வாழைப்பழத்திற்குக் கிரயம் "அரை அணா" என்று னிர்ணயிக்கிறாயே. இது பொருத்தமாக இருக்கிறதா என்று னீயே னினைத்துப் பார். ஆகவேதான் இறைவனின் னீதி எழும் போது, உன்னுடைய இந்ந அனியாய அறிவிற்காக னீ ஒரு 'தூர்த்தன், பாவி' என்று மதிக்கப்படுகிறாய். ஆனால் அறிவைத் தந்நதின் பிரயோசனமாகிய ஏழாம் பிறப்புடலம் னீ எடுத்து விட்டால், உலகளவில் செய்யும் எந்நக் காரியங்களும், பாவமென்று கருதப் பெறமாட்டாது.

65.

ஞானம், புராதனமாக எல்லாத் தேசங்களிலும் எல்லாப் பாஷைகளிலும் உண்டாயிற்று. ஒருவனை இறுதித் தருவாயில் சுத்தப் பிரயாணம் அடையச் செய்விக்கின்ற அதாவது எமனணுகா வித்தாக்குகின்ற ஒரே ஒரு வேலைக்குத்தானே அது ஆங்காங்கு உண்டாகி வந்துகொண்டிருக்கிறது? உலகத்திலே உள்ள ஒவ்வொரு ஊரிலும் எத்தனையோ விதமான வேலைகள் னடக்கும். ஆனால் இந்ந ஒரு வேலை அதாவது மனுவை எம னணுகா வித்தாக்குகின்ற வேலைமட்டும் அங்கு இருக்காது. அப்படியிருக்க இங்கே, ஒரே ஒரு எல்லையில் மட்டும், இந்ந ஒரு வேலையைத்தவிர வேறு வேலை கிடையாது.

ஒரே எல்லையிலே பல மதங்களும் ஒரு முகமாக இருக்குமா? இருக்காது. உலகத்தில் உண்டான மெய்ஞ் ஞானிகளின் பல வேறு கிரந்தங்களும் ஆகமங்களும் ஒரு முகமாக ஒரே ஒரு எல்லையைக் குறிவைத்துச் சாட்சி சொல்லவும், அந்த எல்லையின் நடைமுறை அவ்வளவையும் ஆதியோடந்தமாகச் சொல்லவும், அதன் பேரைச் சொல்லவும், இன்ன எல்லையிலே இன்ன அடையாளத்தோடு இருந்தவர்கள், இன்ன காரணத் தினல் அதை விட்டு விட்டு இன்ன எல்லைக்குப் போகும் போது இடையிலே இன்னதின்னது ஏற்பட்டது என் றெல்லாம் சொல்லவும் நீங்கள் பார்த்த துண்டா, கேட்டதுண்டா? காலம் வேறு, தேசம் வேறு, மொழி வேருக வுள்ள கிரந்தங்கள் பலவும் இவ்வாறு ஒரு முகமாக எப்படிச் சொல்லமுடியும்? சொல்லமுடியாதே. அப்படியிருக்க ஒருமுகமாக இதைக் குறிவைத்துச் சொல்வதென்ருல் இது என்ன எல்லை என்று சிந்தித்துப் பார்க்க வேண்டாமா?

இவ்வுலகத்தில் ஞான சபை என்று பெயர் வைத் துக்கொண்டு எத்தனையோ சபைகள் உள்ளன. அவற்றில் ஒன்றைப்பற்றியாவது இப்படியான வேத சாட்சிகள் உண்டா? இல்லை – எப்படி யிருக்கமுடியும்? அங்குள்ள நடைமுறையே, இருக்காதென்று காட்டுதே. சிஷ்யன் எழுந்திருந்து கும்பிடுமுன் குரு எழுந்திருந்து கும்பிட்டுவிட்டு - சிஷ்யனைப் பார்த்துக் குரு "உங்கள் ஜீவன் சிவஞானத்திலேயே ஊறியிருக்குது" என்று முகஸ்துதியாகப் புகழ்வான். அதைக் கேட்டவுடனே சிஷ்யனுக்குத் தாங்காது பெருமை. குரு கேட்டதெல்லாம்

19

உடனே கொடுப்பான். இது தானு ஒரு ஞானி சிஷ்யனிடம் னடந்துகொள்ளும் முறை? ஒரு னிஜமான ஞானி, அரசனைக் கண்டாலும் அவனுக்குக் கையெடுப் பார்களா? எடுக்க மாட்டார்கள் – 'அவன் கிடக்கிருன் – கடைசியில் எமன் கையில் சிக்குகிற னரகப்பயல்' என்று தான் னினைப்பார்கள். மெய்ஞ்ஞானி ஒருவர் கையெடுத் துக் கூப்பினுல் அது கல்லே ஆயினும் தூள் தூளாகிப் போகும். இந்த வல்லப வரம் தங்கள்பால் வந்நதும் அவர்கள் யாருக்குமே கைகுவிக்கலாகாது என்பதுதான் வேத னடை முறைத் தீர்ப்பு.

66.

உயிர் ஒட்டு, உடல் ஒட்டு, அழுக்கு ஒட்டு என்று ஒட்டு மூன்று வகை இருக்கிறது – இவ்வுலகம் பூராவை யும் ஆட்டிப்படைக்கிறது அழுக்கு ஒட்டுத்தான். 'ஞறிச் சாக இறைவன் உன்னைப் படைக்கவில்லை' என்ற தேவ சட்டத்தை எடுத்துக் காட்டி, எமன் அச்சத்தை ஊட்டி ஞம் உங்களுக்கு உடல் ஒட்டை உண்டாக்குகிறோம். அதற்குமுன் உன் உடலிடத்தில் னிஜ ஒட்டு உனக்கு இல்லை. ஆனுல் உயிர் ஒட்டு என்பது உன் ஜீவனை னரகிற்கு ஆளாக்காமல் ரக்ஷிக்க, ஞம் உங்கள்பால் வைக்கும் ஒட்டே உயிர் ஒட்டு. இதை இவ்வாறு பிரித்து எந்நக்காலத்திலும் பேசப்பெறவில்லை.

தகப்பனின் கசடாகிய சுக்கிலத்தைக்கொண்டு உண்டாகி, தாயின் கருவறையில் அங்கிருந்ந அழுக்கை ஒன்பது மாத காலம் உண்டுவளர்ந்து, உடல்

எடுத்து வந்த ஒட்டுத்தான் உலக முழுதும் காணப் பெறுகிற ஒட்டு. அதைத்தான் அழுக்கு ஒட்டு என்றோம்.

67.

உடல் பொருள் ஆவி மூன்றையும் தங்கள் ஆசானுக்கே தத்தம் செய்துவிட்டு அவர்கள் பின்னே உயிரும் உடலும் போலத் தொடர்ந்து சென்று ஒன்பது அல்லது பத்து வருடங்கள் ஆனபின்னர் சுவாசம் ஒடுங்கி உள்ளடங்கும். அப்படி சுவாசம் ஒடுங்கி உள்ளடங்கும் நிலையில் மூன்று ஆண்டுகள் ஓடினால் துவாதசாந்தப் பெருவெளியை அவர்கள் அடைவார்கள். அதற்குப் பிறகு ஒன்றின்பின் ஒன்றாக மூன்று இருட் கடல்கள் இருக்கின்றன. அவற்றை ஊடுருவிச் சென்றால் வெளிச் சக்கரத்தை எய்துவார்கள். அது கைவரவான பின்னர் தான் எமனாகிய படர் அஞ்சி விலகும். இப்படியான அருந்தவப்பாட்டால் ஒருவர் அடைகின்ற வல்லபத்தை, எம் தவத்தை இட்டு நிரப்பி உங்களுக்கும் எமனணுகா அந்தப் பதவி கிட்டும்படிச் செய்கின்றோம். எவருடைய உதவியும் வந்து எட்டித் தீண்டமுடியாத அந்த எமன் பதி எல்லையில் வந்து உதவுகின்றவர்களே தெய்வம் என்பதை இந்த உலகம் அறியுமா! அறியவில்லை.

அரசனையும் ஆண்டியையும், பெரியவர்களையும் சிறியவர்களையும் இப்படியே எல்லோரையும் துள்ளு முனையில் மடக்குகின்ற சாட்டையே மறலி என்ற எமன். அந்த எமனை அடக்கி ஆளுகின்ற ஒரு அரசுபீடமே, தெய்வபீடமே இக்காட்டிற்கு இதுகாலம் வந்துள்ளது.

68.

"சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால் னீதி வழுவா னெறி முறையில் – மேதினியில் – இட்டார் பெரியோர் இடாதார் இழிகுலத்தோர் பட்டாங்கில் உள்ள படி"– என்ற ஔவையாரின் தெய்வ வாக்கை னீங்கள் கேட்டிருப்பீர்களல்லவா? ஆம். அதில் சாதி யிரண்டு என்று சொன்னது - ஈசன் கையில் தாக்கலாகிய பர லோக சாதி ஒன்று, எமன் கைப்பட்டுப் பிணை றைற்றத் தீட்டுக் குரிய பாழ் னரகசாதி மற்றொன்று. ஆக சாதி இரண்டேதான்.

'னீதிவழுவா னெறிமுறையில் இட்டார் பெரியோர்' என்றது – னீதி யெனும் பொருளான மனுக்குலத்தை னித்தியனும் னித்தியத்திற்கே படைத்துள்ளா னுகை யால் அந்ந னித்தியத்தைக் கைபோடும் னெறிமுறை யில் தலையிட்டவர்களே பெரியோர்கள். தலையிடாதவர் கள் இழி குலத்தோர். இதுவே பட்டாங்காகிய வேதத் திலுள்ள தீர்ப்பு.

69.

ஒரு பெரிய ஆலமரத்தை மகா பலங்கொண்ட யானையால் முட்டிக் கீழே சாய்க்கமுடியுமா? முடியாது. ஆனால் சாதாரண பலமுடைய ஒரு மனிதன், அதைக் கோடரி என்ற ஒரு உதவியைக்கொண்டு வெட்டிச் சாய்த்து விடுவான். அதற்கான உதவி உதிப்பு இவன் தேகத்திற்குள்ளிருந்து, அதாவது அறிவிலிருந்து உண்டாகிறது. இப்படியே மனிதன், கல் மண் முதலிய வற்றை அதற்கு வேண்டிய சாதனங்களைக்கொண்டு உருக்கிப் பல லக்ஷ ரூபாய் பெறக்கூடிய இரும்பாக

ஆக்கிவிடுகிறுன். ஜலத்தை னீராவியாக ஆக்கி ஆயிரக் கணக்கான மக்களை ஏற்றிச் செல்லுகிற ரயில் வண்டித் தொடரை உண்டாக்குகிறுன். இது போன்று எத்தனையோ காரியங்களை அவற்றிற்கான யுக்திகளைத் தருகின்ற தன்னுடைய அறிவு தேகத்தின் உதவியைக்கொண்டு செய்துவிடுகிறுன். அந்த அறிவு தேகம், அழிந்துபோகிற இந்தக் காரியங்களைச் செய் வதற்காகவா தரப்பெற் றிருக்கும்? கவலை துயர் கன பயம் பிணிபல தரும் இந்த உலக வாழ்விற்காக அது தரப் பெறவில்லை. னித்தியத்தைப் பெறுவதற்காகவே அது இவனுக்குத் தரப்பெற்றது.

னித்தியத்தை அளக்குகின்ற அந்த தேகத்திற்குள் தான் புகுந்துகொண்டு அதன் பூரண வல்லபத்தைப் பெறுவதுவே ஞானம். அப்படித் தன் முயற்சிகொண்டு அறிவு தேகத்தின் பூரண வல்லபத்தைப் பெறமுடியா விட்டாலும் அதைப் பெற்றுள்ள ஒருவரைத்தேடி அடைந்து, அவர்களின் அறிவுக்குட்பட்டு னடந்தால் அந்த வல்லபம் தனக்கும் வரும்.

உடல் பொருள் ஆவி மூன்றையும் தத்தம் செய்து, ஐம்புலனை அடக்கி வெற்றி வசத்தில் ஆக்கி, ஐம் பொறியை, அறிவுரூபமாகிய தன் ஆசான்பால் ஒடுங்கி ஒடுக்கிய பின்தான், னித்திய தேகமாகிய அறிவு தேகத் திற்குள் புகுந்து அதன் சர்வக்ஞ ஆட்சியை ஒருவர் கைபோட முடியும்.

கோடரி முதலிய சிறிய கருவிகளிலிருந்து பிரம் மாண்டமான பெரிய கருவிகள் வரை உன் யுக்தி

கொண்டு செய்துவிடலாம். ஆனால் அந்த யுக்திகளை உன்னுக்குள் இருந்து அளந்துகொண் டிருக்கிற உன் அறிவு தேகத்தைச் சந்தித்து அடைவது என்பதுதான் உன்னால் முடியாது. ஆகவே அதைச் சந்தித்துக் கை போட வேணுமானால் அந்த அறிவே ரூபமெடுத்து வந்துள்ள ஒரு தெய்வ ஆசானைத் தேடி அவர்களை யதார்த்த உள்ளத்தோடு நீ பற்றிக் கொள்ளவேண்டும். அப்போதுதான் அந்த அறிவு தேகம் உன் கைவசமாகும்.

ஒரு அணா பெறுமானமுள்ள இரும்பை எடுத்து [illegible]. இருநூறு ரூபாய் மதிப்புள்ள ஒரு கடிகாரமாக ஆக்கிவிடுகிறான். பஞ்சை எடுத்துப் பல ரூபாய் பெறுமானமுள்ள வேஷ்டியாக்கி விடுகிறான். இப்படி மட்டமான பொருள்களுக்கெல்லாம் மேன்மை அளிக்கின்ற இவனுடைய அறிவை, தான் உபயோகித்துத் தனக்கு மேன்மையை உண்டாக்கிக் கொள்ளாமல் நீங்கா அவஸ்தையாகிய அவமானத்திற்குள் நுழைகிறானே - இது என்ன பரிதாபம்.

இந்த உலகத்தில் சிறு துகடம், சிறு அவஸ்தை, சிறு அவமானம் தனக்கு வரக்கூடாது என்று சதா எச்சரிக்கையாக இருக்கிற இவன், நீங்காத அவமானமாகிய நரக அவஸ்தை வரநிற்கிறதே, அதற்குக் கவலைப்பட்டு எச்சரிக்கையாக இருந்து அதிலிருந்து தப்பிக்க வழி தேடக் காணோமே.

70.

காட்டில் ஒரு கடுவாயிருக்கிறது. அதன் மீது ஒரு கட்டுப்புல்லைக் கொண்டுபோய்ப் போட்டால் என்ன

செய்யும்? திரும்பிக் கூடப் பார்க்காது – ஆனல் மாமிச வாடை சிறிது தட்டினலும் உடனே அதன் பக்கம் தாவிப் பாயும். அதேபோலத்தான் எமவாதையிலிருந்து ஒருவன் தப்பித்துக்கொள்வதும், அல்லது அதிலே மாட்டிக்கொள்வதும் இருக்கிறது. இவனது சுவாசம் புல்வாடை வீசினல் எமனென்னும் கடுவாய் இவன் பக்கத்தில் வராது. ஆனல் அது மாமிச வாடை உள்ள தா யிருந்நால் னிச்சயம் எமன் வந்து விடுவான். அப் படியான அதோகதி சந்நிப்பில்தான் உலகம் முழுதும் மாட்ட னிற்கிறது. ஆனல் இந்ந எல்லையை வந்நடைந் நவர்களுக்கு மட்டும், எமனுடைய சந்நிப்பு னேரத்தில், ஒருவர் தங்ஙளுடைய னெடுங்ஙால தவ வரவிலிருந்து போட்டு னிரப்பி, சுவாசத்தின் வாடையை மாற்றி, அவர்களைக் காப்பாற்றுகிருர்கள். இவ்வாறு இங்ஙு இனமாகக் கொடுக்கும் இந்நப் பேற்றைப் பெறுவதற்கு ஒருவனுக்குச் சங்ஙடமாக யிருந்நால், அது என்ன தோசித்தனம் பார்! தலைகாக்கும் இந்ந அருங்ஙாரணம் னிகழுகின்ற இத் தருமச் சாலைக்கு வந்ந பின்னும், தன் னுடைய பழைய வஞ்ஞக னினைவையே பின்பற்றினடந் நால் னிச்சயம் அழி னரகத்துக்கு ஆளாகவேண்டியது தான்.

தன் சுவாசம் ஞசிக்கு வெளியே ஓடாமல் இருந் நால் அது எப்படிப்பட்ட வரவு? மேற்கொண்டு அது, உள்ளுக்குள் மேலும் வாங்ஙிக் கொள்வதா யிருந்நால் அந்ந வரவு என்ன உன்னத வரவு! அது எத்தனை கோடி காலத்து அழியா வரவு? இந்ந வரவு எமக்கு எப்படி வந்நது? எழுபத்திரண்டு வருட காலமாக வாடாத தவப்

பாடுற்றுத் தேடிய தேட்டுத்தான் இது. உலக முழுதும் பொய்ப் பொருள்த் தேட்டிலேயே இருக்கிறது. ஆனல் ஞம் தேடியது மெய்ப் பொருள்த் தேட்டு.

உலகம் எங்கும் ரோகமும் விஷமும் பரவி வருகிறது. ஆகவே, இதுனேரம் எவனொருவன் அரை வயிருகச் சாப்பிடுகிருனே அவன் னேயற்ற சம்பூரணனுய் இருப்பான். அப்போதுதான் அவனுள்ளிருக்கும் ஜீவ அக்கினியானது அவன் உட்கொண்ட உணவை விரைவில் சீரணிக்க முடியும். அதைவிட்டு வயிறு நிறையும் படியாகச் சாப்பிட்டால், உண்ட உணவு செரிப்பதற்கு அதிக னேரம் ஆகும். அதற்குள் ரோகமும் விஷமும் கட்டி ஏறி அவன் தேகத்தில் தலைதூக்கிவிடும். னளடைவில் அவை கொஞ்சும் கொஞ்சமாகச் சேர்ந்துக் கடைசியில், இந்த உடல் இயங்கும் தன்மை சிறிதும் தெரியாத ஒரு டாக்டரின் காலைப் பிடித்துக்கொண்டு கெஞ்ஞும்படிச் செய்துவிடும். ‘லங்கணம் பரம அவுடதம்’ என்று பொதுவாகச் சொல்லி வைத்துள்ளார்கள் – ஆனல் ஞம், எம் கை அனுபவத்திலிருந்து இப்போது எடுத்துச் சொன்னது என்ன திட்டவட்டமாயிருக்கிறது பார். ஞம் சொல்வது வேதத்தில் இல்லை யென்ருலும் இதைப் புதிதாக எழுதிக்கொள். இதுதான் தீர்ப்பு.

ஒரு பெரிய பிரளையமானது, இந்தப் பூமியை வந்து சந்திக்கப் போகிறது. அதுனேரம் சர்வ உலகமும் அதிலுள்ள மலைகளும் பொடிப் பொடியாகத் தும்பும் தூசியுமாக ஆகப்போகிறது - அப்பேர்க் கொத்த அமளியைத் தாங்கி னிற்கிற தூலம் ஒன்றிருந்நால், அது எப்பெருந் தவப் பாட்டினல் விளைந்து வந்ததாயிருக்கும். அதன்

அடினிழலைச் சேர்ந்நவர்களுக்கும் அதில் பங்கு உண்டு என்ருல், அவர்களின் கையிலுள்ள தவம் எப்படித் திமு திமுத்து னிற்க வேணும்.

இந்ந ஆபத்து அமளி னேரத்தில், உலகிலுள்ள மனிதன் எதைத் தேடிக்கொண் டிருக்கிருன் பார். பொய்ப்பொருளைத் தேடி, அதைத் தனக்கு எஜமானனுக ஆக்கிவைத்துக்கொண்டு, அதன் காலடியில் கிடக்கிருன். அதைத் தான்வைத்து ஆளச் சக்தியற்று அதற்கு அடிமையாக இருந்து வாழ்கிருன். அரும் பாடுபட்டுத் தேடிய அந்நத் தேட்டு, இறுதி னேரத்தில் அவனுக்கு வரும் ஆபத்தைத் தடுத்து மாற்ற உதவுமா? உதவாது – அது ஒரு பக்கம் இருக்கட்டும் – பொய்ப் பொருளைத் தேடி வாழ்கிருன் என்றே வைத்துக்கொண்டாலும் இந்ந உலக வாழ்வு எவ்வளவு னீளமானது? னித்திய தேகத்தில் புகுந்து வாழ்கின்ற அந்ந யுகங்கோடி கால வாழ்வோடு ஒப்பிட்டுப் பார்த்தால் இது எம்மாத்திரம்? னொடி னேரம் என்று கூடச் சொல்ல முடியாதே.

இன் னெடுங்காலமாக இப்பூமியில் எத்தனை பாரவான்கள் தோன்றினுர்கள் – அவர்களெல்லாம் இந்ந அழிந்நுபோகிற பொய்ப் பொருளையா தேடினுர்கள்? அதையா தேடிக் குவித்து வைத்தார்கள்? இல்லையே. அதை உதறி எறிந்நு காரித் துப்பிவிட்டுச் சென்றவர்கள் தானே அவ்வளவு பேரும்? ஆம். அப்படிச் செய்ததா லல்லவா சர்வ உலகமும் அவர்களைக் கைகூப்பி வணங்கு கிறது. அவர்கள் காலத்தில் எத்தனை செல்வந்நர்கள், ராஜாக்கள் இருந்நிருப்பார்கள் – அவர்களை அப்படி வணங்குகிறதா? இல்லை – அவர்கள் பேராவது தெரி

யுமா? தெரியாது. அப்படியிருக்கக் கீர்த்தியும் புகழும் யாருக்கு னிலைத்திருக்கிறது? அந்நப் பாரவான் னளுக்குத்தான். ஆகவே ஒருவன் எதைத் தேடவேண்டும் என்பது உன் அறிவுக்கு இப்பத் தெரிகிறதல்லவா?

எமன் கையில் சிக்கி இறுதி னேர அவஸ்தையில் தவிக்கும் ஒருவனுக்கு வாய்மட்டும் பேச முடிந்து பேசினுல், அவன் படுகின்ற கொடிய அவஸ்தையைக் கேட்டு உலக முழுதும் னடு னடுங்கும். ஜீவன், தான் கட்டி வாழ்ந்த வீட்டை விட்டுப் பிரிந்து செல்லும் னேரமல்லவா அது? அந்த னேரத்தில் உண்டாகும் அவஸ்தை, வாதை கொஞ்சமாகவா இருக்கும். இப்படியான மரண அவஸ்தையில் இருக்கும் ஒருவனைப் பக்கத்திலிருந்து பார்க்கிறவனுக்காவது அந்த அவஸ்தையின் கொடுமையை எண்ண வருகிறதா? இல்லை - ஆடு மாடுகளைப் போல் இருக்கிருன். ஒரு மாடு செத்துக்கிடந்நால் மற்றொன்று அதன் பக்கத்திலுள்ள புல்லை மேய்ந்துகொண்டிருக்கும். அதைப்போலவே இவனும், சாகக்கிடக்கிறவனைப் பார்த்து 'அந்நப் பணத்தை எங்கே வைத்தே, இந்நப் பத்திரத்தை எங்கே வைத்தே' என்று கேட்டுத் தெரிந்து கொள்வதில் இருக்கிருன். எம் கையில் னீங்கள் சிக்காமலிருந்திருந்நால், உங்கள் கதியும் அதுதானே.

மணிவாசகப் பெருந்நகை "போவோம் காலம் வந்நதுகாண் பொய்விட் டுடையான் கழல் புகவே" என்று 'யாத்திரைப் பத்தில்' பாடிவைத்துள்ளார்களே - யாரைக் குறிவைத்து இந்த வார்த்தைகளை அவர்கள் சொல்லி வைத்தார்கள். தலயாத்திரை, தீர்த்த யாத்

திரை என்று சொல்வதுதானே வழக்கம். அப்படியிருக்க, 'அடைவோம் ஞும் போய்ச் சிவபுரத்துள் அணியார் கதவ தடையாமே' என்று ஏதோ ஒரு னெருக்கமான னேரத்தைக் குறிவைத்துக் கூறும் இந்ந யாத்திரை, எந்ந எல்லைக்குப் போவதைப் பற்றிப் பேசுகிறது என்று இதுகாலம்வரை யாராவது சிந்நித்துப் பார்த்ததுண்டா? மேற்கொண்டு, சைவர்கள் வீட்டில் இந்நப் பத்துப் பாட்டுக்களைச் சாகக் கிடக்கிறவன் தலைமாட்டில் உட்கார்ந்நு படிக்கிறார்கள் - அப்படிப் படித்தால் புண்ணியம் என்று எண்ணுகிறார்கள். அந்ந எண்ணந்நான், இந்நப் பாட்டுக்களை எழுதிய காலத்திலிருந்நு இன்று னம் கைக்கு வந்நு சேரும்வரை காத்துக் கொண்டுவந்ந பெட்டகமாய்ப் பயன்பட்டுள்ளது. இந்ந மெய்வழிக் குடும்பம் ஒன்றுக்குத்தானே அவர்கள் அதில் சொல்லி வைத்துள்ள செயல் சொந்நம். சட்டையை மாற்றுகிற செயலை வைத்தல்லவா 'புயங்கப் பெருமான்' என்று அழைக்கிறார்கள் - இதை இவ்வளவு னுணுக்கமாக உங்களுக்கு எதற்காகச் சொல்லிவைத்தார்கள். னீங்கள் அவர்களுக்கு ஏதாவது செய்தீர்களா? இல்லையே. அப்படியிருக்க, உங்கள்பால் என்ன தெய்வ உறவு வைத்து, என்ன பேரன்பு வைத்து இதைச் சொல்லியிருக்கவேண்டும் என்று னீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டாமா?

71.

இலவமரம் இருக்கிறது - அது னம் வீட்டின் உத்திரத்திற்கு ஆகுமா - அடுப்பில் எரிக்க விறகிற்கு

ஆகுமா - ஆடு, மாடு தின்பதற்குத் தழை குழைக்கு ஆகுமா - காய்கறிக்கு ஆகுமா - ஒன்றுக்கும் ஆவதில்லை. அதன் பஞ்சு ஒன்றுதான் தலை அணை, மெத்தைக்குப் பிரயோசனப்படுகிறது. மனிதன் சாய்ந்திருக்கும் போதும் படுத்திருக்கும் போதும் அவன் உடலுக்கு மெத்தென்று சுகமாக யிருக்க இறைவன் இதை உண்டாக்கினுனென்ருல், மனிதனை என்ன உன்னதத்திற்காக அவன் படைத்திருக்க வேண்டும் என்று சிந்தித்துப்பார். 'மண்ணிருக்குது மழை பெய்யுது - இந்த இலவ மரமும்தான் இருக்கட்டுமே - என்ன னஷ்டம்' என்று அந்தப் பரம கருணையாளனுகிய இறைவன் இதை உண்டாக்கியுள்ளான்.

72.

ஆரணி மெய்வழி குப்புசாமி னுயக்கரின் தூலத் தந்தை மெய்வழி துரைசாமி னுயக்கர் ஜீவப்பிரயாணம் ஆன 40 ஆம் னுள் சன்னிதானத்தில் கொண்டாடப் பெற்றபோது:

ஆண்டவர்கள்:—

னல்ல வாலிபமான காலத்தில் னுரதர் வேஷம் போட்டு ஆடிக்கொண்டிருந்நான். தன் வயதெல்லாம் போக்கிவிட்டுக் கடைசியில் எம்மிடத்தில் வந்நான். இங்கு வந்த பின் அவன் என்ன தவம் செய்துவிட்டான். ஒரு தவமும் செய்யவில்லையே. எம்மிடம் பிரம்மோபதேசம் கூடப்பெறவில்லை. (மெய்வழி குப்புசாமி னுயக்கரைக் காட்டி) இந்த ஒரு னல்ல பிள்ளையைப் பெற்ருன். இவன் எம் அங்கத்தினன் ஆனுன். தன் தகப்பனையும்

சபையில் கொண்டுவந்து சேர்த்தான். சபையில் சேர விண்ணப்பித்தபோது அவன், 'தெய்வமே என்னை எமன் கையில் காட்டிக் கொடுத்து விடாதிங்க' என்று சொல்லி அழுதான். எம் கையை அவன் சிரசில் வைத்து 'பயப்படாதே' என்று சொல்லி அனுப்பினேம். இது தான் அவன் செய்த தவம். அன்றைக்கு வேடமா யிருந்தது, எம் கையில் சிக்கியதால், னிஜ ஞாத மகா முனியாக அவனை ஆக்கிவிட்டது. சத்திய ஒட்டோடு இங்கு சார்ந்ததன் பலன் அல்லவா அவன் பெற்ற தெய்வ வசந்தப் பரிசு.

இரவு ஒருவன் னாடகத்தில் ஹரிச்சந்திரனுக வேடம் போட்டு ஆடுகிருன் - ராஜா என்றே அவனை அதுனேரம் பார்க்கிறவர்கள் னினைக்கிருர்கள் - பொழுது விடிந்தால் அவனை யாராவது ராஜாவாக மதிப்பார்களா? மதிக்கமாட்டார்கள். ஆனல் ஒரு எல்லையில் இரவில் ஹரிச்சந்திரவேடம் போட்டு ஆடியவர் விடிந்ததும் னிஜ மாகவே ஹரிச்சந்திரனுக ஆவதாக இருந்தால், அதைக் கேட்ட கேட்டவர்கள் என்ன ஆச்சரியமடைவார்கள்.

உங்களுக்கு ஒரு தெய்வ இரவு - பிறவானுட் பிறப்பு இரவு - பிறந்ததே. அன்று - காலமெல்லாம் சைவனுக வேடம், வைணவனுக வேடம், கிறிஸ்தவனுக வேடம், பிராம்மணனுக வேடம், இஸ்லாமியனுக வேடம் போட்டு னடித்துக்கொண் டிருந்த உங்களை மாற்றி, விடிந்து பார்க்கும்போது, னிஜமாகவே பஞ்ஞாட்சர ரூபி யைத் தன் இதயலோகத்தில் பிரகாச ரூபமாகக் கண்ட மெய்யான சைவனுகவும், அதேபோல அஷ்டாட்சரப்

பொருளைத் தன் இதய ஒளியில் கண்ட நிஜ வைணவனாகவும், காயத்திரி தேவியைத் தன் இதயாசனத்தில் கோடி சூர்யப் பிரகாசத்துடன் தரிசித்த உண்மைப் பிராம்மணனாகவும், தன் கல்பு பிரகாசமாகி அங்குக் கலிமாவை, மூன்று உலகங்களையும் சர்வ வேதங்களையும் வைத்து ஆளும் அரசுமாலியாகக் கண்ட பரிசுத்த இஸ்லாமியனாகவும், ஆக்கப்பெற்ற அதிசயம் உங்கள் முகங்களில் காணேமே. பெற்றதை நினைத்து நினைத்துப் பார்த்தால் அல்லவா உங்கள் இதயத்தில் பூரிப்புண்டாகும்.

73.

சர்வலோக சரண்யனாகிய ஈசன் மனிதனிடத்தில் வந்து குடியேறி யிருக்கிறான். 'நான் உன்னிடத்தில் ஒரு தலைமுறை காலம் குடியேறி யிருக்கிறேன் – நீ என்னைத் திரும்பிப் பார்க்க மாட்டாயா' என்று வேதத்தில் நம்மைப் பார்த்து இறைவன் கேட்கிறான். ஆனால் மனிதனோ, தான் படைத்த மரத்தால், கல்லால்ஆகிய ஒரு ரூபத்தைத் தெய்வம் என்று சொல்லி வணங்குகிறான். தான் இப்படி வணங்குவதால், இவனுள்ளத்தில் குடியேறியிருக்கும் சர்வக்ஞ வஸ்துவாகிய அந்த ஈசனையும் ஒரு சடத்தை வணங்கும்படிச் செய்கிறானே – அந்தப் பாவம்தான் இவனுக்கு மீளா நரக தண்டனையைத் தருகிறது.

சர்வ படைப்புக்களிலும் வைத்து உன்னதமான படைப்பு மனிதன்தான். அவனைவிட உன்னதமானது அறிவு. அந்த அறிவு மனிதச்சட்டை தாங்கி ஒரு ரூபமாக வருவதே தெய்வம். அதுவே சர்வ பாவங்களையும்

போக்கி எமன் எல்லையில் வந்துனின்று உன்னைக் காக்கும்.

74.

மாட்டிற்கு எத்தனை அறிவு? பார்க்கிற அறிவு, சுவைக்கிற அறிவு, கேட்கிற அறிவு, னுகர்கிற அறிவு, உணர்கிற அறிவு ஆக அறிவு ஐந்து. சரி. இங்கே வந்து னீ தேவப் பிறப்பு எடுப்பதற்கு முன் உனக்கு எத்தனை அறிவு இருந்தது? மாட்டிற்குள்ள அதே ஐந்து அறிவு தான். ஆருவது அறிவை அறிவதற்கு முன் அதைப்பற்றி னீ என்ன னினைத்தாய் - ஐந்து அறிவைப் போல் அதுவும் ஒன்றுதான் என்று மிகச் சாதாரணமாய் னினைத்தாய். ஆனல் இப்போது அது எவ்வளவு பெரிதாய், மகிமை உள்ளதாய், வலுப்பெற்றதாய் உனக்குத் தெரிகிறது.

இவ்வளவு பெரிதாகிய ஒன்றை உனக்கு ஒருவர் தர அதைப் பெற்ற னீ அதனுடைய பெருமையைப் பற்றிப் பிறகு சிந்தித்தாயா? பிறரிடம் அதைப்பற்றிப் பேசினயா? இல்லை. ஆருவது அறிவைப் பெருதபோது அதன் பெருமை தெரியாதிருந்தது சரி - பெற்ற பின்னும் ஏன் சிந்தித்துப் பேச வில்லை? இவ்வளவு பிரம்மாண்ட மான ஒப்பற்ற அரியதாகிய இதனை, இதுனள்வரை வெகு சாதாரணமானதாக னினைத்துவிட்டோமே என்ற ஆத்திரம் உனக்கு ஏன் வரவில்லை?

எம்மிடம் பெற்ற ஆருவது அறிவின் சிறப்பைப் பற்றி னீங்கள் யாராவது எடுத்துப் பேசுவீர்களா என்று இதுவரை பார்த்தோம். யாரும் பேசவில்லை

யாதலால் இன்று நாமே பேசுகிறோம். ஆறாவது அறிவைப் பெறாதவன் அதைப்பற்றி என்ன நினைக்கிறான்? 'ஆறாவது அறிவா - அது தான் பகுத்தறிவு' என்று எளிதாய்ச் சொல்லிவிடுகிறான் - பகுத்தறிவா, வயித்தறிவா என்று கேட்டால் விழிக்கிறான். ஐந்தறிவு நம்மிடம் இருந்தது - ஆனால் ஆறாவது அறிவை நாமாகப் பெற முடிந்ததா? இல்லை - பெறமுடியுமா? முடியாது. அதை ஒருவர் எடுத்துக் காட்டித் தரவும் நீ பெறமுடிந்தது. இப்போது நீ நினைத்துப்பார் - ஐந்து அறிவு ஒன்றாகச் சேர்ந்தாலும் ஆறாவது அறிவுக்குச் சமமாகுமா? ஆறாவது அறிவினுடைய பெருமையின் ஒரு ரோமக்கால் அளவுக்கு ஐந்து அறிவு ஈடாகுமா? ஆகாதே. ஐயறிவுணர்ச்சி எக்கோடி காலத்தும் அழியாத நரக அவஸ்தையைத் தருவது. ஆனால் ஆறாவது அறிவோ எக்கோடி காலத்தும் மங்காத நித்திய பேரின்ப மகிழ்ச்சிகர வாழ்வை அளப்பது. ஆகவே இரண்டும் சமமாகுமா?

மிருகங்களும் பெற்றிருக்கிற ஐந்தறிவினால் இவன் அடையும் லாபம் என்ன? மிருகங்கள் ஐயறிவைக் கொண்டு பாவத்தைச் சம்பாதிப்பது இல்லை - ஆனால் இவனோ தன் குயுக்தியினால் அவற்றைத் துஷ்ப்பிரயோகம் செய்து பாவப் பளுவைச் சம்பாதித்துக் கொள்ளுகிறான். அதனால் எக்கோடி காலத்தும் அழியாத தண்டனையாகிய நரக அவஸ்தையை அடைகிறான். அந்த அதோகதியிலிருந்து தப்பிக்கவே இவனுக்குத் தனிச் சுதந்திரமாக ஆறாவது அறிவு தரப்பெற்றது. இவன் ஐயறிவில் இருக்கும்வரை நரனாகவே

இருக்கிருன். ஒரு தேவேசரின் சன்னிதியை அடைந்து, அவர்களின் முறைசங்ஙார அனுக்கிரகத்தால் மனுவாகித் தேவப் பிறப் பெய்துகிருன். அப்போதுதான் இவன், ஆருவது அறிவை அதாவது தன்ஃன யறிகிற தனி அறிவைப் பெறுகிருன். பிறகு அது, இவனுடைய ஐந்நறிவால் பெற்ற அவஸ்தை வாழ்க்கையை இல்லாமல் ஆக்கி, னித்திய பேரின்ப வாழ்க்கையை இவன் தஃலயில் சூட்டத் துவஜங்ஙட்டி னிற்கிறது.

இவவளவு இஃணயற்ற பெருமையும் உன்னதமும் உடைய ஆருவது அறிவை, உனது ஐந்நறிவுடன் ஒன்ருக வைத்து னீ மதித்ததுண்டா? இல்ஃல. வயிற்றறிவைப் பகுத்தறிவு என்று சொல்லிக்கொண்டு அதுவே ஆருவது அறிவு என்று னிஃனத்துக்கொண்டு ஏமாந்நவனுக இருந்நாய். அந்ந அவல னிஃலயிலிருந்நு உன்ஃன மாற்றி, அதன் சத்தியச் செயலில் ஆக்கியது இங்ஙு தானே. இங்ஙு வராவிட்டால் ஆருவது அறிவை என்ருவது பெற்றிருப்பாயா? பெற்றிருக்க முடியுமா? முடியாது.

மனுவுக்கு மட்டும் பிரத்தியேகமாக வாக்கறிவு கொடுக்கப்பெற் றுள்ளதே - அது எதற்கு என்று யோசித்துப் பார்த்ததுண்டா? இல்ஃல - உன்னதமான வாக்கறிவை இவனுக்குக் கொடுத்தது, ஆருவது அறிவைத் தேடி மேம்பாடு அடைவதற்காகவேதான். ஆனுல், இவனே அதை விட்டுவிட்டு எமஃனத்தேடி, அவஃன எஜமானனுக ஆக்கிக்கொள்ளவே னிற்கிருன்.

இங்ஙு வந்நு எமது வேதமணிச் சூலில் மறுபிறப் படைந்நு பெற்ற ஆருவது அறிவல்லவா உன்னிடத்

திலிருந்த மற்ற ஐந்து அறிவுக்கும் அதிவல்லமையும் மகா அதிசய மகிழ்ச்சியும் கொடுத்து நாள்தோறும் அவற்றை வளர்த்து வருகிறது. இன்னும் அது உன்னுடைய பவக்கோளை யெல்லாம் சங்காரம் செய்து, பவச் சேற்றை உலர்த்தி, பெரிய ஆபத்தான மரண அவஸ்தை வந்து பீடிக்காமல் வெரட்டி நீடிய பரமபத வாழ்வை உன் தலையில் ஏற்றி வைக்கிறது.

நாம் முன்னமே இதைப்பற்றிக் கோடி காட்டி இருந்தோம். இன்று அதற்கு விஸ்தாரமான ஒரு பாதை போட்டுத் தந்துவிட்டோம். இனி, நீங்கள் பெற்றுள்ள ஆறுவது அறிவின் பெருமையை ஒவ்வொரு நாளும், ஒவ்வொரு நேரமும் எண்ணி எண்ணிப் பார்த்து விளக்கமாகப் பேசவேண்டும். அப்போதுதான் அதன் முழுப் பலன் உங்கள் கைவரவாகும்.

75.

என்ன ஆச்சரியம்! சிருஷ்டியில்வைத்துப் பல ஜீவ ராசிகளுக்கு மனுவைப்போலவே வாய் அமைந்திருக்கிறது, பல் இருக்கிறது, நாக்கு இருக்கிறது. அவை யாவும் மனிதனைப்போலவே உணவு அருந்துகின்றன — மனிதனும் அருந்துகிறான். ஆனால் ஒரு முக்கியமான வித்தியாசம் — இவன் நாக்கை நீட்டிக் குலுக்கி அசைத்தால் வாயில் மேலும் கீழும் மோதிப் பல்வேறு ரகமான சப்தங்கள் உண்டாகிறது. இத்தகைய ஒலி ரகத்தை மற்றைய ஜீவராசிகள் உண்டாக்க முடிவதில்லை. மனிதன் மட்டும் தன் நாவின் அசைவுகளால் தன் எண்ணத்தை வெளியாக்குகிற ராக ரகமான சப்தங்களை உண்

டாக்குகிற வல்லபமுடையவனாக இருக்கிறான். அதோடு பிறர் நாவில் உண்டாகி வெளியாகும் சப்தம் இன்னதைக் குறிக்கிறது, இன்னதைச் செய்யவேண்டும் என்று கேட்டு அறிந்துகொள்ளுகிற பிரத்தியேகமான அறிவையும் இவன் பெற்றிருக்கிறான். எப்பேர்க்கொத்த அதிசயங்கள் நிறைந்த அறிவுப் பிழம்பாக இறைவன் இருந்தால், இந்த அளவிடற்கரிய வல்லப அசைவுகளை மனிதனுடைய நாவில் உண்டாக்கியிருப்பான் - அதோடு அதைக் கேட்டு இன்னதென் றறிகிற அறிவையும் அதற்குரிய கருவிகளையும் படைத்திருப்பான்?

தன் நினைவை வைத்து நடத்தக் கூடிய ஒரு அபார உருவை, இவனுக்கு ஆயுளெல்லாம் ஊழியம் செய்யத் திட்டமிட்டு உண்டாக்கி அனுப்பியிருக்கிறானே- இவன் அறிவைக்கொண்டு தேடுகிற முதலா இது?

நிணவான அக்கினி இன்ன எல்லையில் உரசுவதால் சப்தம் உண்டாகிறது என்று மெய்ஞ்ஞானிகளைத் தவிர வேறு யாருக்கும் தெரியவே தெரியாது. இத்தகைய அபுரூபமான கருவிகளை மனிதனிடத்தில் வைத்துப் படைத்தவன் அதற்குரிய உன்னத வாழ்வையும் படைக்காமலா இருப்பான்? பெரியோர்களை அடுத்து, அது இன்னது என்று தெரிந்து கொள்ளாமல், நேர்மைக்கென்றே படைக்கப்பெற்ற இவனது கருவிக் குலங்களை, இறைவனுடைய எண்ணத்திற்கு மாற்றமான அதமச் செயல்களுக்கே காலமெல்லாம் பயன்படுத்தினால் இறுதியில் இவனுக்கு என்ன கிடைக்கும்? நரக தண்டனை தான் கிடைக்கும். இப்படி, தான் பாழாகப் போவதோடு நில்லாமல் இறைவனின் அபூர்வ சிருஷ்டிகளனைத்தும்

'இயற்கை' என்று திமிர்கொண்டு சொல்லுகிறவனுகவும் ஆகிவிட்ட காலம் இது. இவன் மேன்மையடையட்டும் என்று எந்நக் கருவிகளை இவனுக்குப் படைத்துத் தந்நானே அவற்றைக்கொண்டே தன்னைப் படைத்த சிருஷ்டி கர்த்தாவைப் பழிக்கத் துணிகிருன். இவனுடைய னலனுக்கென்றே அரும்பாடுபட்டுப் படைத்த பெரு முதலே, ஒரு தலைமுறை காலமட்டும் இவனுக்கே ஊழியம் செய்ய னிற்கும் வல்லப உருவை, தன்னிலிருக்கும் ஜீவனைச் சந்தித்து னித்திய வாழ்வைக் கைபோடச் செலவிடாமல், படைத்த எஜமானனையே தூஷிக்கச் செலவிடுகிருன். இந்நத் துரோகத்திற்குத் தண்டனை யாகவே எமனென்னும் கொடூரனைத் தனக்குத்தானே படைத்துக் கொள்ளுகிருன்.

மனுவை உன்னதச் செயலில் ஏற்றி உய்விக்கும் பொருட்டே, வேத கர்த்தர்களையும் வேதத்தையும் கால காலமெல்லாம் படைத்து அனுப்பிக்கொண்டே யிருக்கின்ற அந்ந அரசுமால், எவ்வளவு அளவிடற்கரிய கருணையாளனுகவும் உன்னத மகத்துவம் பொருந்நிய வனுகவும் இருக்கவேண்டும். இதுமட்டுமா – அவனே திருமேனி தாங்கி அவதரித்து உலகிற்கு வந்நு இவனுடன் கூடவே இருந்நு உதவி செய்யவும் னிற்கிருனே! அப்படி வந்நுள்ள அந்நத் திருவுரு, பார்த்துத் தேர்ந்நெடுத்துத் தரும் ஒரு வாழ்க்கைப் பாதை எவ்வளவு சிரேஷ்டமானதாக இருக்கும். அந்ந அரசுமாலின் சந்நிப்பு னேருக்கு னேர் இவனுக்கு வந்நு வாய்த்துக் கொண்டால் அது எப்பெரும் உன்னத முடையதாக இருக்கும்!

இவனுக்கென்று தந்துள்ள அருமையான கருவிக் குலங்களை வைத்து இந்த மனிதன், தன் எத்தனத்தாலே அழி இன்பத்திற்குரிய பல ஆச்சரியமான பொருள்களை உண்டாக்க முடிகிறதல்லவா? அதே கருவிக் குலங்களைக் கொண்டு அவற்றைப் படைத்த இறை பொருளுக்குப் பிரீதியான வழியில் இவன் ஏன் னடக்கக் கூடாது? அப்படி னடந்நால் எத்தகைய மாபெரும் வல்லபச் செயல் இவன் கைவரவாகும்! அவ்வாறு கைவரவாகிப் பெறுகின்ற பலன் இவன் தலை கொள்ளுவதாயிருக்குமா? இருக்காது.

இவன் பாடுபட்டுச் செய்ததை இன்னொருவன் குறை சொன்னாலோ அல்லது இயற்கை என்றாலோ இவனுக்கு என்ன கோபம் வரும்? அதே போல, சர்வத்தையும் படைத்துத் தந்த இறைவனுக்கும் கோபம் வராதோ? இவனைக் குருடனாக ஊமையாக அல்லது செவிடனாகப் படைத்திருந்நால் இவன் என்ன செய்ய முடியும்? இயற்கை என்று சொல்லி திருப்தி அடைவானா? சர்வத்திற்கும் எஜமானனாக விளங்கும் அந்த னித்தியன் தன் தனிப் பெருங் கருணையால் அளவிடற்கரிய வல்லமைகள் னிரம்பிய வஸ்துக்களை, னம்மைக் குறி வைத்து உண்டாக்கி இருக்கிறானே - என்ற னன்றியை இவன் எண்ணிப் பார்க்காவிடில், இவன் அடியோடு அழியவேண்டியது சரிதானே? னீங்காக் கொடூரமான வேதனையைத் தருகின்ற எமனை இவனுக் கென்று படைக்க வேண்டியது எவ்வளவு அத்தியாவசியம் என்பது இப்பப் புலப்படுகிறதல்லவா?

கலியனின் காலமும் திரண்டு வலுத்துப் பகிரங்கத்திற்கு வந்துவிட்டது. அழிவு நேரமும் கிடுகிடு வென்று நெருங்கிக்கொண்டு வருவதைப் பார்க்கிறோம்- இனிக் காலம் இல்லை. பிரளயத்திற்கு முகூர்த்தக்கால் ஊன்றியாகிவிட்டது. 'சூரிய மண்டலத்திலிருந்து சூரியனில் பல ஓட்டைகள் விழுந்து கிடப்பதை நீங்கள் பார்க்கவில்லையா அண்ணா' என்றும், 'பூமியில் எங்கும் நிசப்தம் நிலவப் போகிறது' என்றும் வீரப் பிரம்மம் அவர்கள் தீர்க்கத் தரிசனம் கூறிக் குறிவைத்த காலமும் வந்துவிட்டது. இந்த அழிகலிக் கடைநாளைப்பற்றி இவ்வளவு திட்டமாக பல நூற்றாண்டுகளுக்கு முன்பாகவே அத்திருவுள்ளம் கண்டு, வாக்கு ரூபத்தில் வெளியாக்கி வைப்பது என்றால், அது நடக்கப் போவது எவ்வளவு நிச்சயாதி நிச்சயமாக இருக்கும்.

இந்தக் கோரக் கொடிய காலத்தில் தன்னை அறியும் மெய்ஞ்ஞானச் செயல், இந்தப் பூமியில் வீறுகொண்டு ஒரு எல்லையில் முளைத்து எழுந்து நிற்கிறதே- இது என்ன ஆச்சரியம்! எந்த அபாரச் செயல் வலிமை ஒரு திருமேனி தாங்கி வந்து இதை நடத்துகிறது என்று எண்ணிப் பார்! மனிதனுக்கு இறுதியில் வருகிற ஆபத்தை அறிவிக்கிற இந்த எல்லை, அதிலிருந்து தப்பிக்க வைக்கும் செயற்கரும் செயலை நடத்திக் கொண்டிருக்கிற இந்த எல்லை, ரத்தினங்களால் இழைக்கப் பெற்ற தெய்வ மாளிகை என்றால் மிகையாகுமா? ஆனால் பாவக் கண்களுக்கு இது மட்டமாகத் தோன்றலாம். இந்த எல்லையின் சிறப்பை அறிந்து அதைத் தன்னதாக ஆக்கிக் கொள்ளாத மனுத்தலை, தன்னை

அறிவாளி, புத்திசாலி, பேச்சாளி என்று சொல்லிக் கொள்ளுகிருனெனில், அது என்ன அறிவீனம்!

காலகாலமெல்லாம் 'சிவனே சிவனே' என்று வாயிற் சொல்லிக்கொண்டேயிருந்து முடிவில் எமனைச் சந்திக்கிறவன் யாராயிருப்பான்? கடைசியில் அவன் அடையும் கதிதான் என்ன? சர்வ வல்லவரின் பெருங் கருணைப் பேருதவிக்குத் தூரப் பட்டவனுக ஆக்கிக் கொண்டவனின் அதோகதியே அவன் தலையில் வந்து விழும்.

76.

அணுகுண்டு, ஏவுகணை, ஏரோபிளேன் முதலிய எத்தனையோ ஆச்சரியமானவைகளை மனிதன் தன் ஆராய்ச்சியினுல் - விஞ்ஞானம் என்ற பெயரில் - கண்டு பிடித்துள்ளான். சுருக்கமாகக் கூறினுல் அத்தனை ஆராய்ச்சிப் பொருள்களும் இறைவன் உண்டாக்கியுள்ள னவலோகங்கள், அறுபத்திநாலு பாஷாணங்கள் இவைகளை ஒன்ருேடு ஒன்று கூட்டியோ குறைத்தோ உண்டாக்கப்பட்டனவே. இப்படி அரும்பாடுபட்டுப் பெரிய செலவில் உண்டாக்கப்பட்ட அவைகள், மனிதகுலம் விரைவில் சாவதற்கே உதவிசெய்ய னிற்கின்றன. இந்த உலகத்தில் எந்த மேன்மையோடு எந்தச் சுக போகத்தோடு வாழ்ந்தாலும், கடைசியில் ஒவ்வொருவருக்கும் வரும் அவஸ்தையாகிய சாவிலிருந்து தப்ப வைத்து னித்தியத்தில் சேர்ப்பிக்கிற வழியை அவர்கள் யாரும் கண்டுபிடிக்கவில்லையே! அந்த அவஸ்தையிலிருந்து தப்பிக்க வைக்கும் சாகாக்கல்வி, சர்வ உலகத்

திலும் வைத்து இந்த ஒரு எல்லையில்தான் கற்பிக்கப் பெறுகிறது.

நம் மனித தேகத்திலுள்ள தசை ரெத்தம் நரம்பு முதலியன பார்க்க ஒன்று சேர்ந்து இருக்கின்றன. ஆனால் ஏதாவது நெருக்கு ஏற்பட்டு நசுங்கிக் காயம் பட்டுவிட்டால் தசையைவிட்டு ரத்தம் பிரிந்து வெளியே வந்துவிடுகிறது. அதைப்போலவே நம் உடலும் உயிரும் பார்க்க ஒன்ருகச் சேர்ந்திருந்தாலும் இவ்வுலக இன்பமோ துன்பமோ அதிகமானல் உயிர் உடலை விட்டுப் பிரிந்துவிடுகிறது. ஆனல் வரநிற்கிற நித்திய உலகத்தில் உயிரும் உடலும் அப்படிப் பிரிய முடியாத படிப் பிசைந்து ஒன்ருகச் சேர்த்து ஒரே தூலமாகப் படைக்கப்பெறும். அதுதான் பிணி மூப்புச் சாக்காடு இல்லாத நித்திய தூலம். அந்தத் தூலத்தால்தான் பேரின்பத்தைத் தாங்கமுடியும். அதைப்போலவே நரக தூலமும் அழியாததாக எக்கோடி காலமும் நீங்காக் கொடிய அவஸ்தையைத் தாங்கும்படியானதாகப் படைக்கப்பெறும்.

77.

தெய்வம் என்று நினைத்து நீ படைத்த ஒரு விக்கிரகத்தின் மேல் ஒரு மந்திரத்தைச் சொல்லி பூவைப் போடுகிருய். அந்த நேரம் மட்டும்தான், பூப்போட்டது உன் கண்ணுக்குத் தெரிகிறது, வாயில் சொன்ன மந்திரம் உன் காதில் கேட்கிறது. ஆனல் அந்த எல்லையைவிட்டு நகர்ந்து நீ வேறு வேலைக்குத் திரும்பியதும் அவை யாவும் உன் நினைவிலி

ருந்து மறைந்து போகிறது. என்? அது னகல். ஆனுல் அசலான மந்திர ரூபியை உன் இதயாசனத்தில் னேருக்குனேர் னீ சந்திக்க னேர்ந்நால், அது உன்னை விட்டு ஒரு னெடி னேரமும் மறையாது. னீ அதை மறந்நாலும் அது உன்னை மறக்கவிடாது. இவ்வாருக அந்ந மந்திர ரூபியை னேருக்கு னேர் உன் முன் தோற்ற ரவாகச்செய்து வைக்கப் பெறுவதே உபதேசம். அப்படித் தோற்றரவானபின் அந்ந மந்திர ரூபியின் பவர் மூன்று உலகமும் எட்டி வீசுவதை னீ காண்பாய்.

எண்ணற்ற கோடி தேவ விடிவுகள், மந்திரங்ஙள், வேத வேதாந்ந அதிசயங்ஙள் காலமெல்லாம் உன் உள்ளத்தில் ஓடி ஓடி விடிந்து வெளியாகி அறிவு பூத்துக் குலுங்ங னிற்கின்ற அதிகாரண ரூபமே விஸ்வரூபம். விஸ்வரூபம் தரிசனத்திற்கு வந்நபிறகே காண்டபமும் வெளியாகும். துவாபரயுகத்தில் ஸ்ரீ பரந்நாமன் சன்னிதி முன்னிலையில் அர்ச்சுனனுக்கும் அப்படித்தான் வெளியாகிற்று. விஸ்வரூபம் வெளியாகித் தரிசனைக்கு வரும்வரை மரணபயம் அவனைவிட்டுப் போகவில்லை. அதுவேதான் மனிதஉடல் எடுத்த ஒவ்வொருவர் கதியும்.

இவ்வாருன கோடானுகோடி அதிசயங்ஙளை வெளியாக்குகின்ற வார்த்தைகளை உலக வார்த்தைகளோடு ஒன்றுகவைத்து னினையாதே. தெய்வத்தின் அருள் வர்ஷிப்பு என்று னினை. எமடபரை விரட்டி ஓட்டுகின்ற மந்திரவாள் என்று னினை. அப்பத்தான் உனக்கு மீட்பு கிட்டும்.

ஒரு பவுனை ஒரு பீத்தப்பையில் போட்டு வைத்தால் அதன் மதிப்புக் குறைந்து விடுமா? குறையாது.

அதுபோலவே அந்த மந்திர ரூபியை உன் இதயாசனத்தில் தெரிசிக்க வைக்கும் எல்லை எவ்வளவு மட்டமான ஒரு குடிசையாக இருந்தாலும் அதுவே ஆலயம். அந்த மந்திர ரூபியை அப்படி வெளியாக்குகிற தேவ சன்னத முத்திராலங்கார அதிகாரம் பெற்று வந்துள்ளவர்களே தெய்வம்.

உன் பெயர் ராமகிருஷ்ணன். 'ராமகிருஷ்ணு' என்று உன் பெயரைச் சொல்லிக் கூப்பிட்டதும் னேரில் ரூபத்தில் னீ இருப்பதால் ஏன் என்று பதில் சொல்லுகிருய். னீ இல்லாத எல்லையில் ஆயிரத்தெட்டு தடவை 'ராமகிருஷ்ணு ராமகிருஷ்ணு' என்று அலறி அலறிக் கூப்பிட்டாலும், ராகமாகக் கூப்பிட்டாலும், உருக்கமாக அழுதுகொண்டே கூப்பிட்டாலும் ஏன் என்று சொல்லுவாயா? சொல்லமாட்டாய். அதேபோலத்தான் மூல மந்திரத்தை வாயால் எத்தனை ஆயிரம் தரம் சொன்னுலும் அதை னேருக்கு னேர் சந்திக்க முடிவதில்லை. ஆனல் அது வீற்றிருக்கும் எல்லையில் போய் ஒரு முறை சொன்னுலும் உன் தரிசனைக்கு அது வந்துவிடும்.

பொருள் இல்லாமல் மைத்தை மட்டும் சொல்வதால் என்ன பிரயோஜனம்? ஒரு பிரயோஜனமுமில்லை. மந்திரத்தை உன் கைப்பொருளாக ஆக்கவல்ல பெரியோர்கள் உனக்கு வந்து வாய்க்கவேணும் - அவர்கள் இப்பூமியில் ஓவாது வந்து பிறந்துகொண்டுதான் இருக்கிருர்கள். அபூர்வமான அந்த அரிய சந்திப்பை னீ தேடி அடையவே உனக்கு அறிவு தரப்பெற்றது.

உன் ஜீவனை எமன் கை சிக்காது மீட்டு ஆட்கொள, உன்போல் மனித சட்டை தாங்கி வந்துள்ள பெருங் கருணைப் பேரருள் த் திருமேனியே ஆசான். அவர்கள்

வல்லபத்தை உனக்குத் தெரிய வைக்கவே உபதேசம். காலமெல்லாம் எழுத்தாக இருந்த காயத்திரியை! பஞ்ஞாட்சரத்தை, அஷ்டாட்சரத்தை, கலிமாவை ரூபத்தில் னேருக்கு னேர் தெரிசனைக்குக் கொண்டுவந்த இவர்கள் னம்போல் மனிதரல்ல – தேவாதிதேவனே – என்று அறிய வைப்பதற்கே உபதேசம். பெரியோர்கள் என்று வேடம்போடும் பாசாண்டியர்களால் இந்தச் செயல் செய்ய முடியாதல்லவா? ஆகவே மெய்யைப் பொய்யிலிருந்து பிரித்துக் காட்டவே உபதேசம்.

உபதேசம் எங்கு ஆரம்பித்து எங்கு முடிகிறது? உன்னிடம் எழுத்தாயிருந்த மூலமந்திரம் கோடிசூர்யப் பிரகாசப் பொருளாகக் கைவரவு ஆகுவதற்கு, இக் கடத்தை னீக்கி அக்கடத்துள் ஆக்கி, உனக்கு மறு பிறப்புத் தந்தருளிய இரவு, உபதேசம் ஆரம்பித்து – இறுதி னேரமாகிய சாவுடைய னேரத்தில் – எமபடர் வந்து மோதி னெருக்குகின்ற அந்த அமளி ஆபத்தைத் துண்டாடித் தெறிபடச் செய்து, அதாவது எமன் கை கீழே போய் உன் கை மேலோங்கும்படி ஆக்கி, தெய்வ விடிவின் ஒளி உன் அகத்தில் பரவச் செய்து, பிணி மூப்புச் சாக்காடு அணுகா மாருத வயதுடைய னித்திய முத்தி தேகத்தில் புகுத்தாட்டி, பரமபதப் பேரின்ப வாழ்விற்குள்ளே உன்னைத் தள்ளுகிறபோது உபதேசம் முடிகிறது. அப்பத்தான் எம் வேலையும் முடிகிறது.

78.

உலகத்திலே பெரிய பலசாலி யார்? எமன்தான். அவன், அரசன் முதல் ஆண்டிவரை எல்லோரையும்

அடித்துச் சாய்த்துவிடுகிறுன். "அந்த எமன் எம் கையடக்கம்" என்ற ஒரு சத்தம் எங்கிருந்து கிளம்புகிறதோ அந்த எல்லையில்தான், வஞ்சு மறலியாகிய எமனுடைய அதிவல்லபப் படரை இல்லாமல் ஆக்குகின்றவர்கள் இருக்கிருர்கள். அவர்கள்தான் னிஜமான பெரிய பலசாலி. அப்பேர்க்கொத்த ஒருவர் உன்முன் இந்தக் காலத்தில் வந்திருக்கிருர்கள். அவர்கள் தூலமும், னீ பார்க்க உன் தூலம்போல்தான் இருக்கிறது. உன் அறிவுக் கண்கொண்டு பார்த்து அவர்களை யார் என்று கண்டு இப்பவே பற்றிக்கொள். அதுவே உனக்கு முத்தி.

சத்தியத்தைப் புதுக் கருக்கோடு புதுப்பிக்கின்ற காலம் அதாவது சதுர்யுகங்களும் கண்டறியாத ஏகப் பிரளைய காலம் வரப்போகிறது. ஓராண்டு காலத்தில் அதற்கு ஒரு முகூர்த்தம் வைக்கப் பெறும். அந்த முகூர்த்த னேரம் முதல், ஒவ்வொரு னிமிடமும் 'இந்த னெடி தப்பித்தோம் - அடுத்த னெடி தப்புவோமோ' என்று அலமந்து அலற னிற்கும் அளவுக்கு அடுக்கடுக்காக அமளி அழிவு ஆபத்துக்கள் இந்தப் பூமியில் செறிந்து ஓடும் - அந்த னீண்ட னேரத்தின் கோரத்தை னீ னினைத்துப் பார்க்கவே முடியாது. அதற்குப் பின் சதுர்யுகத் தீர்ப்புக்கான முகூர்த்தம் ஒன்று வைக்கப் பெறும். 'அந்த னீதித் தீர்ப்பு மைதான அமளியில் னின்றும் யானபுசே என்னைக் கார்' என்று முன் சென்ற னித்திய சூரியர்களாகிய மகத்துக்களை இறைஞ்சுகின்ருர்கள் என்ருல் அது என்ன னீதிக் கூர் ஓச்சும் னேரமாக இருக்கும். அந்த னேரமுதல் ஒரு பக்கம் அவமான அசிங்கிய அவஸ்தையில் னித்தியம்-

மறுபக்கம் மாருது னிலைத்த மகிழ்ச்சி வாழ்வில் னித்தியம். இதற்கான பாரப் பெரிய வேலை ஒரு எல்லையில் ஒரு ரூபத் திருமேனியின் தவச் செருக்கால் திட்டம்போட்டு னடந்து கொண்டிருக்கிறது.

அழிவும் அழியாமையும், அவஸ்தையும் மகிழ்ச்சியும் என்றென்றும் னித்தியமாகத் தங்கித் தரிக்கின்ற வேறு வேறு உலகமாக ஆக்கப்பெறப் போகிறது. இந்நக் காரண காரியங்களை அளக்க வந்நவன் இந்த மனுத்தான்.

அந்ந முகூர்த்த னேரம் வந்நதும் பிரேதக்குழியில் இருப்பவர்களை எழுப்பித் தீர்ப்பு னடைபெறும். அது எந்நக் காலமோ என்று னிணைத்தார்களே அந்நக் காலம் இந்நா வந்நுவிட்டது.

பிரளைய னேரம் னெருங்கியவுடனே இங்கு வந்நு புகுந்நுகொள்ளலா மென்று வருகிறவர்களுக்கு னெருப்புத்தான் வரவேற்க னிற்கும். இப்பவே, வெளியிலே இருந்நு சாலைக்குத் தரிசனைக்கு வருகின்ற னம் பிள்ளைகளுக்கு ஆலயத்தில் னுழையும்முன் தீர்த்தம் போட்டு ஏற்றுக் கொள்ளுகிருேமே. எத்தகைய பாவத்தில் பிரண்டுவிட்டு அவர்கள் வந்நால் இந்நச் சுத்திகரிப்பு வேண்டியதாயிருக்கும்? னீதி வந்நு விளையாடும் அந்ந னேரத்தில் எந்நச் சுத்தம் ஏறி, எந்நத் தவ வரவு கையிலிருந்நால் தப்பிக்கமுடியும் என்று இவன் வெறி அறிவுக்கா படப்போகிறது!

79.

னும் பிறந்நபோது இந்நத் தூலம் ஒன்றரை அடி னீளத்தில் கைகால் முதலிய அங்கங்களுடன் ஒரு சிறிய

ரூபமாக இருந்தது. பிறகு னேரம் தவருமல் ஆகாரம் உட்கொண்டு உட்கொண்டு, ஞெடிக்கு ஞெடி வளர்ந்து இன்றிருக்கும் ஐந்நரை அடி உயரமுள்ள இவ்வளவு பெரிய ரூபமாக ஆகியிருக்கிறது. இப்படியாவதற்கு இது ஒரு மலை அளவு உணவை உட்கொண் டிருக்கவேண்டு மல்லவா? ஆம். அந்த மலையளவு உணவின் எசன்சு ரூபமே இப்போது இந்த உடம்பாக இருக்கிறது. அவ் வளவு உணவும் இந்த உடம்பின் உள்ளே போனது னம் தொண்டையிலுள்ள ஒரு சிறு துவாரத்தின் வழி தானே? ஆம். அதே துவாரம் சாவு வந்தவுடன், தேகத் தின் உள்ளே உண்டாகும் ஒரு னெருக்குதலால், ஒரு சொட்டு ஜலம்கூட இறங்காதபடி அடைபட்டுப் போகி றதே. இது னும் பார்க்க, உலகம் முழுதும் னடந்து வருகிற செயல்தானே? ஆம். அப்படியிருக்க எமது கையகத்தில் ஆகிச் சுத்தப்பிரயாணம் ஆனவர்கள், உயிர் அடங்கி வெகு னேரம் ஆன பிற்பாடும் னும் அனுப்புகிற காஷாய தீர்த்தத்தைச் சாப்பிடுகிருர்களே - இந்த அருங்காரண அதிசயம் உலகமக்களுக்கு ஏன் படவில்லை?

இப்போது னீ உயிருடன் இருக்கிருய். உன்னைக் கழுத்தளவுக்கு மண்ணில் புதைத்து வைத்தால் உன் தேகத்தை மண் தின்ன ஆரம்பித்துவிடும். ஆனல் பரிசுத்த ஜீவப் பிரயாணமானவர்களின் தேகத்தை மண்ணில் அடக்கம் செய்தால் மண் அவர்கள் மேனி யைத் தீண்டுவதில்லை. மேற்கொண்டு வருங்கால னித்திய உடலுக்கான ரஸ்த்தையும் அதற்குத் தந்து கொண் டிருக்கிறது. ஆகவே அடக்கமாகியிருக்கும்

அந்நத் தேகத்திலுள்ள உயிர், இப்போதிருக்கிற உயிர் அல்ல என்று தெரிகிறதல்லவா? ஆம். எம்முடைய தவத்தை அள்ளிப் போட்டு, எமபடர் அடராது தப்ப வைத்து, அழியாத வைரமணித் தேகத்தில் புகுத்தாட்டி, னித்திய உலகிற்கென்று ஆக்கப்பெற்றுள்ள உயிர் அது. ஆகவே அந்த உயிர் தங்கியிருக்கும் உடலை மண் தீண்டாது. தீண்டுவதில்லை.

80.

(25 – 12 - 71 உ வெளியானது)

'பதிமறைவு' என்று அடிக்கடி காகபுசுண்டர் பிரான் அவர்கள் தங்களின் ஜீவமந்நிரத்தில் சொல்லி வருகிறார்களே - அதைக் கேட்கும்போது உங்களுக்கு அச்சமாக இருந்ததல்லவா? ஆம். ஆனால் எமக்கு அச்சமாக இருக்கவில்லை. இன்னதைத்தான் அவர்கள் குறிக்கிறார்கள் என்று னேற்று இரவுதான் எமக்கு வெளியாச்சு. கற்பகத்துக்குள் னுழைவதை, அந்தத் திருமாளிகைக்குள் னுழைவதைத்தான் 'பதிமறைவு' என்று கூறியுள்ளார்கள். அந்நக் கற்பகமாளிகை யாருக்கும் எட்டாத ஒரு மறைவான இடம் - அடையாளம் இல்லாத இடம் – வெடிவு காணமுடியாத இடம். அந்தத் தவோனனத எல்லையில், அதன்மேலே போய்னின்றோம். உடனே அங்கு இடம் கொடுத்துக் 'கொளு கொளு' என்று உள்ளே இறங்க மறைந்தோம். அதைத்தான் "மறைவு" என்று அவர்கள் கூறியுள்ளார்கள். அந்நனாள் முதலே எமக்குப் பசி என்பது இல்லாமல் போக, உணவு தேவையற்றதாக ஆகிவிட்டது.

அந்நக் கற்பக மாளிகையில் நுழைந்நதும், ஒன்பது கிரகங்களும் ஏகவியாழனாக மாறிவிட்டன. அப்பத்தான் 'ஏகவியாழராசி' என்பது கைவரவாயிற்று. ஒன்பது கிரகங்களும் வியாழனாக மாறிக் கையில் வந்நது எந்நச் செம்மலுக்கும் எந்நக் காலத்தும் இல்லை. ஈசனுக்கும் இல்லை. ஏனெனில் அந்ந மகோன்னத அருந்நலமானது யாரும் எட்டமுடியாத ஒரு மறைவில் இருக்கிறது. அந்நக் கற்பக மாளிகையில்தான் மூப்பு னீக்கும் வல்லபம் இருக்கிறது.

கையில் உள்ள ஐந்நு விரல்களும் வேறு வேறாக இருந்நாலும் ஒரே னோக்கோடு எப்படி ஒரு வேலையைச் செய்கின்றனவோ அப்படியே ஒன்பது கிரகங்களும் ஒருமுக னோக்கோடு ஏகவியாழனாக ஆகிச் செயல்பட னிற்கின்றன. இன்னும், ஒரு முதல் மாணாக்கன் எவ்வாறு தன் ஆசானின் ஏவலைக் குறிப்புணர்ந்நு செய்ய னிற்பானோ அவ்வாறே அவைகளும் குறிப்புணர்ந்நு எம் ஏவல்செய்ய னிற்கின்றன. முன்னே னும் சொல்லிச் செய்த செயல் இப்போது சொல்லாமலே அவைகளால் செய்து முடிக்கப்பெறுகிறது. கூர்மதி கொண்டு கவனிக்கிறவர்களின் னினைவில்தான் இந்ந ஆச்சரியம் அன்பேறிப் பூத்து னிற்கும்.

ஆதியே துணை

பரம்சார்ந்த இம்மெய்மாதவ சீர்காரிய காணிக்கை கைங்ஙர்யர்கள்

மெய்வழி முருகமலை அனந்தர், சபைக்கரசர்	- சென்னை
மெய்வழி ஞருயணசாமி அனந்தர், துணை சபைக்கரசர்	- மெய்வழிச்சாலை
மெய்வழி வரதராஜ அனந்தர், காரியதரிசி	- மெய்வழிச்சாலை
மெய்வழி வெங்கட்ராம அனந்தர், பொருளாளர்	- மெய்வழிச்சாலை
மெய்வழி ராமசாமி அனந்தர், சத்தியப்பிடி மூப்பர்	- மெய்வழிச்சாலை
மெய்வழி ஞகராஜ அனந்தர், சத்தியப்பிடி மூப்பர்	- வேலூர்
மெய்வழி சந்திரசேகர அனந்தர்	- மெய்வழிச்சாலை
மெய்வழி வேதவல்லி அனந்தகி குடும்பம்	- மெய்வழிச்சாலை
மெய்வழி வைரவ அனந்தர்	- மெய்வழிச்சாலை
மெய்வழி விஸ்வஞதன் செட்டியார்	- மெய்வழிச்சாலை
மெய்வழி சிவசிங்கார அனந்தர்	- மெய்வழிச்சாலை
மெய்வழி ராமச்சந்திர முதலியார்	- சென்னை
மெய்வழி அசஞம்பிகை அனந்தகி	- சென்னை
மெய்வழி கஸ்தூரிரெங்க முதலியார்	- சென்னை
மெய்வழி செல்வராஜ் அனந்தர்	- சென்னை
மெய்வழி ஆதிகேசவ அனந்தர்	- சென்னை
மெய்வழி கோபாலகிருஷ்ண அனந்தர்	- சென்னை
மெய்வழி செந்தில் இனிய அனந்தர்	- சென்னை
சாலை ராஜ் குமார்	- சென்னை
சாலை சௌந்தரி	- சென்னை
சாலை முரளீதரன்	- சிங்கப்பூர்
சாலை கன்னையன்	- கோலார் தங்க வயல்
சாலை ரஹிமா பீவி	- தஞ்சாவூர்
சாலை யுவராஜ்	- குடியாத்தம்
மெய்வழி வேலு முதலியார்	- வேலூர்
மெய்வழி அரங்கதாஸ் பிள்ளை	- சேலம்

மெய்வழி குமாரவேல் கவுண்டர்	-	முஞ்ஞனூர்
மெய்வழி சாவித்திரி அம்மா	-	விக்ரவாண்டி
மெய்வழி சந்திர சேகர முதலியார்	-	ராணிப்பேட்டை
மெய்வழி ஷண்முகத் தம்பிரான்	-	ஆற்காடு
மெய்வழி காசிலிங்க புராதனர், கருமலே எஸ்டேட்	-	வால்பாறை
மெய்வழி வெங்கடேச செட்டியார்	-	கோயம்புத்தூர்
மெய்வழி ராமு செட்டியார்	-	கோயம்புத்தூர்
சாலே கதம்ப மணி	-	கோயம்புத்தூர்
மெய்வழி திலகமகா அனந்நர் குடும்பம்	-	தர்மபுரி
மெய்வழி தசரத மந்திரி	-	ஓசூர்
மெய்வழி சுப்பராய அனந்நர்	-	மேட்டுக்காட்டான்பாளேயம்
மெய்வழி குணதேவி	-	மேட்டுக்காட்டான்பாளேயம்
மெய்வழி சிங்கார அனந்நர்	-	ஞகபட்டிணம்
மெய்வழி ராஜமாணிக்கஞ் செட்டியார்	-	திருச்சி
மெய்வழி சோமசுந்தர அனந்நர்	-	திருச்சி
மெய்வழி ஜெய் ஜமால்	-	புதுக்கோட்டை
மெய்வழி செந்தில் மணி அனந்நர்	-	புதுக்கோட்டை
மெய்வழி அருணுசல அனந்நகி	-	புதுக்கோட்டை
மெய்வழி சாயுட்சிய அனந்நர்	-	புதுக்கோட்டை
மெய்வழி லீலாபதி அனந்நர்	-	மதுரை
மெய்வழி பத்மாஸினி அனந்நகி	-	மதுரை
மெய்வழி சந்நனு அனந்நர்	-	சிவகாசி
மெய்வழி கார்த்திகை ராஜன் சேர்வை	-	சிவகாசி
மெய்வழி சாலே வில்வம்	-	இராஜபாளேயம்
சாலே சுப்பிரமணியம்	-	மெய்வழிச்சாலே